
இன்பால் இனிது
(பாவியம்)
புலவர், பொறிஞர் சி. செந்தமிழ்ச்சேய்



புலவர், பொறிஞர்

**சி. செந்தமிழ்ச்சேய்**, பொறி.இ., இல.இ.,

## ஆசிரியரின் படைப்புக்கள்

**சிறந்த நூற்காகத் தமிழக அரசின் பரிசு பெற்றவை...**

1. செம்பியன் தமிழவேள் வரலாற்றுப் புதினம்
2. செம்பியன் தமிழவேள் வரலாற்றுப் பாவியம்

**பிற நூல்கள்...**

3. சோலை மலர் - பாவியம்
4. பூம்பொழில் - பாவியம்
5. காதற் களிவெண்பா - பாவியம்
6. பூக்காடு - கவிதைகள்
7. உயிரே உனக்காக - நாடகம்



# இன்பால் இனிது

புலவர் - பொறிஞர்:
**சி.செந்தமிழ்ச்சேய்.**

**மின்வாரியத்**
**தமிழார்வலர் தமிழ்ப்பணி அறக்கட்டளை,**
**கடலூர் - 607 001.**

நூற்பெயர் : இன்பால் இனிது.

ஆக்கியோன் : சி.செந்தமிழ்ச்சேய்

பதிப்பு : முதற் பதிப்பு: 10.12.2017

பதிப்பாளர் : மின்வாரியத் தமிழார்வலர் தமிழ்ப்பணி அறக்கட்டளை,
“சேயகம்”, 25 / 49, துரைசாமி நகர், கடலூர்- 607 001.
தொ.பே எண்: 98408 44600, 94443 54945.

உரிமை : ஆக்கியோற்கு.

பக்கம் : 248

தாள் : மேப்லித்தோ, 22.5” × 17.5” (Demy 1/8).

விலை : உரூபா - 120.00

அச்சமைப்பு : இளந்திரையன், கடலூர்.

அட்டைப்படம் : ஓவியர், கவிஞர் இரமேசு, கடலூர்.

¶ÌE¾¦Vì :
ÄÃVåVBïD ¸öõ¦ìü
2)21 176, ÿw«>T], E>DÃ«D‡608 001. ⋖ : 04144-223020, 223040
E-mail : sabanayagamprinters@gmail.com

# என்னுரை

"காரிகை கற்றுக் கவிபாடு வதிலும்
பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்றே."

பிழைப்பிற்காகக் கவிதை எழுதுவது என் தொழில் இல்லை. நான் ஓய்வு பெற்ற ஒரு பொறிஞன், புலவன். என் கவிதைகள் அனைத்துமே ஆசை பற்றி அறையலுற்றவை.

இந்நூலைத் தொடங்கி முடிக்க எட்டு ஆண்டுகள் ஆகின. ஆசை பற்றி அறைந்திருப்பினும் அடிப்படையாக அமைந்த ஒரு கருத்தை நடுவண் படுத்திச் சொல்லியுள்ளேன். எத்தனை பேர்க்கு ஏற்பாக இருக்குமோ?

என் படைப்புக்களைப் படித்துக் குறைகளைக் கூறி நிறைவுபடுத்திய அறிஞர் பெருமக்கள் மூவர் அடுத்தடுத்து என்னை விடுத்து இயற்கை எய்தியமை பேரிழப்பாகும்.

ஒருவர், இந்நூற்றாண்டின் இணையற்ற கவிஞர் என்று என்னால் கொள்ளப்பட்ட பகுத்தறிவாளர், பண்பாளர், இருபது ஆண்டுக் கால இனிய நண்பர் கடலூர்க் கவிஞர் கவிச்சித்தர் க.பொ. இளம்வழுதி ஆவர். என் முன் நூற்குப் பதினெட்டுப் பக்கங்கட்கு ஆய்வுரை வழங்கிய அவராற்றல் என்றும் போற்றற்குரித்து

அடுத்தவர், தருமையாதினத் தமிழ்க் கல்லூரி முன்னாள் முதல்வர், சைவ சித்தாந்தப் பேரொளி, செஞ்சொற்கடல், என் அன்பிற்குரிய தமிழாசான், என் நாற்பத்தைந்தாண்டுக் கால இனிய நல்ல நண்பர் பேராசிரியர் இரா.செல்வ கணபதியார் ஆவர். பன்முகத் திறன் கொண்ட அவர் எவர்பாலும் அன்பு பாராட்டும் இன்முகத்தர்! என் நூற்கள் அனைத்திற்கும் என்றும் வாழ்த்துரை வழங்கிய இன்னெஞ்சர்.

மூன்றாமவர், இளமை முதலே எனக்குத் தொடர்புடைய உறவினர், நான் கொண்ட படிப்பிற்கும் தொழிற்கும் இளமை முதலே முன்னோடியாக விளங்கியவர், நான் பணியாற்றிய

மின்றுறையில் தலைமைப் பொறியாளராக இருந்தவர், ஓய்வுக் காலத்தில் நான்கு வரலாற்றுப் புதினங்களைப் படைத்தவர், அன்பர் பொறிஞர் இராச. வேதாந்தம் ஆவர். என் தமிழ்ப் பற்றுக்குத் தொடக்கப் பள்ளிக் காலத்திலே நான் அவரோடு கொண்டிருந்த தொடர்பே கரணியம் என இன்றும் நம்புகிறேன்.

இம்மூவர் மட்டோ? என் படைப்புப் பணிகட்கு என்றும் துணையாக இருந்த பதிப்புச் செம்மல் வெள்ளையாம்பட்டுச் சுந்தரம், கடலூர் இளம்பரிதி ஆகிய நண்பர் இருவர்தம் இழப்பும் ஈடு செய்தற்கு இயலாததாகும். பழுத்த இலைகள் பருவத்து விழத்தாம் செய்வ! முதிர்விற்கும் முன்னர் உதிர்வனவும் உண்டு. தெரிந்தும் வருத்தம் தீர்வதில்லை.

படித்துப் பார்த்துப் பயனுள்ள கருத்துக்களைக் கூறியவர் நண்பர்- பொறிஞர் சா.வேல்முருகன், அன்பர்- வழக்குரைஞர் மன்றவாணன். இவ்விருவருமே தெளிந்த தேர்ந்த சிந்தனைப் போக்குடைய உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசற்கொவ்வா உரத்த அறிவினர். இணையர்க்கு நன்றி.

புலவர் பெருந்தகையர் மேனாள் தலைமையாசிரியர்- கடலூர். மு. அழகப்பன், மேனாள் தமிழாசிரியர்- புவனகிரி. குறட்சுடர் த. செயராமன் ஆகிய இருவரும் முறையே இந்நூற்கு இன்னுரையும் வாழ்த்துப்பாவும் வழங்கிச் சிறப்பித்துள்ளனர். என்றுறையைச் சேர்ந்த என்னினிய சென்னை நண்பர் - வழக்குரைஞர். சீனி.சிவானந்தம் என்றும் போல் சுவைஞர் என்ற அளவில் கவினுரை ஒன்றை அளித்துள்ளார். இப்பெருமக்கள் மூவர்க்கும் நன்றி.

அட் டைப் படத்தை அழகுற அமைத்துத் தந்த கடலூர் ஓவியர், கவிஞர் இரமேசு அவர்க்கு நன்றி.

என் நூல்களை அழகுற அச்சிட்டு என்றும்போல் ஆக்கம் அளித்து வரும் சிதம்பரம் சபாநாயகம் அச்சக உரிமையாளர், இனிய நண்பர் திரு. கௌதம சங்கர் அவர்க்கு என் நன்றி.

கடலூர்,
10-12-2017

அன்புடன்,

சி.செந்தமிழ்ச்சேய்.

# வாழ்த்துப்பா

குறட்சுடர்
புலவர் **த. செயராமன்,**
தமிழாசிரியர் (ஓய்வு)
புவனகிரி.

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

எந்தவோர் துறைதொட் டாலும்
இன்னுயிர் சிலிர்க்கப் பாடும்
மந்திரம் எங்குக் கற்றீர்?
மலர்தமைத் தூவல் போல
நந்தமிழ்ச் சொற்கள் தூவி
நாடெலாம் வியக்கச் செய்வீர்!
செந்தமிழ்ச் சேய்நீ இல்லை
செந்தமிழ்ச் செம்மல்! உண்மை.

பொறியியல் கற்றீர் கொல்லோ?
புணரியல் கற்றீர் கொல்லோ?
அறிவியல் துறையும் போற்ற
அகத்துறை இனிக்கச் சொன்னீர்!
செறிவுறும் உம்நூல் கற்றால்
சீர்பெறும் இன்பப் பாலே!
எறிதிரைக் கடல்சூழ் வையம்
ஏற்றிடும் உன்றன் நூலே!

புள்ளிமான் அல்ல பெண்கள்,
புலிகளே என்று காட்ட
அள்ளியே கருத்து ரைத்தீர்;
அல்லியே எடுத்துக் காட்டு!

அல்லியின் தாயைக் கூட
    அனைவரும் போற்றும் வண்ணம்
மல்லிகைப் பூவாய்ச் செய்தீர்!
    மணிமொழி வாழி! வாழி!

தவறினும் முத்துக் கண்ணர்
    தகுதியால் மேன்மை பெற்றார்;
எவரையும் அன்பு காட்டி
    ஏற்றமே கொள்ளச் செய்தார்;
செயற்கருஞ் செயல்க ளாலே,
    சீரிய முடிவு கண்டார்;
அவரினும் நல்லார் இல்லை!
    அருந்தமிழ் நூல்தான்; வாழி!

வான்தரு மழையின் வேறு
    வளந்தரு பொருளும் உண்டோ?
தேன்தரு தமிழின் வேறு
    தெளிதரு மொழியும் உண்டோ?
ஊன்தனில் உயிரில் ஓங்கும்
    உயர்தனித் தமிழி னாலே
சேண்புகழ் நூலைத் தந்த
    செந்தமிழ்ச் சேய்நீ வாழ்க.

பேரெலாம் தமிழில்; பேசும்
    பேச்செலாம் பண்பில்; கூறும்
ஊரெலாம் எழிலில்; கூடும்
    உறவெலாம் அன்பில்; அன்பில்
வேரினை முறையால் காத்தால்
    விழுதிடா ஆலும் உண்டோ?
சீரினில் தமிழைக் காக்கும்
    செந்தமிழ்ச் சேயே, வாழி.

# கவினுரை

**வழக்குரைஞர் சீனி.சிவானந்தம்,**
40, இரண்டாம் முதன்மைச் சாலை,
சாயி நகர், சென்னை - 600 092.
பேசி: 94448 16206

இனிய நண்பர் புலவர், பொறிஞர் திருமிகு செந்தமிழ்ச்சேய் அவரின் புதிய படைப்பு “இன்பால் இனிது” நூல் வடிவிற்கு முன்னரே படித்து மகிழும் வாய்ப்புக் கிடைத்தது. ஊன்றியும் ஒன்றியும் படித்தேன். மிகவும் எதார்த்தமான மானுடர்களின் வாழ்க்கை முறையில் நிகழும் நிகழ்வுகளைச் சிறு கதையாக்கிக் காதைத் தேரில் பயணித்திருக்கிறார்

பயணிப்பவர்கள் என்னைப்போல் எளிமையானவர்கள். எதிர்மறை மாந்தர்களின் நுழைவு இல்லாத சீரான கதையாக்கம். தேன்குடம், பால்குடம் என்றெல்லாம் புகழ் மகுடம் தேவையில்லாத நல்ல நீர்க்குடம். பிற மொழிக் கலப்பில்லாது படைப்பிலக்கியம் படைத்தவர் சிலர்தாம் உள்ளனர். தூய தமிழ் வளர்ச்சிக்கு வழக்கம் போல் தனது படைப்பால் சிறந்து துணை நிற்கிறார்.

இளமைக்கால, நடு அகவைக் காலப் பருவத்தில் அவர் படைத்தளித்த நூல்கள் காதல் களிவெண்பா, செம்பியன் தமிழவேள், பூம்பொழில், சோல்மலர் ஆகிய கவிதை நூல்களும் எவ்வாறு சிறந்தவையாக இருக்கின்றனவோ அவ்வழியில்தான் இன்றைய “இன்பால் இனிது”வும் இனிமையாக உள்ளது.

நான் படைப்பாளி இல்லையென்றாலும் படிப்பாளி என்பதனால் சுவைக்க முடிகிறது.

சங்கநூல் புலமையின் பிழிவாக சான்றாண்மை மிக்க ஒருவர் திருமிகு செந்தமிழ்ச் சேய். ஆர்வ மேலீட்டால் முழு தமிழ்க் கவிதை நூல் படைத்திடும் இவரை ஆழ்ந்த மொழிப் புலமை சிறப்பாகவே ஆற்றுப்படுத்துகிறது.

இவரின் சிறப்புக்கள் பலவற்றில் முன்னிலையில் தெரிவது செருக்கின்மை. ஆன்றவிந்த கொள்கைச் சான்றோர் பட்டியலில் இவருக்குத் தக்க இடம் உறுதியாக உண்டு. காலச் சூழலில் புதியன புகுதல் வழுவல எனும் வழக்குரை ஏற்றத்திற்கானதாக இருக்க வேண்டுமே தவிர, நுனிப்புல் மேய்தலில் இல்லை. மொழியியல் கற்று இலக்கியம், இலக்கணம் இரண்டிலும் ஆழங்காற் பட்டவர், மொழி சிதைவிற்கு உடன்படாதவர், வழுக்குப் பாறையின் தரமறிந்து தூய தமிழ் கோலூன்றித்தான் பல நூல்களையும் படைத்துள்ளார்; தமிழக அரசின் பரிசுகளும் பெற்றுள்ளார்.

நேரில் அறிந்தவன், தோழமையுடன் நெருங்கியவன் என்பதால் வியப்பு ஒன்றுமில்லை. பாராட்டி மகிழ்தல் என் கடனாயிற்று.

இன்பால் இனிதின் நுழைவாயில் தொடங்கி இன்பச்சுவையடக்கம் பெற்று அமைதி காட்சி வரை மெல்லிய நீரோடையில் நீந்தி மகிழும் ஆனந்தம் காண முடிகிறது. பதவுரை விளக்கவுரை வேண்டாத எளிய நடை! காதலியை எண்ணும்போது உண்டாகும் இன்பப் போதை "இன்பால் இனிது" படிக்கும்போது எழுந்தது. வயது வரம்பு வளர விடவில்லை.

அல்லி, மணிமொழி, அறவாழி, அங்கயல், வேலன், அழகு மணவாளர், கோதை, தமிழ்ச் செல்வன், நற்செல்வி ஆகிய கதை மாந்தர்கள் பெயர்களைப் போலப் படைப்பும் தமிழுணர்வோடு உள்ளது. நல்லதுதானே!

சுவையின் துளி இதோ;

நாயுடன் பூனை கூட
நட்புடன் பழகக் காண்போம்
ஆயறி வுடைய நாமோ
ஆணுடன் பெண்ணை ஏற்கோம்
தூயநல் நட்பில் ஆண்பெண்
தொடர்ந்திடல் முயலின் கொம்பே!
நீயொரு விலக்காய்க் கொண்டேன்
நினைத்ததும் தவறே! பொய்யே!

நாட்டில் நடப்பவைதாம் நாளும் நாம் படிப்பவைதாம்.

அறுசீர் ஆசிரிய விருத்தம் தொடங்கி, தரவுக் கொச்சகக் கலிப்பாவில் விரிந்து, நேரிசை ஆசிரியப்பாவில் பெருகி, அறுசீர் ஆசிரிய விருத்தம், கலி வெண்பா, கலி விருத்தம், இன்னிசை வெண்பா, நிலை மண்டில ஆசிரியப்பா, கொச்சகக் கலிப்பா, அருட்பா, பஃறொடை வெண்பா, குறள் வெண்பா, நேரிசை ஆசிரியப்பா, எண் சீர் விருத்தம், கலித்துறை, விருத்தக் கலித்துறை ஆகிய பதினேழு வகையை இச் சிறு நூலில் விரவக் காணும்போது இவரின் மொழிப்புலமைக்கு முன்னர் வியப்பு விழிகள் விரிந்த வண்ணம் உள்ளன.

காதல் சுவையை இவரிடம் கற்பவர் அறிதோறும் அறியாமை கண்டவர்களே! விருத்தத்தில் கம்பனின் கரம்பிடித்து அவன் காலடியில் தடம் பதிக்கிறார்.

தேனிறை முல்லை சிந்தத்
திரிவரி வண்டு மாந்தும்
கானுறை நவ்வி கொண்ட
காதலில் கலையை நோக்கும்
பானிலா பகலாய்க் காயப்
பனியெனத் தழுவும் முறையில்
வேனிலா? இல்லை, தண்ணென்
விடியலாம்; வேட்கை நீளும்!

சுவைப்பதற்கு ஏராளம். சுவைக்கலாம். ஆம், சொர்க்கமாமே! அதனைக் காணலாம்.

எவ்வளவோ எழுத ஆசை. அளவோடு நிறுத்தல் இன்பால் இனிதாய் சுவைக்கும் தாமே!

# இன்னுரை

**புலவர் மு. அழகப்பன்,**
மேனாள் தலைமையாசிரியர்,
அரசு மேனிலைப் பள்ளி,
மஞ்சகுப்பம், கடலூர்.
பேசி: 91505 17378.

தொப்புள் கொடிவழியே தொன்மைத் தமிழுணர்வை
இப்புவியைக் காணாமுன் என்னுள்ளே ஊட்டியதாய்
உப்பன்ன கல்வி உயர்வளித்த தந்தையர்தாம்
எப்போதும் காப்பாம் எமக்கு.

(கவிச்சித்தர் க.பொ.இ)

காதல் வாலிபம் சூடிப் பார்க்கும் கிரீடமும் அதுதான், வாலிபம் ஏந்திப் பார்க்கும் திருவோடும் அதுதான் என்று கவிப்பேரரசு வைரமுத்து காதலுக்காக வழக்காடுகின்றார்.

காதல் நிறைவேறாததால் திருவோடு ஏந்திச் சென்று சாகத் துணிந்த முத்துக்கண்ணனை, திரும்பிப்பார்! சாவைச் சாவு தீர்மானிக்கும்; வாழ்வை நீ தீர்மானி என்று தடுத்து நிறுத்தும் உயிர் நண்பன் வேலன்!

இன்னார், இனியர், இவருயர்ந்தார், தாழ்ந்தாரென உன்னா உயருள்ளம் உற்றவர்தான் முத்துக்கண்ணன் என்ற ஒரே காரணத்திற்காக, அத்தகு நல்லவரை ஏர்க்காட்டில் இருக்கும் ‘வற்றல் மரம் நான்; வளமில் புலம் நான்; சொற்றிறம் நிறம்பாச் சுவையின் கூட்டு,’ என்று தன்னிலை விளக்கும் மணிமொழியிடம் அழைத்துச் செல்கிறான்.

“காதற்கு அடிப்படையே காமந்தான்,” என்று அக்கலையைக் கற்றுக் கொடுக்கின்றாள். மணிமொழி மணக்க மறுத்ததால் பெற்றோர் சொல் மறுக்காமல் இன்சொலியை மணந்து கொள்கின்றான்.

எட்டி உதைத்த காதலி ஓவியா, கட்டி அணைத்த மணிமொழி, பெற்றோர் சொல் கேட்டு மணந்து கொண்ட இன்சொலி, இப்படிப் பட்ட சூழலில் முத்துக்கண்ணன்! இதுவே இந்த நூலின் கரு. இப்படிப் பட்ட ஒருவரை எப்படி நல்லவர் என்று கூற முடியும்? ஆம். முடியும்.

‘குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து.’ - (குறள் 957)

என்ற திருவள்ளுவர் கூற்றே சான்று. அப்படி அவர் செய்த நற்செயல்கள் யாவை?

மணிமொழியுடன் இருந்தபொழுது பெண்குழந்தை பிறக்கிறது. அதற்குத் தந்தை தான்தான் என்று மருத்துவ மனைப் பதிவேட்டில் கையெழுத்திடுகின்றார். மருத்துவச் செலவுக்குப் பணம் தருகின்றார். குழந்தையைச் சட்டம் படிக்க வைத்து வழக்குரைஞராக ஆக்குகின்றார்.

நற்செல்வி, ஏழைப் பெண்ணைக் காதலித்து மணக்க மறுக்கும் மருத்துவர் அமுதன் நிலையை உரிய ஆவணங்களுடன் வழக்குறைஞர் அல்லியை நாடுகிறாள் அந்த ஏழை. வழக்குத் தொடுக்குமுன் அமுதனின் தந்தையை அல்லி சந்திக்கின்றாள். பயனில்லை. வீடு திரும்புகின்றாள். வீட்டில் வியத்தகு காட்சி. காவற்றுறை ஆய்வாளர், வெள்ளுடை தரித்த அடியாட்கள். பகைக்கும் அஞ்சாப் பண்பினர்; புதுமைப் பெண்ணார் அல்லி அஞ்சக் கூடியவரா? தொலைபேசி வருகிறது ஆய்வாளருக்கு. ஆய்வாளர் திரும்பி விடுகிறார். யாரால்? முத்துக்கண்ணனால். அல்லிக்குத் தெரியாது தன் தந்தைதான் காரணம் என்று. “நப்போலச் சுற்றந் தாங்கும் நல்லவருன் தந்தை” என்று கட்டிய மனைவி இன்சொலி அல்லிக்குக் கூறுகின்றாள்.

சொத்தெல்லாம் அல்லிக்கு! துயர் படுகிறானோ அந்நாள்வரை அனைத்துமே தனக்குத்தாம் என்றிருந்த இன்சொலி அண்ணன் மகன் அறிவு? இப்பொழுது... இன்சொலி, ‘அறிவு.. நீ எனக்கு மகன். அல்லியும் எனக்கு மகள் ஆவாள் (மணிமொழி மகளானாலும்). மனத்துயர் ஒழி! முத்துக்கண்ணன் நலம் பெற்று வருவார். அல்லி மனம் மாறும். அவளுக்கும் உனக்கும் மணம் நடை பெறலாம்.’ இன்பால் இனிது என முடிக்கின்றார்.

மருத்துவன் அமுதனும் நற்செல்வியை மணந்து வாழ விரும்புகின்றான். அதுவும் இன்பால் இனிது. இத்தகு முத்துக்கண்ணன் மிக நல்லவர் என்பதற்கு ஆசை பற்றி அறையலுற்றேன் என்று “இன்பால் இனிது” என்னும் செய்யுள் நாடக நூலை மூன்று களன்களில் (3 Acts) நாற்பது காட்சிகளில் (40 Scenes) படைத்துள்ளார் புலவர் பொறிஞர் சி. செந்தமிழ்ச் சேய் அவர்கள்.

பாலுணர்வு உணவும் நீரும் போல இயற்கைத் தேவை (Sex is a natural need like food and drink) என்கிறார் பெர்ட்ரண்டு ரசல் அவர்கள்.

மனிதனுடைய எல்லாச் செயல்களுக்கும் அடிப்படைக் காரணமே பாலுணர்வு என்கிறார் உளவியல் தந்தை சிக்மண்ட் பிராய்டு.

மேற்காண் அறிஞர்களின் கருத்தை மனத்தில் நிறுத்துவோமாக.

சங்க இலக்கியங்கள் அனைத்தும் வெண்பா, ஆசிரியம், கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நால்வகைப் பாவகையால் பாடப் பெற்றன. பின்னர் பாக்களின் இனமாகிய தாழிசை, துறை, விருத்தம் என்னும் பாவகையால் புராண இலக்கியங்களும் இதிகாசங்களும் பாடப் பெற்றன. இவ்வாசிரியரோ, மின் துறையில் பொறியாளராகப் பணியாற்றிக் கொண்டு

முறைப்படி புலவர் படித்துத் தேறிப் புலவர் பொறிஞர் ஆனார். காரணம் இவரது உயிரில் கலந்து உணர்வில் நிறைந்த தமிழே.

மரபில் புதுமை வரலாம்; மரபு மாறலாம் புறனடையாக (விதிவிலக்காக). ஆனால் திரியக் கூடாது.

'மரபுநிலை திரியின் பிறிது பிறிதாகும்' என்ற தொல்காப்பியர் கருத்தில் மாறுபடாமல் இலக்கண மரபுடன் எழுதிவரும் பெரும்புலவர். இவர் இயற்றிய "செம்பியன் தமிழவேள்" என்னும் செய்யுள் நாடக நூல் தமிழக அரசின் பரிசு பெற்றது என்பதே சான்று. இவரை நான் இரண்டாம் புகழேந்தி என்றே அழைப்பேன். வெண்பா எழுதுவதில் வல்லவர். இவர் இயற்றிய "காதற் களிவெண்பா" என்ற நூல் வெளியீடே சான்று.

காதலி ஓவியா முத்துக்கண்ணனைக் கைவிடக் காரணம் கூறும் பொழுது,

> 'உயிரோ டுயிரொன்றா ஒன்றற்கா மாயின்
> இயல்பாய் உடம்படுமெய் ஏற்றல் இலக்கணமாம்
> மெய்யோ டுயிர்ப்புணர்ச்சி மேன்மை யுணர்ந்தாரே
> உய்யா றறிந்திடுவர் உள்.' (பக். 81)

என்று உதறித் தள்ளுகிறாள். உயிரும் உயிரும் ஒன்று சேராது; இடையில் மெய் வந்தால்தான் புணரும்; அதுவே உடம்படுமெய் என்ற இலக்கணத்தை நினைவூட்டுகிறார் என்றால் என்னே இவரது இலக்கணப் புலமை.

ஆசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, ஆசிரிய விருத்தம், வெண்பா, குறள் வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா, கலி வெண்பா, கொச்சகக் கலிப்பா, கலிவிருத்தம் எனப் பலவகைப் பாடலையும் மரபு பிறழாமல் பாடியுள்ள இவரது மரபு பேணும் பண்பு போற்றற்குரியது.

> 'ஆடும் குதிரை; ஓடும் உருளை;
> கூடும் ஒரு நிலை; கொஞ்சம் பொறுக்க.'

‘காதல் உலகியற்கை காணல் உயிரியல்பு
நோதல் எதற்காக? நோக்கம் பழுதிலையேல்!’

‘தன்னலம் தவிர்த்த காதல் தமிழ்தரு இனிமை போலாம்.’

‘தவலறு செய்யுள் ஒப்பாய்!
   தமிழ்தரு சுவையில் தப்பாய்!
நவிநொறு நூன்னயம்போல்
   நலன்மிக நாளும் ஈவாய்!’

ஆகிய வரிகள் இவரது சொல்லாட்சியையும் தமிழ்ப் பற்றினையும் வெள்ளிடை மலையென விளக்குகின்றன.

**“உள்ளக் கருத்துதமை ஓசையுரு வாக்கிமனம்
கொள்ளக் கொடுக்கின்ற கோன்வளர்த்த மாத்தமிழை
வெள்ளமெனக் காலத்தே வேண்டக் கொடுக்கின்ற
வள்ளலாம் செந்தமிழ்ச்சேய் வாழி!”**

(கோன்- பூமியர் கோன்-பாண்டிய மன்னன்)

(பூமியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி! - பெரிய புராணம்) என வாழ்த்துகின்றேன். பாராட்டுகின்றேன்.

அன்னாரின் சிறப்பை விரிக்கின் பெருகும்! சுருக்கின் எஞ்சும்! என்று கருதி இத்துடன் முடிக்கின்றேன். தொடர்க அவரது பணி! வளர்க அவரது தமிழ்த் தொண்டு!

உரைநடையை மடக்கி மடக்கி எழுதினால் கவிதை என்று கருதப்படும் நிலையில் மரபு மாறாமல் எழுதிவரும் அவரது படைப்புகள் குன்றின் மேலிட்ட விளக்காகத் திகழ்கின்றன. அந்த விளக்கின் வெளிச்சத்தில் நடை போடுவோம், வாருங்கள் என அழைத்து மகிழும் அன்பன் (மு. அழகப்பன்)

## நாடக மாந்தர்

| | | |
|---|---|---|
| அல்லி | : | வழக்குரைஞர் |
| மணிமொழி | : | அல்லியின் தாய் |
| முத்துக்கண்ணன் | : | அல்லியின் தந்தை |
| இன்சொலி | : | முத்துகண்ணனின் மனைவி |
| அறவாழி | : | முத்துக்கண்ணனின் தந்தை |
| அங்கயல் | : | முத்துக்கண்ணனின் தாய் |
| வேலன் | : | முத்துக்கண்ணனின் நண்பர் |
| வள்ளி | : | வேலனின் மனைவி |
| நல்லான் | : | அல்லியின் நண்பர் |
| அமுதன் | : | மருத்துவர் |
| நற்செல்வி | : | அமுதனின் காதலி |
| அழகு மணவாளர் | : | அமுதனின் தந்தை |
| கோதை | : | அமுதனின் தாய் |
| நம்பி | : | நற்செல்வியின் தந்தை |
| கண்ணி | : | நற்செல்வியின் தாய் |
| அங்கணன் | : | நற்செல்வியின் அண்ணன் |
| தமிழ்ச்செல்வன் | : | காவற்றுறை ஆய்வாளர் |
| ஓவியா | : | முத்துக்கண்ணனின் காதலி |
| அறிவு | : | இன்சொலி அண்ணன் மகன் |
| மணி மாறன் | : | அல்லியின் தாய்மாமன் மகன் |

## மொழி வாழ்த்து

(குறள் வெண்பா)

உயிரில் உணர்வில் உறையுந் தமிழின்
உயரிய உண்டோ உலகு.

## அவையடக்கம்

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

குறையறு கல்வி, கேள்வி
குறித்தறி பயிற்சி கொள்ளார்
நிறையறி வுடைய நீரார்
நிறைந்திரு அவையில் நின்று,
பொறையற ஒல்லாப் புன்மைப்
பொருளினைப் புலம்பல் போல,
அறைகுவன்; பிழைதான்! ஆன்ற
அறிவுளர் பொறுப்பர் ஈன்ற!

(இன்னிசை வெண்பா)

முற்ற முழுதுணரா மூடர் மொழியுரையைக்
குற்றங் குறைகளைந்து கொள்வர் குறையிகந்தோர்!
பெண்பால் பெருகு பெருமதிப்பால் பேசலுற்றேன்
நண்பால் நகாரே நயந்து.

## பாடு பொருள்

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

உற்றிணைந் துற்ற வின்ப
உணர்வினை யுற்ற வாறு
சற்றுமிங் கியார்க்கு மென்றும்
சாற்றுதற் காமோ? கூட்டம்
உற்றவர் உள்ளத் தன்றி
உடனிணை துணைக்குங் கூறக்
கற்றவர் தமக்கு மாகாக்
காமத்தின் மாட்சி என்னே!

# நுழைவாயில்

அவன்:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

தேனுலா மிதழ்தி றந்து
    திகட்டிடாச் சுவையைச் சேர்க்கும்;
[1]கூனிலா மார்பு குத்திக்
    குலுக்கியுள் ளுணர்வை ஈர்க்கும்;
[2]பானிலா முகம லர்ந்து
    பருகுமென் னுயிரைத் தீய்க்கும்;
ஏனிலா இடைய சைந்திங்
    கின்னலை விளைக்கும்? மாய்க்கும்?

அவள்:

பட்டுநீர் திருந்தற் கில்லை;
    பயின்றுமென்? பயன்றான் இல்லை.
விட்டுநீர் விரையி னின்பம்
    விளைத்திடா; அடையுந் துன்பம்!
கட்டிடைப் பொறிகள் ஏங்கக்
    காண்களி யாட்டம் ஓங்கும்.
மட்டிலா மகிழ்வா? மெல்ல
    [3]மருவுக, ஆழ்க, மீள்க.

(தரவு கொச்சகக் கலிப்பா)

பாடம்பல எடுத்ததுவும் பயிற்சியுடன் கொடுத்ததுவும்
நீடற்காம் உறவென்றே! நினைவிலையா? நிலைமறந்தீர்!
கூடற்கினி ஐம்புலனைக் கூட்டகத்துக் கட்டிவைக்கக்
கூடல்மிகு நெடிதாகும்; கொள்ளின்பம் நிறைவாகும்.

---

1. கூனிலா - வளைவு இலாத, சாய்வு இலாத. 2. பானிலா - பால் + நிலா. 3. மருவுதல் - கூடுதல், புணர்தல்.

அவன்:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

எளியவாம் யார்க்குங் கூறல்;
 எனினுநீ இயம்ப ஏற்பேன்.
[1]வளிமிக அலைது ரும்பாய்
 வழிபிறழ்ந் திறக்கச் சென்றேன்;
ஒளியென இருளி லுன்றன்
 உறவினா லுயிர்த்தேன்; மீண்டேன்.
துளியள வருளு முண்டேல்,
 துணைவியாய்த் தொடர்க; வேட்பேன்.

அவள்:

பேசுதற் கிதுவோ நேரம்?
 பின்னிடும் அரவும் நாணக்
கூசிடும் உன்றன் பேச்சும்
 குலமகட் கான கூற்றாம்.
ஏசிடும் உறவும் ஊரும்;
 இயைவதோ என்னால் ஊறும்?
[2]ஆசிலா மணிநீ! ஆன்ற
 அணியொடு மமைந்து வாழ்க.

நடப்பு:

(தரவு கொச்சகக் கலிப்பா)

காலிரண்டு மிறுகவுடல் கையிரண்டுந் தோட்படர்வ;
சேலிரண்டு மிடைப்பிறழத் திறந்திதழ்கள் சுவைக்கலைவ;
நூலிடைமுன் பின்னசைய நுழைவாயில் வழிகொடுக்கக்
[3]காலுமிடை நுழைதலின்றிக் கலந்தொன்று கலைநன்றே!

---

1. வளி - காற்று, சுழல் காற்று. 2. ஆசு - குற்றம். 3. கால் - காற்று.

# களம்: 1

## (இந்நாள்)

## காட்சி . 1

**இடம்** : வீட்டு முன்கூடம்.
**காலம்** : காலை மணி ஏழு.
**உறுப்பினர்** : அல்லி, மணிமொழி.
**சூழல்** : அல்லி செல்லிடைப்பேசியில் பேசிக் கொண்டு இருக்கிறாள். அப்பொழுது அவள் தாய் மணிமொழி அங்கு வரத் தன் பேச்சை முடித்துக் கொள்கிறாள்.

மணிமொழி:

(நேரிசை ஆசிரியப்பா)

அல்லி, என்றன் அருமை மகளே!
சொல்லும் நல்ல கொள்ளக் குறையென்?
காலை எழுந்ததும் காளை அவனிடம்
வேலை மறந்து வீண்பேச் செதற்கு?
வேண்டா மகளே, வேண்டா;
தூண்டா விளக்குநீ; சொல்லலும் வேண்டுமோ?

அல்லி:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

நட்பென நாடற் கிங்கு
நல்லவன் அவனே உள்ளான்;
கட்புலன் ஒப்பான்; கொண்ட
கடமைக்குந் துணையாய் நிற்பான்;

[1]எட்டுணை இடர்வந் தென்னை
இடறினும் இணைந்து தீர்ப்பான்;
[2]கட்டுளி மலரின் நீரான்;
கரவிலான்; கரும்பே அன்னான்.

மணிமொழி:

சொன்னதை மீண்டு மீண்டுஞ்
சொல்கிறாய்; கேட்பாய் இல்லை.
மின்னுவ யாவும் பொன்னா?
எழுதெலாம் மேலாம் பாட்டா?
அன்னவன் பெயர்தான் நல்லான்;
ஆய்ந்திடின் அறிவாய், பொல்லான்.
இன்னலே எழுதல் இல்லால்
எதுநலன் ஏலும்? சொல்க.

அல்லி:

அவரவர்க் கமைந்த வாழ்வை
அவரவர் தொடர்தல் நன்று.
சுவரெறி பந்தோ நெஞ்சம்
சொற்படி திரும்ப; மீள!
எவருரை எனினும் எண்ணி
ஏற்பன என்றும் ஏற்பேன்.
தவறெனின் தாளேன்; அன்னார்
தலைமையர் எனினும் தாங்கேன்.

மணிமொழி:

களிமிகக் கருதார் என்னக்
கசடுற மொழிவாய்; என்னை?
வளிவழிச் செடிதாம் சாயும்;
வாழ்க்கையும் [3]வினைபோல் ஏயும்.
துளிரெடு பருவச் சூழல்
துடுக்குடன் பேசத் தூண்டும்.

1. எட்டுணை - எள்+துணை- எள் அளவு. 2. கட்டுளி - கள் + துளி - தேன் கொட்டு, தேன் பெய். 3. வினை - செய்செயல் (விதியன்று).

உளவொரு வாழ்வில் நன்றாம்
ஒப்புர வறிதல், ஒன்று.

(வேறு)

பட்ட மொன்று வேண்டுமென்றாய்;
படித்தற் கென்றிங் கெத்தனையோ!
சட்ட மிங்குப் படித்ததனால்,
சரிக்குச் சரியாய்ச் சாடுகிறாய்.
முட்டு மியற்கா ளைக்கொம்பின்
முனையைக் கூர்செய் தவறிழைத்தோம்!
பட்டுத் தெளியக் கற்றிலையே!
பட்டப் படிப்பால் பயனிலையே!

அல்லி:

எங்கோ தொடங்கி இங்கெதையோ
எடுத்துக் கூறி இடித்துரைப்பாய்.
எங்கே எப்போ தென்னாசை,
எண்ணம் அறிந்து வழிவிட்டாய்?
எங்கோ இருக்கும் உன்கணவர்க்
கேற்ப ஏற்றுப் படிப்பித்தாய்;
வெங்கான் வெளியில் [1]திரள்விலகி
மிரள்மான் எனநான் விழித்திடுவேன்!

(வேறு)

உன்னையும் உன்னைப் பெண்ணாய்
உயிர்ப்பித்த அன்னை அல்லால்,
இன்னவர் உறவென் றென்னால்
யாரையுங் காட்டற் குண்டா?
என்னரு தந்தை யாரே?
எப்படி? எங்கே? காணேன்!
அன்னவர் படத்தைக் கூட
அன்னைநீர் காட்டீர்; நன்று!

1. திரள் - கூட்டம், குழு.

ஊரிலே நம்மைப் பற்றி
    உலவிடுங் கதைகள் தூற்றி!
யாரிவள் தந்தை? எங்கே?
    ஏனுடன் இல்லை இங்கே?
சீருடன் வாழ்வர்; செல்வம்
    சேர்ந்திடு வழிதாம் என்ன?
யாரவர் வேலர்? இங்கும்
    ஏனவர் வருவர்? கேட்பர்!

மணிமொழி:

என்னடி, அல்லி? என்ன
    ஏதேதோ பிதற்று கின்றாய்?
உன்னுரை துயரைக் கூட்டும்;
    உறுத்திடும்; உயிரை வாட்டும்!

அல்லி:

நன்றுனை அறிவேன்; ஆனால்,
    நகருளர் அறியார் அன்றோ?
புன்மொழி கேட்டுக் கேட்டுப்
    புழுங்குவன்; உறக்கம் போச்சு!

பாட்டியைக் கூட்டி வந்து,
    பக்கமாய்க் காவல் வைத்து,
வீட்டிருந் தெங்கோ செல்வாய்;
    மீள்வதோ சின்னாட் சென்று!
கூட்டயர் தனிப்புள் ஒப்பக்
    குறுகுவன்; கூசும் உள்ளம்.
வேட்டுவர் ஊரார் ஏச்சாம்
    வெங்கணை எய்வர்! நைவேன்.

நஞ்சினுங் கொடிய பேச்சால்
    நாணுவன்; நடுங்கிச் சோர்வன்.
அஞ்சிலன் அவர்க்கும், உன்னை
    அறிந்தவள் ஆன தாலே.

பஞ்சினும் மென்மை உள்ளம்,
  பரிவுடைத் தென்றும் யார்க்கும்.
கொஞ்சிடும் வாயும் கண்ணும்;
  குறையிலை வளர்ப்பில்; ஆனால்?

(தரவு கொச்சகக் கலிப்பா)

எந்தையென ஒருவரெங்கோ இருந்திடுவர்; எதுபயனாம்?.
முந்தைவினை தொடருமென மொழிபொருளை அறிவன்நான்!
தந்தையுற விலையெனினும் தகுதியமை அருட்டாய்க்கு
வந்ததொரு மகளானேன்; மகிழ்ந்துமனம் வணங்கிடுவேன்.

மணிமொழி:

(கொச்சகக் கலிப்பா)

போதுமம்மா போதுமெனைப் போற்றியதும், தூற்றியதும்;
ஈதின்றா என்றாலில்; எந்நாளும் இப்படித்தான்!
ஏதெடுத்துத் தூற்றிடினும் ஈற்றிலென்றும் இன்மொழிதாம்!
போதுமம்மா போதுமென்றன் பொன்மகளே, போய்க்கிளம்பு.

## காட்சி . 2

**இடம்** : அல்லி வீட்டு அலுவல் அறை.
**காலம்** : மாலை மணி ஐந்து.
**உறுப்பினர்** : அல்லி, நற்செல்வி.
**சூழல்** : வீட்டு முன்னர் உள்ள அலுவல் அறை. அல்லி, நற்செல்வி அமர்ந்து பேசிக் கொண்டு இருக்கின்றனர்.

நற்செல்வி:

(கலி வெண்பா)

வருவதாய் முன்பே தெரிவித் திருந்தும்
வருதற் கமையம் பொருந்திய தின்றே!
பொறுத்திடல் வேண்டும் புரையுடைச் செய்கை.
வெறுத்த மனத்தள்; வினைமுறை காணேன்.

அல்லி:

இனியவே இங்குரைத்த; என்னைநீர் நாடித்
தனியராய் வந்ததுவும்? சாற்றிடல் சால்பாகும்.

நற்செல்வி:

என்பெயர்நற் செல்வி, இருப்பிடம் இந்நகரே!
பன்னிரண் டேபடிப்புப் பத்திரண் டென்னகவை.
பண்புடைய பெற்றோர், பழியஞ் சுடன்பிறந்தார்
கண்ணின் இமைபோலக் காப்பரெனை இந்நாளும்!
செல்வமிலை; ஆயின், [1]செருக்கில் குறைவில்லை.
நல்ல குடும்பத்தில் நானலமாய் வாழ்ந்திடற்கே

---

1. செருக்கு - பெருமிதம், மகிழ்ச்சி.

அல்லும் பகலும் அயராது தாமுழைத்(து)
ஒல்லும் வகையெல்லாம் ஒண்பொருளைச் சேர்த்திடுவார்
செல்ல மகளெனக்குச் சீர்பலவும் செய்தயலார்
இல்லம் விளங்கவென இன்றுணையைத் தேடிடுவர்.

அல்லி:

எங்கும் இருப்பனவே; ஏனுனக் கேற்பிலையா?
[1]கங்குல் வெளிச்சமெனக் காதலெதும் சூழ்ந்ததுவோ?

நற்செல்வி:

ஆமதுதான்; ஆழகத் தாதிமுதல் அப்படித்தான்!
மாமன் முறையெனக்கு, மற்றுந் தொலையுறவு!
தூரத் துறவதனால் சொந்தம் நெருக்கமில்லை.
ஈரகத் தியாரும் இனுமறியார் எம்முறவைச்
செல்லமகள் என்பதனால் சேர்த்துவைப்பர் என்னகத்தார்;
தொல்லை அவர்வரையில் இல்லையென முன்மொழிந்தார்.

அல்லி:

பின்னென் நடந்த? பிணக்கிடை உற்றனவோ?
உன்னன்பர் கொண்ட உறவு கரவுடைத்தோ?

நற்செல்வி:

உண்மை உரைப்பதெனில் ஊறெம் இடையேதான்.
கண்ணாய்க் கருதியவன் காசால் கலங்கிட்டான்!
நன்கு படித்தவள்நான்; நன்றன் றெனவென்னை
இன்னுமேற் கற்றிடற் கென்னோர் இசைந்தாரில்.
என்னள வென்னோன் இலைபடிப்பில் என்றாலும்
கன்னக்கோல் இல்லாக் களவின்று கல்வியதால்,
[2]ஆயிரம் ஐந்தைந்து நூறங் களித்தவனை
நோயகற்றுக் கல்வி நுழைத்திட்டார்; செல்வரவர்!

அல்லி:

என்ன இடைநிகழ்ந்த? ஏன்சிறிது மன்பின்றி
உன்னரு காதலரை ஓர்மையில் பேசிடுவாய்?

1. கங்குல் - இருள். 2. ஆயிரம் ஐந்தைந்து நூறு - $1000 \times 5 \times 5 \times 100 = 25{,}00{,}000$.

நற்செல்வி:

கள்ள மனங்கொண்டோன், காதலன்தான்; ஆயினுமென்?
எள்ளற் குறுவெண்ணம் ஏற்றான்; இனித்திடுமோ?
மாறான் எனக்கொண்டேன்; மாறாண் எனக்கண்டேன்!
ஆறாப் பெரும்பழிக் காளாக்கத் தான்றுணிந்தான்.
கல்வி முடியுமட்டும் காதலித்து வந்தவற்குச்
செல்வப் பெருக்கோடு செல்வாக்கும் மிக்கதனால்
மிக்க பொருளோடு மேற்கல்வி கற்றவரைத்
தக்க துணையாகத் தான்விழைந்து தேடிடுவன்!
பெற்றோர் முடிபஃதாம்; பேசற் கியலாதாம்;
உற்றார் உடன்பட்டோ ஒன்றி உவந்திட்டான்?
இல்லையில்லை ஏமாறல்; யாதெனக் கேற்படினும்
பொல்லான் அவனைப் பொறுத்தலினி இல்லை!

அல்லி:

பொறுமை, பொறுமை; புரிந்த துரைத்த.
உறவின் விளைவாய் உருவெதும்?

நற்செல்வி:

இல்லை;
மருத்துவன் அன்றோ? வருவ தறிவன்!
கருத்தில் களங்கம் கருதிலன் முன்னர்.
அமுதன் அவன்பெயரே! ஆயினும் நஞ்சே!
குமுறிடு நெஞ்சம் கொதிக்கும் உலையாய்!

அல்லி:

அறிவன் அவரைநான்; அப்படி யொன்றும்
நெறிபிறழ் நீர்மை நிலையினர் இல்லையே!
சட்ட அவையின் தலைவராம் தந்தையே!
முட்டின் நமக்கே முழுதும் இழப்பாம்.

நற்செல்வி:

தெரியும் எனக்கே; தெரிந்தே எனக்காம்
உரிமை பெறற்கும் முதவியை நாடுவன்.

இங்கிரு ஆவணம் எங்கள் உறவினை
எங்கும் உரைப்ப எடுத்து.

(அல்லி ஆவணங்களைப் பெற்று ஆய்ந்து பார்க்கிறாள்.)

அல்லி:

(கொச்சகக் கலிப்பா)

மெத்த படித்தவரின் மேலாம் திறனுனதே!
ஒத்தணை இன்படங்கள், உள்ளம் உரைகடிதம்
எத்துணையும் யாரும் எதிர்க்கவிலாச் சான்றாவ;
இத்தனை தாமோ இருப்பனவும்? இன்னுமுண்டோ?

நற்செல்வி:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

படித்ததோ பள்ளி மட்டும்;
பயிற்சியோ கணினி முற்றும்!
அடுத்தன அனைத்தும் [1]கட்டுள்
அமைத்துளேன், நொடிதான்; கைக்குள்!
விடுத்தவர் என்னை நீங்கார்;
விழைந்திடின் என்றும் தூங்கார்.
எடுத்ததை முடிப்பன், [2]நிச்சம்;
எதுவரின் எனக்கென் அச்சம்!

மலைத்திடல் வேண்டா; மேலும்
மலையள வாவ ணங்கள்
வலைத்தளம் அமைத்துக் கொட்டி
வைத்துளேன் காப்பாய்! நெஞ்சில்
நிலைத்திடு காதற் கென்றும்
நினைவகம் என்றே கண்டேன்;
உலைத்திடென் வாழ்விற் கென்றோர்
உதவியாய் இல்லை; உண்மை.

காதலின் ஈர்ப்பில், அன்பில்
கட்டிய கவிதைத் தோட்டம்!

1. கட்டு - கோப்பு. 2. நிச்சம் - உறுதி.

ஈதலில், இணைப்பில் எம்முள்
எழுப்பிய இன்பக் கோட்டம்!
தீதிலள் நம்பிச் சேர்ந்து
திளைத்திரு களவுக் கூட்டம்
சாதலில் முடியு மானால்,
சற்றுநான் தயங்கேன்; சாவேன்.

களிதரு கடிதம் காதற்
கவினினைக் காட்டற் குள்ள;
ஒளிநிழற் படங்கள் உற்ற
உறவினை உரைக்க வல்ல;
ஒளியொலிக் காட்சி பல்ல
உள,பிறர் பார்வைக் கல்ல;
எளிதிலை என்னை ஏய்த்தல்;
இறுமுயிர் இறுமேல் காதல்!

அல்லி:

(தரவு கொச்சகக் கலிப்பா)

என்றனினுந் திறமிகுந்தோர் இருப்பர்பலர்; எதுகருதி
ஒன்றிரண்டே வழக்காடி ஓரளவே பட்டறிந்த
என்றனிடஞ் சார்ந்துன்றன் இடர்படர்ந்த வழக்கிதையே
வென்றிகொள நினைக்கின்றாய்? விளையவுள நினைத்தாயோ?

நற்செல்வி:

நினைக்காத பொழுதில்லை; நினைப்பெல்லாம் நிகழ்விதுவே!
தனக்காக உயிர்வாழும் தகுதியினைத் தவறவிட்ட
எனக்காக உறவனைத்தும் ஏற்கவிரு இழிபறிவேன்;
மனக்காய்ச்சல் வெளிக்காட்டேன்; வரும்பழிக்கு மிகவயர்வேன்.

(அப்போது செல்லிடப்பேசி அழைப்பொலி எழுகிறது. நற்செல்வி பேசியை எடுத்துப் பார்க்கிறாள்.)

நற்செல்வி:

(கலி வெண்பா)

அவரே அழைத்திடுவர்; ஆகா தெனினும்
தவறா தழைத்துத் தணிவாய்க் குழைந்திடுவார்!

அல்லி:

பேசுநீ, பேசு; பிழையிலை, பேசிடுக.
பேசிடலால் நன்மை பிறந்திடலுங் கூடுவதே!

(நற்செல்வி பேசியில் இணைப்புக் கொண்டு பேசுகிறாள். எதிர்முனையில் அமுதன் பேசற்கு ஏற்ப, இடை இடையே நிறுத்தி நிறுத்திப் பேச்சைத் தொடர்கிறாள்.)

நற்செல்வி:

ஆமாம்; அதற்கென்ன? அக்கறை மிக்கவர்தான்!
ஏமாறல் யானில்லை; ஏனழைத்தீர் இப்பொழுது?
எங்கா? வெளியே; எதற்கிங்குக் கேட்பதுவும்?
எங்கேயும் செல்வன்நான்; யார்நீர் எனைக்கேட்க?
உங்கட் கெனைக்கேட்க உள்ளுரிமை ஒன்றுமில்லை.
வெங்கட் புலிநீர்தான்; வேட்டைமறி[1] நானில்லை!
இல்லையில்லை, என்னிடத் தேதுமினிப் பேசாதீர்.
சொல்லும்; சரிசரி! சூதன்றோ உம்பேச்சும்?
போதும், நிறுத்திடுக; புன்மொழிகள் புண்செய்வ.
ஏதும் இடைவேண்டா; இத்துடன் விட்டிடுக.

(செல்லிடப் பேசியின் இணைப்பை நற்செல்வி துண்டித்துவிட்டு, அல்லியிடம் பேசுகிறாள்.)

[2]வேலை தவறாமல் வேண்டுநான் பேசற்கு;
மாலை இடற்குமட்டு மற்றொருத்தி! வேண்டாவே!
நானவரைச் சந்திக்க நாளை வருகவென,
ஆனவரை கெஞ்சி அழைப்பார்; அழுதிடுவார்!

அல்லி:

சென்றால் பழியேதும் சேரற் கிலைமேலும்
என்றால்நீர் சென்றிடுக; ஏதுநலம் சேர்ந்திடலாம்.

நற்செல்வி:

சொல்ல மறந்திட்டேன்; தோன்றிய திப்பொழுதே.
நல்லர் எனநம்பி நானணைந்த கள்ளரவர்

1. மறி - மான். 2. வேலை - நேரம், காலம்.

திங்கள் சிலவற்றுச் செல்பேசிப் பட்டியல்கள்
இங்கெடுத்து வந்துள்ளேன், ஏற்றிடுக; சான்றாவ!
ஒன்றிரண் டென்றில்லை; ஒவ்வொரு நாட்டோறும்,
என்றுமென் எண்ணிருக்கும் ஏதும் இடையின்றி!
ஒன்றா மணமென்றார்; ஓயார் உரையாட.
இன்றோ டிருதிங்கள்; என்மனம் ஆறலில்லை!
கொன்றன்ன இன்னா கொடுத்ததலால் ஒன்றுநன்றும்
என்றுமவர் எண்ணியதும் இல்.

அல்லி:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

வேண்டிய ஆவ ணங்கள்
  மிகையள வமைந்த; உன்னைத்
தீண்டிய அமுதன் தன்னைச்
  சிறைதனில் அடைக்கப் போதும்.
ஈண்டொரு வினாமுன் கேட்டேன்;
  இதுவரை விடையோ இல்லை.
மீண்டுனைக் கேட்பேன்; என்னின்
  மேலவர் இருக்க, ஏன்நான்?

எடுத்தனன், கவிழ்த்தேன் என்ன
  இஃதொரு விளையாட் டில்லை!
அடுத்ததைத் தொடங்கல் முன்னர்,
  ஆயிரம் ஆய்தல் நன்று.
தொடுத்திடல் வழக்கே ஆயின்,
  தொழில்முறை வல்லார் வேண்டும்.
மடுத்தனை பொருளாய் எண்ணி;
  மனத்திடம் கொண்ட தென்நீ?

நற்செல்வி:

எண்ணினேன் பன்னாள்; உங்கள்
  இயல்பினைச் சொல்லச் சேர்ந்தேன்.
பெண்ணிலை பெண்ணே காண்பர்;
  பிறரினும் மேலாம் நீரே!

பண்பினில் மாற்றம் இல்லாப்
  பகுத்தறி வாளர்! சொல்வார்.
உண்மையின் பக்கம் நிற்கும்
  உயர்ந்தவர் நீராம்; சொன்னார்!

பிணந்தினுங் கழுகாய் யாரும்
  பணம்பணப்[1] பிடுங்க, உம்போல்
குணமுடை உரைஞர் கைகள்
  கொள்விரல் எண்ணிற் கீழாம்!
துணிவுடை நெஞ்சம், கொண்ட
  தொழிலினில் தூய்மை, தோய்மை!
தணிவமை பேச்சு, மற்றுச்
  சளைத்திடாச் சொல்லின் வீச்சு!

ஓரிரு வழக்கே; ஆயின்
  உள்ளார்ந்த ஈடு பாடு!
நேரிலர் எனினும் முன்னர்
  நின்றெதிர்த் தாடும் போக்கு!
வேரிடை நீர்வார்த் தன்ன
  வேண்டுநர்க் குதவும் நோக்கு!
சேரிடம் தேர்ந்தே சேர்ந்தேன்;
  சேர்ந்ததால் சிறப்பே முற்றும்.

1. பண - பண்ண: இடைக்குறை.

## காட்சி . 3

**இடம்** : கடற்கரை மணல்வெளி.
**காலம்** : மாலை மணி ஆறு.
**உறுப்பினர்** : அல்லி, நல்லான்.
**சூழல்** : அல்லி தனிமையில் அமர்ந்திருக்க, நல்லான் நாடி வந்து அங்கு அருகே அமர்கிறான்.

நல்லான்:

(கலி வெண்பா)

வழக்காடு மன்றமெலாம் வஞ்சியுனைத் தேடி
முழுக்காலும் நொந்த; முடிபு படுதோல்வி!
என்னல்லி? எங்கிருந்தாய் யானறியா தின்றெல்லாம்?
என்றன் அடிதேய ஏறாப் படியுமில்லை!
காலைமுதற் காணாது கண்டதுயர் காணரிது!
வேலை இருந்தனவோ? வேற்றூர் பொருந்தினையோ?
இங்குக் கடற்கரைக் கெப்போது வந்தமர்ந்தாய்?
[1]கங்குல் படர்தலுன் கண்ணில் படலிலையோ?

அல்லி:

போதும்; புலம்பாதே! போகும் இடம்வேலை
ஏதும் எதற்குனக் கிங்கே இயம்பிடலும்?

நல்லான்:

இல்லையில்லை; இஃதென்ன? என்னைப் பொறுத்திடுக;
கொல்லுஞ் சினநீயுங் கொள்ளுதலோ? நல்லதில்லை!
அன்புமிக, உள்ளிடத் தக்கறை மிக்கதனால்
உன்னகம் எண்ணா துளறிட்டேன்; வேறில்லை.

---
1. கங்குல் - இருள், இரவு.

அல்லி:

போகட்டும்; இங்கென் பொருள்பற்றிச் சேர்ந்ததுவும்?
ஏகற் கணியம்யான்; எண்ணியவென்? சொல்லிடுக.

நல்லான்:

ஒவ்வொரு நாளுமுன்றன் ஒண்முகங்கா ணேனானால்
எவ்வகையி லேனும் இயைவதிடும் பையாகும்.
தேடினேன், கண்டுவிட்டேன்; தீய்ந்த துயரெல்லாம்!
கூடுமினி இன்பங் கொழித்து.

அல்லி:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

ஒளியிருள் ஒன்றா; ஒப்ப
ஒன்றிடா தாண்பெண் நட்பும்.
களியளி பொருளாய்ப் பெண்ணைக்
கருதுவீர்; இணையாய்க் காணீர்.
தளிருடல் நாட்டம் அல்லால்
சமமென நட்டல் இல்லை.
தளர்வுறும் உள்ளம்; உன்றன்
தகவிலாத் தன்மை உண்மை.

உயர்திணை பெண்கள் என்ற
உண்மையை ஒப்பார் ஆண்கள்;
அயர்வற, இன்பம் ஆர
அழகுறு அணியாய்க் காண்பர்;
பயில்தொறும் இன்பம் ஈனும்
பண்டமாய்ப் பார்ப்பர், ஏற்பர்;
இயல்பெழு நட்பிற் கொப்பாய்
ஏற்றிடார்; ஏனோ? வீணோ?

நாயுடன் பூனை கூட
நட்புடன் பழகக் காண்போம்;
ஆயறி வுடைய நாமோ,
ஆணுடன் பெண்ணை ஏற்கோம்;
தூயநன் னட்பில் ஆண்பெண்
தொடர்ந்திடல் முயலின் கொம்போ?

நீயொரு விலக்காய்க் கொண்டேன்;
நினைத்ததும் தவறே; பொய்யே!

நல்லான்:

பாகன மொழியாய் என்றேன்;
பாகற்காய்ப் பேச்சால் கொன்றாய்!
ஏகிட எண்ணம் உன்பால்,
எழுந்திடும் எழுச்சி தன்னால்!
சாகவுந் தயங்காக் காதல்
சான்றென நின்றார் வாழ்வர்!
ஆகவென் காதல் யாதும்;
அழிவிலை நட்பிற் கென்றும்.

நண்பனாய்க் கேட்பேன், சொல்க;
நடந்ததென்? எதற்கிச் சீற்றம்?
பண்ணிடைக் கீறல் ஒப்பப்
[1]படிறெது நிகழ்ந்த தின்றே?
[2]உண்ணிலை உரைப்பின், ஏற்ற
ஒருவழி உன்னற் காகும்.
மண்ணக நோக்கம் போதும்;
மனந்திற, மறையும் தீதும்.

அல்லி:

சொல்லுவன், கூர்ந்து கேட்க;
சுவைமிகு வழக்கீ தாகும்!
[3]இல்லவள் இழந்தாள் தன்னை;
இணைந்தவன் ஏற்கான்; என்னை?
நல்லவன்; ஆனால், பெற்றார்
நாட்டத்திற் கெதிராய் ஆற்றான்!
வல்லவள் தீர்வு தேடி
வழக்கிடச் சார்ந்தாள் நாடி.

படித்தவன் மிகவும்; பெண்ணோ,
பள்ளியோ டனைத்தும் முற்றும்.

1. படிறு - பொய், கொடுமை. 2. உண்ணிலை - உள்+நிலை - மன நிலை, உண்மை நிலை. 3. இல்லவள் - இல்லாதவள், ஏழை.

கெடுத்தவன் தந்தை மிக்கார்;
கெழுதகை அமைச்சர் தக்கார்!
எடுத்தெதை முயலின், அந்த
எளியவள் இன்னல் தீரும்?
அடுத்தவை எண்ணி நெஞ்சம்
அலமுறும்; வருவ அஞ்சும்!

கற்றிலன் கேட்பான்; கல்வி
கற்றவன் தவற்றை ஏற்கான்.
பெற்றவர் மேலோர்! ஏழைப்
பெண்ணையோ ஏற்பார்? இல்லை.
பற்றிலள் என்னை நாடிப்
படர்ந்தனள் தீர்வைத் தேடிச்
சொற்றிறம் வழக்கை வெல்லும்;
சொல்கநீ, வாழ்க்கை ஒல்லும்?

நல்லான்:

தவறெனக் கூறேன்; ஆனால்,
தகுநெறி அதனின் உண்டு.
கவருடை மனத்த ரேனும்
கலந்துடன் பேசின் சாலும்.
அவருடன் படாரே ஆயின்,
அணுகலாம் காவல் மாட்டுத்
தவறிலை பின்னர் மன்றக்
கதவினைத் தட்டு தற்கே!

வழக்கினைத் தொடர்தல் முன்னர்
வழியுள தீர்த்தல் வேண்டும்.
இழுக்கிலை எதிரார் தம்மை
இசைந்திடக் கோரல்; செய்க.
அழுக்குடை மனத்த ராக
அமைந்தவர் எவரும் இல்லை!
அழப்பெறு பால்போல் ஈதே;
ஆய்ந்தறிந் தேற்பப் பேசு.

தனியராய் அணுகல் வேண்டா;
சரியெனில் துணைநான் உண்டே.

முனிவரென் றயர்ச்சி வேண்டா;
 முறையில தெதுவும் இல்லை.
கனியினைப் பறித்தல் ஒப்பக்
 கவனம்நம் முனைப்பில் வேண்டும்.
நனிமிகு செல்வர் என்றாய்;
 நாயகர் அவர்யார்? சொல்க.

நகருறை பெரியர், செல்வர்
 நானறி யாதர் இல்லை;
அகநக நட்பின் மிக்கார்
 ஆயிரக் கணக்கில் உள்ளார்;
இகலெனக் காட்டற் கேற்ற
 இயல்பினர் யாரும் இல்லை;
நகுதக நடந்தார் இங்கார்?
 நானறிந் திருக்கக் கூடும்.

அல்லி:

எதுமிது பற்றி மேலும்
 என்னிடம் கேட்க வேண்டா.
பொதுவமை முறைமை கூறிப்
 புரிந்திட வைத்தாய்; நன்றி.
உதவிமேல் தேவை ஆமேல்
 உரைத்திடத் தயங்கேன்; செய்க.
புதிரிலை வழக்கில்; நீயும்
 பொறுத்திரு; முடிப்பேன் நானே.

நல்லான்:

(எண்சீர் ஆசிரிய விருத்தம்)

அல்லியுனை நன்கறிவேன்; ஆற்றல் உள்ளாய்!
 ஆயினும்நீ கவனமுடன் அணுகல் நன்று.
நல்லரென நடப்பதில்லை செல்வர் யாரும்;
 நடப்பறிந்து திறமையுடன் நடந்து கொள்க.
இல்லவர்க்கிங் கெவர்துணையும் இருப்ப தில்லை;
 இடையூறு பலவுண்டு; பகையும் உண்டு.
தொல்லையுனக் கேற்படலாம்; சூழும் தீமை!
 துணையாக நானிருப்பேன்; சொல்க வேண்டின்.

## காட்சி . 4

**இடம்** : மருத்துவர் அமுதனின் இல்லம்.

**காலம்** : காலை மணி ஒன்பது.

**உறுப்பினர்** : அல்லி, அமுதன், அமுதனின் தந்தை அழகு மணவாளர்.

**சூழல்** : அல்லியும் அமுதனும் அமர்ந்து பேசிக் கொண்டு இருக்கின்றனர்.

அல்லி:

(தரவு கொச்சகக் கலிப்பா)

எடுப்பார்கைக் குழவியென இருப்பீர்பின் எதற்கொருத்தி
இடுப்பேயிங் கனைத்துமென இருந்ததுவும்? இதுநாளும்
தடுப்பார்யார் நமையென்ற தருக்குமக்குத் தவறறிந்தும்
விடுப்பாரும் தந்தையென்ற வீம்புமிக! வேறென்ன?

அன்புடையர் எனநடித்தீர், அவளறிவைக் கெடுத்திட்டீர்;
தன்னையவள் உமதணைப்பில் தடையின்றித் தந்திட்டாள்!
கன்னலவள், சுவைத்ததன்பின் கழிவிலெறி சக்கையென
இன்னலிடை உழன்றிடுவாள்; இரும்பெனநீர் இருப்பீரே!

கல்லுமிகக் கசிந்துருகும் கலையிழந்தாள் நிலையுணர்ந்து;
[1]சொல்லுமுள் இரங்காது துயர்பட்டாள் அயர்வெண்ணி;
நல்லரென உமைநம்பி நலனளித்தாள் நலிவெய்த
அல்லலிடைத் தள்ளியதென்? அன்புடையர்க் கழகாமோ?

---

1. சொல் - மொழி, சொல்விளம்பி, கள், நெல் - இங்குச் சோற்றுப் பொருளில் வந்தது.

அமுதன்:

அன்புடையன் மிகவவள்பால்; அவளறிவாள் எனையென்றும்!
என்னியல்பு பெற்றவர்சொல் எதுவரினும் இகழாமை!
[1]நன்பெனக்கு நடத்துமவர் நடுவிகந்து நடந்திடினும்
இன்புடைத்தே; எனக்கவர்தாம் இருநாளும் இனியவரே!

அல்லி:

பெற்றோர்சொல் பிறழாத பிறவியெனில் பெருமைத்தே!
எற்றேபின் ஒருபெண்ணோ டிணைந்திருந்த திருநாளும்?
சற்றேனும் வருவெதிர்ப்பைச் சரிசெய்யுந் திறனில்லாய்,
வெற்றேயிங் கிருத்தலற்று விழைந்ததுமென் ஒருமலரை?

(அப்பொழுது அமுதனின் தந்தை அழகு மணவாளர் அறையுள் வர, அமுதனும் அல்லியும் எழுந்து நிற்கின்றனர்.)

அழகு மணவாளர்:

(இன்னிசை வெண்பா)

வேண்டா; எதற்கெழுவீர்? வீற்றிடுக! ஏனமுதா?
ஈண்டிவர்க்குத் தேநீர்மற் றேதும் அளித்தாயா?
இல்லை? மிகநன் றிதுவோ விருந்தோம்பல்?
செல்க; எடுத்துவரச் செய்.

(அமுதன் அங்கிருந்து விரைந்து வெளியேறுகிறான்.)

அல்லி:

(நிலைமண்டில ஆசிரியப்பா)

வணக்கம், ஐயா; வழக்குரை யாளர்.

அழகு மணவாளர்:

வணக்கம், அமர்க; வந்ததில் மகிழ்ச்சி!

(அழகு மணவாளர் அமர, அல்லியும் அமர்கிறாள். அழகு மணவாளர் தொடர்கிறார்.)

அறிவேன் வரவை; அமுதன் உரைத்தான்.
கறிவேப் பிலையெனக் கருதுவன் பெண்ணை!

1. நன்பு - நன்மை.

இத்தனை நேரம் இவ்வறை தனிலும்
அத்தனை பேச்சும் அடைந்தன என்செவி.
முற்றும் உண்மை; முத்தே மொழிந்த!
சற்றும் தவறில்; சரியே, நெறியே!
என்னொரு பிள்ளை கன்மனங் கொண்டு
நன்னெறி பிறழ்ந்து நயனில புரிந்தான்!
ஓடி உலகில் ஓயா துழைத்துத்
தேடிய புகழும் செல்வாக் கியாவும்
நொடியில் பொடியாய் நொறுங்கி முடியக்
கொடியன் நடந்தனன்; குறுகுவன் நானே!

(அப்போது அமுதன் பணியாள் பின்வர உள்ளே வருகிறான். பணியாள், கொண்டு வந்தவற்றை எதிரே அருகில் வைத்துவிட்டு அகல்கிறார்.)

அழகு மணவாளர்:

(இன்னிசை வெண்பா)

பருகுக; தோட்டப் பழங்கட்டஞ் சாறே.
மருளல் எதற்கு? மருந்திலை, தேனே.
[1]அருத்திய பின்னர் அடுத்ததை [2]ஆரத்
திருத்திட ஆய்வோம் தெரிந்து.

(அனைவரும் பழச்சாற்றை அருந்துகின்றனர்.)

அல்லி:

(கலி வெண்பா)

காதல் உலகியற்கை; காணல் உயிரியல்பு.
நோதல் எதற்காக, நோக்கம் பழுதிலையேல்?
நல்ல குடும்பத்துச் செல்ல மகளவட்டான்;
இல்லம் விளங்கற் கியைந்த குணத்தினளே!
கள்ளங் கபடு கடுகளவும் காணாதாள்!
கொள்ளற் கருமையளே; கொள்ளக் குறையிலவே!

1. அருத்திய - அருந்திய - பின்னர் வரு எதுகை நோக்கி வலித்தது. 2. ஆர - மிக.

அழகு மணவாளர்:

எல்லாம் அறிவன்நான்; ஏதும் எடுத்தெனக்குச்
சொல்லால் விரித்துரைக்குந் தொல்லையென்? வேண்டாவே!
நல்ல குடும்பந்தான், நானறிவேன் யாவுமிவண்!
செல்வம் சிறிதுமிலை; செல்வாக்கும் இல்லைமிக.
தொல்லைப் பெருமையலால் தோள்கொடுப்பார் யாருமில்லை!
இல்லை; இவருறவை ஏற்றலென்ப தென்றுமில்லை.
கூட்டுக் களவு; குறையாரைக் கூறுவது?
நாட்டில் நடப்பவைதாம்; நாளும் படிப்பவைதாம்!
போகட்டும்; மேலே பொருள்பற்றிப் பேசிடுவோம்.
ஆகவுமக் கெத்தனை ஆயிரங்கள்? சொல்லிடுக.

அல்லி:

ஐயா, உரைப்பதென்ன? ஆயிரங்கள் ஏனெனக்கு?
மெய்யாய்ப் புரியவில்லை; மேலெடுத்துக் கூறிடுக.

அழகு மணவாளர்:

என்னபெயர்? நற்செல்வி? எங்கட் குறவினளே!
சொன்னபடி கேட்டிடுவார்; தொல்லையெதுந் தாரார்!
அழைத்துவரச் சொல்லி அனுப்பியுளேன் ஆளை;
உழைத்துப் பிழைப்பரவர், உற்றுதவ ஏற்றிடுவர்.
கூறின் அவள்பெற்றோர் கொள்வர்; குறைகூறார்.
மீறின் நடப்பறிவார்; மேனாள் நிகழ்வறிவார்.
நானே அவள்மணத்தை நன்கு நடத்திடுவேன்;
ஆனால், அமுதனோ டாகா துறவினியே!

அல்லி:

ஒன்றாய், உயிராய் உளங்கலந்த ஈருயிரை
நன்றோ பிரித்திடுதல்? நல்லார்க் கழகாமோ?
யாருமிகழ்ந் துங்கள் இயல்பைப் பழித்ததில்லை;
பேரும் பெருமைத்தே! பெண்ணவரைப் பேணிடுக.

அழகு மணவாளர்:

வேண்டா, விலகிடுக; வேண்டுதொகை கொண்டிடுக.
ஈண்டார்க்கும் இன்னல் இலையாகப் போகட்டும்.

அல்லி:

காசுபெரி தாகக் கருதிவர வில்லைநான்;
மாசடைந்த மானார் மணம்நடத்தல் மாண்பாகும்.
கூண்டடைதல் இப்பிள்ளை கூடா தெனுநோக்கில்
ஈண்டுநான் வந்ததன்றி ஏதும் பிறிதில்லை.

அழகு மணவாளர்:

என்னை மொழிந்ததுவும்? ஏளனமோ என்னெதிரில்?
என்ன இயலுமும்மால்? ஏற்க; எதிர்கொள்வேன்.
காட்சிக் கெளியனதால் கண்டபடி பேசுகின்றீர்!
ஆட்சி, அதிகாரம் அத்தனையும் ஆம்பக்கம்!
தேடிப்போய் யார்க்குமுன் தீமையெதுஞ் செய்ததில்லை;
கூடின் உடனுதவல் கோள்.

அல்லி:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

பொறுத்திடல் வேண்டும் ஏதும்
புரையுள உரைத்தி ருப்பின்.
மறுத்திட வேண்டா; பிள்ளை
மனத்துறை எண்ணங் காண்க.
வெறுத்திடல் எதற்காம்? காதல்
விளைத்திடும் நிலைத்த இன்பைச்
சிறுத்திடா பெருமை; ஏற்பின்
சிறந்திடும் சீர்த்தி மேலும்!

நல்லது கெட்ட தென்ப
நாமிலை முடிவு செய்யச்
சொல்லுவ செயல்கள் தாமே;
தொடர்புகழ் பழிக்கு நாமே!
நல்லவர் நீங்கள் என்றும்;
நயனில கருதீர் இன்றும்!
எல்லெழ இருட்டான் நீங்கும்;
எண்ணிட யாவும் ஓங்கும்!

உறவென ஒப்பீர்; பின்னென்
உயர்வுதாழ் விடையில் நிற்ப?
நறவெனத் தெரியின் குன்றும்
நமக்கொரு தடையா கொள்ளச்
சிறகுடை பறவை அன்னாள்,
செவ்வியள்; அழகு! சொன்னால்.
அறமுறை அறிந்த அண்ணல்,
அகமுரை ஆய்க; செல்வேன்.

# காட்சி . 5

**இடம்** : அல்லியின் வீடு.

**காலம்** : மாலை மணி ஏழு.

**உறுப்பினர்** : அல்லி, மணிமொழி, வேலன், வேலன் மனைவி வள்ளி.

**சூழல்** : வள்ளி அடுப்படியில் இருக்கக், கூடத்தில் வேலனும் மணிமொழியும் அமர்ந்தபடி பேசிக் கொண்டிருக்கின்றனர்.

வேலன்:

(கொச்சகக் கலிப்பா)

என்ன, மணிமொழி? ஏனுன்றன் அன்புமகள்
இன்னும் வரலில்லை ஏழு மணிகழிந்தும்?
நன்று, மிகநன்று; நாளும் நடப்பதிதோ?
[1]மன்றும் இலையின்று; மாற்றமென் உற்றதுவும்?

மணிமொழி:

இன்றொரு வேலை இருக்கின்ற தென்றுரைத்துச்
சென்றுள தின்றுமட்டே; சேர்ந்திடுவள் நேரத்தில்.
முன்றில் கதவமதோ மூடொலியுங் கேட்டிடுதே;
என்றுமென் பெண்ணாள் இசைத்தமொழி தான்தவறாள்!

( அல்லி அப்போது உள்ளே வந்து சேர்கிறாள்.)

அல்லி:

(நேரிசை ஆசிரியப்பா)

மாமா, வருக; ஆமாம் நீங்கள்
வருவதை முன்பே தெரிவித் திருந்தால்,

---

1. மன்று - வழக்கு மன்றம்.

எங்கும் வெளியில் தங்குதல் இன்றி
உங்கட் காக உடன்வந் திருப்பேன்.
எங்கே அத்தை? ஏன்வர வில்லை?

மணிமொழி:

அங்கே அறையுள்! மங்கை உனக்குப்
பிடிக்கும் உணவைப் படைக்கும் முனைப்பில்
மாலை முதலாய் வேலையில் உள்ளார்!

(அப்போது அடுப்பறை இருந்து வள்ளி அங்கே வருகிறார்.)

வள்ளி:

அல்லி, வாவா; நல்ல வேளை!
சொல்லிய படியே இல்வந் தடைந்தாய்.
சுடச்சுட உணவைப் படுசுவை அமையச்
சமைத்து முடித்தேன்; சாப்பிட வருக.

(அல்லி எழுந்து சென்று வள்ளியை அணைத்துக் கொள்கிறாள்.)

அல்லி:

அதற்குள் வேண்டா; அத்தை, வந்து
முதற்கண் அமர்க! முழுதும் நலமா?

வள்ளி:

எனக்கென்? நலமே! எத்துணை அன்பு!
நினைத்தால் இனிக்கும்; நீயென் உயிராம்!
பிள்ளை இல்லெனும் பிணியை அறவே
கொள்ளை அன்பால் கொன்றாய்; வென்றாய்!
பிறவா மகவாய் உறவாய்ப் பிறந்த
அறிவே, அழகே, அமுதாம் நீதான்!

மணிமொழி:

போதும் வள்ளி; போதும் புகழ்ச்சி.
ஏதுங் கண்ணூ றேற்படும்; வேண்டா.

வள்ளி:

கோழி மிதித்துக் குஞ்சுக் கூறா?
வாழி மகளே; வளமிக வாழி.

மணிமொழி:

மாலை இருந்து மாமா நம்தொழிற்
சாலைக் கணக்கைச் சரிபார் என்றெனைத்
தொல்லை படுத்துவர்; தொழிலென் கண்டேன்?
அல்லி, நீபார்; அறிந்தவள் நீதான்.

அல்லி:

தொழிலா? நமக்கா? சொந்தமாய் உளதா?
மொழிவாய் தவறாய்; மூடனோ நம்ப?

வேலன்:

உரைமொழி உண்மை; உண்டொரு தொழிலே!
விரைவில் நெருங்கும் வெள்ளி விழவே!

அல்லி:

என்தொழில்? எங்கே? எப்படி? ஏற்கேன்!.

வேலன்:

சின்னதாய் ஆடை செய்தொழில் ஒன்றுநீ
பிறந்த ஆண்டில் பிறந்ததுன் பெயரில்.
தந்தைதன் மகட்குத் தந்ததச் சொத்தாம்!
அன்றிருந் தின்றும் அமையுமென் பொறுப்பில்;
என்றும் ஈட்டமே; இழப்பெதும் இல்லை.

அல்லி:

ஏனிதை மறைத்தீர் இந்நாள்? இன்றோ
ஏனிதை உரைப்பீர்? எண்ணம் யாதோ?

மணிமொழி:

சொல்ல நினைத்துஞ் சூழலில் முன்னர்;
ஒல்லும் வாய்ப்பின் றுற்ற [1]துந்தை

1. உந்தை - உன் தந்தை.

கூடா தென்று கூறியுங் கேளேன்;
தேடா தமைந்த தேனே, அமுதே,
சீருடன் செல்வம் சேர்வழி ஈதே!
ஊரவர் பழிப்பில் உண்மை இல்லை.

அல்லி:

யாரென் தந்தை? எங்கவர் இருப்பார்?
ஊரென்? பேரென்? உருவம் எப்படி?
உற்றார், உறவினர், சுற்றம் உண்டா?
மற்ற மனைவி, மக்கள் யார்யார்?
உறுதொழில் என்ன? உண்ணிலை யாது?
சிறுமை, பெருமை இருநிலை எவற்றில்?
எதுவுங் காணேன் ; எடுத்தும் மொழியீர்.
இதுதான் என்னிலை! எண்ணின் இழிபே!
எந்தை உருவை ஏட்டிலுங் காணா
விந்தை மகள்நான்! வெட்கம்! வெட்கம்!

வேலன்:

வேண்டா அல்லி; ஈண்டென் வேதனை?
விரைவில் குறைகள் வெற்றென விலகும்.
நிலவை மேகம் நீள மறைத்திடா!
இலவு காத்த கிளியிலை நீயும்.
இன்னுஞ் சிலகால் இதுதான்;
[1]மன்னும் யாவுமுன் மனம்போற் பின்னே!

மணிமொழி:

(கொச்சகக் கலிப்பா)

வேண்டா இனித்துயரம்; வேளை கனிந்துவரும்.
[2]சேண்டீங் கனியன்னார் சேர்வருனைச் சின்னாளில்!
ஈண்டாரும் பின்நம்மை ஏது மிழித்தலிலை.
தீண்டா நறுமலர்த் தேனாம்நீ [3]தாதைக்கே!

---

1. மன்னும் - பொருந்தும், வந்து அடையும். 2. சேண்டீங் கனி - தொலைவில் உள்ள இனிய கனி. 3. தாதை - தந்தை.

# காட்சி . 6

**இடம்** : வழக்குரைஞர் நல்லான் வீடு.
**காலம்** : காலை மணி ஒன்பது.
**உறுப்பினர்** : நல்லான், அமுதன்.
**சூழல்** : நல்லானும் அமுதனும் அமர்ந்து பேசிக் கொண்டு இருக்கின்றனர்.

நல்லான்:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

என்னிது? நண்பா, நீயா
இப்படிச் செய்தாய்? நன்றா?
ஒன்றுமிங் கறியா னென்றே
உனையறி எவரும் சொல்வார்!
குன்றிய செய்கை ஒன்று
குணத்தினைப் பெற்றாய் என்று?
நன்றெதும் விளைதற் கில்லா
[1]நவையளி சூழல்; என்னே!

திருடினாய், தவறே; ஆனால்,
தெரிந்திடச் செய்தல் ஏனாம்?
வருவது போவ தெல்லாம்
மற்றவர் அறிய லாமா?

அமுதன்:

திருடிலை; இருவர் ஒன்றித்
திளைத்திடுங் களவே; அன்றிப்

---

1. நவை - தீங்கு, குற்றம்.

பொருளிழப் பெவர்க்கும் இல்லை;
பொருந்திய தின்பம் மட்டே!

இளமையில் தொடங்கி இன்றும்
எம்மிடைத் தொடரும் ஈர்ப்பாம்!
களவது; துய்த்தம் நாளும்;
களித்தமை கழறற் காகா!
உளதெதில் புலன்கள் தம்முள்
ஒருங்கிணைந் தடையும் இன்பம்?
அளவிடற் கலகும் இல்லை;
அவளெனக் குவமை இல்லாள்!

நல்லான்:

(தரவு கொச்சகக் கலிப்பா)

உன்கதையை உரைப்பதற்கிங் கொருசொல்நீ ஒலித்தவுடன்
முன்நடந்த நிகழ்வனைத்தும் முழுப்படமாய்த் தெரிந்தவெதிர்.
அன்பளவிற் கதிகமெனில் அகன்றிடற்கு முயன்றதுமென்?
இன்றந்தைக் கெடுத்துரைக்க; எதுவரினும் இணைந்திடுக.

உனக்கெதிராய் வழக்காட உடன்பட்ட வழக்குரைஞர்
எனைக்கலந்து வழியாய எனக்கனைத்தும் தெரியவந்த.
நினைக்கவுமென் னுளஞ்சோரும்; நீயெனமுன் அறிந்திருந்தால்,
உனக்கெதிராய் வருவழக்கை உடனடியாய் முறித்திருப்பேன்.

(கொச்சகக் கலிப்பா)

சிந்தை அவளுறவில்; சேர்கை பணச்செருக்கில்!
தந்தை அருகிருப்பின் தாழ்ந்ததலை தானுயர்த்தாய்;
உந்தனுளப் போக்கிற் குடன்படார் உற்றவரும்;
வந்த தெதற்காக? வாய்திறக்க; ஆய்ந்திடலாம்.

அமுதன்:

பஞ்சின்மென் னெஞ்சத்தாள் பாராள் உளநிலையைக்
கெஞ்சி இரந்திட்டும் கேளாள்; மறுத்திடுவாள்.
வஞ்சித்தேன் உண்மை; வழிவே றெனக்கிலையே!
அஞ்சிடுதல் தந்தைக் கமைந்தபுகழ் போமென்றே!

நற்றா மரைக்குளத்தில் நஞ்சு கலந்தானின்
குற்றம் இழைத்தோன்நான்; கூடுபழி தந்தைக்கோ?
கற்றும் பயனின்றிக் காமவலை பட்டிட்டேன்;
எற்றுக் கியான்பிறந்தேன்? என்னால் இழிவவட்கே!

(கலி விருத்தம்)

இருதலை எரிகழி இடையுறு எறும்பென
[1]வெருதுயர் [2]உடன்றிட மிகநனி வருந்துவன்;
ஒரு[3]சிறை உயிரவர், மறுபுறம் உணர்வவள்;
[4]தெருளிலை எனவுளை திரையலை மனநிலை!

தடிபடு தயிரெனத் தவறிடைத் தமிழென
இடருறும் எனதுயிர் இனிதுறல் இனியிலை!
கடிமணங் கருதிடு கனிமொழி கனன்றுடன்
முடிவுரை வரைந்திட முடிந்திடு முயிரிவண்!

நல்லான்:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

கழிந்தன கழிந்த வாக;
கருதுக காணற் காவ!
பழிபடர் வழியு ளுன்றன்
பைங்கிளி இறங்கி விட்டார்.
வழியிதற் கொன்றே; காவற்
றுறையிரு வழக்கைக் கொல்வேல்
விழியினர் மீட்டல் இன்றே!
விழைந்தவர் காலில் வீழ்க!

அமுதன்:

ஒருமுறை இல்லை; தாளில்
ஒவ்வொரு நாளும் வீழ்வேன்!
அருவருப் பாக நோக்கி,
அடிமுடிப் படவு தைப்பாள்!
தருவதாய்த் தந்தை செல்வம்
சாற்றியு மேற்றா ளில்லை!

1. வெரு - அச்சம். 2. உடன்றிட - பொருதிட. 3. சிறை - பக்கம். 4. தெருள் - தெளிவு.

[1]உருமென உறுமு கின்றாள்;
உளவழி நெறிய தில்லை.

நல்லான்:

நேரிய நெறிக்கே பஞ்சம்!
நீபொறு; [2]நேயர் உண்டு.
பாரிதிற் பணத்திற் காகப்
பனிமொழி [3]மகளை விற்பார்!
யாரெனின் என்ன? ஈயின்,
எதிரெவ ருயிரும் தீர்ப்பர்!
தேரனர் உனக்குச் சேர்த்த
தீவினை அறவே நீப்பர்.

அமுதன்:

இலையிலை, வேண்டா; ஆவி
இணையவட் குறவோர்க் கெந்த
நிலையினு மூறு நேரு
நிகழ்வெதும் சிறிதும் வேண்டா!
சிலைநுதல் வழக்கால் சேர்ந்த
சிக்கலை முதற்றே நீக்கல்!
உலைகொதி தணித்தல் முன்னர்;
உயிரவட் குதவற் பின்னர்!

நல்லான்:

[4]விரைகுழல் மடவார் நெஞ்சுள்
வீற்றுளார்; விலகல் இல்லை!
உரைஞரைக் கலந்து பேசில்
உறுபயன் அரிதே ஆகும்!
விரைவிதில் வேண்டும். கட்சி
மேலரை விடுப்போம்; சாலும்!
உரையமை நண்பர், காவற்
றுறையிலு முள்ளார்; காண்போம்.

1. உரும் - இடி. 2. நேயர் - நண்பர். 3. மகள் - மனைவி, பெண். 4. விரை - மணம்.

# காட்சி . 7

| | |
|---|---|
| **இடம்** | : நற்செல்வியின் வீடு. |
| **காலம்** | : இரவு மணி எட்டு. |
| **உறுப்பினர்** | : நற்செல்வி, தந்தை நம்பி, தாய் கயற்கண்ணி, அண்ணன் அங்கணன். |
| **சூழல்** | : அறையில் தந்தை அமர்ந்திருக்க, அருகில் மற்றவர் சுற்றி நிற்கின்றனர். |

நம்பி:

(மருட்பா)

[1]முட்டாட் டைத்திடினும் முள்ளிற்றாள் உற்றிடினும்
[2]உட்டீங் குனக்கன்றோ? உண்மைநிலை ஓர்ந்திடுக.
இல்லார்தாம்; ஆயின், இனமானம் உள்ளார்நாம்!
பொல்லார் புணர்ச்சியதால் பொன்றும் புகழனைத்தும்.
வெம்புமா வடுவாம் வாழ்வே.
நம்புநீ மகளே; நடப்ப நன்றே!

கயற்கண்ணி:

(தரவு கொச்சகக் கலிப்பா)

பணமிலை, படிப்புமில்லை; பண்புள, பயனுமென்ன?
[3]உணங்குலர் கருவாடாய் உடலுள நலந்தொலைத்தாய்!
பிணந்தினுங் கழுகன்னார் பிறழ்மொழி நம்புவரோ?
கணநிறை வளிகாமங் கருதுவார் உறவெதற்கு?

காதலியார் எவரிருப்பார்? கைகூடும் ஒருசிலர்க்கே!
மோதியெதிர் முறையிடலால் முழுநிறைவு கிடைத்திடுமோ?

---

1. முட்டாட் டைத்திடினும் - முள் + தாள் + தைத்திடினும். 2. உட்டீங்கு = உள் + தீங்கு. 3. உணங்குலர் - ஒரு பொருள் பன்மொழி - வற்றிய.

ஊதப்பழங் கனிந்திடினும் உறுசுவையைத் தருவதில்லை;
ஏதமிலா இல்வாழ்வாம் இருமருங்கும் இசைவுண்டேல்!

கண்ணிற்கே இனியனவன், கருதின்கீழ்க் கயவனவன்;
பண்ணிடைப் பிறமொழிபோற் பயன்படற் கியலாதான்;
மண்ணிலொரு வருமணியாய் மகிழ்பொருளாய்ப் பிறந்தவளே!
எண்ணிலெலாம் விளங்கிடுவ; எடுமுடிவை விலக்கிடுப.

எப்படியும் உனையேற்கார் எனத்தெரிந்தும் எதற்கம்மா?
தப்பெனவும் அறிவாயே; தகுமோநாம் இருநிலைக்கும்?
ஒப்பினரே பொருட்டரவும் உடன்பிறந்தோற் குறுபணியும்!
அப்புறமேன் அவர்க்கெதிராய் அறமன்றில் தொடர்ந்திடலும்?

அங்கணன்:

(பஃறொடை வெண்பா)

என்னம்மா பேசுகிறாய்? ஏளனமாம்; எண்ணிடுக!
கன்ன மிடுபவர்தம் காசுபணி வேண்டிநம்
மான மிழிய மரபு புகழொழிய
[1]ஏனப் பிறவியராய் எற்றுக்கிவ் வாழ்வு?
பணம்பதவி நாளை பரவிவருந் தேடிக்
குணங்கூடா கோடி கொடுத்துக்கை கூப்பிடினும்!
என்ன தவறிழைத்தார் என்றங்கை இங்காரும்
இன்றும் இழைக்காத? இன்பம் விழையாத?
காதலியார் யாராம்? கழறியதும் நீர்தானே!
பேதலித்த அன்னான் பிழைபொறுத்தல் ஆமா?
உடன்பிறந்தாட் குற்ற உயிர்த்துணையாய் நிற்றல்
கடனன்றோ? அம்மா, கருது.

கயற்கண்ணி:

(இன்னிசை வெண்பா)

தம்பிநீ சொல்வ தவறில்லை என்றாலும்
நம்பி நலனிழந்த நம்செல்வி நாணிலளே!
மாற்றார் அறியவரின் மானம் பறிபோகும்;
கூற்றாய்க் குலைக்குங் குலம்.

1. ஏனம் - பன்றி.

நம்பி:

(மருட்பா)

வாழ்க்கை நமக்காக; வந்துபோம் மற்றவர்க்காய்
வாழ்தல் ஒருபோதும் வாழ்வாகா; தாழ்வாகும்!
நல்லவையோ? அல்லவையோ? நாடா அவைதாமாய்;
எல்லாம் அவரவர் எண்ண வெளிப்பாடே!
சொல்லற் கினியில்லை; சூழ்வோம் எதிரடுப்ப.
வெல்லற் கரியவில, வேட்கை வினையாமேல்!
நாடுவ நல்ல வாமேல்,
நாடுவ நன்றாம்; நண்ணா வேறே.

கயற்கண்ணி:

(கலிவெண்பா)

நல்லரென நாமிருந்தோம்; நாடிற்றா நன்மைநமை?
தொல்லை துரத்திவரும்; துன்பம் தொடர்ந்துவரும்!
என்ன நமக்குண் டெவரே துணையாவர்?
மன்னர் நிலையவர்தாம்; மண்பொன் மலைநிலைத்தாம்!
காவற் றுறையவர்க்குக் கைகட்டி முன்னிற்கும்;
ஏவ, நமைப்போன்றார் எங்கேயா? கம்பிப்பின்!
எண்ணா தவர்க்கெதிராய் ஏன்குற்றஞ் சாட்டிட்டாள்?
மண்ணாம் மகள்வாழ்வு; மானம் மிகப்பெரிதோ?
பெண்ணாய்ப் பிறந்திருந்தும் [1]பெட்பின்றிச் சுற்றவன்றோ,
புண்ணாய்ப் புரையோடிப் போன திவள்வாழ்வு?
கல்வி கரைசேர்க்கும்! கண்டீரா சேர்த்தகறை?
செல்விக்குச் சேர்ந்தகறை செத்திடினும் தீராதே!
சென்ற இருநாளாய்ச் சேர்ந்த தொலையழைப்(பு)
ஒன்றிரண் டல்ல; ஒருநூறு மேலிருக்கும்.
திட்டித் தெருநாய்போற் சீறிச் சிலிர்த்திடுவர்!
[2]எட்டி இனித்திடச்செய் இன்னா இழிமொழிகள்!
எல்லாம் எதனால்? இவள்குற்றம் சாற்றியதால்!
நல்லான் இலையவன்றான்; நாமெதற்கு மீண்டவனை
நற்செல்வி தோட்சேர்க்க நாடி வழக்காடல்?
வேண்டாநீர் விட்டிடுக; வேதனைதாம் சேர்த்திடினே!
தீண்டா நமைத்தொடர்ந்து தீது.

1. பெட்பு - பெருமை, தன்மை, பாதுகாப்பு. 2. எட்டி - கசக்கும் பழம்.

நம்பி:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

குறையிலை உரைத்த யாவும்;
கொள்வழி நன்மை மேவும்.
சிறையுறை பறவை நம்பெண்;
சிறியன்றான், விலகற் கில்லாள்.
முறைபிறழ் உறவு; வேறு
முரண்முடி வெடுக்கற் கேலாள்!
நிறைநில வன்ன காதல்
நிலைத்திலை; நெகிழும், தேயும்.

அளவிகந் துண்பார் அல்லல்
அடைந்திடல் உறுதி; [1]எள்ளல்!
களவுகந் தாழ்ந்து துய்த்த
களங்கமில் இனிய காமம்
பிளவுறப் பிறழ்ந்த தற்குப்
பேதையென் பெண்ணென் செய்வாள்?
அளவறு செல்வம், ஆட்சி
அதிகாரம் அமைய வன்றோ?

இருந்திடு செல்வம், [2]ஆண்மை
இருந்திடா வென்றும்; எண்ணார்.
வருந்திட வழிகள் கொள்வார்;
வருபொருள் முன்னர்க் காணார்.
திருந்திட அன்னார்க் கான
தேவையே வழக்கும் ஆகும்.
பருந்தெனத் தீயோர் பற்றப்
பறவையோ செல்வி? தாங்காள்!

அங்கணன்:

(கொச்சகக் கலிப்பா)

பிள்ளை புரிந்த பெரும்பழிக் கஞ்சலின்றிக்
கள்ள மனத்தர்தம் கைக்கூலி ஏவிடுவார்
தள்ளத் தகுமெனினும் தாழ்தல் சரியில்லை!
எள்ளற் கிடமாகும்; ஏன்நாம் பொறுப்பதுவும்?

1. எள்ளல் - இகழற்க. 2. ஆண்மை - ஆளுமை, ஆளுந்தன்மை, வலிமை.

நம்பி:

இல்லையில்லை; பிள்ளாய், எதுவும் இவண்வேண்டா.
நல்லார் மணவாளர், நாட்டம் புகழிடத்தே!
இல்லையவர் ஊரில்; இருப்பின் நமைநேரில்
ஒல்லை அழைத்திதற் கோராறு கண்டிருப்பார்.

கயற்கண்ணி:

பெற்ற பொழுதன்றிப் பிள்ளை தமைப்பெற்றோர்
உற்ற துயரல்லால் [1]ஓகை எதைக்கண்டார்?
எற்றுக் கிவண்பெற்றோம் என்றெண்ணார் யாருள்ளார்?
கற்றுந் தெளிவற்ற கன்மனத்தர் இம்மக்கள்!

நற்செல்வி:

(கலி வெண்பா)

நன்றாகப் பேசுகின்றாய்; நம்புவகைப் பேசுகின்றாய்.
என்றேனும் பேசுமுன் எண்ண முயன்றதுண்டா?
பெற்றவளென் றெங்கள் பிழையைப் பெரிதாக்கக்
கற்றநீ முன்னர்க் கழிந்த மறந்தாயே!
உற்றார் உறவார் உடன்பட்டா நீமணந்தாய்?
பற்றற்றோம் உம்மால்; பரவற் கெவருமில்லை.
என்றந்தை என்றும் இனியர் எவர்க்குமதால்
ஒன்றிய துன்மணந்தான்; ஓராய் பிறர்மனந்தாம்.
சாதிவிட்டு நீர்மணந்தீர்; சார்ந்ததுயர் எங்கட்கே!
ஆதிமுதல் தேடியுமேன் அண்ணற் கெனவொரு
பெண்ணின்னுங் கிட்டலில்லை? பேதலித்த என்னன்பர்
எண்ணம் பிறழ்ந்ததற் கிஃதுமொரு காரணமாம்!
குற்றமெனக் கூறேன் குலம்விட் டயல்மணத்தை;
முற்றும் உகந்ததுவே; முன்னேற வேண்டியதே!
காதல் பிழையில்லை; [2]கைமீறல் தீங்காகும்.
சாதல் தவறாகும்; சாடல் சரியாகும்.
[3]நீரற வுற்ற நிலமிலை வான்பார்க்க;
யாரெவரென் றாலும் எதிர்த்துநான் நிற்பேன்.

1. ஓகை - உவகை, மகிழ்ச்சி. 2. கை - உலக ஒழுக்கம், ஒழுங்கு, செய்யத் தக்கது. 3. நீரற வுற்ற - நீர்+அறவு+ உற்ற - நீர் முற்றும் இல்லா.

உடன்பிறந்தார் தந்தை உடனுதவ, என்றும்
தடம்பிறழேன் வாழ்க்கைத் தளம்.

கயற்கண்ணி:

(இன்னிசை வெண்பா)

பெற்றுப் பெயரிட்டுப் பேறாய் வளர்த்திட்ட
குற்றம் என்னுடைத்தே! கூறு; குறைகாணேன்.
வெற்று மொழியுரைக்க வேற்றாளா? வேதனைக்கென்
உற்ற மருந்தாம்? உரை.

நம்பி:

(நேரிசை ஆசிரியப்பா)

நிலத்திற் சிந்திய நீரெனத் தன்னைம்
[1]புலத்தைத் தொலைத்துப் புழுங்கு மகட்குத்
தோழி யொப்பத் துணைநில், போதும்;
வாழற் குகந்த வழிவிரை வமையும்!
ஆடுங் குதிரை, ஓடும் உருளை
கூடும் ஒருநிலை; கொஞ்சம் பொறுக்க.
எதுவும் ஆகும் எண்ணம் இனிதேல்!
அததற் காகும் காலம்; அமைக.
அன்னோன் தந்தை என்னோ டொன்றாய்ப்
பள்ளி வரையில் கல்வி பயின்றவர்!
ஏரி, குளங்கள், சேரிடம் யாவும்
சுற்றித் திரிந்த அற்றை இளமை
மறத்தற் கில்லை; மறந்திரார் அவரும்.
நாளை மறுநாள் மாலை மீள்வதாய்
வீட்டில் கூறினர்; மீட்டும் விரைவேன்.
அழகு மிகவும் பழகற் கினியர்;
அப்படி யொன்றும் தப்புளர் இல்லை.
எடுத்து மொழியின் அடுத்துக் கேட்பார்!
[2]மடுத்தெதும் வேண்டா, மகளே;
அடுத்த அனைத்தும் விடுக எனக்கே.

1. புலம் - அறிவு, உணர்வு. 2. மடுத்தல் - இடையூறு எதிர் உண்டாக்கல்.

# காட்சி . 8

**இடம்** : நல்லான் இல்லம்.
**காலம்** : மாலை மணி ஐந்து.
**உறுப்பினர்** : அல்லி, நல்லான்.
**சூழல்** : தன் வீட்டு அலுவல் அறையில் நல்லான் அமர்ந்திருக்க, அல்லி அங்கு வந்து அமர்கிறாள்.

அல்லி:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

என்னுனை இரண்டு நாளாய்
என்னெதிர் கண்டேன் இல்லை!
சென்றதும் எங்கே? யார்க்கும்
தெரிவியா தகன்ற தென்ன?
நன்றிலை உன்றன் போக்கு;
நட்பினுக் கழகோ? நோக்கு.
துன்றிடுந் துயரம்; நீயோ
தொடர்பிலா தெங்கோ போனாய்!

நல்லான்:

என்னினை வென்றுஞ் சுற்றி
இருந்திடும் உன்னைப் பற்றி.
அன்பமை காதல் உன்பால்;
அறிந்துநீ அகல்வாய் அப்பால்!
இன்னலென் உணர்வைத் தீய்க்கும்;
எழுநினை வுயிரைப் போக்கும்!
மின்னலின் மென்ம னத்தாய்,
வேண்டுமோ ரின்வி டைதான்.

விழிமுழி முதலாய்க் கண்ணில்
   விளங்குவ யாவும் நீயே;
தழையிதழ் மலர்கள் உன்றன்
   தாளிணை மென்மை காட்டும்!
[1]கழைமுளை அமைப்புக் கொல்லுங்
   [2]கண்கட்டம் கூர்மை காட்டும்!
[3]இழைநகு இடையின் ஆட்டம்
   இடரினை விளைக்கும், வாட்டும்.

கார்முகில் வண்ணம் உன்றன்
   கருங்குழல் கவின்முன் காட்டும்!
கூர்முனை வரைகள் கூம்பிக்
   குதித்தசை நகில்கள் காட்டும்!
ஏர்மிகு கொடிகள் இல்லா
   இடைமடிப் பசைவைக் காட்டும்!
பார்முழு தலைந்தும் எங்குன்
   பளிங்குடற் குவமை கிட்டும்?

எரியுறு வெண்ணெய் என்ன
   என்னுயிர் உருகும் எண்ணி!
பரிவிரு பார்வை கூட
   பக்கமும் திரும்பா; என்னே!
தெருவிடை அங்கு மிங்கும்
   திரிந்தலை நாயாய் உன்றன்
இருவிழிக் கேங்கி நிற்பேன்;
   இரங்கலில்! இழித்தும் பாராய்.

அல்லி:

(குறள் வெண்பா)

வேண்டா வெனவுரைத்தும் விட்டிடாய்; வெட்கமிலாய்;
வீண்நீ! பழித்தல் விடு.

நல்லான்:

(கலி விருத்தம்)

முடியா தென்றே முயலோ மானால்
நடவா தேதும்; நாடக் கூடும்.

1. கழை - மூங்கில். 2. கண்கட்டம் - கண்கள் + தம். 3. இழை - நூல்.

அடிமேல் அடியா? அம்மி அசையும்;
படியார் யாரே பலகால் படினே!

அல்லி:

(கொச்சகக் கலிப்பா)

உள்ளொன்று வைத்துப் புறமொன் றுரைத்திடு
கள்ள மனத்தர்க்குக் காதல் ஒருகளவே!
எள்ளற் கியைந்த இழிசொற்றாம் நீயுரைத்த;
கொள்ளற் கமையேன், குளறுமொழி யானாற்றேன்.

போதும் புலம்பியவை; போவேன், பொறுத்திடுக.
ஏது மொழிந்துமென்? எள்ளளவும் ஏற்பாயில்.
சூது மனத்தளத்துச் சொல்லோ திரிபுடைத்து.
தீதுன் தொடர்பாகும்; சேறேன், அகன்றிடுவேன்.

(அங்கிருந்து அகல அல்லி விரைந்து எழுந்து கொள்ள, நல்லான் விரைந்து எதிர் வந்து தடுக்கிறான்.)

நல்லான்:

(எண்சீர் ஆசிரிய விருத்தம்)

எப்போதும் உன்நினைப்பே; என்ன செய்வேன்?
எண்ணியதை எண்ணியவா றியம்பல் தப்பா?
தப்பேதான், ஆயினுமென்? பொறுத்தற் கென்ன?
தலைதாழ்த்தி இறைஞ்சிடுவேன்; சாடல் வேண்டா.
ஒப்பாய்நீ; ஆயினுமென்? உன்றன் உள்ளம்
ஒன்னார்க்கும் ஊறெண்ணா துதவு முன்னம்!
இப்போதிங் கமர்ந்திடுக; என்னைத் தேடி
எழுந்ததுவு மெதற்காக? இடர்தான் என்ன?

(அல்லி மீண்டும் அமர்கிறாள்.)

அல்லி:

(பஃறொடை வெண்பா)

யாரோ தொடர்வரெனை எங்குநான் சென்றிடினும்.
பாரா திருப்பார்போல் பக்கம் நெருங்காமல்
ஓயா தொருநொடியும் உற்றிடுவார் காலைமுதல்!
தீயாரில் காணின்; தெரிந்தார்போற் றோன்றிடுவார்.

நானவர்பாற் சென்றால் நகர்ந்திடுவார் அப்பாலே;
ஏனெதற் காக? எனக்குப் புரியவில்லை!
காவற் றுறையினரா? கண்டதில்லை முன்னவரைக்
காவற் கமைந்தவரா? காணேன் வழியதற்கும்.
தீதென் றியார்க்குந் தெரிந்து புரிந்ததில்லை;
யாதொன்றுஞ் செய்திருப்பின் எல்லார்க்கும் நல்லதுவே!
எண்ணாத ஏதேதோ எண்ணி இடருழல்வேன்;
[1]கொண்ணேர் வழியுண்டேற் கூறு.

நல்லான்:

(நேரிசை ஆசிரியப்பா)

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்!
மூதுரை பொய்யிலை; முடிந்த முடிபாம்.
எச்செயல் எனினும் எதிர்விளை வென்பது
நிச்சயம் உண்டு; நீயறி முதலில்!
சேற்றில் காலைச் சேர்ப்பின்
நாற்றந் தவிர்த்தல் நம்பால் இல்லை.

அல்லி:

(குறள் வெண்பா)

என்நீ உரைப்ப? எதையுந் தெளிவுறச்
சொன்னாலென்? உண்டாமோ சூது!

நல்லான்:

எண்ணி எதிர்வரு யாவும் அலசிப்பின்
பண்ணின் விளையா பழுது.

அல்லி:

(நிலைமண்டில ஆசிரியப்பா)

நன்று, நன்று; சென்றினித் திரும்பேன்.
என்றும் நேராய் எதையும் இயம்பாய்.
பாசி படர்ந்தென [2]ஆசு மொழியாய்,
கூசுமுன் நட்பே; குறையென் னகத்தே!

1. கொண்ணேர் - கொள் + நேர். 2. ஆசு - குற்றம்.

நல்லான்:

இருவிரு; எல்லாம் இயம்புவன் எடுத்து.
வருமுனங் காத்தல் வல்லார்க் கழகாம்!
செயற்கலா செயக்கெடும்; செய்தாய், படுவாய்!
கயிற்று நடக்கு [1]முயற்றுன் நிலைதான்!
சிறுமை பெருமை செய்வினை யாலே!
பொறுபொறு; முற்றும் புகல்வேன், கேட்க.
செல்வம் ஆளுமை செறிந்தோர்க் கெதிராய்
வெல்வம் என்பது வெற்றுரை ஆகும்.
யாரோ ஒருபெண் தீராப் பழிக்கு
நீயேன் துணையாய் ஆயா தமைந்தாய்?
காசிலா தார்க்குக் காவற் றுறையிலை,
ஈசனே ஆயினும் எதிர்த்தே நிற்பான்.
வாய்ப்பு வசதி வாய்த்தவர்க் கெதிராய்க்
குற்றஞ் சாட்டிப் பெற்றதென் பயனே?

அல்லி:

(நேரிசை ஆசிரியப்பா)

நரம்பில் நாக்குப் புரளும்; புளுகும்!
ஏவியன் என்னைக் காவற் றுறைக்கு
நீயே அன்றோ? நினைவும் இலையோ?
[2]ஏயாய் என்னை எய்தவன் நீயே;
இப்போ தம்பை எய்தநீ இகழ்வாய்!
தப்பென் மேற்றான்; தகுதி இல்லார்
நட்புக் கொள்ளின் நலிவே!
பெட்பிலா நட்பு, பிழையே! பிணியே!

நல்லான்:

செய்முறை உரைத்தேன்; சிக்கல் யாரால்?
மெய்ம்மையை மறைத்ததன் [3]நொய்ம்மை இதுதான்.
கெட்டவர் யாரெனக் கேட்டேன் அன்றே.
தட்டிக் கழித்தாய்; தவறும் என்னதா?
யாரென் றன்றே இயம்பி இருப்பின்,
ஆர அமர ஆய்ந்தொரு முடிபை

1. முயற்று - ஊக்கம். 2. ஏய் - அம்பு. 3. நொய்ம்மை - குற்றம், தளர்ச்சி, இழிபு.

யாரும் ஏற்க எடுத்திருந் திருக்கலாம்.
பாருன் வீம்பால் படர்ந்த துயரே!

அல்லி:

குற்றமென்? உனக்குக் கூறாக் குறையா?
மற்றென் செயலில் உற்ற தவறென்?

நல்லான்:

பதவி செல்வம் உதவடி யாட்கள்
மிகையாய்க் கொண்டோர் பகையிங் கெதற்காம்?

அல்லி:

சொல்வதை விளங்கச் சொல்க தெளிவாய்.
வீணரை விட்டிடல் நாணுடைத் தன்றோ?

நல்லான்:

வழக்குப் பற்றி முழுக்க அறிவேன்.
விழுப்பஞ் சேரா; இழப்பே நேரும்.
நண்பன் அமுதன் நடந்த மொழிந்தான்.
பெண்ணவட் கிழைத்தான் பெருந்துயர்! ஏற்பான்.
இருந்தும் இன்றவன் இருக்கும் இயல்பில்
வருந்தும் வஞ்சியை வரித்திட வாய்ப்பிலை.
முடிவ தருமையே முயற்சி கொளினும்!
விடிவிலை, தெளிக; விட்டிடு வழக்கை.

அல்லி:

வழக்கை விடுதலின் வழிவே றிலையா?
இழக்கற் கரிய இழந்தவள் நிலையென்?

நல்லான்:

புதிதோ இதுவும்? பொழுதும் நடப்பதே!
விதைபோற் றானே விளைவ எவையும்.

அல்லி:

இல்லை, இல்லை; இதைவிடல் இல்லை.
தொல்லை என்னைத் தொடரினும் இல்லை!

நல்லான்:

சொல்லற் கியைந்த சொல்வேன், கேட்க.
தொல்லை இனித்தாம் தொடர்வ அலையாய்க்
கல்லை மோதின் கடுவலி கற்கா?
யாரேன் தொடர்வர்? எண்ணிடு; வேண்டா.
நேராய் நிற்கார்; நெறியுள ஏற்கார்.
பேசியில் அழைப்பர்; பிழைபட இழிப்பர்.
ஏசுவர்; கற்களை எறிவர் இரவில்.
கதவைத் தட்டுவர்; காசுக் கழைப்பர்.
உதவிக் கழைப்பினும் ஒருவரும் விழையார்!
காவற் றுறையினர் காலந் தாழ்த்திக்
காவலர் ஒருவரை ஏவுவர் கடனென!
அவரும் வருவார்; அறிந்தும் அனைத்தும்
'தவறுன் னகத்தே, தக்கார்க் கெதிராய்க்
குற்றச் சாட்டைக் கொடுத்தது குற்றமே!
பெற்றிடும் திரும்பப் பிழைக்கலாம்!' என்பார்.
நடப்ப இவையே; நன்றோ?
விடுப்ப வழக்கை விரைவ நலனே.

# காட்சி . 9

**இடம்** : அல்லி இல்லம்.

**காலம்** : மாலை மணி ஆறு.

**உறுப்பினர்** : அல்லி, அல்லியின் தாய் மணிமொழி, காவற்றுறை ஆய்வாளர் தமிழ்ச் செல்வன், வெள்ளாடை ஆட்கள் சிலர்.

**சூழல்** : தன் வீட்டுள் அப்போதுதான் நுழைந்த அல்லி, அங்கு இருந்த அயலவரைப் பார்த்து அதிர்ச்சி அடைகிறாள்.

அல்லி:

(இன்னிசை வெண்பா)

என்னம்மா? என்ன? இவணென் நடந்திடலும்?
முன்னம் அறியாதார் உண்ணுழைந் தென்னிருப்பர்?
கூட நடுவிலிவர் கூடி ஒருங்கிணைந்து
நாடிவந்த தென்னாம்? நவில்.

மணிமொழி:

(பஃறொடை வெண்பா)

எல்லாரும் உன்னை எதிர்பார்த்தே இங்கிருப்பர்!
இல்லாட் குதவநீ ஏற்றிட்ட இன்முயற்சி
வேண்டா [1]விடர்விளை வித்தாய் விளைந்திற்று!
வேண்டா எனவுரைத்தேன்; சீண்டாய், செவிகேளாய்!
காவற் றுறையில் கடனாற்றும் மேலவராம்;
ஏவல் பலவிருந்தும் யார்யாரோ வேண்டிட்டும்
அந்தி முதலிங் கசையா தமர்ந்திருப்பார்!
வந்தமுதல் சூழ வரிசையாய் நிற்பவரோ

---

1. விடர் - காடு, நிலப் பிளப்பு; இடர் - வருத்தம்.

ஆளும் அமைப்பின் அடிமட்டத் தொண்டரென்பர்!
வாளின் கொடியவவர் வாய்!

தமிழ்ச்செல்வன்:

(தரவு கொச்சகக் கலிப்பா)

எல்லாமும் அறிந்தவர்நீர், எதற்கெடுத்திங் கிசைத்திடலும்?
பொல்லாங்கைப் புரிந்திருந்தும் பொருட்கொடுத்துப் பெறுவருண்டோ?
நல்லார்நம் மணவாளர், நடுவிகந்து நடவாதார்.
சொல்வாரிங் கனைவருமே! தொடர்வதுமேன்? விலகிடுக.

இனியபலா எதிரிருக்க இழிகழிவும் இனித்திடலோ?
தனிமையிலே துணையின்றித் தறிவாழ்க்கை உடையர்நீர்!
முனிவுகொள நினைத்திடலும் முடியாதே; முரணெதற்காம்?
[1]உனியனைத்தும் ஒதுங்கிடுக; உதவிபல உடனடையும்.

முடியாதென் றுரைப்பதனால் முடிந்திடும்ம் முளவமைதி!
விடியாமுன் இரவெல்லாம் விழுங்கற்கள் தொடர்மழையாய்.
அடியாட்கள் இவரில்லர்; அவருள்ளார் அளவில்லை!
கொடியார்தாம்; கொலைகூட குறித்தபடி முடித்திடுவார்.

மாவட்ட ஆளுமையே மணவாளர் மனப்படியே!
காவற்று றையுமவர் கருத்தறிந்தே செயல்புரியும்.
ஏவிட்டார் எனிற்சிறையில் இருத்திடுவை இழிதொழிற்காய்!
நோவற்கோ தொழில்புரிதல்? நுவலுமொழி நுணுகிடுக.

நூறல்ல; அளவற்ற நொடிப்பொழுதில் பொருந்திடுவ.
ஊறென்றும் உமையணுகா; உறுதியிவண் உரைத்திடுவன்!
வேறொன்றும் செயல்வேண்டா; விலகிடுக வழக்கிருந்து!
கூறின்னும் விழைவுளவேல், குறித்தபடி நிறைந்திடுமே.

அல்லி:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

காவற் கியைந்தார் தாமும்
கள்வர்க் குதவல் ஆமோ?

1. உனி - உன்னி; இடைக்குறை.

ஏவற் குரிமை உள்ளீர்,
எதற்கிவ் வெளிய செய்கை?
கோவிற் காளை ஒப்பான்
குற்றம் மறைத்தல் தப்பாம்!
நோவற் கேலும் ஏனும்
[1]நுகைவில்; தொடர்வேன் திண்ணம்.

பிரிந்தான், உயிராம் முன்னர்ப்
பெண்ணொ டிணைந்த பின்னர்.
விருந்தாய் இனித்த தேனே
வேம்பாய்க் கசந்த தேனோ?
திருந்தான்; மேலும் நாளும்
தீய திரும்பும், நீளும்.
மருந்தாம் வழக்கும் அன்றோ?
மறித்தற் கணைந்தீர்; நன்றோ?

உள்ளார் என்ப தாலே,
ஒல்லா செய்தல் மேலா?
கொள்ளார் நல்லார் தீய,
கோடி கூடு மேனும்!
தள்ளாச் செல்வம் இல்லை,
சாரும் தொல்லை இல்லை,
உள்ளேன் நல்ல அல்ல;
உண்மைக் கூறா? கொள்ளேன்.

தமிழ்ச்செல்வன்:

(வேறு)

சொல்வதை எண்ணி ஆய்ந்து
சொந்தமாய் முடிவு செய்யும்
வல்லமை பெண்கட் கென்றும்
வாய்த்ததாய் வரலா றில்லை.
கல்வியில் வல்லர்; ஆயின்,
கருத்தினில் பேதை தாமே!
நல்லன எடுத்துச் சொன்னேன்;
நடப்பினித் தடுப்பர் யாரே?

1. நுகைவு - தளர்வு, தணிவு.

அல்லி:

(கலித்துறை)

பஞ்சினும் மெல்லியள் பாலினும் வெள்ளியள் பாராதே
மஞ்சம் அடைந்தவள் நெஞ்சம் உடைந்திட வைத்தானே!
கொஞ்சி மகிழ்ந்தவன் கூடி மணந்திடக் கூடாதே
நஞ்சன செய்கையன் நாடுவன் உந்துணை, நாணீரே!

ஆண்றுணை இன்றெமக் காதலால் நானும் அயர்வேனோ?
[1]கோண்முறை கோடினும் [2]கொள்புலி கொள்ளினும் கோடேனே!
வீண்பழி மேவினும் வெந்தழல் சேரினும் வீழ்வேனோ?
வாண்மதி போன்றவள் [3]வான்றுயர் தீர்வரை ஓயேனே!

குற்றம் இழைத்தவன் கோடி கொடுப்பினுங் கொள்வேனோ?
சுற்றம் நெருக்கினும் தொல்லை தொடரினும் சோர்வேனோ?
இற்ற மனத்தினள் உற்ற இடுக்கணிங் கேகாமே
வெற்று மிரட்டலால் வெல்லலாம் என்பதும் வீணாமே!

தமிழ்ச்செல்வன்:

(நேரிசை ஆசிரியப்பா)

நன்றுந் தீதும் நம்மின் செயலால்.
ஒன்று விதைப்பின் ஒன்றுமோ வேறும்.
நன்றெது? தீதெது? நாளும் மாறும்;
இன்றெது இனிதோ, ஏற்ப தறிவாம்!
பெண்நீர்; அதனால், பிறழற் கஞ்சுவன்.
எண்ணார் பிறரும், இரங்கார்.
உண்மை, ஓர்க; ஓம்புக இனிதே.

உடனின்றோரில் ஒருவர்:

(கொச்சகக் கலிப்பா)

போதும், புறப்படுவோம்; [4]போதும் கழிந்ததிங்(கு).
ஏதும் இனிப்பேச்சால் ஏலா, எழுந்திடுக.
ஏதம் வருமென் றெடுத்துரைத் தென்னபயன்?
நோதற் கிவரணியம்; நோவதென்? நாம்போவோம்.

1. கோண்முறை - கோள் + முறை. 2. கொள்புலி கொள்ளினும் - கொள்ளினைப் புலி கொண்டிடினும். 3. வான்றுயர் - மிக்க துயர். 4. போது - பொழுது.

(அப்போது தொலைப்பேசி அழைப்பொலி எழுகிறது. மணிமொழி எடுத்துப் பேசுகிறார்.)

மணிமொழி:

(நேரிசை ஆசிரியப்பா)

என்ன? நீங்களா? என்னிவ் வேளை?

மறுமுனை:

என்நடக் குதங்கே?

மணிமொழி:

எதுவும் இலையே!

மறுமுனை:

இல்லை, இல்லை; எல்லாம் அறிவேன்.
சொல்வதற் கென்ன? தொலைந்தா விட்டேன்?
என்னுள் உயிராய் என்றும் இருப்பவர்
உங்களை ஒழிய இங்கெவர் உள்ளார்?
பேசியை நம்மரு பெண்ணிடம் கொடுநீ.

மணிமொழி:

வேண்டா, வேண்டா; வீண்வம் பெதற்காம்?

மறுமுனை:

போதும் இந்நாள் பொறுத்ததும் உன்னால்!
ஏதம் இயையினும் தீதிலை; ஏற்பேன்.
கொடுவென் பெண்ணிடம்; தடையெதும் கூறேல்.

(மணிமொழி தொலைப்பேசியை அல்லியிடம் நீட்ட, அல்லி பெற்றுக்கொண்டு தாயின் கண்களை நோக்குகிறாள்.)

மணிமொழி:

பேசுக, அப்பா! பேசு, பேசு.

அல்லி:

அப்பா?

மறுமுனை:

ஆமாம்; அப்பா நான்தான்!

அல்லி:

இப்போ தெதற்காம் இதுநாள் இன்றி?

மறுமுனை:

இப்போ தில்லை; தப்பா தென்றும்
உன்னையே எண்ணி உறைபவன்; உண்மை!
தகவிலன், சரிதான்; தவறே! எனினும்
மகளுன் நினைப்பென் அகமகல் இல்லை.
போதுமிப் போது; பொறு,பின் பார்ப்போம்.
தீதுமுன் பின்னர்ச் சேரற் கொப்பேன்!
ஒளியெழ [1]ஒளிநிழல் ஒக்க உளவெதிர்
துயரொழி வேளை இயலும் இன்னே!
சிலமணித் துளிகள் செலற்குள்
விலகும் யாவும்; வேண்டா துயரே!

(அல்லி தொலைப்பேசியை அதனிடத்தில் வைக்கிறாள்.)

மணிமொழி:

(நிலைமண்டில ஆசிரியப்பா)
என்ன சொல்கிறார், உன்னரு தந்தை?

அல்லி:

இன்னே எல்லாம் இனிதே இறுமாம்

மணிமொழி:

பின்னேன் கவலை? பிறழா; நடப்ப!

தமிழ்ச்செல்வன்:

யாரவர்? தந்தையா? என்ன சொல்வார்?
நேரவர் நேரினும் நிகழா நினைப்ப!
வலியர் முன்னர் எளியர்க் கென்றும்
நலிதல் அன்றி நலமென் [2]இவரும்?

1. ஒளிநிழல் - மறைநிழல். 2. இவர்தல் - பொருந்துதல், செறிதல்.

சொல்வதைக் கேட்க; நல்லதைச் சேர்க.
இல்லெனின் அல்லவை இயைதல் இறுதி!

மணிமொழி:

எல்லாம் சரிதாம்; எதற்கும் சற்றே
இல்லீங் கிருப்பின் இதற்கொரு இறுதி
தெளிவாய் என்னென எளிதாய்த் தெரியும்.
குளவிக் கூட்டைக் குறும்பாய்க் களைத்தீர்;
விளைவு விரைவில் விளங்கும்! வேறென்?

(அப்பொழுது தமிழ்ச்செல்வனின் செல்லிடப் பேசியின் அழைப்பு ஒலி எழுகிறது. எடுத்துப் பார்த்ததும் எழுந்து பேசுகிறார்.)

தமிழ்ச்செல்வன்:

(நேரிசை ஆசிரியப்பா)

வணக்கம், ஐயா.

மறுமுனை:

வணக்கம்; அங்கே,
என்ன செய்கிறீர் இந்த வேளையில்?
வெற்றே, தனியே வேற்றாள் சூழ,
உற்றதென் தனித்த பெண்டிர் உறையில்?
மேலிடத் திருந்து விடாது தொடர்பு!
வேலியே பயிரை மேய்வதா? கேட்பர்.
என்னால் என்விடை இயலும் இயம்ப?
உன்னால் துறைக்கே உறுத்தல்; ஏனாம்?
யாரைக் கேட்டிவ் விரவுப் போழ்தில்
பேரைக் கெடுக்கும் பிழையிது புரிவீர்?
உட்டுறைச் செயலர் உட்படப் பலரும்
பணியிடை நீக்கம் பண்ணிடச் சொல்லிப்
பணிப்பர் என்னைப் பன்முறை!
உடனே வருக; உன்னுவம் வழியே.

## காட்சி . 10

**இடம்** : அழகு மணவாளர் இல்லம்.

**காலம்** : காலை மணி பத்து.

**உறுப்பினர்** : அழகு மணவாளர், அமுதன், கோதை.

**சூழல்** : மனைவி கோதை பக்கம் இருந்து படைக்க, அழகு மணவாளர் அமர்ந்து காலை உணவு உண்டு கொண்டு இருக்கிறார். அப்போது தயங்கியவாறு அமுதன் அங்கே அருகே வருகிறான்.

கோதை:

(நேரிசை ஆசிரியப்பா)

வாவா, அமுதா; வந்திங் கமர்க.
பூவாம் உன்முகப் பொலிவென் போனது?

(அமுதன் தன் தந்தை எதிரே அமர்கிறான்.)

அழகு மணவாளர்:

மணியென் பத்தா? மருத்துவப் பணிக்குச்
செல்லக் காணோம்; செய்தியென்? சொல்க.

அமுதன்:

அப்பா! என்னைத் தப்பாய்க் கொளற்க.
எப்பவும் உங்கட் கொப்ப நடப்பன்.

அழகு மணவாளர்:

சரி,சரி; அறிவேன்; சாற்றுக மேலே.
புரியும் உன்னுளம்; புரியாய் எதிராய்!

அமுதன்:

அந்தப் பெண்ணை அமைதி படுத்தக்
கொண்ட முயற்சி கண்ட திகழ்ச்சி.

(இடையிட்டு அருகில் நின்றிருந்த அவன் தாய் கோதை பேசுகிறார்.)

கோதை:

இலவிதில் ஏதும் எதிர்மறுத் தியம்பல்;
சிலவிடை சொல்வேன்; சினந்திடல் வேண்டா.

அழகு மணவாளர்:

சொல்க; நீதான் சொல்லற் குரியை.
இல்லத் தரசிநீ; இடும்பணி புரிவோம்!

கோதை:

விளயாட் டெதற்கு? வினையும் பேச்சும்!
இளைத்தர் பெண்கள் எனுமிழி எண்ணம்!

அழகு மணவாளர்:

இல்லை, இல்லை; என்சொல் பொறுக்க.
பொல்லா எண்ணம் போற்றேன்; தொடர்க.

கோதை:

அருமருந் தன்ன அமுதன் ஒருத்தியை
விரும்புவன்; அவளும் விரும்புவள்; தவறா?
செல்வம் தலைமை சிறப்பு யாவும்
செல்வமென் றொருநாள் செல்லவுங் கூடும்;
உண்மைக் காதலோ உயிர்போம் நொடியும்
உள்ளத் துறைவ துவகை அளிப்பது.
தவறெனின் பொறுக்க; தவிர்ப்பேன்.

அழகு மணவாளர்:

இவனுன் பிள்ளை; இயம்புக எடுத்தே.

கோதை:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

களவிவர் இருவர் கொண்டார்;
 கடிதலோ அவளை மட்டும்!
அளவிடற் கரிய இன்பம்
 அறுபடின் வாழ்நாள் துன்பம்!
இளமையிற் காதல் கல்லில்
 எழுதிய எழுத்திற் கொப்பாம்!
உளநிறை வுடையார் என்றும்
 உடன்படார் உடையக் காதல்.

இயல்பினில் இனியர் நீவீர்;
 இடையினில் இஃதென் மாற்றம்?
[1]புயலுள இயல்பு போகப்
 புகழுரை மயக்கம்; வேண்டா.
அயலவள் இல்லை; ஆயின்
 அன்புறு நண்பர் பெண்ணே.
மயலினைப் போக்கி நோக்கி
 மகனுளம் மகிழச் செய்க.

பெற்றவர் பிள்ளை வேட்ட
 பேணலே பெரிய பேறாம்.
கற்றுயர் வுற்ற சான்றோர்
 காழ்ப்புணர் வேற்றல் போற்றார்.
நற்றவம் இருந்து பெற்ற
 நம்மகன் நலிதல் நன்றா?
அற்றவள் எனினும் அன்னாள்
 அன்பினில் இமயம்! ஆமாம்.

அழகு மணவாளர்:

(எண்சீர் ஆசிரிய விருத்தம்)

என்முன்னர் எனக்கெதிராய் என்றும் ஏதும்
 என்வரினும் சொன்னாரில்; இன்றோ சொல்வார்!
என்னின்நின் அன்னைமட்டே என்றும் உன்றன்
 இன்னலமே தன்னலமாய் இருப்பார்; உண்மை!

1. புயல் உளம் - மேகம் ஒத்த உள்ளம்.

உன்னெண்ணம் என்னமுதா? உரைநீ உள்ள;
உன்னாசைக் கிடையூறாய் [1]உள்ளேன் நானும்.
என்னண்பன் என்சொல்லை இன்றுங் கேட்பான்;
எடுத்துரைப்பின் உன்னிசைவை, இன்றே கேட்பேன்.

அமுதன்:

(குறள்)

என்னலத்தில் பற்றுமிக என்றுமுள என்றந்தை
என்சொலினும் ஏற்பன் இனிது.

கோதை:

(தரவு கொச்சகக் கலிப்பா)

தலையுயர்ந்த பிள்ளைக்குத் தன்னறிவு தழைத்திருக்கும்,
இலையுனக்கோ, ஏனதுதான்? என்பிள்ளை இலைநீயே!
விலையமைத்துப் பெண்வாழ்வை வீணடிப்பீர்; வெட்கமிலை!
நிலையிழிந்து வாழ்வதுவும் நேரியதோ? நினைநீயே.

உன்வாழ்வைப் பிறர்நடத்த உடன்படலோ? உயர்வதுவோ?
என்னாகும் இவர்பெருமை? இனுங்கூடும் மணங்கூடில்!
உன்னாவி அவளெனவே உணர்ந்திலையோ? உரைத்திடுக.
என்னோக உனையீன்றேன்? எனக்கிதிலே திறும்பூது!

பகுத்தறிய இயலாதான் படித்ததனால் பயனென்ன?
வகுத்தவர்வாய் வழிபெரிதா? மனத்துறைவள் துணைபெரிதா?
மிகுத்தபெரு நிதியமெலாம் விளைத்துவிடா நிறைவுடைமை;
அகத்துநிறை அன்புடையார் அரவணைப்பே அனைத்துடைத்து!

தவறில்லை காதலித்தல்; தகுமெந்த அகவையர்க்கும்.
[2]அவமறிக தடமாறல்; அழிவிற்கு வழியமைக்கும்.
எவரிறுதி உடனிருப்பர்? எணினுண்மை புலனாகும்.
உவர்கடலின் உப்பெனினும் உயிர்வாழற் குரித்தன்றோ!

பணம்பதவி செல்வாக்குப் பழம்பெருமை குலங்கல்வி
பிணமெனநீ செல்கையிலே பின்தொடரா; பிறகெதற்குக்
குணந்திரியக் குறைசெறியக் கொண்டவளை விலகிடலும்?
மணந்திடுக மயிலவளை; மயலெதற்கு? வாழ்வுனது!

1. உள்ளேன் - எண்ணேன். 2. அவம் - கேடு.

அமுதன்:

(இன்னிசை வெண்பா)

அப்பா இஃதென்ன? அம்மா இதுபோல
எப்போதும் என்னை எடுத்தெறிந்து பேசாரே?
ஏதேதோ சொல்லி எனைநாண வைத்திடுவார்;
தீதாமோ செய்த செயல்?

அழகு மணவாளர்:

(நேரிசை ஆசிரியப்பா)

தந்தை சொல்லின் மந்திரம் இல்லை;
தாயிற் சிறந்த கோயிலும் இல்லை;
கோயில் இலையேல் கூடா மந்திரம்!
எப்பொருள் யார்வாய் எழுந்த தெனினும்
அப்பொருள் மெய்ப்பொருள் அறிவ தறிவே!
எனினும் ஈன்றவர் இயம்புவ
இனிய மகற்கே; ஏற்க இனிதே!

# காட்சி . 11

**இடம்** : அழகு மணவாளர் இல்லம்.

**காலம்** : மாலை மணி ஐந்து.

**உறுப்பினர்** : அழகு மணவாளர், அமுதன், கோதை, ஆய்வாளர் தமிழ்ச்செல்வன், நம்பி.

**சூழல்** : பார்வையாளர் அறையில் ஆய்வாளர் தமிழ்ச்செல்வனும் நற்செல்வியின் தந்தை நம்பியும் அமர்ந்திருக்க, அமுதன் பின் தொடர அழகு மணவாளர் அங்கே வருகிறார்.

(தமிழ்ச்செல்வனும் நற்செல்வியின் தந்தை நம்பியும் எழுந்து வணங்கி நிற்க, மணவாளரும் எதிர் வணங்குகிறார். மணவாளர் நம்பியை அங்குக் கண்டதும் மகிழ்ச்சியோடு விரைந்து அவர் கைகளைப் பிடித்துக் கொள்கிறார்.)

அழகு மணவாளர்:

(பஃறொடை வெண்பா)

அடடே! வருக; அருமையென் நண்ப,
உடலேன் இளைத்ததும்? உற்றார் நலந்தாமா?
என்மனைவி பிள்ளை இணைந்தின் றெதிருந்(து),
உன்பெண் உயர்வை உரக்க உரைத்ததலால்
சந்தித்துப் பேசுமெனச் சண்டையிட்டார் காலையிற்றான்;
வந்துநீ நிற்கின்றாய்! வாழ்க வரவினி(து)!
ஈதோ வருகின்றார் இல்லத் தலைவியவர்!
தீதேற்கார் சற்றுந் தெரிந்து.

(அப்போது கோதை அங்கே வருகிறார். நம்பியைப் பார்த்ததும் வியப்பும் மகிழ்ச்சியுங் கொள்கிறார்)

கோதை:

(நேரிசை ஆசிரியப்பா)

அண்ணே! நீங்களா? அகமிக மகிழ்ச்சி!
என்னே இன்றே இங்கே இயைந்ததும்!
நினைத்தேன் உங்களை; நிற்பீர் எதிரில்!
அனைத்தும் இயலும் ஆம்கால்[1]; சரிதான்.
நலமா அண்ணி? நலமா மக்கள்?
பலகால் ஆன பார்த்துப் பேசி!

நம்பி:

யாவரும் நலமே; [2]தாவிலை சிறிதும்.
எங்களைப் பொருளாய் இங்கினி தேற்றுநீ
அன்புடன் நடத்தும் பண்பெவர்க் கமையும்?

(நம்பியின் கண்கள் கலங்குகின்றன. )

கோதை:

என்னணே? யார்நான்? எதையும் மறவேன்.
வருக, உள்ளே வருக.
வருக நீங்களும்; வருக விரைந்தே.

அழகு மணவாளர்:

(நிலைமண்டில ஆசிரியப்பா)

செல்க; பின்னர்ச் சேர்வேன். கோதை,
நல்லர் நம்தமிழ்ச் செல்வர்க் கிசைந்த
தேனீர் ஆள்வழிச் சேர்ப்பின் நன்றாம்.

கோதை:

யானே கொணர்வன் இனுமொரு நொடியில்!
அமுதா, மாமனை அழைத்துக் கொண்டுபோய்
அமர்த்திடு அறையுள்; அண்ணா செல்க.

(நம்பி, அமுதன், கோதை உள்ளே செல்கின்றனர்.)

தமிழ்ச்செல்வன்:

ஐயா, அவரை அறிவேன் நானே.

1. கால் - பொழுது, இடம். 2. தா - குறை, குற்றம்.

அழகு மணவாளர்:

மெய்யாய் அவரென் மேனாள் நண்பர்.
பள்ளியில் ஒன்றாய்ப் பன்னிரண் டாண்டுகள்!
கள்ளஞ் சிறிதும் உள்ளத் தில்லை.
படித்தோம்; இல்லை, அடித்தோம் கொட்டம்.
அந்நாள் போல இந்நாள் அமையா;
எண்ணின் இன்பம் மன்னும் இன்றும்.

தமிழ்ச்செல்வன்:

உண்மை உரைத்த; ஒன்றுவ யார்க்கும்.
சொல்லவிங் கடைந்தது நல்லதற் கில்லை!
செல்வி அவர்பெண் செய்த துரைக்க,
அஞ்சுவன்; எப்படி அறைவன்? எனினும்
தெரியச் சொல்வேன்; புரிக தெரிந்தே!

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

அன்புறு நண்பர் பெற்ற
  அருந்தமிழ் அனைய பெண்ணார்,
பன்னெடுங் காலஞ் சேர்ந்து
  பழகிய உறவை நீங்கி
இன்னொரு பெண்ணை ஏற்க
  இருப்பராம் அமுதன் இங்கே!
என்றொரு குற்றச் சாட்டை
  எந்துறைக் களித்தார்; ஏற்போ?

தம்பிவந் துரைத்தார்; இன்னே
  தவிர்த்திடற் கான காண்பேன்
அம்பினை எய்தார் தன்னை
  அடக்கிடச் சென்றேன்; ஆயின்,
வம்பதாய் முடிந்த தந்த
  வழக்குரை யாளர் தந்தை
நம்பலில் மேலோர் போலும்!
  நலிவிடைச் சேர்ந்த மேலும்.

அழகு மணவாளர்:

எனக்கிதை முன்ன ரேநீர்
எடுத்துரை யாத தேனோ?
நினக்கெதும் இடராம் போதே,
நிற்கிறீர் எதிரே; நேரரோ?

தமிழ்ச்செல்வன்:

தனக்கென முயலாத் தங்கள்
தனிமகன் தவற்றைச் சொல்ல,
எனக்குளம் இல்லை; ஆனால்,
இயன்றதை முயன்றேன்; தப்பே!

பணியிடை நீக்கம் என்னைப்
பண்ணிட மேலோர்க் காணை!
அணியம்நான்; அஞ்சேன்; ஆயின்,
அமுதன்மேல் துறைமேற் கொள்ள
எணியிரு செயற்கு மாற்றாய்
எதிரெதும் என்னால் ஏலா.
[1]நுணிநனி ஏற்ப நீங்கள்
[2]நூறுக வருவ; காக்க.

அழகு மணவாளர்:

தவறிலை காதல்; சாலத்
தகுவதே; எதற்கும் மேலாம்.
தவறெலாம் எனதே; சற்றுத்
தருக்குளம் உற்ற தெற்றே?
கவருடை எண்ணம் நெஞ்சைக்
கவ்விடக் [3]காட்டம் கொண்டேன்.
இவணினி இறையும் மாறாய்
இயைந்திடா; காப்பேன்; செல்க.

1. நுணி - நுணுகி ஆராய்ந்து. 2. நூறுக - அழிக்க. 3. காட்டம் - சினம்,.

# காட்சி . 12

**இடம்** : காவற்றுறைக் கண்காணிப்பாளர் அறை.

**காலம்** : காலை மணி பதினொன்று.

**உறுப்பினர்** : அல்லி, செல்வி, கண்காணிப்பாளர், ஆய்வாளர் தமிழ்ச்செல்வன்.

**சூழல்** : கண்காணிப்பாளர் அமர்ந்தபடி தொலைப் பேசியில் பேசிக்கொண்டு இருக்கத், தமிழ்ச் செல்வன் அருகே நிற்கிறார். அப்போது அல்லியும் நற்செல்வியும் வருகின்றனர்.

கண்காணிப்பாளர்:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

சொல்வதற் கென்ன? ஐயா,
தொடர்பவை நன்றே ஆவ.
அல்லவை சேரா; உங்கள்
அகவிழை வமைவ; நன்றி.

(தொலைப்பேசியை அதனிடத்து வைத்துவிட்டு, எதிர் அப்போது உள் வந்தோரை நோக்கிப் பேசுகிறார்)

நல்லது; வருக. வந்து
நாற்காலி அமர்க; என்றன்
சொல்லினை ஏற்று நீவீர்
சூழ்ந்தனிர்; மிக்க நன்றி.

(அல்லியும் நற்செல்வியும் எதிர் அமர்கின்றனர். தமிழ்ச்செல்வன் அல்லியைச் சுட்டிக் காட்டி அறிமுகப் படுத்துகிறார்.)

தமிழ்ச்செல்வன்:

வழக்குரை யாளர் அல்லி;
   வந்துடன் இருப்பர் செல்வி.
பழிக்கிலை; பகைக்கும் அஞ்சாப்
   பண்பினர்; புதுமைப் பெண்ணார்!

கண்காணிப்பாளர்:

இழுக்கிலை, மகிழ்ச்சி; அஞ்சி
   இருப்பதே இகழ்ச்சி! இன்றேல்,
புழுக்களை நசுக்கல் போலப்
   புழுதியில் தேய்ப்பர்; சாய்ப்பர்!

பேசியில் சற்று முன்னர்ப்
   பேசியர் மணவா ளர்தான்!
கூசுவர்; வெட்கங் கொள்வார்;
   குற்றமே, பொறுக்க என்பார்!
மாசிவண் இல்லார் யாரே?
   மாறிடல் வாழ்வின் தீர்வாம்!
[1]தூசினில் தூசி என்றே,
   துடைத்திட்டுத் தொடர்தல் நன்றே.

அல்லி:

குறையுள என்று கூறிக்
   கொடுத்தவெம் சாட்டின் மீது
துறையெதும் நடவ டிக்கை
   தொடங்கலில்; சரியோ? சொல்க.
[2]உறையொரு துளியே ஒப்பார்
   உம்மவர் செய்கை யாலே,
அறையரு துயரு ழந்தோம்;
   ஐய,நீர் செய்த தென்ன?

கொல்லையில் மாடு மேயின்,
   கோலெடுத் தோட்டார் யாரே?
[3]சொல்லுயர் பயிரைக் காக்கச்
   சோர்வரோ உரியார் தாமும்?

1. தூசு - ஆடை. 2. உறை - மோர். 3. சொல் - நெல்.

அல்லவைக் கெதிராய் நிற்பார்
அவற்றையே சேர்ப்பார் என்றால்,
நல்லவர்க் குறுதி ஏது?
நகுதற்கோ நாட்டில் சட்டம்?

தமிழ்ச்செல்வன்:

(எண்சீர் ஆசிரிய விருத்தம்)

பொறுத்திடுக எனவேண்டிப் புகல்வேன் இல்லை;
புன்மையிலை என்செயலில்; பொல்லான் அல்லை!
ஒறுத்திடற்கென் றுரைத்தவல முன்னர்ச் சொன்ன;
உண்டாகு பின்விளைவை விரித்தேன், அவ்வே.
அறத்துவழி நிற்பர்சிலர்; அல்லார் பல்லோர்!
அவரெதற்கும் அஞ்சலிலை; நஞ்சின் நீரார்!
இறத்ததிரு நிறைசுற்றம் சட்டம் யாவும்
இழிதகையர் பழிச்செயலை எதிர்த்தற் காகா!

(கொச்சகக் கலிப்பா)

குற்றமிழைத் தாரைக் கொடுஞ்சிறையில் இட்டிடலால்,
மற்றவரைச் சேர்த்து மணமுடிக்கச் செய்திடலால்
உற்ற பயனென்னாம் உண்மையன் பின்மையெனில்?
பற்றிகந்த இல்வாழ்க்கை பனிபுல் இணைப்பனைத்தே!

அல்லி:

செய்தவற்றிற் காகச் சிறிதும்நீர் நோகலிலை;
பொய்தவ மேன்மேல்; பொருத்தமில் கட்டுரைகள்!
மெய்யணி நீறுமண் மேலவர் எல்லாரும்
மெய்யரில்! [1]ஆட்டோடோ நாயு [2]மிடைதலுண்டே!

தமிழ்ச்செல்வன்:

(கலி விருத்தம்)

ஒப்பிடு வீரென உரைத்திலன் அன்று.
தப்புமக் கமைவதைத் தவிர்த்திடற் கென்றே
அப்படி நடந்தனன்; அதுதவ றென்றால்,
எப்பவும் செய்குவன்; ஏசுக, ஏற்பே!

1. ஆட்டோடோ நாயும் - ஆட்டோடு + ஓநாயும். 2. மிடைதல் - கலத்தல்.

அல்லி:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

மேனிலை இருக்க எந்தை
மீண்டுளோம்; இல்லை என்றால்,
வானலை பட்டம் போல
வளியுலை நிலையி ருப்போம்.
போனவை போன தாக;
புண்ணிடை எரிதீ வேண்டா.
[1]கானுனி [2]உகிர்க்குஞ் சின்ன
கடிப்புறின் தாங்கல் இல்லை.

தமிழ்ச்செல்வன்:

(தரவு கொச்சகக் கலிப்பா)

கனிதானாம் சுவைபெரிது; களவுமதே, மிகவினிது!
தனியானார் அகவாழ்வைச் சட்டந்தக அமைத்தலிலை;
உனியாயின், ஒறுத்திடலாம்; ஒருங்கிணைத்தற் குதவாதே.
எனையாரும் பணித்தாரில்; இனியதென இயைந்திட்டேன்.

கண்காணிப்பாளர்:

(கலி வெண்பா)

நல்லர் மணவாளர்; நம்புக; நானறிவேன்.
சொல்லிற்கு வன்மையுண்டு; சொல்லார் முறைபிறழ்ந்து!
சட்டத்தை மீறுகெனச் சாற்றியதில் நானறிந்து;
முட்டின்றி யாவும் முடிப்பார் முறைப்படியே.
தன்பிள்ளை மீதாம் தவற்றைத் தவிர்த்திடற்(கு)
என்னிடத் தில்லை, எவரிடத்தும் சொன்னதில்லை!
சொன்னதெலாம் ஒன்றே; துறைசார் நடவடிக்கை
இன்னலுமக் கீந்த இவர்மேல் எழாதிருக்க!
வேண்டா விரைவென்றார்; விட்டி டெனச்சொல்லார்.
ஈண்டுமக்கென் செய்தல் இனிது?

1. கானுனி - கால் + நுனி. 2.. உகிர் - நகம்.

அல்லி:

(பஃறொடை வெண்பா)

அமுதன்றன் றந்தை அழைத்திடப்போய்ப் பார்த்தோம்.
திமிரெதும் இல்லை; சமனெனவே பேசிட்டார்!
தன்னிலை, செல்வம், தனிமகன், கல்வியெலாம்
முன்னர்முன் நிற்க, முடியாது காதலென்றார்
இன்றவர் இல்லார் இடித்துரைத்துச் சொன்னதனால்
மன்றற் கிசைந்தார் மதித்து.

(தொலைப்பேசி அழைப்பொலி எழக் கண்காணிப்பாளர் எடுத்துக் கேட்டுப் பின்னர்ப் பேசுகிறார்.)

கண்காணிப்பாளர்:

(இன்னிசைச் சிந்தியல் வெண்பா)

நல்ல துடனவரை நானங் கனுப்பிடுவேன்;
சொல்க மருத்துவர்க்கும் சொல்வேன்பின் பேசியிலே.
எல்லாம் நன்றாம்; இரும்.

(தொலைப்பேசியை வைத்துவிட்டுப் பேசுகிறார்.)

(நேரிசை ஆசிரியப்பா)

நல்லான், உமதரு நண்பராம்; பேசினார்.
எல்லாம் நலமாம், எனினும் இனியருன்
அன்னையை நெஞ்செழு அதிக வலிக்கு
மருத்துவ மனையில் இருத்தி உளராம்.
பதற்றம் வேண்டா; எதற்கும் ஆகா!
யாவும் இயல்பாம்; நோவும் இலையாம்.
செல்க நீவீர்; செல்முன்
செல்லிடப் பேசியைச் செயலில் கொணர்மின்!

(அல்லியும் நற்செல்வியும் அங்கிருந்து புறப்பட்டுச் செல்கின்றனர்.)

## காட்சி . 13

**இடம்** : தனியார் மருத்துவ மனைத் தனியறை.
**காலம்** : மாலை மணி ஏழு.
**உறுப்பினர்** : அல்லி, நல்லான், வேலன், வள்ளி.
**சூழல்** : வேலன் படுத்திருக்கப் பக்கத்தில் மனைவி வள்ளி, அல்லி நின்றிருக்கின்றனர்.

அல்லி:

(இன்னிசைச் சிந்தியல் வெண்பா)

என்ன நடந்ததுவும்? ஏன்மயங்கி வீழ்ந்ததுவும்?
ஒன்றும் உடலகத் தூறில்லை; கூறிடுவர்.
பின்னென் விளைந்த பிணி?

எற்றுக்குப் பேசா திருந்திடுவீர்? அத்தை,நீர்
சிற்றிதழ் வாய்திறந்து செப்பீரோ? மாமனுக்கிங்
குற்ற தெதுவாம்? உரை.

வள்ளி:

(கொச்சகக் கலிப்பா)

பிஞ்சுமனம் மாமனுக்குப் பெண்ணமுதே, நீயறியாய்.
நெஞ்சுவலி உன்தாய்க்கு நேர்ந்ததெனக் கேட்டவுடன்
வெஞ்சுரத்தில் பட்டவர்தான்; மீளார்! உனைப்பார்க்க,
மிஞ்சத் துயர்மிகவும் வீழ்ந்தார் மயக்குற்று.

உன்னன்னை மாமனிடை உள்ளுறவை நீயுணராய்;
சின்ன குழந்தைமுதல் சேர்ந்தமைந்த நட்பதுவாம்!
ஒன்றிரண் டாண்டில்லை; ஓரினரை நூற்றாண்டாய்
ஒன்றியிணை நட்போ டுயிர்த்துணையாய் உற்றவராம்!

ஆண்டுபல ஆயிடினும் அன்றிருந்த தொப்பவினும்
விண்டுரைத்தற் கென்றுமிலா மேலாம் வியனட்பாம்!
காண்பன் உடனிருந்து, கண்ணிரண்டு நோக்கொன்று
யாண்டும் இவர்நட்பு! யார்க்கமையும் இப்பொற்பு?

அல்லி:

(பஃறொடை வெண்பா)

பற்றற்ற தந்தை படங்கூட பார்த்தறியா
இற்ற மனத்தாட் கினிய துணையெனவே
உற்ற உயர்மாமன் ஒரத்தை உங்களினும்
சுற்ற மெனச்சூழ்ந்த சொந்தம்யார் சொல்லற்கும்!
உற்றதுமக் கூறென்றால் உள்ளம் பதைக்காதோ?
கற்றுத் தெளிந்தறிவு காலூன்றி நிற்பதற்கு
முற்றுந் துணையாய் முயன்றார்யார்? நீங்களன்றோ?
பெற்றுப் பெயரிட்டார்; பேணி வளர்த்தற்குச்
சற்றும் உதவத் தகுந்ததெதும் செய்ததில்லை;
வெற்றுக் குடலின்பம் வேண்டி எனைவிளைத்த
குற்றம் இழைத்த கொடியரென் தந்தையன்றோ?
தொற்றுநோய் அன்னார்; துரும்பு!

வேலன்:

எற்றுக்கு நொந்திங் கெதுவெதுவோ பேசிடுவாய்?
பற்றுள்ளார் உந்தை; பணிவுடையார், பண்பாளர்!
நற்றிறத்தார்; ஒப்பன்னார் நானறிந்தார் யாருமில்லை.
குற்றங் குறைகாணக் கூடாக் குணவாளர்;
அற்ற இடத்தளிக்கும் அன்பர்; அறவாளர்!
[1]செற்றமுனக் காகா; [2]செறு.

அல்லி:

கல்லைக் கனியென்பீர்; கைப்பை இனிப்பென்பீர்!
இல்லா இறையை இருக்குதென்பீர்; ஏற்கேன்நான்.
நல்லரென் தந்தையென நாளும் கதைப்பீரே,
சொல்லத் தடையென்ன சூதர் வரலாற்றைத்
தொல்லையெனப் பெண்ணைத் துறந்தாரும் தூயவரோ?

1. செற்றம் - ஆறாச் சினம், கடுங் கோபம், வெறுப்பு. 2. செறு - அடக்கு, தடு, அழி, வெல்.

உள்ளார்; அதனால் உயர்ந்தார்! அதுதானே?
கொள்ளேன் குறையுடையும் கூற்று.

வேலன்:

இன்னார், இனியர், இவருயர்ந்தார், தாழ்ந்தரென
உன்னா உயருள்ளம் உற்றவருன் தந்தை!
தவறிழைத்தார் தந்தையன்று; தாய்தான்!நீ காண்பாய்.
[1]அவமறியா என்நண்பர் அன்றிருந் தின்றும்
அடைந்துவரு அல்லற் களவில்லை; ஆமாம்.
நடந்த செயற்கெல்லாம் நானும் ஒருகருவி!
மூலம் மணிமொழியே; முற்றும் அவர்தவறே.
காலம் விடையளிக்கும்; காண்.

அல்லி:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

என்னன்னை இனியர் யார்க்கும்;
எதிரிலர் ஈயும் அன்பில்!
தன்னலம் அற்றார் சற்றும்;
சரியல ஆற்றார் முற்றும்!
முன்னெவர் முனிந்த போதும்
முரணெதிர் பேசார் ஏதும்!
அன்னவர் தவறு செய்யார்;
அறிவன்நான், பொய்மை ஆகா.

வேலன்:

(வேறு)

குற்றமெலாம் உன்றன் அன்னை
கொண்டிருந்த குணத்தால் தாமே!
சற்றவர்க்குந் தன்ன லந்தான்
சார்தலிலாத் தன்மை அன்றோ
இற்றையுறு இடர்க்கிங் [2]கேதாம்.
எண்ணிடின்நீ அறிவாய் எல்லாம்.
மற்றவர்க்கு நல்லார்; தானோ,
மகிழ்தற்குக் கல்லார்! ஏனோ?

1. அவம் - கேடு. 2. ஏது - கரணியம்.

அல்லி:

(வேறு)

[1]கண்ணனை தங்கை என்று
கழறிய மொழியும் பொய்யோ?
பெண்ணவர்க் குன்றன் நண்பர்
பிழைபல இழைத்தர்; பொய்யோ?
மண்ணெளி புழுவின் கீழாய்
மதித்தெனைத் தவிர்ப்பர், பொய்யோ?
[2]எண்ணுனி பரிவும் என்னில்
எந்தைக்கிங் கிலையே; பொய்யோ?

வேலன்:

அறியாய்நீ தந்தை அன்பை;
அவர்க்குநீ உயிராம்; உண்மை.
நெறியாய்நீ பிறந்தாய் இல்லந்
நிலைமைக்குன் தாய்தான் ஏதாம்!
வறியாரென் றிரந்தும் வீழ்ந்தும்
வணங்கிட மறுத்தார் தாய்தான்!
மறியாடு [3]மான நண்பர்
மணிமொழி மனம்போல் நின்றார்!

[4]மழையிலாப் பயிர்தான் உந்தை;
வாடுவர் உடன்நீ இன்றி.
பிழையெணார் இன்றும்; கொண்ட
பெரியன அன்பின் இல்லை.
[5]உழையுளாய் ஆயின் இந்த
உலகமே கையுள் என்பார்!
பழியிலார், பரிவின் மிக்கார்;
பகையெதற் கவர்மேல்; வேண்டா.

சுட்டிடின் நிலவும் ஆமோ?
சொல்லுக, நிலவு நீயே!

1. கண்ணனை - கண் அனைய - கண்களை ஒத்த: கடைக்குறை. 2. எண்ணுனி - எள் + நுனி. 3. மான - ஒப்ப: உவம உருபு. 4. மழை - நீர். 5 உழை - பக்கம், இடம்.

விட்டிடு வெறுப்பை; வீணே.
　　வேற்றவர் இல்லை; பெற்றார்!
மட்டிலை அன்பிற் கென்றும்;
　　வாழ்வதே உங்கட் காக!
[1]எட்டிரு போதும் எண்ணம்
　　எப்போதும் உம்மைப் பற்றி!

(வேறு)

தொல்லை உன்னைச் சேர்ந்ததெனச்
　　சொன்னார் யாருன் தந்தைக்கும்?
ஒல்லை சென்று நீக்கற்கும்
　　உற்ற செய்தார்; எப்படியாம்?
நில்லா துன்றன் நிழலாக
　　நிற்பார் யாரா? அவராட்கள்!
எல்லாம் நீயென் றிருப்பாரைப்
　　பொல்லார் என்பாய்; பொருந்தாதே!

(கொச்சகக் கலிப்பா)

உடனிலை என்பதன்றி ஒன்றுங் குறையென்னாம்?
இடனறிந் தேற்ற எதுசெயலை? எண்ணிடுக.
இடருன்னைச் சேரவுடன் யார்வந்தார்? தேர்ந்திடுக.
கடனென்றா? பெண்ணெனுங் காதலினால்! கண்டிடுக.

(கலிவிருத்தம்)

இளமையில் இருந்துனை இளைத்திடு குறைக்கெலாம்
உளதொரு முடிவெதிர்; ஒழிதுயர், மகிழ்மிக.
உளமெழு வினவினுக் குறுவிடை பெறுகுவை,
வளமிகு நலமுனை வழுத்திட வருகுவ.

தனக்கெதும் நிகழ்ந்திடில் தருகெனத் தனியவர்
உனக்கென எழுதிய உரையுள, தருகுவன்;
மனக்கினி துணையணை மறுவினைப் பொறுத்திடார்
[2]நுனிக்கரு உயர்வினை நுவன்றிடல் இயல்வதோ?

(அப்போது நல்லான் விரைந்து வந்து நேர்கிறான்.)

1. எட்டிரு - எட்டி + இரு - தொகுத்தல் வேறுபாடு. 2. நுனி - கூர்ந்து நோக்கல்,

அல்லி:

எப்படி அன்னை உள்ளார்?
மருத்துவர் என்ன சொல்வார்?
ஒப்பலில் நெஞ்சம், பெற்றாள்
உணர்வில ராய்க்கி டத்தல்!
தப்பெதும் நிகழு முன்னர்த்
தலைநகர்க் கழைத்துச் செல்வோம்.

நல்லான்:

இப்பொழு ததற்குத் தேவை
எதுவுமில்; இயல்பாய் உள்ளார்.

நேரிலர் பண்டு வத்தில்
நிலைமையை ஆய்தற் கென்று
நேரினில் சென்னை உள்ளார்
நேருவர் நாளைக் காலை!
சீரியர் ஆய்விற் கொப்பச்
செய்வராம் தேவைக் கேற்ப.
யாரவர் அனுப்பி வைப்பார்?
எவருமிங் குரைப்பார் இல்லை.

வேலன்:

துணையுறு துயரங் காணின்,
துடித்திடா உயிரும் உண்டோ?
பிணையுணக் குடித்தல் போல
நடித்திடு பெருமான் அன்பில்
இணையென இருக்கும் உந்தை
இன்செயல்! அறிக, அல்லி.
மணிமொழி நிலையைக் கொண்ட
மகிழ்நர்க்குச் சொன்னேன்; செய்வார்!

# களம்: 2

## (மேனாள்)

## காட்சி . 1

**இடம்** : அறவாழியின் இல்லம்.
**காலம்** : நண்பகல் மணி ஒன்று.
**உறுப்பினர்** : அறவாழி, அங்கயல், வேலன்.
**சூழல்** : அறவாழி, அங்கயல் அமர்ந்திருக்க, வேலன் உள்ளிருந்து வருகிறான்.

அங்கயல்:

(நேரிசை ஆசிரியப்பா)

வருக, வேலா; வந்தரு கமர்க.
அருமருந் தனையை, அருகில் அமர்க.
சொன்னதும் வந்தாய்; துயரம் தணிந்தது.
[1]உன்னினெம் மகற்கும் உகந்தார் உண்டோ?

(வேலன் அவர் எதிரே மெல்ல அமர்கிறான்.)

அறவாழி:

என்ன சொன்னார் இன்னுயிர் நண்பர்?
உன்னிட மேனும் உள்ளம் திறந்து
நடந்தது என்னென நவின்றரா? இலையா?
கிடந்து தவிப்போம்! கிடைத்த துயிரென
வாழ்நாள் நடுவில் வரமிரந் தடைந்த
முத்து, மொத்த சொத்தும் அவர்தான்!
இன்னறா[2] இடையுறு எட்டிச் சாறென
அன்பறா வாழ்விடை ஆரஞர்[3] அடுத்தது!

---

1. உன்னின் - எண்ணின், உன்னைக் காட்டினும். 2. நறா - தேன். 3. அஞர் - இடர், துன்பம்.

வந்ததுந் தவறில்; வரல்முறை!
நொந்தென் னாவது? நுவல்க நீயே.

வேலன்:

எதுவும் பேசான்; இருப்பான் அமைதியாய்.
பொதுவாய்ச் சிரிப்பான்; புறமெதும் பாரான்!
நீர்வர வில்லா நிலமென் முகந்தான்!
சோர்வுறக் கண்கள் நீர்வறக் காய்ந்த!
வேர்பிரிந் தனற்படு மென்கொடி வடிவின்
வாடி வதங்கி வருந்தக்
கூடிய குறையென்? கூறின் நன்றே.

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

உடன்வரச் சொன்ன தாலே,
[1]ஒல்லையிங் கோடிச் சேர்ந்தேன்.
குடந்தனில் விளக்காய் நண்பன்
குறுகியுள் ளறையில்; பேசான்.
தடந்தெரி யாது கானில்
தவித்திடு தனிமான் அன்னான்
திடந்தனை மீட்டு மீளத்
தெரிந்தன சொல்க; செய்வோம்.

அங்கயல்

(கலி வெண்பா)

விட்டெறி பந்து விரைந்தடி மீள்வதொப்ப,
எட்டு மணியளவில் என்றும் திரும்பிடுவான்!
பத்துமணி ஆகப் பதைபதைக்கக் காத்திருந்தோம்.
தத்தித் தடுமாறித் தன்னிலைதான் இன்றி,
[2]வளிவாய் இடைப்படு வாழையென, வாயில்
வெளியே விழுகையிலே வேலையாள் தாங்கிட்டார்.
சற்றுந்தாழ்த் தாத சரியான [3]பண்டுவத்தால்,
உற்றவுன் நண்பன் உயிருற் றுயிரளித்தான்!
கொஞ்சமே நஞ்சு குருதி கலந்ததனால்
அஞ்சற் கெதுவுமிலை; ஆனாலும் எம்முயிர்தாம்

1. ஒல்லை - விரைந்து. 2. வளி - சுழல் காற்று. 3. பண்டுவம் - மருத்துவம்.

சென்ற இருநாளும் சென்றுசென்று மீண்டவெனாம்!
[1]பொன்று பொருளனைத்தும் போயிடினும் போகட்டும்;
என்றுமெம் பிள்ளை இருப்பினுடன் ஏதுகுறை?
நன்றன்று செய்தானே, நன்று!

வேலன்:

(கலிவிருத்தம்)

எவ்விடர் எய்தினும் இறையும் [2]இரிந்திடான்
எவ்வகை இறந்திட எண்ணம் எய்தினன்?
[3]வவ்வுவர், மற்றுளர் வாட வாடிடு
செவ்வியன் செய்ததில் சீர்மை சிறிதுமில்!

இன்சொலன், ஈகையன், யார்க்கும் இனியவன்,
அன்புளன், அன்னையின் அதிக அருளினன்;
நன்றல பொன்றினும் நாடா நலத்தினன்
குன்றுவ செய்ததென்? கூறான் கேட்பினும்.

சூதவா கள்காமம் சொல்லில் துயர்தரு
தீதெதும் தன்னகம் சிறிதும் சேர்த்திலன்,
யாதிவண் எண்ணினன்? இறப்பை நண்ணினன்?
கோதிலன் கொண்டவுள் குறிப்பும் என்னவோ?

அறவாழி:

(கொச்சகக் கலிப்பா)

யானறிந் தென்மகற் கெக்குறையும் வைத்ததில்லை;
ஏனவரும் வாய்திறந் தென்றுமெதும் வேட்டதில்லை.
[4]மேனனி செல்வம் மிகுமினும்; மேலததோ?
ஊனிறை மெய்கட் குயிரிலா [5]தூற்றமேது!

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

[6]பெண்ணலார் ஒருவ ரோடும்
பேசிடார்; பழகிப் பாரார்!
கண்ணவர் பக்கம் சாயக்
கண்டிலன்; யாருங் கூறார்.

1. பொன்றுதல் - அழிதல், இறத்தல், கெடுதல். 2. இரிதல் - விலகுதல், அஞ்சுதல். 3. வவ்வுவர் - பற்றுளர். 4. மேனனி - மேல் + நனி. 5. ஊற்றம் - பற்றுக்கோடு, வலிமை. 6. பெண்ணலார் - பெண் + நலார் - பெண் நல்லார்.

உண்டெதும் உள்ளத் தாமேல்,
ஒளித்திடல் வேண்டா; கேட்டு,
விண்டிடு; யாரென் றாலும்
விழைந்துடன் முடிப்பம் வேட்டு.

தாயிடங் கூட பேசார்;
தயங்குவர், தனிமை வேட்பார்.
நீயுடன் நிற்பின் சின்னாள்,
நிலைமைமுன் னேறக் கூடும்.
[1]ஏயுமேல் கோடை முற்றும்
எழில்மலைச் சாரல் சார்ந்து
[2]நோயற இருந்து தங்கித்
திரும்புக; நுவல்க பேசி.

வேலன்:

நடந்ததை அறிதல் இன்றி,
நாமெதும் முயலல் நன்றில்.
இடம்பொருள் காலம் நோக்கி
எய்திய கேட்டுச் சொல்வேன்.
கடந்தன கழிந்த வாகக்
காலமும் கனிவும் மாற்றாம்.
இடிந்துளன் நெஞ்சை அன்பால்
இறுக்குவம், இணைப்போம்; காப்போம்.

மாற்றமே மருந்தாம் நல்ல;
மறுத்திடான், ஏற்பான் செல்ல.
ஆற்றரு துயரும் காலம்
ஆகிடக் குறையும்; போமே.
ஏற்றன இனிய இன்னே
இயற்றுவன்; இடருள் வேண்டா!
மாற்றழி வில்லாப் பொன்போல்
வருவன்நம் முத்து மீண்டு.

1. ஏய் - ஏய்தல் - பொருந்துதல், தகுதல், ஒத்தல். 2. நோய் - துன்பம்.

## காட்சி . 2

**இடம்** : பூங்கா.
**காலம்** : மாலை மணி ஐந்து.
**உறுப்பினர்** : வேலன், ஓவியா.
**சூழல்** : பூங்காவின் தனி இடத்தில் வேலன், ஓவியா பேசிக்கொண்டு இருக்கின்றனர்.

வேலன்:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

சென்றவீர் ஆண்டின் மேலாய்ச்
 சேர்ந்துநீர் பழகி வந்தீர்;
அன்றிலும் அண்டற் காகா
 அன்பிடை; அடடா! ஆமாம்.
கன்றிய துறவிப் போழ்து;
 கரணியம் தெரியச் சொல்க.
ஒன்றிய உள்ளம் தாமும்
 உடைப்புற உற்ற தென்னே?

ஓவியா:

என்னையே கேட்கின் நீரே,
 ஏனுமக் கினிய நண்பர்
தன்னைநீர் கேட்டற் கென்ன?
 தகும்விடை தருவார் அன்றோ!
என்னையே முழுதும் ஈய
 இருந்தனன்; எல்லாம் போய!
முன்னம்நான் அறிந்த தாலே
 முடிந்தது; கனவே காதல்!

வேலன்:

(கலி விருத்தம்)

ஈருடல் ஓருயிர் என்றிரு காதலர்
நேரெதிர் ஆனதன் நீர்மையென்? கூறுக.
யாரெதிர் நிற்பினும் யாம்பிரி யோமென
நீருரை செய்ததும் நீர்மேல் எழுத்துக்கொல்?

ஓவியா:

(கொச்சகக் கலிப்பா)

பெண்ணான் பிறரிடத்துப் பேசற்குக் கூசுவற்றை
[1]உண்ணாண் மறைத்திங் குரைத்திடலும் ஒன்றிடுமோ?
[2]எண்ணாணில் வாழ்விற் கியையா இயல்பானேல்,
பெண்ணார் பிறந்துபெறு பேறு பிறிதுமுண்டோ?

வேலன்:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்.)

காற்றிடைக் கடத்தற் கஞ்சும்
காதலர் கனிந்த நெஞ்சம்
கூற்றினை அணைதற் கஞ்சா,
குறையிடைக் கூடின்; சொல்வார்!
வேற்றவர் இடையூ றின்றி
விண்ணுயர் காதற் பட்டம்
காற்றுற இற்ற தென்னக்
[3]கையற வுற்ற தென்ன?

சொல்லுக சொல்வ யார்க்கும்
[4]துகளறத் தெளிவாய்ச் சூழ்ந்து;
வில்லெழு அம்பாய்க் கூறின்
விழைவன விரைவிற் சேரும்.
நல்லவன் அவன்றான்; தீய
நஞ்சென அஞ்சு மேலான்.

1. உண்ணாண் - உள் + நாண். 2. எண்ணாணில் - எண் + ஆண் +இல்.
3. கையறவு - துன்பம், ஊடல், செயலற்ற தன்மை. 4. துகள் - குற்றம்.

இல்லவன் இல்லை; சொத்தோ,
எழுதலை முறைக்கு நீளும்!

ஓவியா:

சொத்தென்ன சொத்து? வாழ்வில்
சுவைதரல் இல்லை யென்னில்!
முத்தினி நல்லார்; உள்ளார்;
மூழ்கிமுத் தெடுத்தற் கொல்லார்!
எத்தனி உணவு முன்னர்
இருப்பினும் உண்ணற் கேலேல்,
செத்திடும் எல்லை வேண்டிச்
சேர்ந்துடன் நிற்பார் யாரே?

(அறுசீர் ஆசிரிய விருத்தம்.)

உலகுறை உயிர்கட் கெல்லாம்
உண்மையில் நாட்டம் இன்பில்.
நலமளி காதல் கூட்டே
[1]நவையழி இன்பம் ஊட்டும்!
இலையதற் கிறையும் என்றால்,
என்பொருள் இருந்தும் என்னே?
[2]கலனடி கசியக் கண்டுங்
கடற்செல வாமோ? காண்க.

வேலன்:

இலைமறை காயாய் ஏதோ
இவணெடுத் துரைப்பாய்; முற்றும்
நிலைமையைக் காணேன்; ஆனால்,
நிகழ்ந்தன புரிந்த சற்றே.
இலைநிறை விணைப்பில், இன்பம்
இலையெனில் [3]இல்லில்; துன்பம்!
விலையிலாக் காதல் மெய்கள்
விளையாடு களங்கள் தாமோ?

1. நவை - குற்றம், இழிவு. 2. கலன் - மரக்கலன். 3. இல்லில் - இல் + இல் - இல்லறம் + இல்லை.

ஓவியா:

(இன்னிசை வெண்பா)

உயிர்க்குயி ராக உறவமைய, ஊடே
இயக்கற் குடலிருத்தல் இன்றியமை யாதே!
உயிரில்லா மெய்பிணமே, மெய்யில் உயிரும்
பெயரளவே; அஞ்சற்காம் பேய்.

உயிரோ டுயிரொன்றா; ஒன்றற்கா மாயின்,
இயல்பாய் உடன்படுமெய் ஏற்றல் இலக்கணமாம்!
மெய்யோ டுயிர்ப்புணர்ச்சி மேன்மை உணர்ந்தாரே
உய்யா றறிந்திடுவர் உள்.

வேலன்:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

வெற்றுரை வேண்டா; எங்கும்
   விளைவதே யார்க்கும்; தீங்கில்!
புற்றுநோய் எனினும் இன்று
   போகுநன் மருத்து வத்தால்;
கற்றவர் தானே நீரும்?
   காதலின் கலவி மேலா?
சற்றுநீ பொறுத்தி ருந்தால்
   தவறெனப் புரிந்தி ருக்கும்.

ஓவியா:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

வருமுனம் காவா வாழ்க்கை,
   எரிமுனம் வைத்தூ றென்பர்!
திருமணம் வாழ்க்கை தானே?
   தீங்கெனில் நீங்கல் தீதா?
இருமனம் பொருந்தல் போதா;
   இன்புறு இணைவு வேண்டும்.
திருமிகப் பெறினுங் கூடல்
   திறமிலேல், மணமா? தீது!

என்னிடம் தொடர்ந்து பேசற்
　கெதுவுமில்; இனியும் வேண்டில்,
உன்னரு உயிராம் நண்பர்,
　உரமிலார் தன்னைக் கேட்க.
இன்னுமொன் றிசைப்பேன்; என்றும்
　இலையவர் உறவு மேனாள்!
சென்றுநீ சொல்க; முத்து,
　சீரியர்; புரிந்து கொள்வார்.

## காட்சி . 3

**இடம்** : முத்துக்கண்ணனின் இல்ல உள் அறை.
**காலம்** : மாலை மணி நான்கு.
**உறுப்பினர்** : முத்துக்கண்ணன், வேலன்.
**சூழல்** : முத்துக்கண்ணன் சாய்ந்து படுத்திருக்க, வேலன் அருகே அமர்ந்திருக்கிறான்.

வேலன்:

(கலி விருத்தம்)

உன்னரு உள்ளிரு உயிரிறு துயர்தரு
இன்னலை என்னென இயம்பிடு; [1]இளைத்திடும்.
உன்னொரு நண்பென உயிரென இயைந்துடன்
என்னினி நன்றினி [2]தெணித்தக இயற்றுவன்.

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

[3]செயிருடை ஒருத்தி உன்னைச்
சினந்தனள்; அதற்கோ [4]உட்கி,
உயிரினை விடற்கு வீணே
உன்னினை? உயர்வோ? வெட்கம்!
[5]மயலறு கல்வி, கேள்வி
மாதரார் வேட்கை நீர்க்கும்;
துயரினும் ஏனோ? கற்ற
தொன்னெறி துணையாம்; மீள்க.

எழுந்திரு; வீட்டுத் தோட்ட
இன்மலர்ச் சூழல் சேர்வோம்;

1. இளைத்தல் - மெலிதல், குறைதல். 2. எணி - எண்ணி: இடைக்குறை. 3. செயிர் - குற்றம், கோபம். 4. உட்கி - அஞ்சி, நாணி, வருந்தி. 5. மயல் - மயக்கம்.

பழந்தினப் பறவைக் கூட்டம்
படர்ந்தெழு அழகைப் பார்ப்போம்;
இழந்திடல் என்ப துண்டேல்,
இடையறாக் காலம் மட்டே!
கழிந்திடில், மீளல் இல்லை;
கற்றிடு கணமும் வாழ!

(இருவரும் புறப்பட்டுத் தோட்டத்திற்கு வருகின்றனர். அங்கே ஒரு பெரு மரத்தின் கீழ் அமைக்கப் பட்டிருந்த இருக்கைகளிலே அமர்கின்றனர். வேலன் தன் பேச்சைத் தொடர்கிறான்.)

வேலன்:

நின்னினும் உயிரும் [1]நேரில்!
நெருங்கிய நண்பர் யார்சொல்?
[2]துன்னிடு துயர்நின் சேரின்,
துடித்துடன் துடைப்பன் கூறின்.
நன்றெனக் கென்றும் நாடி
நயந்துத வினிய நண்ப,
குன்றிடு எதுவுங் கூறேன்;
கூறிடு குறித்த நீயும்.

கண்டனன் இன்று சென்றுன்
கருத்தினிற் கினியர் தன்னைக்
[3]கண்டலர்; யானை உண்ட
கனியவர்; [4]கரவு மிக்கார்!
[5]பெண்டெனும் உருவே அல்லால்
பெண்ணலம் அறவே இல்லார்!
உண்டெனில் நாட்டம் ஆண்பெண்
உடலிணை உறவில்; வேறில்!

அன்பினால் ஆவ யாவும்;
அன்னவர்க் காண்பெண் கூடு
புன்னலம் பெரிதாம்; உண்மை!
போற்றுதற் காகாப் பெண்மை!

1. நேர் - முன். 2. துன்னிடு - நெருக்கிடு. 3. கண்டலர் - கற்கண்டு அல்லர்- முதல், இடைக் குறைகள். 4. கரவு - வஞ்சனை, பொய். 5. பெண்டு - பெண்.

தன்னலம் தவிர்த்த காதல்
   தமிழ்தரு இனிமை போலாம்!
இன்னலே அவரால்; நண்ப,
   இனியவர் இல்லை; வேண்டா!

முத்துக்கண்ணன்:

தவறிலை அவரி டத்துத்
   தகவிலன் நானே; நீரில்
[1]உவரிடத் துயிர்கள் ஓங்கா;
   ஒப்பவென் நிலைமை, ஓர்க.
அவரறிந் தொதுங்கிக் கொண்டார்;
   அதிலவர் தவறென்? சொல்க.
எவரெது கூறின் என்ன?
   இழிபிலை; செய்கை நன்றே!

வேலன்:

(நேரிசை வெண்பா)

உள்ளார்ந்த காதலெனின், உண்மையுற வாகுமெனின்,
கொள்ளார் இனியர் குறையெதையும்; - உள்ளோர்க.
காமத்தைக் காதலெனக் கண்டு களிப்பவர்க்(கு)
ஊமத்தங் காயே உயர்வு.

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

என்னிடை இருவர்க் குள்ளும்
   இயைந்ததும்? எதற்கு நீதான்
உன்னுயிர்க் கூறு நாடி
   உண்டனை நஞ்சைத் தேடி?
[2]மின்னகு மனத்துப் பெண்டிர்
   மீளரு துயர்க்கே ஆவர்;
இன்னலுக் கேது வான
   இடரெது? சொல்க; தீர்ப்போம்.

முத்துக்கண்ணன்:

சொல்லவும் பற்கள் கூசும்;
   சுவையுணர் நாவோ ஏசும்!

1. உவர் - களர்நிலம், உப்பு. 2. மின்னகு - மின் + நகு – மின்னலை ஒத்த. நகு - உவம உருபு.

மெல்லவும் முழுங்கற் கில்லா
  மிடற்றினன், எள்ளற் கானேன்.
நல்லவள் அவளே; நான்தான்
  நவையுடல் உடையன்; நம்பு.
பல்லிலன் கரும்பு தின்னப்
  பார்த்தலோ? பயன்தான் என்ன?

வேலன்:

விடுகதை சொல்லில் வேண்டா;
  விளக்கிடு தெரிய ஈண்டு.
விடலரு வேட்கை மீற
  விலகிடா திருந்த நீவீர்
உடலொரு குறையால் காதல்
  உயர்வினைக் குலைத்தல் மேலா?
[1]கடுவருந் தெல்லைக் கான
  கரணியம் என்ன? சொல்க.

முத்துக்கண்ணன்:

(இன்னிசை வெண்பா)

காதலிதான்; ஆயினுமென்? காணாள் கலவியெனில்,
வேதனையே; வேறென்? விழைபயனும் உண்டாவோ?
ஒட்டி உடற்கலந் துள்ளா முறவிலையேல்,
எட்டி மணவாழ்க்கை; [2]எற்று!

வேலன்:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

மணமுனம் எதற்கு நீவீர்
  மகிழ்ந்திட முயன்றீர்? நல்ல
குணமுடைக் குலத்தர் யாரும்
  கொண்டிடு செயலா? கூறு.
புணருதல் பொருந்தேல், நீங்கல்
  பொற்புடைக் கற்பிற் காமா?

1. கடுவருந் தெல்லை - கடு + அருந்து + எல்லை; கடு - நஞ்சு. 2. எற்று - உதைத்துத் தள்ளல்; வியப்பு - இரக்கக் குறிப்பு.

மணமுனம் புணர்ந்தோ மக்கள்
வருந்துணைப் பொருத்தம் பார்ப்பர்?

முத்துக்கண்ணன்:

‘குற்றமே! வேண்டா,’ என்றேன்;
கொண்டிடாள் சற்றும் சொன்ன!
‘பிற்றைநாள் தெரியின் வேண்டாப்
பிரிவிடை உறுதி; ஆக,
இற்றையே இருவர்க் குள்ள
இணக்கத்தைக் காண்போம்,’ என்றாள்;
உற்றநீ உடனிங் கில்லை!
[1]உரையில புரிந்து தாழ்ந்தேன்.

வேலன்:

சென்றன பற்றி மேலே
சிந்தனை தேவை இல்லை.
நன்றிலை எனினும் சால
நன்மையே நடந்த தின்று!
கன்றிய மனத்தர் காதல்
கழிந்தது களிப்பே! காண்க.
ஒன்றிய குறையென் மெய்யில்?
ஒளித்திடா துரைப்பின் தீர்ப்போம்.

முத்துக்கண்ணன்:

காதலில் காமம் இன்றேல்;
காமமில் கலத்தற் காகேல்!
போதலில் கோலைக் கொண்டு,
பூட்டினைத் திறத்தற் காமோ?
கோதிலாக் கனியைக் கொண்டும்
கொத்திடற் கலகு வல்லேல்,
வேதனை; வேறென்? வெற்றுச்
சவமென விளங்கற் காமா?

மேலமை [2]தூசு நீக்கி
மிக்கிரு மேடு கிள்ளிக்

1. உரை - புகழ். 2. தூசு - ஆடை, குப்பை.

[1]காலிடை ஆழக் குத்திக்
கலந்திட நீரைப் பாய்ச்சிக்
[2]காலெழ வித்தை நாட்டக்
கண்டிலன் திறமை யாயின்
காலனை அடைதற் கென்று
கடுதனை அருந்தல் தீதோ?

முந்திரிக் கொட்டை ஒப்ப
முந்துறு விந்து தப்பச்
சந்திசெய் ஆற்றல் அற்றேன்;
சாடினாள்; சாகற் குற்றேன்.
நொந்துளம் வாட, மெய்யும்
நோயுறும்; தொல்லை செய்யும்.
எந்திரம் இலையே யானும்!
எப்படி வாழ்தல் தானும்?

(இன்னிசை வெண்பா)

தோலுரித்த மாதுளையாய்த் தோகையவள் பஞ்சணையில்
காலகட்டிக் காத்திருக்கக் காணேன் கலவியெதும்!
ஆலன் விழுதடி அண்டி அலைவது
போலன்றோ ஆடும் பொறி.

ஊனம் உடலினிலா? ஊகும்; உணர்விற்றான்!
கானல் கனவாகக் காதல் கழிந்திற்று.
வாய்திறந்து சொல்ல வழியில்லை; வாட்டுமிந்
நோய்க்கென் செயலாம்? நுவல்.

வேலன்:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

கவலுதல் ஒழிக; ஏற்ற
காணலாம்; துணையாய் நிற்பேன்.
[3]தவலறு தீர்வி தற்காம்
தகுவழி உண்டு; சொல்வேன்.

1. கால் - உடல் உறுப்பு, வாய்க்கால். 2. கால் - முளை, கால்வழி, மகன், இனமுறை. 3. தவல் - குறை, கேடு, குற்றம்.

கவினிரு ஏர்க்காட் டில்லில்
  தனித்துநாம் கழிப்போம் திங்கள்;
அவணெடு தீர்வால் நோயும்
  அகன்றிடும்; அறவே தீயும்!

முத்துக்கண்ணன்:

நினைவினில் நட்பைத் தாங்கி
  நேர்ந்தனை; மகிழ்ச்சி! ஆனால்,
மனைவியைத் தனியே விட்டு,
  வந்தனை; நன்றா? நண்ப.
உனையலா தியாரும் ஆங்கே
  உடனிலை துணையாய்; நீயோ,
புனலறாக் கயலன் னாரைப்
  போதெழு நாளாய் நீத்தாய்!

வேலன்:

உனக்கொரு உறுகண் சேரின்
  உடனுடன் சேர்வோன் நானே!
எனக்கது இயல்பாம் என்றென்
  இன்துணை அறிவள் என்றும்!
மனக்குறை தவிர்க; பக்கம்
  மணிமொழி துணையாய் உள்ளார்;
தனக்கென வாழார்; உன்போல்
  தகுமொரு நட்பார்; நல்லார்.

## காட்சி . 4

**இடம்** : வேலனின் இல்ல மாடி.

**காலம்** : மாலை

**உறுப்பினர்`** : வேலன், மணிமொழி.

**சூழல்** : வேலன், மணிமொழி இருவரும் எதிரெதிர் அமர்ந்து பேசிக்கொண்டு இருக்கின்றனர்.

வேலன்:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

தீதெவர் விளைத்தும் சற்றும்
 தீங்கவர்க் கெண்ணாத் தீரன்!
[1]பேதுறும் உயிர்கட் கெல்லாம்
 பெற்றதாய் அனையன் அன்பால்!
ஈதலில் கீழ்மேல் இல்லை;
 இவரவர் பேத மில்லை!
மாதவம் செய்தும் [2]ஏலா
 வரமென வந்த மேலான்!

பெற்றவர்க் கிவனோர் பிள்ளை;
 பெருநிதிக் கில்லை எல்லை!
குற்றமில் உறவும் நட்பும்
 குறைவிலன்; நிறைந்த [3]பெட்பும்!
அற்றவர்க் குதவற் குள்ள
 அறவமைப் பாவ பல்ல;

---

1. பேது - மயக்கம், வருத்தம், அறிவின்மை. 2. ஏலா - கிட்டாத, பொருந்தாத.
3. பெட்பு - பெருமை, பேணுகை.

உற்றவர் உயர்வார் ஒன்றி;
ஒருவரும் மீளார் இன்றி!

மணிமொழி:

(நேரிசை ஆசிரியப்பா)

திரும்பத் திரும்ப விரும்பாச் செயலைக்
கொள்ளெனச் சொல்லும் கள்ளம் எதற்காம்?
திரும்ப முன்னொரு தெரியா நிலையில்
புரிந்த தவற்றைச் சரியோ புரிதல்?
பட்டுந் தெளியா விட்டில் என்றா
விட்டிடா தென்னை மீட்டும் இரப்பாய்?
கரைப்பார் கரைத்தால் கரையும் கல்லும்!
உரைப்பார், உண்மை; உரைகல் நானோ?
பெற்றார் சுற்றம் பெற்றும் பிறரில்
வெற்றாள் ஆனேன்; எற்றால்? வினையால்!
உன்னையே நம்பி உற்றேன்;
உன்னுவை இன்னல்; உறுதுணை நீயோ?

வேலன்:

(கலி விருத்தம்)

உன்னினும் எனக்கு நல்லன், உண்மையன்;
உன்னிடின் இனியன், என்றும் ஊற்றவன்;
இன்னிழற் கிடத்தன், யார்க்கும் ஏற்றவன்;
அன்னவற் குதவல் ஆன்ற அன்பதே!

மணிமொழி:

(தரவு கொச்சகக் கலிப்பா)

நீயொரு துணைவனில்லை; நினைக்கவே அருவருக்கும்!
தாயினுஞ் சிறந்தனெனத் தமையனென உனையணைந்தேன்.
தூயவன் இலையெனக்கும் தொழுநோயின் இழிந்தோன்நீ!
வாயுள தென்பதனால் மலத்தினையார் சுவைத்திடுவார்?

வேலன்:

(கலித்துறை)

உனையிரு கண்ணென உற்ற உயிரென உள்ளேனை
எனையொரு புன்மைக் கழிவென எற்றி இகழ்வாயே?

நினைமுனம் நின்னெதிர் நின்றிடு நீர்மை நினையாயோ?
நினைமுன் னிரந்து நெகிழ்ந்தும் உதவிட நேராயே!

மணிமொழி:

(நேரிசை வெண்பா)

கற்றுத் தெளிந்திருந்தும் காமத்தைக் காதலென்(று)
உற்றிழி வுற்ற உடலுற்றேன் - எற்றுக்குச்
[1]செற்றுச் சிதறுற்ற சின்னவளை மேன்மேலும்
எற்றி இகழ்ந்திடுதல்? எண்.

(கொச்சகக் கலிப்பா)

வெற்றுக் கவர்ச்சியினால் வீணான பெண்பலருள்
சற்றுத் தெளிந்து சரிநிலையில் வாழ்பவள்நான்;
உற்ற உறவென்று பெற்றவரும் உற்றுதவா
ஒற்றை உளைகொடியாய் உண்ணிலைமை உன்னாயோ?

வேலன்:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

இல்லை, இல்லை; பொறுத்திடுக!
என்பி ழைதான்; ஏற்றிடுவேன்.
எல்லை இல்லா அன்பவன்பால்;
எடுத்தி ரந்தேன்; இழிவெனதே!
நல்லை இல்லை நீசினத்தல்;
நம்நட் பிற்கு நவையாகும்!
தொல்லை உன்னைத் தொடர்தற்குந்
துணையிங் கியானா? என்றுமில்லை.

(வேறு)

தந்தைதாய் கொண்ட துன்பம்
சரிவரச் சொல்லற் கில்லேன்;
மைந்தனன் னானே அன்றி,
மரபென யாரும் இல்லை;

1. செற்று - அழிந்து.

முந்தையர் குவித்த செல்வம்
  முழுதிருந் தென்ன? பிள்ளை
நைந்தனன்; நடுங்கிச் சோர்ந்து
  நாடினன் நஞ்சைத் தேர்ந்து!

வாடிய பயிரைக் கண்டு
  வாடுவர் என்றும் உண்டு!
கூடரு இனிய நண்பர்
  கொள்ளிடர் குறைத்தல் தீதா?
பீடிலை செயலில்; ஆனால்,
  பிழையிலை நோக்கில்! காண்க.
ஊடுனை உதவ வேண்டி,
  [1]உருத்தினன்; பொறுத்தி என்னை.

மணிமொழி:

நல்லன செய்க; ஆனால்,
  நலிவுறு நண்பர்க் காக
அல்லன பிறர்க்கிங் காற்றல்
  அறமிலை; அறிவும் இல்லை!
இல்லென இரப்பின் சில்லோர்
  இருப்பதில் ஏற்ற ஈவர்;
சொல்லெவர் அழுங்க மானம்
  துணைதமைத் துய்ப்பச் சேர்ப்பர்?

வேலன்:

(தரவு கொச்சகக் கலிப்பா)

பற்றுமிக நண்பனிடம்; பதைபதைத்தேன், பணிந்திரந்தேன்.
சற்றுமுளம் சரியலிலை; சரியதுதான், தவறுமிலை.
எற்றுக்கு நீயிரங்கல்? ஏதிலன்தான் உனக்கவனும்!
குற்றமெலாம் என்னுடைத்தே; குறையுணர்ந்து பொறுத்திடுக!

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

செய்யாமற் செய்த வற்குச்
  செய்தக்க செயநி னைத்தேன்!

1. உருத்தல் - வருத்தல்.

கைமாறு வேண்டா தாற்குக்
 கைகொடல் கடனாம் அன்றோ?
மெய்யாயென் உயிரின் மேலான்
 மெய்க்குறை குறைத்தற் கேற்ற
செய்யேன்நான் சிறிதும் என்றால்
 சிறுமையே; இருத்தல் நன்றா?

மணிமொழி:

படித்தவன் தானே நீயும்?
 பண்பிலை? பிதற்று கின்றாய்!
அடுத்தவர்க் குதவற் காகேல்,
 ஆவியை விடுத்தல் ஆமோ?
குடித்தவன் தானுங் கூறக்
 கூசுவன்; குதிப்பாய் நீயோ!
மடுத்துனை மனைவி உள்ளார்;
 மதித்திலை, மடமை மிக்காய்.

வேலன்:

(கலி விருத்தம்)

என்னுயிர் அன்னான், எனக்கவன் எல்லாம்!
நன்றளி நண்பன், நவையிலி, நல்லோன்!
தன்னுயிர் [1]வீக்கத் தயங்கிலன்; தாங்கேன்.
என்னினி ஆற்றி இருத்துவன் ஈங்கே?

மணிமொழி:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

கூறிய நோக்கின், மெய்யில்
 குறையிலுன் நண்பர்க் கேதும்.
மீறிய உணர்ச்சி வீச்சின்
 விளைவதே; அஞ்சற் கில்லை.
ஆறிடும் சின்னாட் சேரின்;
 அணைபவர் பொறைதான் நேரின்!
வேறெதும் மருந்து வேண்டா;
 பயிற்சியால் விளையுந் தீர்வே.

1. வீக்குதல் - அழித்தல், உயிரைப் போக்கல்.

வேலன்:

பொருளுள, குறைவே இல்லை;
   பொருந்துவர் பொதுமைப் பெண்டிர்.
வெருவுறும் உள்ளம், மேல்பால்
   வினையினால் விளைநோய் உள்ளி!
வருகுவர் பொருளே கோளாய்;
   வாய்க்குமோ கொண்ட நோக்கம்?
அருளிரு உன்னைப் போன்றார்
   அமைவரோ அவற்கும்? ஆகார்.

தெரிந்தவர் யாவும் நீர்தான்;
   ஆதலால் தேடிச் சேர்ந்தேன்.
புரிந்தவர் சேர்க்கை மட்டே
   போக்குமிக் குறையை என்றாய்!
மருந்தினின் சிறந்த தாக
   வல்லுநர் சொல்மாற் றீதே.
இரிந்திடுங் குறையென் றுன்னை
   இரந்தனன்; ஏற்றாய் இல்லை.

மணிமொழி:

பட்டதே போதும்; மேலும்
   படுமெனப் பணிப்பாய்; சால்போ?
எட்டுணை யேனும் என்பால்
   இருக்குமேல் அன்பு, நீயும்
கெட்டிடற் கான பாதை
   கிட்டிடற் கமையக் காட்டாய்.
நட்டனன் நலத்தை நண்ணி,
   நைத்தனை நம்முள் நட்பை!

வேலன்:

கண்களில் ஒன்றின் ஒன்றைக்
   கருதிடார் சிறந்த தென்று!
நண்பரில் ஏற்றத் தாழ்வு
   நாடுவர் நல்லார் இல்லை;

உண்மனத் துனையே உன்னி
　　உற்றுழி உதவற் குள்ளேன்.
எண்ணுவ என்றும் உன்றன்
　　ஏற்றமே; இகழல் ஏனாம்?

இழித்திடு முன்னர் என்சொல்
　　எண்ணுக இப்போ திங்கே.
விழித்திரு போழ்தே வீழ்ந்தாய்;
　　வேண்டாவா எழுதல் மீட்டும்?
அழித்தொழி துயரை; வேறோர்
　　அகவுற வேற்றல் வேண்டும்!
வழுத்துவன்; மரமாய் வெற்றே
　　வாழ்தலென்? மகிழ்ச்சி வேண்டும்.

நெஞ்சினில் நெருடல் ஒன்று
　　நிறைந்தினி தாட்டும் நின்று!
வஞ்சியுன் வாழ்வில் நன்று
　　வருமென இன்று தோன்றும்!
அஞ்சிறைப் பறவை அன்று;
　　வானுயர் அன்றில் போன்று,
செஞ்சொலீ! சிறப்பாய் என்று
　　தெரிகின்ற தறிக தேர்ந்து.

மணிமொழி:

ஏதிலன் ஒப்ப என்முன்
　　எற்றுநீ இரந்து கெஞ்சல்?
தீதுதான் எனினும் நண்ப,
　　தேர்ந்துபின் உரைப்பன்; அஞ்சல்!
கோதிலன் அறிவேன், சற்றும்
　　குழப்பிடா துரைத்தாய் கொண்ட.
தீதெனை மேலும் சேர்ந்தோ
　　தீய்த்திடும் இனியும்? இல்லை.

## காட்சி . 5

**இடம்** : ஏர்க்காடு - விருந்தினர் இல்லம்.
**காலம்** : நண்பகல்.
**உறுப்பினர்** : முத்துக்கண்ணன், வேலன்.
**சூழல்** : முத்துக்கண்ணன், வேலன் தனியே அமர்ந்து பேசிக்கொண்டு இருக்கின்றனர்.

முத்துக்கண்ணன்:

(மருட்பா)

இடுக்கண் எதுவரினும் இன்னாத செய்தல்
அடுக்கா தறவோர்க் கறிந்தும் புரிந்தாயே!
தன்னலத்தின் மிக்க தவறுண்டா? தாய்பசியை
முன்னம் காண்பதினும் மோசம் பரத்தமைதான்!
எல்லாம் எனைச்சூழ்ந் தியற்றுமென் இன்னண்ப,
[1]பொல்லா புரிந்து புலம்பப் புகுத்திட்டாய்!
கெட்ட பழக்கமெதுங் கிட்ட நெருங்கலிலாப்
[2]பெட்பினிடை இன்று பிழைநுழைய விட்டாயே!
நல்லன் மகனென்று நம்பிமகிழ் தாய்தந்தை
இல்லை எனவறியின் எய்துதுயர் ஏற்பாமோ?
வேண்டுவன்; வேலா, வேண்டா;
ஈண்டென் இயையினும் ஏற்கேன் இழிபே!

வேலன்:

(கலி வெண்பா)

குற்றம் இதிற்கூடக் கொஞ்சமும் இல்லென்பேன்.
உற்றதே; ஊறெங்கே? உள்ளதே ஊரெங்கும்!

---

1. பொல்லா - பொல்லாத: கடைக்குறை. 2. பெட்பு - பெருமை.

நஞ்சு மருந்தாக, நல்லமுதும் நஞ்சாகும்!
அஞ்சற் கமைந்ததென்ன? ஆர அலசிடுக.
பண்டுவத்தில் நஞ்சின் பயன்பாட்டைப் பாரறியும்!
உண்டற் கறுசுவை உண்டி எதிரிருந்தும்
கொள்ளற் கியலாக் குறைசிலர்க் கேனெதனால்?
உள்ளின் உலகியலின் உண்மை உணர்ந்திடுவாய்.
[1]தோட்டின வென்றோ, தொலைவில் பொருளென்றோ
[2]வாட்டடங் கண்ணார்தம் மார்பினைக் கூட்டலில்லை.
நாட்டம் எனக்குன் நலத்தில்; [3]நவையிதிலென்?
[4]காட்டம் தவிர்த்திங்குக் கண்டிடுக உட்பொருளை!
நல்ல நடப்பதற்கும் தீய தடுப்பதற்கும்
ஒல்லும்வாய் எல்லாம் உடனிருப்பார் நண்பனென்பார்!
கூடவிருந் துண்டு குலவி மகிழ்வதினும்
[5]பாடறிந் தாற்றலே பண்பு.

முத்துக்கண்ணன்:

(மருட்பா)

சொல்வாய் சுவைப்படச் சூதுள ஆயினும்;
நில்லாய் நெறிமுறை; நிற்பாய் நினைவழி!
நல்லான் எனநானே நம்பி நடந்திடவும்
எல்லாரும் எள்ளி இகழ்தற் கெருவிடுவாய்!
கெட்டோன் எனும்பழி கிட்டும் நொடித்தவற்றால்;
ஒட்டா துயர்வெளிதில் [6]உண்ணாள் வலிதுழைத்தும்!
நண்பன் நலமேலாய் நாடுநீ ஏன்வீணாய்ப்
பெண்ணவர்க் கின்னல் பிறக்கப் பிழைபுரிவாய்?
ஊறாம் உயிர்க்கென ஊனும் உணற்கிலோன்
பேறாம் உயர்மாதர் [7]பின்னமுறல் எண்ணுவனோ?
என்னோய்க் கியாரோ எதற்கிங் கிடருறலும்?
நின்னோக்கில் சற்றும் நியதியில்லை! என்நண்ப,
நல்ல தாற்றல் நனிநன்(று);
அல்ல தகற்றல் அதனின் நன்றே.

1. தோட்டினவு - தோள் + தினவு. 2. வாட்டடங் கண் - வாள் + தடம் + கண். 3. நவை - குற்றம், இழிவு. 4. காட்டம் - சினம். 5. பாடு - பெருமை, பயன். 6. உண்ணாள் - உள் + நாள். 7. பின்னம் - கேடு, சிதைவு, மாறுபாடு.

வேலன்:

(கலி விருத்தம்)

கூரிய நோக்கும் குறையிலாப் போக்கும்
நேரிய; ஆனால், நிலைமையை நீக்கா.
யாரெவர் என்ப தியம்புவன்; ஏற்பின்,
தேருவை என்றன் செயலது சீரே!

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

மணிமொழி பெயரே; யாரும்
மதித்திடப் பழகு வாரே!
அணிகளில் மணியே அன்னார்;
அமுதவர் பசிக்குச் சொன்னால்!
பணிவினில் நாணல்; வெல்லப்
பாகினி சொல்லால்; கொள்கைத்
துணிவினர்; இளமைத் தொட்டுத்
துணையெனக் கினியர்; தூயர்!

இருவரெம் ஊரும் ஒன்றே;
இணையராம் படித்த அன்றே!
பிரிவுமேற் கல்வி யாலே
பிறந்தது; பிழைவே றில்லை.
திரிபுடைக் காத லாலே,
சிதைந்தது குடும்ப வாழ்க்கை!
ஒருவரும் உதவற் கில்லை;
உதவுவன் உடன்நான் இன்றும்.

[1]மடுத்தவன் நீங்க, வாடி
வழியிலா திருந்த காலை,
அடுத்தனர் நண்பன் என்னை;
அடைக்கலம் அளித்தன் முன்னை!
படித்தவர்; அதனால் ஏற்ற
பணியினில் சேர்த்தேன்; இன்று,
விடுத்துற வருகில், காப்பில்;
விழுதுணை மனைவிக் காவார்.

1. மடுத்தல் - மோசம் செய்தல், மயக்குதல்.

தேடினும் அரிதிற் சேராத்
　　தேனினும் இனிய நீரார்!
நாடினன் மணக்க, ஏற்கார்;
　　நம்பியக் கேடன் சொல்லைக்
கேடிலர் பட்ட துன்பம்
　　கிளைத்துளம் கிளரக் காட்டார்.
ஈடிலர் நட்பிற் குன்றன்
　　நட்பலால் இணைவே றில்லை!

முத்துக்கண்ணன்:

(கலித்துறை)

இத்துணை அன்புனக் கிருக்குமேல் எதற்காம் அன்னார்
இத்தகை புன்செயற் கிணங்கிட இயைத்தாய்? நல்ல
முத்தினைப் பொன்னொடு முடித்தலே அழகாம்; ஆயின்
பித்தளை என்னொடும் பிணையலா? பிழையே! நன்றோ?

வேலன்:

(வேறு)

என்னினி நண்பன் இடருற பார்த்தும் இருப்பேனோ?
இன்னுயிர்த் தோழி இடரறச் சேரல் இழிபாமோ?
துன்புறு யார்க்கும் துணையென நிற்றல் துயராமோ?
நன்மை நயந்திடு உண்மை புரிந்தும் நகுவாரோ?

கடன்பட் டதனால் உடன்பட்டா ரென்றே கருதாதே.
உடன்பட் டவரே உதவிடச் சேர்வார், உணர்வாயே!
[1]புடம்மிட் டெடுவரு பொன்னவர், நீயும் புலம்பாதே;
இடம்பொருள் ஏவல்மற் றெல்லாம் அறிவர்; இசைவாயே!

முத்துக்கண்ணன்:

(கொச்சகக் கலிப்பா)

இன்றுவரை நானறிந் தியார்க்கும் இடரெதுவும்
ஒன்ற ஒருபோதும் உள்ளத்துங் கொண்டதில்லை.
கன்றுதுயர் காணக் [2]கலங்கான் உளமான
என்றும் எளியர்க் கிரங்குபவன் யானன்றோ!

1. புடம் + இட்டு - புடம்மிட்டு : எதுகை நோக்கி விரிந்தது. 2. கலங்கான் - கலங்கு + ஆன்; ஆன் - பெண் மாடு.

வேலன்:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

எதுசொலின் என்ன? நண்ப,
என்முடி வினிய தென்பேன்.
மதுவினை மருந்தில் சேர்த்து
வழங்குவர்; தெரியும் யார்க்கும்!
பொதுமகள் இல்லை, கற்றார்!
புரிந்துடன் பழகு; நட்பால்
உதவுதற் குற்றார்; உன்னின்,
உண்மையில் உயர்ந்து நிற்பார்!

நடந்தன யாவும் முற்ற
நவின்றனன்; அறிவார் உற்ற.
கடந்தன கழிந்த வாகக்
கற்றிடு களிக்க இந்நாள்.
இடந்தெரிந் தொழுக வல்லார்;
இடர்வர எதுவுங் கொள்ளார்.
தடமிலா தணைந்து நீங்கும்
தென்றலாய்த் தழுவிச் செல்வார்.

அஞ்சிடற் கில்லை; அன்னார்
அருமருந் தணைப்பார் தொல்லை.
பஞ்சினும் மென்மை உள்ளப்
பாங்கினர், பரிவில் பக்கம்
எஞ்சிரு கோடை முற்றும்
இருந்துன திடரைத் தீர்ப்பார்.
நஞ்சுமுன் உண்ட தெண்ணி
வருந்துவை நல்லார் கூட்டால்!

முத்துக்கண்ணன்:

(கலி வெண்பா)

என்சொலைக் கேட்பதற் கேன்நீ மறுத்திடலும்?
புன்றொழில் வேண்டா; புரிந்துகொள்; விட்டுவிடு.
நல்லானாய் நானிருத்தல் நண்பனுனக் காகாதோ?

பொல்லாப் பரத்தமையைப் போற்றும் [1]புரையெதற்காம்?
பெற்றோர் அறியின் பெருந்துயர்க் காளாவார்;
மற்றோர் அறிந்திடினோ மானம் பறிபோகும்!
இல்லை பிறர்க்குதவல் என்றாலும் என்றும்நான்
தொல்லை எவர்க்குந் தொடரத் துணையாகேன்!
தன்னந் தனியாய்த் தவமிவண் கொள்வனென
என்னுள் எனையாய்ந் தெனைத்தானும் மீண்டிடுவேன்.
பெண்ணல்லார் கூட்டே பிறப்பின் சிறப்பில்லை;
எண்ணிலிங் கேராளம் யார்க்கும் செயவுள்ள!
ஊனம் உடலிலில், உள்ளத் துணர்ந்திட்டேன்;
ஆனதினால் கொண்ட அனைத்துமுடன் விட்டிடுக.
இன்றுபோல் என்றும் எவர்க்கும் இனியனென
ஒன்றி உறைவேன் உவந்து.

வேலன்:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

நல்லவை சொல்வ; ஆனால்,
  நடைமுறைக் குகந்த அல்ல.
அல்லவை உன்னை அண்டா;
  அதற்குநான் காப்பாய் உண்டே!
மெல்லியர் அடைவர் இன்னே,
  விட்டிடு தயக்கம் முன்னே.
சொல்லிய வாறு சேர்ந்து
  துயர்விடு; மீள்வேன் பின்பு.

இம்மனை இருந்து காக்கும்
  ஏவலர், துணைவி தம்மை
நம்பலாம்; உணவு மற்றும்
  நாடுவ நயந்து செய்வார்;
உம்மரு பெற்றோர், மற்றோர்
  ஒருவரும் அறிய வாரார்.
செம்மலர் சேர்வார் சற்றுள்;
  சேர்ந்துறை குறையின் றாக.

1. புரை - குற்றம்.

நாண்மலர் மென்மை, தண்மை
நலமெலாம் அமைந்த பெண்மை!
காண்டகு அழகிற் கெல்லாம்
காட்டென அமைந்த உண்மை!
வேண்டுநற் குணங்கள் மிக்கார்,
விரும்பியே உன்னைச் சேர்வார்!
யாண்டுபன் னூறு நோற்றும்
இயைந்திடற் கரியர்! நேர்வார்!

அன்னவர் அறிவர் எல்லாம்;
அவருரை அணைந்து செல்க.
கன்னலின் இனிமை வன்மை
கலந்ததோர் பெண்மை; நன்மை!
உன்னுடற் குறைகள் யாவும்
ஒழிந்திடும்; உளமும் தேறும்.
என்னிடர் வரினும் பின்னர்
எதிர்த்துநில் உரமும் சேரும்.

பட்டறி வுடையர்; சேர்ந்து
பழகிட அறிவை தேர்ந்து.
விட்டிடு வீம்பு தன்னை;
வேண்டிய விளைப்பர்! முன்னைக்
கட்டுளில் பொறிகள் தம்மைக்
கட்டுவித் தடங்கச் செய்வார்!
கட்டுளில் உணர்வு தங்கக்
கழிந்திடும் குறைகள் தாமாய்!

## காட்சி . 6

**இடம்** : ஏர்க்காடு - விருந்தினர் இல்லம்.

**காலம்** : முன்பகல்.

**உறுப்பினர்** : முத்துக்கண்ணன், மணிமொழி, இல்லக் காப்பாளர் முருகன் மனைவி இளநகை.

**சூழல்** : விருந்தினர் இல்லப் பூந்தோட்டத்தில் முத்துக்கண்ணன், மணிமொழி எதிரெதிர் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கின்றனர்.

மணிமொழி:

(நிலைமண்டில ஆசிரியப்பா)

இனிய சூழல், எழிலுறு இயற்கை;
பனிப்பொழு தென்னப் பகலிரு தண்மை!
வெய்யவன் விரிகதிர் [1]எய்தரு இருணிறை
வானுற வளர்ந்த கானன மரநிரை!
பன்மலர்க் கூட்டம் நன்மணம் கூட்டும்;
கனிகள் எங்கும் நனிமிகக் காணும்;
அணில்கள் ஓடி உணுமழ கழகே!
பறவைகள் பாடொலி உறங்கப் பண்ணுவ;
களிப்பில் பொறிகள் குளிப்ப காண!
உள்ளம் உவகை கொள்ளும் உயர்வைக்
கூறற் கில்லை; [2]கூறது பெரிதே.
சின்னஞ் சிறிய பெண்ணாய் அந்நாள்
திரிந்து திளைத்த தெரியும் கண்முன்!
சிறுவ ரோடு வெறுவுணர் வின்றிக்
கட்டிப் பிடித்தும் எட்டி உதைத்தும்
கூசக் கூறுவ பேசி ஏசிச்

---

1. எய்தரு - எய்த + அரு : தொகுத்தல். 2. கூறு - தன்மை, பகுதி.

சண்டை யிட்டதும் கண்டதை உண்டதும்
கனிகள் அவாவி நுனிக்கிளை ஏறக்
காவலர்க் கண்டு தாவிட வீழ்ந்ததும்
ஆடை நனைய ஓடையில் நீந்திப்
பாடிக் களித்தும் தேடிப் பிடித்தும்
ஆடிய ஆட்டம் ஒன்றா? இரண்டா?
நாடினும் இன்றவை கூடற் கியலா!
நினைக்க நினைக்க இனிக்கும் நெஞ்சம்;
பொறுப்பும் இல்லை, வெறுப்பும் இல்லை.
நிறைந்த வாழ்க்கை! நின்றினும் இனிக்கும்!
குழந்தையாய் நிலைத்திடக் கூடுமேல் யார்க்கும்
இழந்திடற் கென்றும் எதுவும் இலையே!

முத்துக்கண்ணன்:

இத்தனை அழகா? இங்கா? அடடா!
எத்துணை மகிழ்ச்சி எழுப்பிய தும்முள்!
பன்முறை வந்தும் பார்த்ததில் முன்னர்;
இன்றும் பேச்சால் இயற்கை புரிந்தது.
பட்டண வாழ்க்கைப் பரபரப் பிடையில்
அழகை நுகரப் பழகிய தில்லை.
சற்றே சுற்றும் உற்றுச் சூழப்
பற்றுங் களிப்பே; முற்றும் சரியே.

மணிமொழி:

(நேரிசை ஆசிரியப்பா)

வளர்ப்பிற் கேற்ப வருவ குணங்கள்;
விளைவ பயிர்கள் விதைகட் கியைய.
எல்லாம் செடிகளே; எனினும் அவற்றில்
பூப்பன காய்ப்பன பொருந்தா தம்முள்.
எத்தனை நிறங்கள்! எத்துணை மணங்கள்!
தித்திப் பனைத்துமா? தீயவும் உளவே!
ஐம்புல நுகர்வும் அனைய நமக்கும்.
செம்புலப் பெயல்போல் சேர்வ குணங்கள்;
விருப்பும் வெறுப்பும் வேறுவே றெவர்க்கும்!
விருப்பாம் ஒருபொருள் வெறுப்பாம் பிறர்க்கு;

தேம்படு சாறும் வேம்பாம் சிலர்க்கே!
தவறெனப் பழித்தல் தகுமோ?
அவரவர்க் கமைந்த இயல்பிஃ தாமே!

முத்துக்கண்ணன்:

ஆக்கம் சேர்க்கும் ஊக்களி பேச்சைக்
கேட்கக் கேட்க வேட்கை நீளும்!
என்னிடம் யாரும் இந்நாள் முன்னர்
உன்னின் அறிவாய்ச் சொன்னவர் இல்லை.
எப்படி இஃதாம்? எதனால்?
செப்படி வித்தை ஒப்பும் எனக்கே.

மணிமொழி:

என்னைப் பற்றிய எதையும் வேலன்
முன்னம் உம்மிடம் சொன்னதும் இலையா?

முத்துக்கண்ணன்:

இல்லை, எதுவும் சொல்லிய தில்லை.
இலைமறை காயென இருநாள் முன்னரே
ஒருசில உரைத்தனன்; உண்மை உணரேன்.

மணிமொழி:

இருநாள் முனமா? இஃதென் நட்பாம்?
ஒருநாள் ஒழியா தொருநட் புற்றதாய்
வருநாள் எல்லாம் வாய்வலி எடுக்க
ஒன்றும் விடாது உந்தம் உயர்வைச்
சென்றநான் காண்டாய்ச் செப்புவான்; அறிக.
இளமைதொட் டின்றும் எம்முள்
ஒளிவிலை இறையும்; உண்மை ஆமே!

முத்துக்கண்ணன்:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

கண்ணெனப் பெண்ணார் தம்மைக்
கருதுவன்; அதனால் என்றும்
பெண்களைப் பொருளாய்ப் பேசும்
பிதற்றலைப் பேணேன்; கேளேன்.

பண்பிலாப் பயனில் பேச்சா?
 பக்கமும் நில்லேன்; செல்வேன்.
எண்ணுவ நல்ல வல்லால்
 இழிவுள கொள்வ தில்லை!

மணிமொழி:

இத்துணை இனியர் நீரா!
 எண்ணிலன் இதற்கு முன்னர்.
மெத்தவும் மேனாள் வேலன்
 விளம்பினன்; வியந்தேன் இல்லை.
சொத்துள இளைஞர் தம்முள்
 தூயரார்? அரியர் உம்போல்!
முத்தெனும் சொற்கு முன்னோர்
 மொழிபொருள் ஆனாய் நீயே!

(இன்னிசை வெண்பா)

சென்ற இருவிரவாய்ச் சேர்ந்திங் குடனிருந்தும்
இன்றுமும் மூச்சும் இயையா எனதருகும்!
நன்று, மிகநன்று; நல்லோய், உமைப்போன்றோர்
இன்றியான் தேர்ந்தவரை இன்று.

(தரவு கொச்சகக் கலிப்பா)

பணத்திற்காய்ப் படுக்கைவிரி பரத்தையரின் இழிந்தவராம்
பிணந்தின்னுங் கழுகனையர் பிறமகளிர் உடலுழல்வர்!
கணத்தியலும் உடற்கலப்பின் விடுகழிப்பில் கரைந்துலையுங்
குணத்தினர்தம் இடையிலொரு குழந்தையென உளர்நீரே!

(அப்போது பணிப்பெண் இளநகை கைகளில் சிற்றுண்டி, தேநீர் கொண்டு வந்து அவரெதிர் வைக்கின்றாள்.)

இளநகை:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

கானுறை காடை கோழி
 கறிக்கென உள்ள நல்ல!
ஊனுண வுங்கட் கேதும்
 உறுவிருப் பிருப்பேல், சொல்க.

*மானிளம் ஊனுங் கூட*
*வாய்த்திடும் சொல்லி வைப்பின்!*
*தேனினும் சுவையாய்ச் செய்வேன்;*
*தேவையென்? சமைப்பேன்; சொல்க.*

*மணிமொழி:*

*ஏனெனைக் கேட்பாய்? இங்கே*
*இவர்க்கெது இனிதோ, அந்த*
*ஊனினைச் செய்க; யானும்*
*உண்குவன்; வேறு வேண்டா.*

*இளநகை:*

*ஊனினை ஐயா என்றும்*
*உண்பதில்; உங்கட் கேற்ப*
*யானினி சுவைமிக் காகச்*
*செய்குவன்; ஏற்ற சொல்க.*

*மணிமொழி:*

*எனக்கெனத் தனித்து நீதான்*
*எதுவுமே சமைத்தல் வேண்டா.*
*தனக்கென விழைவேன் அல்லை!*
*தகுமிவர்க் கான; செய்க.*

*(இளநகை அங்கிருந்து அகல்கிறாள். மணிமொழி தேநீர் அருந்தியபடி பேச்சைத் தொடர்கிறாள்.)*

*மணிமொழி:*

[1]*மனக்கினி செய்யும் மைந்தர்*
*மலிநகர்ச் சூழல் தன்னில்*
[2]*உனற்கரு குணங்கள் உம்மில்*
*உறைவதென்? உண்மை சொல்க.*

*முத்துக்கண்ணன்:*

*பயிர்வற வதங்கி வாடப்*
*பார்க்கினும் பதைக்கும் யானோ,*

---

1. மனக்கினி - மனத்திற்கு இனிய: அத்துச் சாரியை தொக்கு நின்றது.
2. உனற்கரு - உன்னற்கு அரு: இடைக்குறை.

உயிரினைக் கொன்றூன் உண்ண
  உன்னுவன்? உவப்பன்? இல்லை.
வயிறுறு பசிக்கு மற்ற
  உயிரினை விலங்கே உண்ப!
துயரற முயல்வேன்; ஏலேல்,
  துன்பினில் துணையாய் நிற்பேன்.

மணிமொழி:

(நேரிசை வெண்பா)

புல்லுக்கும் பாய்நீர்போல் புல்லொழுக்கம் உள்ளெனக்கும்
நல்லரும் நட்பு நனிநன்றே - சொல்வதெனில்
கல்லொன்று காற்பட்டுக் கண்டவுரு பெண்ணலத்தின்
நல்லவாம் நான்கொள் நயப்பு.

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

கவர்ச்சியைக் காத லாகக்
  கண்டதால் களங்கப் பட்டேன்;
உவர்ப்பொரு சுவையின் கூறே,
  உணவெனக் கொள்வார் யாரே?
தவற்றினை அமைத்துக் கொள்ளத்
  தகுவதோ? குற்றம் அன்றோ?
சுவர்தனை இடித்து விட்டுச்
  சொத்தினைக் காத்தல் ஆமோ?

பெற்றவர், உற்றார், மற்றோர்
  பிழைபொறுத் தேற்பர்; ஏற்கேன்.
குற்றமிங் கிழைத்தோள் ஏற்ற
  தண்டனை கொளலே சால்பாம்!
ஒற்றையாய் உறவை நீங்கி
  உயிருணங் குடலோ டுய்வேன்!
கற்றுளன்; ஆனால், கற்பைக்
  காத்திடக் கற்றேன் அல்லேன்.

நம்பினேன்; சேர்ந்தேன்; கொண்ட
  நகைதமைக் கவர்ந்து பேர்ந்தான்!
விம்மிவெய் துயிர்த்து வெந்தேன்;
  வேதனைக் கடலில் வீழ்ந்தேன்.

வெம்பின காய்தான் தேறி
விழுங்கனி ஆதல் உண்டோ?
இம்பரில் பதரென் றியாதும்
இயைத்திடா பயனை யார்க்கும்!

முத்துக்கண்ணன்:

குறையிலார் உலகில் கோடி
கூடினும் காணக் கூடா.
நிறைவுடை நீரார் எங்கு
[1]நேடினும் நேரார்; தேர்க.
கறைநிறை வாழ்க்கை, காலங்
கழிந்திடப் புரியும் நீர்மை.
சிறையுறை சிந்தை வேண்டா;
சிரித்திடும், தீமை தீண்டா!

எண்ணுவ போலாம் யாவும்;
எண்ணுக தகுவ; மேவும்.
பண்ணுறு பிசிறு போலப்
பழுதுறும் வாழ்வில்; சேரும்
புண்ணன, போதல் வேண்டும்;
புழுங்கலென்? போக்கில் யாண்டும்.
[2]உண்ணினை; உண்மை [3]எல்போல்
ஒளிர்ந்திடும்; உள்ளம் தேறும்!

மணிமொழி:

(பஃறொடை வெண்பா)

நன்று, மிகநன்று; நல்ல உரைத்தவையே;
குன்றற் கிலாக்கூற்றுக் கொள்ளற் குரியவையே.
எல்லாம் சரியெனினும் யாவும் தெரிந்திருந்தும்
பொல்லா புரிந்தாளைப் போற்றிக் கொளலுண்டா?
எச்சில் இலையென்னை ஏறெடுத்தும் யார்பார்ப்பார்?
பிச்சை எடுப்பாரும் பேணார் பிழையெண்ணி!
வீதி வெறிநாயே வேட்டு விரைந்திடுவ;
ஏது விடிவெனக்கும் இங்கு!

1. நேடுதல் - தேடுதல், எண்ணுதல். 2. உண்ணினை - உள் + நினை.
3. எல் - கதிரவன், ஞாயிறு.

# காட்சி . 7

**இடம்** : விருந்தினர் இல்லப் படுக்கை அறை.
**காலம்** : இரவு மணி பத்து.
**உறுப்பினர்** : முத்துக்கண்ணன், மணிமொழி.
**சூழல்** : படுக்கையில் இருவரும் எதிரெதிர் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கின்றனர்.

மணிமொழி:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

இன்றுடன் நாட்கள் ஏழும்
ஏகின; இனியும் வேண்டா!
ஒன்றின திங்கெ தற்காம்?
உற்றதுங் கொண்ட துண்டா?
சென்றன சென்ற தாக;
செய்தக்க செய்வம் இன்றே!
ஒன்றிரு நாட்கள் தம்முள்
உட்குறை ஒழியும், நன்றாம்.

இந்தவேழ் நாளாய் நாமிங்
கிணக்கமாய்த் தனித்தி ருந்தும்
எந்தவோர் மெய்த்தொ டர்பும்
இருந்ததில்; எல்லாம் பேச்சே!
வந்ததேன்? ஓய்விற் கென்றா?
மறந்ததோ? வஞ்சி யஞ்சி
முந்துசின் னோய்க்கு முற்றாய்
முடிவினைக் காண்பம் நன்று.

முத்துக்கண்ணன்:

இன்னலாம் எவர்க்கும் என்னால்;
இடரெதற் குமக்கும்? நன்றா?
கன்னலாய்க் கண்ட பெண்ணே,
கசந்தெனைக் கடிந்தார்; சென்றார்!
தென்றலாய்ச் சேர்ந்த நீரோ,
தீயெனை அணைதல்? [1]சீரோ!
நன்றலா செய்தல் உம்போல்
நல்லவர்க் கழகன் றேலா[2]!

நல்லன அடுத்தல் தன்னின்,
நகுதக தடுத்தல் நட்பாம்!
[3]அல்லுற விடுத்தான் நம்மை;
அவனிலை நண்பன்; [4]சும்மை!
சொல்லுவ கேட்க; இந்தத்
துயர்தரு முயற்சி வேண்டா!
நல்லறி வுடையீர் தானே?
நவையளி செயலேன்? வீணே!

கடலன காதல் என்மேல்!
கருதினேன், களித்தேன்; ஆனால்,
உடலொரு குறையால் உள்ள
உயர்வினைச் சிதைத்தாள்; சென்றாள்!
உடனொரு தொடர்பும் இல்லா
ஊனமுள் உடலோற் காக
வடுவரு பழிநீர் தாங்க
வருதலோ? எதற்கு? வேண்டா.

மணிமொழி:

(பஃறொடை வெண்பா)

கற்றதனால் ஆவதென்ன கற்றற் கியையவுமால்
நிற்றற் கியலாதேல்? நீர்நிரம்பப் பட்டறிவும்
உற்றரென முன்னர் உரைத்துளன் வேலனுமே!
சற்றுமதும் உண்மையெனில் சாற்றும் விடையெனக்கே.

1. சீர் - பெருமை, இயல்பு, நன்மை, புகழ், நேர்மை. 2. ஏலா - பொருந்தா.
3. அல் - இருள், குழப்பம். 4. சும்மை - சுமை.

தேறி எனைவகையால் தேர்ந்து வினைதெளிந்தும்
வேறுவகை மீண்டெண்ணல் வேண்டாத் [1]தகைவன்றோ?
எண்ணிய எண்ணியாங் கேற்றல் இயல்பாகும்!
கண்ணெதிரில் உண்ணுணவு கண்டும் பசித்திருத்தல்,
நன்று, மிகநன்று; நம்முறவு நன்றுமிக!
ஒன்றலலால் உண்டோ உயர்வு!

முத்துக்கண்ணன்:

(குறள்)

பட்டது போதும்; பழியெதற்கு மேன்மேலும்?
விட்டிடுக; வேண்டா [2]விழைவு.

மணிமொழி:

(கொச்சகக் கலிப்பா)

நாணம் சிறிதுமின்றி நானிருப்பேன் மெய்யணைக்கக்
கோணிக் குறுகிக் குனிந்திருப்பீர் குற்றமென்(று)!
ஆணிற் கழகென்றும் அஞ்சாமை; ஆனதினால்
காணற் கருவுறவைக் காண்க; களித்திடுக.

முத்துக்கண்ணன்:

அச்சம் தவிர்த்தலலால் அஞ்சுவ அஞ்சலுமே
மெச்சத் தகுந்தவாண் மேன்மைக் குணங்களென்பர்!
நச்சிப் பிறன்[3]மகளிர் நட்பை உவந்திடுதல்
எச்சில் இலைக்கேங் கிழிபிறப்பிற் கேற்பாகும்.

மணிமொழி:

(இன்னிசை வெண்பா)

பிறன்மனை நோக்காத பேராண்மை, சாலச்
சிறந்ததுவே; ஆண்மைத் திறத்ததுவே! ஆயின்,
பிறன்மனை யானில்லை; பேதைமையால் வாழ்வைத்
துறந்தவளே; தூய்மையிலள்; தூசு.

(கொச்சகக் கலிப்பா)

வருக படுக்கைக்கு; வந்து படுத்திடுக.
அருகு நெருங்கிடற் கஞ்சீர்; இறுகணைக.

1. தகைவு - தடை, இளைப்பு. 2. விழைவு - புணர்ச்சி. 3. மகள் - மனைவி.

பருக இதழமுதம் பாயும் உணர்வெங்கும்.
தருக திறந்துதடும் [1]தாலிணைத் தாடற்கே.

(மணிமொழி முத்துக்கண்ணனை இழுத்துப் படுத்தபடி இதழ்களில் இதழ்களைச் சேர்க்கிறாள். முத்துக்கண்ணன் அவளணைப்பில் ஆழ்ந்து உணர்வு மீதுறத் தன்னிலை இழக்கின்றான். அதனால், வெட்கி, வேதனையால் வலிந்து விடுபட்டு, எழுந்து அமர்கின்றான். கண்கள் கலங்குகின்றன.)

முத்துக்கண்ணன்:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

சொன்னேன் முன்னர்க் கண்டீரா?
  சூதாய் என்னைக் கொண்டீரே!
என்னே என்றன் இழி[2]தகைமை?
  யாரும் அறியின் ஏளனமே!
[3]கொன்னே ஆன தென்வாழ்வு;
  கூசும் கண்கள் உமைக்காண!
இன்னே இறத்தல் ஏற்பாகும்;
  இன்னல் உமக்கும் என்னாலே!

முந்துறு உணர்வால், காம
  [4]மொய்ம்பிலா மெய்க்கு றையால்
வெந்துறு துயர்க்கில் எல்லை;
  வேட்பன்மீண் டிறக்கத் தீதோ?
செந்தளிர் அனையர் நீரோ,
  சிறுநகை புரிவீர்; யாதோ?
நொந்திடச் செய்தேன் உம்மை;
  நோயிதென் உடைமை இம்மை!

மணிமொழி:

நோயிதா? இல்லை, இல்லை;
  நொந்திடற் கிடனே இல்லை!
ஆயதே சிலர்க்குச் சின்னாள்
  ஆரம்ப உணர்ச்சி வீச்சால்!

1. தால் - நாக்கு. 2. தகைமை - தன்மை, தகுதி, பெருமை. 3. கொன் - பயனின்மை. 4. மொய்ம்பு - வலிமை.

ஆயிழை நல்லார் அன்பால்
அடுத்துமீண் டணையின் நீங்கும்!
நோயெதா? வேட்கை அற்று
நுடங்கிரு எழுச்சி இன்மை!

(மணிமொழி முத்துக்கண்ணனைப் பற்றி இழுத்துப் படுக்கையில் மீண்டும் அணைத்துக் கொள்கிறார்.)

மணிமொழி:

இணையத்தில் தேடிக் கண்டேன்;
இதுபெருங் குறையே இல்லை.
இணைகையில் விந்து முந்தல்
இயல்புதாம் எவர்க்கும் சின்னாள்.
அணையுடை நீராய் மீறல்
ஐம்புல உணர்வின் சீறல்!
துணையென இருப்பன் நானே;
துயரினித் தொடரா! காணே.

நானுளன் உதவற் கிங்கு;
நல்லைநீர் அஞ்சல் நீங்கு.
தேனிதழ்ச் சுவையை மாந்து;
திமிரிள மார்பை ஏந்து.
ஏனிரு கைகள் இப்போ
தியங்கிடா திருப்ப? தப்பே!
[1]கானுழை இடனு மின்றிக்
கட்டுடல் அணைக ஒன்றி.

முத்துக்கண்ணன்:

(இன்னிசை வெண்பா)

இல்லையில்லை; என்னால் [2]இறையும் இயலலில்லை!
சொல்லற் கியலாத் துயருயிரைச் சூழ்ந்திடுமே.
தொல்லை யெனைமட்டோ? சூழும் உமையுமலோ!
இல்லை யினித்தொடர்தல் ஈண்டு!

(முத்துக்கண்ணனின் கண்களிலிருந்து நீர் வழிகிறது.)

1. கானுழை - கால் + நுழை - காற்று நுழை. 2. இறை - சிறிது.

மணிமொழி:

(கொச்சகக் கலிப்பா)

என்ன நடந்ததென் றிங்குக்கண் நீர்சொறிவ?
இன்னல் இலாதிங் கெதுவும் இயைவதில்லை.
முன்னர் அழுகுழந்தை பின்னர்ப் பசியாறும்!
இன்பம் அதுபோற்றான்; ஏயும் உழன்றிடத்தான்.

ஆரம்பம் இப்படித்தான், ஆர்க்கும்; அறிந்திடுக.
கூரம்பு தாமெனினும் கூடா குறிபயிலில்!
ஈரம் துடைத்திடுக; எல்லாம் இனிதாகும்.
தூரம் தொலைவிலிலை; தீருமிடர், நீரெழுக.

முத்துக்கண்ணன்:

உனற்கென்ன? ஏன்சொல்லாய்? உள்ளபடி உண்ணோ(வு)
எனக்கன்றோ? என்செய்வேன்? எந்திரம்நான் இல்லை!
கனக்குமியல் நெஞ்சுகடல் மூழ்குகலன், காண்க.
மெனக்கெடலால் என்னாகும்? மீட்சியிலை வீழ்ச்சியலால்!

மணிமொழி:

செல்லங் கொடுத்தும்மைச் சீரழித் துள்ளார்போன்ம்!
அல்லற் கிடமின்றி ஆளாய் வளர்ந்ததனால்,
நல்லதன்றி வேறு நடப்பறியா திங்குள்ளீர்!
நில்லும் [1]மடங்கலென; நேரா துயரென்றும்.

வெட்கப் படுதற்கோ, வேதனை கொள்ளற்கோ,
[2]உட்கி உளம்நொந் துயிர்விட உன்னற்கோ
[3]பெட்புச் சிறிதுமிலை; பேதைமைத்தே! பேணிடுக.
[4]திட்பம், தெளிவிருப்பின் தீமை தெரியாதே!

முத்துக்கண்ணன்:

(கலி விருத்தம்)

ஒருமுறைக் கிருமுறை முயன்றும் ஒன்றிடாப்
புரிவரு உறவிது; புணர்ப்பும் பொருந்துமோ?

1. மடங்கல் - சிங்கம். 2. உட்குதல் - அஞ்சுதல், நாணுதல். 3. பெட்பு - பெருமை. 4. திட்பம் - உறுதி, மன வலிமை.

உருசிறி தாகிடும் உறவும் நிறைவுறா!
அருவருப் பணைந்திடும்; ஆகா தாணிலை?

மணிமொழி:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

விழுந்திட வலிக்கும்; வீழ்ந்தும்
விலகிடு குழந்தை உண்டா?
எழுந்திடும் மீள, மீள;
இல்லையேல் நடத்தல் ஏது?
வழிந்திடும் முன்னர் என்றா
வருந்துதல்? வழியா சொல்வேன்.
எழுந்திடும்; வேட்கை மேலும்
இயைந்திடும்; இயக்கம் நீளும்.

சிற்றுளி குன்றைச் சாய்க்கும்;
சிறுதுளி வெள்ளம் ஆக்கும்.
கற்றுளீர்; ஆனால் வாழ்வில்
கற்றிலை அவற்றின் ஆட்சி.
எற்றுணைத் தென்ப தில்லை;
இயற்றுறு செய்கை எல்லை!
முற்றுறும் எதுவும் உம்மால்;
மூலமாம் திண்மை உண்டேல்!

(கொச்சகக் கலிப்பா)

அருமை யுடைத்தென் றயர்தலால் ஆவதென்ன?
பெருமை முயற்சியினால் பின்றொடரும்; முன்முயல்க.
ஒருமை பொறியடக்கி உம்செயலில் ஒன்றிட்டால்
இருமை எழுபிறப் பின்பமெலாம் இங்கெட்டும்!

உடனான் இருப்பேன்; உமைக்குறையும் ஒன்றவிடேன்.
திடனாய் இருந்திடுக; சேரும் சிறப்புடனே.
விடியா முனம்நீர் விரும்புநலம் பெற்றிடலாம்;
தடையேதுங் கூறாது சார்ந்திடுக சொற்படியே.

முத்துக்கண்ணன்:

(இன்னிசை வெண்பா)

எல்லாமே நீயென் றிருந்தாளே நோயென்று
கொல்லாதே கொன்றுயிரைக் கூறிட்டாள்; நீரெங்கே?
செல்லாத காசு, சிதறாவின் பால்நான்தான்;
நில்லாது நம்முள் நிறைவு!

மணிமொழி:

தேவை பொருளென்று தேடியுமைச் சேரலிலை;
ஆவல் பிறர்க்குதவ, ஆதலினால் நேரிட்டேன்!
நோவை குறையென்று; நோக்கின் இறையளவே.
ஈவையுமை முற்றாய் எனக்கு.

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

பிதற்றலால் விளைவ தென்ன?
பிழையது; வழியு மில்லை.
எதற்கெலாம் இழந்த தொப்ப,
இரங்கலும்? எழுக, நிற்க!
முதற்கிடை இழப்பும் நேரின்
முடக்கலோ தொழிலை? நன்றோ?
பதற்றமென்? அமைதி கொள்க;
பயிற்சியால் பயனுண் டாவ.

இழந்ததென் றென்றும் வாழ்வில்
எதுவுமில், உறுதி உண்டேல்!
எழுந்திரும், இயலும் உம்மால்;
எண்ணுக, குளியல் கொள்க.
கொழுந்தெரி காம வெந்தீ
குளிர்ந்திடும், குறையும் வீச்சும்;
அழுந்தெழுந் தகலம் ஆற்றில்
அகழ்ந்திட அறிவை [1]நீச்சும்.

1. நீச்சு - ஆழம், நீந்துகை.

முத்துக்கண்ணன்:

காய்ப்பிலா மரத்தை நாடிக்
கல்லெறிந் தன்ன, ஆண்மை
வாய்ப்பிலா என்னை ஆற்றி
வருத்தலால் என்ன ஆவ?

மணிமொழி:

பூப்புறு மரந்தான்; சேர்க்கை
பொருந்துமுன் இழிவ துண்டு!
யாப்புற வறிந்து மேவின்,
இயைந்திடும் யாவும்; சொல்வேன்.

வாய்ப்பிது திருத்திக் கொள்ள;
வரும்பினும், உறுதி இல்லை.
நோய்க்கிறு மருந்தெ திர்ந்தும்
நுடங்கிரல் முடவர் செய்கை!
தேய்த்திட மீள மீளத்
திறனுறு வாள்போல் ஈதே!
மாய்த்திடு மருளை உண்ணீ!
மனத்திடு தெருளை; எண்ணீ.

மீண்டுமீண் டிதையே பேசி,
மிரள்வதேன்? மேன்மை இல்லை.
ஈண்டெழும், இணைந்தே ஒன்றாய்
இருவரும் குளிப்பம்; உம்முள்,
மூண்டுறை தாழ்வு ணர்ச்சி
முனைகெடும்; முனைப்பு மீளும்.
காண்டகு கூட்டம் நம்முள்
கனிந்திடும்; கலவி காட்டும்!

முத்துக்கண்ணன்:

(குறள்)

என்னது? நாமிணைந்தா? இல்லையில்லை, என்றுமில்லை!
புன்மையர்க் காவதிப் போக்கு.

மணிமொழி:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

தேடினுங் கிடைத்தற் கில்லாத்
திரள்பொருள் ஆடைக் குள்ளே
கோடியில், அள்ளற் காகா
கொட்டிமிக் குள்ள தாக
வாடுவர் இளைஞர் மட்டோ?
வாய்த்திடா வாய்ப்பு மக்கும்!
கூடுமுன் குளிக்கச் சேர்ந்து
குறைந்திடும் கொண்ட கூச்சம்.

சேர்ந்துடன் குளிப்ப தாலே
சிலிர்த்திடு பொறிகள் ஐந்தும்
நீர்ந்திடும்; உணர்ச்சி தாழ
நீண்டிடும் காமக் கூட்டம்!
ஓர்ந்திடு, குறையில் மெய்யில்;
உள்ளதும் உணர்ச்சி [1]நீச்சே!
பேர்ந்தெழு, குளிப்பம் முன்னர்ப்
பிழையிலை, பேறே பின்னர்!

1. நீச்சு - வெள்ளம்.

# காட்சி . 8

**இடம்** : விருந்தினர் இல்லப் படுக்கை அறை.
**காலம்** : இரவு மணி பத்து.
**உறுப்பினர்** : முத்துக்கண்ணன், மணிமொழி.
**சூழல்** : முத்துக்கண்ணன், மணிமொழி இருவரும் ஒன்றாய்ப் படுக்கையில் இருக்கின்றனர்.

மணிமொழி:

(நேரிசை ஆசிரியப்பா)

இத்துணை விரைவா? எதற்காம்? வேண்டா.
எத்தனை முறைதாம் எடுத்துநான் மொழிதல்?
பதறின் எதுவும் சிதறும் என்று
படித்துப் படித்துப் பன்முறை நேரே
இடித்தும் கனிவாய் இனிக்க உரைத்தும்
காற்றறு பட்டமாய்க் காண்பகற் கனவாய்ப்
போற்றற் கற்றுப் போவ; போம்புறம்!
எழுமெழும்; அப்பால் ஏகிடும்!
விழுமிய விழையா [1]வேணவா மிகினே.

முத்துக்கண்ணன்:

பொறுபொறு; சற்றும் பொறுத்தல் இல்லை.
ஒருமுறை மட்டும் விரும்புவ பெறவிடு!
பின்னர் என்றும் உன்சொல் பிறழேன்!
தள்ளல் ஏனாம்? தவறா?
உள்ளாய் என்னுள் உடன்றெரி உணர்வே!

1. வேணவா - வேட்கை + அவா = வேட்கைப் பெருக்கம்.

மணிமொழி:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

நன்றிலை உன்றன் செய்கை!
நகைதரும் நகர்க, செல்க.
ஒன்றியிவ் வேழு நாளும்
உடனுறைந் துறவு கொண்டும்
அன்றிரு உணர்ச்சித் தாக்கம்
அடங்கலில்; கட்டுள் இல்லை.
வென்றிடும் புலன்கள் என்றால்
விலகிடா குறைகள்; காண்க!

முத்துக்கண்ணன்:

தாக்கிடு வேட்கை வீச்சுத்
தாங்கலில்; தடுத்தல் வேண்டா.
தீக்கிடை நெய்யிட் டென்னச்
சிந்தனை தீய்ந்திற் றாகும்;
நோக்கிடென் துயரந் தன்னை;
நுண்ணிடை நுகர்வே நன்மை.
[1]ஊக்கிடு முன்னர்ப் பின்னர்
உம்முரை எதையும் மீறேன்.

மணிமொழி:

சொன்னதை மீண்டு மீண்டுஞ்
சொல்லுவீர்; சூழ்வ தேறீர்.
என்னிவண் இணைந்தோம் என்ற
ஏதுவைத் தேர்வீர் ஆகில்,
உன்னிடீர் உடனே கூட;
ஒருநிலைப் படுப்பீர் ஐந்தை!
ஒன்றிரு குறையை முற்றாய்
ஒழித்தலே நிறைவாம்; கொள்க!

(நிலைமண்டில ஆசிரியப்பா)

காய்ந்த மாடு கம்பங் கொல்லை
மேய்ந்த தொப்ப மேல்விழுந் தலைவீர்!

1. ஊக்கு - கற்பி, எழுப்பு, முயல்.

அகல உழுதலின் ஆழ உழுவெனப்
புகல்வர்; பொய்யிலை, பொன்மொழி! போற்றுக.
சிலநொடிச் சேர்ப்பால் சேரா நிறைவு.
நிலவொளி என்றும் நிழற்றான்; பகலில்!
முயற்சியால் நினைத்த முடியும், நிலையா;
பயிற்சியால், பலகால் பயிலலால் இயலும்!
எதிர்முன் அமர்க; எண்ணுக உரைப்ப.
புதிருறை உறவிது; புரிந்து நானுரை
சொற்படி நடப்பின் துறக்கமொன் றிருப்பின்
உற்றிடும் உன்னுழை; உணர்வை, உண்மையே!

முத்துக்கண்ணன்:

(கொச்சகக் கலிப்பா)

ஓங்கியெழு வீங்குமிள தூங்குமுலை தாங்காத்
தீங்கு[1]மிடை ஏங்குமிடை [2]வாங்குநனி; தேறாய்!
பூங்குவளைத் தேங்குமது பொங்குமிதழ் ஊற்றில்
[3]நூங்குமனம் நீங்கு[4]மிசை ஈங்குநிலை ஓராய்.

பன்னாள் பசியால் படருறு வானெதிர்
தின்னாய் எனச்சொலித் தீங்கனி சேர்ப்பரோ?
முன்னால் [5]முகிழ்முலை, மொய்மலர்த் தோய்தடம்
நின்றால் எவரே நிறையுடை யாரே?

மணிமொழி:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

உடனிணைந் தின்பம் உண்டும்
 உடன்விலை ஈடாய்க் கொள்ளும்
மடனிறை மகளிர் என்ன
 மதித்திடல் என்ன என்னை?
இடனறிந் தொழுகற் கான
 இயல்பிழந் தின்னற் பட்ட
திடனிலாள், அதனால் அன்றோ
 செயற்கலா செயற்கொத் தேனே!

1. மிடை - மிகு, செறி, நிறை. 2. வாங்கு - வளைதல், மெலிதல். 3. நூங்கு - பெருமை. 4. இசை - புகழ். மிசை - சோறு, உணவு. 5. முகிழ்- அரும்பு, தோன்று.

(கலி விருத்தம்)

படுவுடன் படவுடல் படர்ந்தடர் கொடியெனத்
தொடு[1]மிடை தடமுலை, சுடுமிடை, தடையிலை;
தடுமுடை தளர்த்திடு, தணலெழத் தழுவிடு;
விடலரு மயல்தரு விளக்கரு புணர்ப்பிது!

இருவிரு, பொறுபொறு; இணைவுறு செயலறு.
[2]தெருளிறு திரளிதழ் தருநற விதுசுவை.
[3]இருணகு கருமுடி எழுநறு மணமுறு.
[4]பருவிரு [5]பொறை[6]பொரு அருநிறை திறலறு!

விடுவினை விரைவினை, மெலவெனை அணைபிணை!
கொடுவுன திதழிணை குனிநுனி குழைவுற.
நடுகட லெழுவிழு நளிரலை நடமென,
விடுவெடு; விழுவெழு; விழைந்திடு விளைவெடு!

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

தயிருறு மத்தின் தாழத்
    [7]தகைத்தலில் இன்பம் நீடும்;
உயர்ந்திழி உலக்கை வீச்சால்
    உற்றிடா; ஊறே கூடும்!
குயந்தமைக் குழைத்து நோகக்
    குலைத்திடல் ஆண்மை இல்லை;
நயந்தவை சுவைத்து நாவால்
    நனைந்திட நலன்கள் மேலாம்!

இயற்கையோ டியைய ஏற்ப
    இணைந்திடல் இனிய என்றும்!
இயற்றிடற் கெளிய வாக
    இருப்பநம் உறுப்பொவ் வொன்றும்.
கயிற்றிடைக் கூத்தை ஒத்துக்
    கலந்திடக் கருதல்! பல்கால்
பயிற்சியால் கூடும், ஆயின்
    பயனிலை; வலிதான் ஏயும்.

1. மிடை - நெருங்கிய, நிறைந்த. 2. தெருள் - அறிவு, ஞானம். 3. இருணகு - இருள் + நகு - இருளை ஒத்த. 4. பரு - பெருத்த. 5. பொறை - குன்று, மலை. 6. பொரு - மோது, ஒத்த. 7. தகைத்தல் - நெருங்குதல், சுற்றுதல்.

# காட்சி . 9

**இடம்** : விருந்தினர் இல்ல வெளிப் பூங்கா.

**காலம்** : மாலை மணி ஐந்து.

**உறுப்பினர்** : முத்துக்கண்ணன், மணிமொழி.

**சூழல்** : மர நிழலில் அமர்ந்து சிற்றுண்டி அருந்தியவாறு முத்துக்கண்ணன், மணிமொழி இருவரும் மெல்லப் பேசிக் கொண்டிருக்கின்றனர்.

மணிமொழி:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

இங்குநான் ஏற்ற வேலை
இனிதுடன் முடிந்த தாலே
தங்கலால் தொடர்ந்து மேலும்
பயனினும் சார்தற் கில்லை.
உங்களால் ஏலு மென்ற
உண்மையை உய்த்துக் கண்டீர்!
செங்கைவாண் முகத்தார் யாரும்
சேர்ந்திடத் தயங்கார்; பாரும்!

காதலே பெரிதென் றெண்ணிக்
கவலுதல் ஒழிக; காதல்
வேதனைக் கான வித்து;
விட்டிடின் வீழ்த்தும் வீட்டை!
ஈதலே சிறந்த தென்றும்;
இணையதற் கில்லை இன்றும்!
காதலே ஈத லாகக்
கருதுக; காலம் சொல்லும்!

முத்துக்கண்ணன்:

உண்மைதாம் உரைப்ப; ஆயின்,
  உள்வலி மறத்தற் காமா?
கண்களை இமைகள் காயும்
  காதலால் புன்மை கொண்டேன்!
[1]பெண்ணலாள் ஒருத்தி தன்னால்
  பித்தனாய்ச் சாவைச் சார்ந்தேன்;
பெண்களே கண்கள் என்ற
  பேறுமால் மீளப் பெற்றேன்.

மணிமொழி:

போனது போன தாக!
  புத்துற வினிநீர் கொள்க.
மானன மங்கை நல்லார்
  வாழ்விடை வருவர், போவர்;
[2]மானதாய் தந்தை தேர்ந்த
  [3]மகளினைத் துணையாய் ஏற்பின்
ஆனநற் பயன்கள் ஒன்றும்;
  அமைதியும் நிறைவும் என்றும்.

முத்துக்கண்ணன்:

கண்டதுங் காதல்! காணின்,
  கார்மழைப் பொழிவே; வேறென்?
உண்டிட மயக்கி, மிக்கில்
  ஊறிழை மதுவே, உன்னில்!
தண்டனை சரிதான் காதல்
  [4]தகவில கொண்ட தாலே.
கொண்டனிர் இரக்கம்; இன்றேல்,
  கூடிரா தும்முன் பேசல்!

மணிமொழி:

(வேறு)

காதல் என்றும் கசப்பில்லை;
  கருதின் அதனின் களிப்பில்லை.

1. பெண் + அலாள் - பெண் அல்லாள்: இடைக்குறை. 2. மானம் - பெருமை, அன்பு. 3. மகள் - பெண். 4. தகவு - பெருமை, தெளிவு, வலிமை.

தீதில் காதல், இருவரிடைத்
    தெளிந்த புரிவுத் திறமிருப்பின்!
ஈதல் காதற் கிலக்கணமாம்;
    ஏற்றத் தாழ்வோ எதிர்ப்பனவாம்.
நோதற் கில்லை காதலினால்,
    [1]நூறில் அன்பே முதலானால்!

வேண்டா உமக்கும் காதலினி;
    விழைக பெற்றோர் விரும்புவழி!
தூண்டா விளக்கு நீரில்லை;
    தொடர உடனோர் துணைதேவை.
ஈண்டார் எனினும் இயைந்தொன்றி
    இனிது வாழ உமக்கியலும்;
தீண்டாய் இனியும் என்போன்றார்
    தீதாம் தொடர்பைத் தெளிந்திடுக.

இப்போ தில்லை, எப்போதும்
    இருக்கா துமக்கோர் உடற்குறையும்.
தப்பே இதுநாள் நாம்கொண்ட
    தகவில் உறவும்; தவிர்த்திடுக.
அப்பால் விழையின் உடலின்பை
    அடைக உரிமை மனையிடத்தே!
ஒப்பார் யாரும் நம்தொடர்பை;
    உணர்ந்து மறைக்க வருநாளும்.

(கொச்சகக் கலிப்பா)

திங்களரை இன்றுவரை சேர்ந்துமிகத் துய்த்தோம்
உங்களிடை ஒன்றுகுறை ஒன்றுமிலை கண்டோம்
தங்கியினிச் செய்யவெனச் சாலவெதும் இல்லை
தங்குதடை இன்றியிடைத் தந்துவிடை கொள்க!

முத்துக்கண்ணன்:

(கலி விருத்தம்)

இலையிலை, சரியிலை இடரளி பிரிவினை!
உலைவரு பொழுதெவர் உருவுவர் எரியினை?

1. நூறுதல் - அழித்தல்.

உலைவுறும் உயிர்நிலை; உறுதுயர் உணர்ந்திலை!
குலையறும் தலைதெறும் குறையுரை அறைந்தனை!

எனையொரு துரும்பென எண்ணினை, இரங்கலை;
நினையொரு பிணையென நிழலெனத் தொடர்வனை
நினையிலை; துயர்மிக நிறைந்திட இயைந்தனை!
வினையது விளைவிது; விளங்கிடும் விட்டிடு!

மணிமொழி:

(நேரிசை ஆசிரியப்பா)

பெருநோய் உடையன் பித்தன் எனினும்
பொருணனி வருமெனில் புணர்ந்துடன் இருக்கப்
பொதுமகள் நானில்; புரியும் உமக்கே!
பொதுவாய் நம்மிடைப் பொருந்திய நண்பன்
தொழுதும் இரந்தும் தொல்லை தந்திட
வழுவென் றறிந்தும் வந்தேன் உதவிட.
மற்றது வன்றி வெற்றென வாழ்நான்
உற்றதும் வேறில்; உணர்க மீண்டும்.
மருந்தாய் வந்தேன்; அருந்தினை, தெளிந்தனை;
பொருந்தா மருந்தைப் [1]போதும் அருந்தல்!
விருந்தும் மருந்தும் வேதனை நீண்டிடின்!
தெரிந்தும் நீடல் தீமையே; தெளிக.
தடுத்தல் தவிர்க; தவறாம்.
அடுத்த கொளலே அறிவோர்க் கழகே.

முத்துக்கண்ணன்:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

[2]செற்றனன் என்ன முற்றும்
சிந்தனை சற்றும் இன்றிப்
பற்றிலன் ஆகச் சாவைப்
பற்றிடற் கான என்னை
உற்றுயிர் தழைக்கச் செய்தாய்;
மற்றிதின் உயர்வும் உண்டோ?
குற்றமென் இழைத்தேன்? இன்னுங்
கொஞ்சநாள் இருந்தால் என்ன?

1. போதும் - பொழுதும்: மரூஉ. 2. செற்றனன் - கொல்லப்பட்டவன்.

மணிமொழி:

(தரவு கொச்சகக் கலிப்பா)

விளங்கமிக விரித்துரைத்தும் விழைந்திடுவாய் இழிபினையே.
[1]துளங்கிடலென்? தொடர்பினியும் தொடர்ந்திடிலோ துயர்விளையும்;
களங்கமெனக் கமைந்திடினும் கலக்கமிலை; கறையுடையாள்!
உளங்கனிந்த அருணிறைந்த உயருமக்கும் குறையெதற்கு?

தவறிழைத்தீர் எனவறிந்தால் தாய்தந்தை கவன்றிடுவார்!
அவமடையும்; அடையாரே அறிந்தாரும் அறிவாரேல்;
உவகையளி உடலுறவால் உறுவின்பம் உயர்வில்லை;
எவரெதிரும் தலைதாழா திருந்திடலே இனிதுமக்காம்!

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

கன்றென ஒன்றி நின்றோய்,
கறையுமைக் கூடற் கொவ்வேன்!
புன்றொழில் புரிந்தாள் கூட்டால்
போகுமுன் புகழ்தான்; போதும்.
இன்றொடு முடிக யாவும்;
எனைவிடும், இழிவாம்; சென்று
மன்றலில் நின்று பெற்றோர்
மகிழவில் லறத்தைக் கொள்க!

முத்துக்கண்ணன்:

(பஃறொடை வெண்பா)

என்னோடு நீரிங் கிருந்திட்ட நாட்களெல்லாம்
பொன்னாளாம் என்றனுக்குப் பொய்யில்லை; - உன்னீரே!
நீரோ டினிப்பென நீக்கமற நெஞ்சிருந்தும்
யாரோ எவரோபோல் ஏனடப்பீர்? - நேராமோ?
சேர்ந்தசின் னாட்குள்ளே தேர்ந்தநின் இன்னுறவால்
பேர்ந்த பிணியோடு பேதைமையும் - ஓர்ந்திடுக.
சொல்லித் தெரிதலில்லாச் சூதில் உடலுறவை
ஒல்லை உணர்ந்ததும் உம்மாலே - இல்லையெனீர்!
கண்ணிருந்துங் காணாது காலிடற வீழ்ந்தவெனை

1. துளங்கல் - நிலை கலங்கல், வருந்துதல்.

மண்ணில் ஒருமகனாய் மாற்றியதார்? - விண்ணிலிழி
மின்னாய் ஒளியூட்டி மீளேன் அகல்வனெனின்
என்னாமென் வாழ்வும் இனி?

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

நீங்கலென் அதற்குள்? வேண்டா;
நீரிரும் விடுப்பு மட்டேல்!
தாங்கரு மனத்துக் காமம்
தணிந்திடா; தகிக்கும், தீய்க்கும்.
தீங்கறு குணத்தை உம்மைப்
பிரிந்திடின் சிதைதல் திண்ணம்!
ஏங்குறு மடியேற் காக
இரங்கியிங் கிருத்தல் வேண்டும்.

[1]பள்ளியோ, பணியோ நாட்கள்
பலவுள இடையில் செல்ல.
[2]பள்ளியில் பழகற் கேற்பப்
பயிற்றுவீர் பாடஞ் சொல்லி!
உள்ளிடும்; உயர்ந்த நீரோ
உதறுவீர் உணரான் என்னைக்
[3]கள்ளிரு மலராம் நீர்தான்
கருதிடீர் கசப்பைக் கூட்ட!

1. பள்ளி - பள்ளிக்கூடம், பயிலிடம். 2. பள்ளி - படுக்கை. 3. கள் - தேன், வண்டு.

# காட்சி . 10

**இடம்** : வேலன் வீட்டு முன் கூடம்.
**காலம்** : ஞாயிறு காலை மணி பத்து.
**உறுப்பினர்** : வேலன், மனைவி வள்ளி.
**சூழல்** : வேலன் நாளிதழ் ஒன்றில் மூழ்கி இருக்க, அவன் துணைவி வள்ளி வந்து அருகில் அமர்கிறாள்.

வள்ளி:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

திங்களி ரண்டும் தேய்ந்த;
திரும்பலில் மணியென் தோழி!
எங்கவள் சென்றாள்? இன்றும்
ஏனவள் தொடர்பு கொள்ளாள்?
உங்கட்கிங் குணர்த்தல் இன்றி
ஒழிந்திடாள்; உண்மை சொல்க.
இங்கவள் பணிசெய் பள்ளி
திறந்திடும் இரண்டு நாளில்!

வேலன்:

ஒவ்வொரு நாளுங் காலை
ஒழிவிலா திதையே கேட்பாய்!
எவ்வகைப் புதிதாய் மாற்றாய்
இயம்பிட இயலும் என்னால்?
செவ்வியர், தேவை இன்றிச்
சென்றிரார்; திரும்பச் சேர்வார்.
கவ்விய துயரம் நீங்கு;
காலையே வரலுங் கூடும்.

வள்ளி:

(கலி வெண்பா)

கோடை விடுமுறையா? கூடிக் குலவியுடு
ஆடையென என்னோ டகலா திருப்பாளே!
தேடக் கிடைத்தலிலாத் தெள்ளமு தன்னவட்டான்
வாட எனைவிட்டு வாய்த்தவிடம் எவ்விடமோ?
செல்லாளே எந்நாளும் சேரிடத்தைச் செப்பாது!
நல்லாள் அவட்கேதும் பொல்லா நடந்தனவோ?

வேலன்:

அஞ்சல் எதற்காக? அண்டா தவர்க்கெதுவும்!
வஞ்சனை நெஞ்சிலிலா வன்மைத் திறனுடையார்!
ஊரிலிரு தாய்தந்தை உற்றார் உறவினர்க்குத்
தீரவரு தீநேர்வு சேர்ந்தனவோ? யாரறிவார்?

வள்ளி:

சொந்தமென ஈராண்டாய்ச் சூழ்ந்தார் எவருமில்லை;
தந்தைதாய்ப் பார்க்கவெனத் தானுமிவள் சென்றதில்லை.
என்ன நிகழ்ந்ததென் றியார்க்கும் உரைத்தலற்றுச்
சென்றிட்டாள்? செய்தி தெரிந்திருக்கும்; சொல்லிடுக.

வேலன்:

இத்தனை நாள்பொறுத்தாய்; இன்னுமிரு நாள்பொறுக்க!
பித்தென நாளுமுன்னைப் பேசிட வைத்தவரும்
[1]நத்தி யுனைநாடி நாளிரண்டுள் வந்திடுவார்.
குத்துக்கற் போலவிக் கூடத்தில் காலைமுதல்
காத்திருப்பேன் உண்ணற்குக் காண்பாயில்; கண்ணேயுன்
வாய்த்த மணவாளன் வாட்டம் புரியலையே!
என்றோ உரைக்கா திருக்குமிடம் கூறாது
சென்றாரை உள்ளெண்ணிச் சேர்ந்தார் பசியாற்றாப்
பெண்ணுன் பெருநட்புப் பேசற் குரித்தாகும்!
எண்ணின் [2]இறும்பூ தெனக்கு,

1. நத்தி - விரும்பி. 2. இறும்பூது - வியப்பு, பெருமை.

# காட்சி . 11

**இடம்** : ஏர்க்காடு - விருந்தினர் இல்லப் பூங்கா.
**காலம்** : முன்மாலைப் பொழுது.
**உறுப்பினர்** : முத்துக்கண்ணன், மணிமொழி.
**சூழல்** : பூங்காவில் இருவரும் உலவியவாறு பேசிக் கொண்டிருக்கின்றனர்.

மணிமொழி:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

தேனிறை முல்லை சிந்தத்
திரிவரி வண்டு மாந்தும்!
கானுறை [1]நவ்வி கொண்ட
காதலால் [2]கலையை நோக்கும்!
பானிலா பகலாய்க் காயப்
பனியெனத் தழுவுந் தென்றல்!
வேனிலா? இல்லை, தண்ணென்
விடியலாம்; வேட்கை நீளும்!

முத்துக்கண்ணன்:

உண்மையே! உயிரே உன்னால்
ஒண்ணெழில் உண்ணல் ஆனேன்.
அண்மையில் அழகி ருந்தும்
அறிந்திடாப் புன்மை என்னே!
பெண்மையின் அழகாம் ஏதும்
பிறந்ததில்; பிழையில் சொல்லில்!
[3]எண்மையில், இயல்பில், நாண
எழிலினில் இணைதாம் உண்டோ!

1. நவ்வி - பெண்மான். 2. கலை - ஆண் மான். 3. எண்மை - எளிமை.

மணிமொழி:

இன்றொரு நாளே நம்முள்
  இனித்திரு உறவிற் கீறாம்.
குன்றிடு செயல்தான்; ஆனால்,
  குறையிலை; நிறைவே, மேலாம்!
நன்றதே நடந்த தாக,
  நம்புவன்; நானும் நாணேன்.
ஒன்றிய துயிர்ப்பும் உள்ளுள்;
  உண்மைதான்; உள்ளில் கள்ளம்!

சொற்றுணைக் கொருவர் இன்றிச்
  சொந்தமும் நெருங்கல் குன்றிப்
பற்றெதும் பற்றல் அற்றுப்
  பழியினுக் கச்சம் உற்றுச்
செற்றனள் என்ன வாழ்ந்தேன்;
  சேர்ந்தனை, உயிர்ப்பும் சேர்த்தாய்!
வெற்றுரை அன்று சற்றும்;
  மீண்டது வாழ்வில் பற்றும்.

ஒருசில நாட்கள் மட்டும்
  ஒருவனோ டுற்ற கூட்டம்
பொருளிலாச் சொற்கள் கூட்டும்
  புன்மையாய்ப் போன தன்றே!
இருளிறு மின்னல் ஏய்ப்ப
  இயைந்தவும் உறவால் உண்மைப்
பொருளினைப் புரிந்து கொண்டேன்!
  பொய்யிலை; நிறைவே! மெய்யே!

முத்துக்கண்ணன்:

(நேரிசை வெண்பா)

நின்னினெனக் கியாருண்டு? நீயிலாது நானில்லை!
சொன்ன அவட்சொற்றான் சூதுடைத்(து) - அன்றறியேன்.
கன்னல் கசக்காது; காதலும் அஃதென்றே
உன்னிமுன் உற்றேன் [1]உயவு!

1. உயவு - துன்பம், வருத்தம்.

(பஃறொடை வெண்பா)

நீரின்றி மெய்யில்லை, நீரெனக்கே; பொய்யில்லை!
யாரென்ன கூறிடினும் என்னெனக்கு நேரிடினும்
என்றும் உனைப்பிரியேன் என்றாள் எனையிகழ்ந்து
சென்ற தெதற்காகச் சேரற் குடற்றகுதி
இல்லையிவற் கென்ற இழிநினைப்பால்! எண்ணிடிலோ,
நல்லதில்லை காதல்; நகைப்பு!

மணிமொழி:

(கலி வெண்பா)

ஆடையிலா தோராணை ஆரத் தழுவிப்பின்
கூடற் கியலையெனக் கூறிப் பிரிந்தேகல்
காதற்கு மட்டுமில்லை, கற்பிற்கும் ஆகாது.
தீததுதான்; என்றாலும் தேரின் தெளிவுவரும்.
காதலெதால்? காணும் கவர்ச்சிதரு பாலுணர்வால்!
ஈதலிலை என்றால் இருந்துறைந் தியாதுபயன்?
இன்பமே எவ்வுயிர்க்கும் இன்னாட்டம்; மற்றபினே!
இன்ப நுகர்விற் கியைவ பொருளாகும்;
அப்பொருளை ஆக்கல் அறவழியில்; ஆய்ந்துணர்க.
ஒப்பிடுவீர் என்றிங் குரைப்பனில்லை; உண்மையதே!
ஒன்றா துடலுற வும்மோ டொருமகட்கும்
என்றால் எதுவிருந்தும் யார்மணப்பர்? யார்புணர்வர்?
காதலித்தார், கூடற்கில்; கைத்துப் பிரிந்தகன்றார்!
நோதல் அவரையென்? நோக்கு.

முத்துக்கண்ணன்:

(இன்னிசை வெண்பா)

சொல்லனைத்தும் ஓரளவு நல்லதென்றே சூழ்ந்திடினும்
அல்லலுறும் உள்ளம்; அமைதி அடைதலில்லை.
கல்லுக்குள் ஈரமுண்டே; காதற் கிருக்காதா?
[1]புல்லுதற்கோ காதல்? [2]புகல்!

மணிமொழி:

உள்ளப் புணர்ச்சியினும் உற்றாழ் புணர்ச்சியிற்றான்

1. புல்லுதல் - அணைத்தல், புணர்தல். 2. புகல் - சொல்.

கொள்ளும் உளநிறைவு; கூடும்நீள் காதலுமே!
பள்ளம் படர்நீர்போல் பாலுணர்வே எஞ்ஞான்றும்
உள்ளும் உடல்சேர் உறவு.

இறுதிவரை ஒன்றாய் இணைந்தினிது வாழ,
உறுதி பயப்பதிங் கொத்த உடலுறவே!
நித்தம் மணமுறிவு நேர்வ கணக்கற்ற;
ஒத்த உடலுறவே [1]ஊற்று.

முத்துக்கண்ணன்:

ஒருவற் கொருத்தி, ஒருத்திக் கொருவன்;
அருந்தமிழ் நாட்டுப் பெருவழக் காகும்.
பொருந்துமா என்று புணர்ந்துமுன் னாய்தல்
பொருந்துமா? காதற்குப் புண்.

மணிமொழி:

(தரவு கொச்சகக் கலிப்பா)

காதலித்தல் அவமன்று; [2]கைப்பிணையல்; தவறாகும்.
தீதணுகா அன்பென்றும் சேர்ந்திடலே திருவாகும்.
ஏதமிலா இல்வாழ்க்கை எப்போதா? இறுதிவரை
கோதில்லா உடலுறவு கூடுமெனில்; குறையேது.

(இன்னிசை வெண்பா)

ஆண்மை அறியாய்வு தேவையென ஆர்வலர்தாம்
கேண்மைமிகக் கேட்டிடுவர்; கீழ்மையிலை மேன்மையதாம்!
இன்பே உயிர்நாட்டம் எவ்வுயிர்க்கும் என்பதனால்
புன்மையிலை; வேண்டும் புரிவு.

முத்துக்கண்ணன்:

என்னீர் உரைத்தென்ன? ஏலேன் இறையளவும்.
மன்னா உடலுறவோ மாண்பாம் உளப்புணர்ப்பின்?
என்னை அவள்நினைப் பெந்நாளும் ஏகாதே.
கொன்னே கழிகாதல் கூற்று!

1. ஊற்று - ஊன்றுகொல், ஆதரவு, பற்றுக்கோடு. 2. கைப்பிணையல் - கைப்பு + இணையல்.

மணிமொழி:

இன்னலுடற் கென்றால் இனிப்பைத் தவிர்ப்போமே!
உன்னலத்திற் கூறா? ஒதுக்கிடுக காதலையும்!
ஒன்னலர்க்கும் ஊறெண்ணா உன்றனுக் குற்றதுயர்
நன்றெனவே நான்சொல்வேன் நம்பு.

காதற் கடிப்படையே காமந்தான்; யார்வாழ்வும்
தோய்தற் கிடமிலையேல் தோற்றுவிடும்; காதலுந்தான்!
என்ன இருந்தென்ன? இன்ப நுகர்விலையேல்
இன்னற்றான் இல்வாழ்வும்; எண்.

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

மணமுனம் முடியக் கொள்ளும்
[1]மயக்கமே எவர்க்கும் ஒக்கும்!
புணரிடை இடரென் றாலும்
பொழுதிற வழியுண் டாகும்.
பணையள வெனினும் இன்று
பண்டுவம் உண்டு போக்க!
இணரெரி காமம்! நீர்க்க,
இயன்றவர் இனிது வாழ்வர்!

முத்துக்கண்ணன்:

(நேரிசை ஆசிரியப்பா)

காதல்! காதல்! காதல் இலையேல்
சாதல்! சாதல்! சாற்றினர், மெய்யே!
காதலால் கவலை நீங்கும்; காதலால்
சாதலும் சாரா; சரியா? பொய்யே!
என்னது காதல்? யானினும் உணரேன்.
இன்னற் கிருப்பிடம்; இழித்திடு மாயை!
மனத்தை மருட்டும் இருட்டு; மாந்த
இனத்திற் கான இழுக்குச் சொன்னால்!
வேதனை அன்றி வேறென்
ஆதல் அதனால்? அறைக தெளிந்தே.

1. மயக்கம் - கூட்டம், புணர்ப்பு.

மணிமொழி:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

உறவுணர் தென்றற் காற்றை
ஒண்கணால் உண்ணல் உண்டோ?
நறுமணம் முகர்தல் அன்றி
நன்றென அறிதல் ஆமோ?
அறுசுவை நுகர்தல் இன்றி
அறிந்திடற் குருதாம் உண்டோ?
கறையிலாக் காதல் அவ்வே!
காண்டலில்; கனியும் உள்ளே!

அகத்துறு புணர்ப்பே காதல்;
ஆயின்மெய்ப் புணர்ப்புக் கூடேல்,
அகத்திரு பாலர் கூடி
இல்லறம் ஆற்றல் ஏலா!
மிகுத்திடும் கள்ளக் காதல்!
மேலதன் முறிவும் சாவும்.
நுகத்தடி மெய்ப்பு ணர்ச்சி;
நொறுங்கிடில் விளைவு வீழ்ச்சி!

முத்துக்கண்ணன்:

கொண்டிடேன் உன்றன் கூற்றைக்
குறையில தென்றும் அன்பே!
கண்டிடு கலவி இன்பம்
கணமிறும்; அன்போ நீளும்.
வண்டுணும் அளவே காமம்;
வழிவரு மணமே காதல்!
பண்டிலை; இன்றும் என்றும்
பண்பளி அன்பே ஒன்றும்!

மணிமொழி:

ஒப்புவன்; அன்பே உண்மை!
ஓர்ந்திடாய் ஆனால் சொன்ன.
செப்பிடு, ஆண்பெண் ஒன்றாய்ச்
சேர்ந்திடில் வாழ்விற் கான

துய்ப்பிலை ஆமேல், அன்பால்
தொடர்ந்திடல் ஆமோ? சொல்க.
கொப்பிழி பிஞ்சு போலாம்
கூடலில் குடும்ப வாழ்க்கை!

கடனெலாம் பெற்றும் பெற்றோர்
காண்பதென் திரும ணத்தை?
இடரிலா தின்பம் மாந்தி
ஈவர்கால் வழியென் றன்றோ!
உடலுற வியலல் இன்றேல்,
உறுபயன் எவர்க்கென் னுண்டாம்?
உடனுறை இணையோர்க் கென்றும்
உயரிரு புணர்ப்பும் வேண்டும்.

முத்துக்கண்ணன்:

(வேறு)

கண்ட தில்லை முன்னருன்னைக்
கண்ட துன்னால் மீட்பிறப்பும்!
பண்டு கொண்ட காதலினால்
பட்டி டற்கே போனவன்நான்!
மண்டு துயரால் மாலுற்று
மனந்தி ரிந்து நின்றவெற்குத்
தொண்டு மனத்துத் தூயவருன்
தோள்க ளன்றோ துணைநின்ற!

# காட்சி . 12

**இடம்** : முத்துக்கண்ணனின் இல்ல மாடித் தளம்.
**காலம்** : முன்னிராப் பொழுது.
**உறுப்பினர்** : வேலன், முத்துக்கண்ணன்.
**சூழல்** : மாடி மேல் தோட்டத்தில் இருவரும் பேசிக் கொண்டிருக்கின்றனர்.

வேலன்:

(கலி வெண்பா)

என்ன நடந்ததென இன்னே வருகவென
என்னை அழைத்ததும்? என்நண்ப சொல்லிடுக.
வந்த உடன்பேச வாய்ப்புப் பலவிருந்தும்
எந்தக் கரணியத்தால் இன்னும் தவிர்த்திடுவாய்?
வற்புறுத்தி இங்கு வரவழைத்தும் மௌனமதாய்
நிற்கின்றாய்; என்ன நிகழ்ந்ததுவும்? நீசொல்க.

முத்துக்கண்ணன்:

பெற்றோர் எனக்காகப் பெண்பேசி வைத்துள்ளார்.
உற்றார் உறவினர் உன்னை உடன்கொண்டு
சென்று மணநாளைச் சேர்ந்து முடிவுசெய
ஒன்றி முடிவெடுத்தார்; ஓராரென் னுள்ளாசை!

வேலன்:

சேர்ந்ததுமே இன்றாயர் செய்தியெலாம் கூறிட்டார்.
தேர்ந்த துணையவராம்; சேரற் கினியரென்றார்!
கல்வி அகவை கவினொடு நல்லொழுக்கம்
நல்ல குலப்பெருமை நன்றுமிக கொண்டவராம்.

சொந்த மெனமேலும் சொல்லிட்டார்; சூதில்லை!
எந்தக் குறையுமிலை, ஏற்றிடுக; ஏன்தயக்கம்?
எல்லார்க்கும் எல்லாமும் என்றும் இயைவதில்லை;
நல்லாறு கொண்டிடுதல் நன்று.

முத்துக்கண்ணன்:

(கலித்துறை)

நானு மிகநன் கறிவேன்நவை இல்லை; நன்றே!
தேனு மெதிர்நிற் றலிலாத்தீ மொழியார் சேர்ந்தென்
ஊனுள் உயிராய் உயிர்ப்பிற்குறு காலாய் ஊணாய்த்
தானுள் இருக்கத் தவிர்த்துப்பிற பெண்ணா? தாளேன்.

வேலன்:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

என்னநீ சொல்வாய் இங்கும்?
எனக்கெதும் விளங்கல் இல்லை.
உன்னையே உயிராய் ஓம்பும்
உன்னரு பெற்றோர் உன்றன்
நன்னிலை எண்ணி நல்லோர்
நங்கையைத் தேர்வர்; நீயோ
இன்னலை இயைத்தார் தன்னை
எண்ணுவை; நன்றோ? என்னை!

பட்டது போதும்; மேலும்
பட்டிட எண்ணல் பண்பா?
விட்டிலா? மீண்டும் தீயில்
விழுந்திட விழைவாய்; வேண்டா.
விட்டிடு விரும்பார் தன்னை;
விழைந்திடு பெற்றோர் வேட்ப.
திட்டினார், அகன்று சென்றார்;
திரும்பவும் நேரார், ஒன்றார்.

முத்துக்கண்ணன்:

அரைகுறை யாக என்சொல்
அறிந்தனை; தவறு நண்ப.

புரையுறை உடலான் என்றே
  போயினர்; தவறா? சொல்க.
புரையுறத் திரியும் பாற்றான்
  புகழ்நலம் மீளற் குண்டா?
தரைவிரி கானல் அன்னார்
  தகவிலர் தணிக்க வேட்கை!

வேலன்:

விடுகதை வேண்டா வீணாய்;
  விளக்கிடு மனத்துக் கொண்ட.
கடுமுனம் உண்டற் கான
  காதலை மறவேன் இன்றும்!
விடுபடப் பழியாய்ச் சூழ்ந்த
  வினையெனை நின்று கொல்லும்!
நடுவிகந் தியைந்தும் மற்றோர்
  நங்கையா? நகைப்பே! சொல்க.

முத்துக்கண்ணன்:

(கலித்துறை)

மானோ? மயிலோ? மறுவில்மதி தானோ? மாறாய்
மீனோ? மணியோ? மிரட்டும்மிருள் மின்னல் தானோ?
ஏனோ பொழுதும் இருந்துள்மிகு இன்னல் ஈவார்;
நானோ நலிவேன் நகைப்பிற்குறு நாயாய்! நன்றோ?

(தரவு கொச்சகக் கலிப்பா)

பருந்துமுயர் பறக்கலிலாப் பரல்தெறிக்க அனல்பறக்கும்
அருஞ்சுரத்து நிழல்மரமாய் அடைந்தவர்தம் அயர்வொழித்தும்
விருந்தெனவே கனியினிய விழையுமள வுணவளித்தும்
அருள்சுரக்க அமைந்ததுபோல் அணைந்தவரை மறந்திடலோ?

வேலன்:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

உன்மனக் கோட்டம் தன்னை
  உணருவன்; தவறே! எண்ணாய்.

உன்னையே உயிராய், ஊற்றாய்
உடனிரு தந்தை தாய்க்குத்
தன்னையே தருதல் வேண்டா;
சாந்துணைச் சார்பாய் நின்று,
நன்மையை நாடல் அன்றோ
நல்லொரு மகற்கு நன்றாம்!

முத்துக்கண்ணன்:

என்னலம் என்றும் வேட்கும்
இனியவுன் கருத்தை ஏற்பேன்.
தன்னலம் சிறிதும் இல்லார்,
தன்னையே தந்த நல்லார்!
அன்பினில் அன்னை அன்னார்;
அருளளில் [1]என்னை; இன்னர்!
கன்னலும் இன்னல் கூட்டும்;
கனிவொன்றே இவரால் கிட்டும்!

ஏதிலன் எனினும் என்னை
இனியவுன் நண்பன் என்ற
தோதினால், கொண்ட தூய
தோழமை மிக்க அன்பால்,
தீதெனத் தெரிந்தும் சேர்ந்தென்
சிறுமையைத் தெளிய வைத்தார்!
மாதவர் இல்லை என்றேல்,
மாந்தனாய் நிற்றல் இன்றே!

வேலன்:

பேசிடற் கொன்றும் இல்லேன்,
பேதைமைத் துன்றன் பேச்சும்!
கூசிடற் குரித்து, நண்ப!
கொளற்கிலை, குற்றம் முற்றும்!
மாசிலா மனத்தர்; மாறாய்,
மறுவுடல்! மணத்தற் காகார்.
தூசுடை ஆடி இல்லை,
துடைத்துடன் அணியக் கண்ணில்!

1. என்னை - என் + ஐ - என் தந்தை.

முத்துக்கண்ணன்:

[1]அறிவுன துரையை ஏற்கும்;
அகமதை வெறுக்கும், ஆமாம்!
வெறியெனச் சொலலாம், வேட்கை
விளைதுயர் விரட்டும்; [2]வீட்டும்.
பிறரெதுங் கொளட்டும்; பேறாம்
பெண்ணவர் பிரிவைத் தாங்கேன்.
செறிவமை நலத்துச் செல்வி
சேரலேல், வாழ்க்கை இல்லை.

கடலன காதல் நெஞ்சில்
கரைந்தது; கரைகாண் கில்லேன்.
விடலரு வேட்கை தன்னால்
மிகுந்தது; மீளற் கில்லேன்.
இடனறிந் துதவு நண்ப,
இப்போதும் நீயே எல்லாம்!
உடனெனக் குற்ற செய்க;
உய்தல்நான் உன்னால்; உன்க.

தன்னையே தனக்கு நேரார்
சாந்துணை துணையாய் வேண்டும்.
என்னைநீ செய்வாய் என்றே
எனக்கெதும் தெரியல் வேண்டா;
உன்னையே உறவாய் உள்ளேன்!
உனையலால் உதவற் கில்லேன்.
அன்னையோ டத்தன் என்றன்
ஆசைக்குத் தடையாய் ஒன்றார்.

வேலன்:

(நேரிசை வெண்பா)

கல்லினைப் பூட்டிக் கடலுள் இறக்குதற்போல்
சொல்லினைக் கூட்டித் துயரளிப்பாய் - நல்லதுவோ?
அல்லலெனக் காகினுமுன் னாசை அரங்கேற
ஒல்லுமேல் செய்வேன் உடன்.

1. அறிவுனது - அறிவு + உனது : தொகுத்தல். 2. வீட்டுதல் - அழித்தல், கொல்லுதல்.

## காட்சி . 13

**இடம்** : வேலன் வீட்டு முன் கூடம்.
**காலம்** : காலை மணி எட்டு.
**உறுப்பினர்** : மணிமொழி, வேலன், வள்ளி.
**சூழல்** : வேலனும் மணிமொழியும் எதிரெதிர் நின்று பேசிக் கொண்டிருக்கின்றனர்.

மணிமொழி:

(கலி வெண்பா)

நல்லனா நீயெனக்கும்? நன்றியிலா தேனவர்க்கென்
செல்லிடப் பேசியெணைச் சேர்த்திட்டாய்? - சொல்லெனக்கே.
முன்னரே சொன்னேனே; முட்டாளா? ஏன்மொழிந்தாய்?
இன்னலெனக் குன்னால்! இனிதாமோ? - புன்மையதே.

(வேலன் மனைவி வள்ளி உள்ளிருந்து தேநீரோடு அங்கே வருகிறார்.)

வள்ளி:

என்னமணி, என்ன? எதற்கிங்கு வந்தவுடன்
என்னவரைத் திட்டுகிறாய்? என்செய்தார்? - உன்வரையில்
நில்லெனநீ கூறின் நிழலாய்த் தொடர்வதலால்
அல்லல் உனக்கமைய ஆற்றாரே? - நல்லவரே!

மணிமொழி:

வேண்டா எனவுரைத்தும் வேண்டுமென்றே பேசியெணை
வேண்டார்க் களித்தவனை மெச்சிடவோ?

வள்ளி:

- வேண்டாரா?
யார்க்குந் தெரியா திருமாதம் சேர்ந்தொன்றாய்
ஏர்க்காட்டில் உன்னோ டிருந்தவரா? - வேர்க்கிறதென்?
எல்லாம் அறிவள்நான்; என்னிடத் தேன்மறைத்தாய்?
பொல்லாங்கு முன்னுற்றாய்; போதாதா? - சொல்வேன்கேள்!
பட்ட பழிபோகப் பாதை எதிர்தெரியும்;
எட்டியிசைந் தேகல் இனிது.

(வள்ளி தேநீர்த் தட்டை எதிர் நீட்ட, இருவரும் பெற்று அமர்ந்து அருந்துகின்றனர்.)

வேலன்:

(தரவு கொச்சகக் கலிப்பா)

குற்றமெலாம் எனதேயாம்; குழப்பத்தில் கொடுத்திட்டேன்.
உற்றவிரு உறவினர்க்கிங் குதவுவதாய் உணர்ந்ததனால்,
மற்றவற்றை மறந்திட்டேன்; மணிமொழிநீ பொறுத்திடுக.
முற்றவெலாம் அறிந்தவுனால் முடிவுகொளல் அரிதிலையே!

மணிமொழி:

(இன்னிசை வெண்பா)

தோழனென்பார் தோட்கொடுப்பார்; தொல்லையுனால் சொல்லலிலா!
வாழுநெறி மீறியதால் வாடிடுவேன்; மேலுமெனைக்
கேழலெனச் சாய்க்கடையில் கேடுறற்கே ஊக்கிடுவாய்;
வீழலிலை, விட்டிடுக; வீண்.

கடந்தவிரு நாளாய்க் கணமுமிடை இன்றித்
தொடர்ந்து தொலைப்பேசித் தொல்லையதால் தூக்கமில்லை;
நல்லதையுன் நண்பர்க்கு நானெடுத்து நாட்டுதலின்
நல்லது நீநவிலல்; நம்பு.

வள்ளி:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

உருகுவர் உனையே உன்னி;
உலவுவர் வெறிதே; உண்ணீ!

[1]வெருவுறல் அவரை யாதோ?
விழைகுவர் துணையாய்த் தீதோ?
அருகவர் இருந்தாள் தானே?
அறியாயோ அவரின் ஆசை!
வருமெதிர் வாழ்க்கை தேடி;
மகிழ்ந்திடு வணங்கிக் கூடி.

மணிமொழி:

(இன்னிசை வெண்பா)

பருவத்துப் பாலுணர்வால் [2]பான்மையிலா மேற்கொண்(டு)
அருவருப்பிற் காளானேன்; ஆயினுமென்? மீளதுபோற்
குற்றம் இழைத்ததனால் கூசிக் குறுகிடுவேன்;
பற்றிடுமே நெஞ்சைப் [3]படர்.

பட்டது போதும்; பழியெதற்கு மேன்மேலும்!
விட்டிடச்சொல்; ஏதும் விருப்பமிலை என்றனுக்கே!
குட்டிச் சுவர்நான்; குடியிருக்கக் கூடாதாள்;
எட்டி யவரிருத்தல் இன்பு.

வேலன்:

எல்லாம் அறிந்திருந்தும் யானெடுத்துக் கூறிடினும்
நல்லான் அவன்கொள்ளான்; நாட்டமெலாம் உன்னிடத்தே!
காலை கதவருகே காத்திருந்தான் இன்றென்றால்,
மேலையென் செய்யான் மிகுத்து!

மணிமொழி:

(கலி வெண்பா)

என்ன? அவரிங்கா? ஏனெதற் கிங்குவந்தார்?
என்னிடம் பேசுகையில் ஏதும் சொலலிலையே!

வள்ளி:

செல்லிடப் பேசி செயலிழக்கச் செய்ததன்பின்,
சொல்லுதல் எப்படியாம்? சொல்க; அவரிடம்நீ

1. வெரு - அச்சம். 2. பான்மை - குணம், தகுதி, முறைமை, சிறப்பு. 3. படர் - வருத்தம், நோய், நினைவு.

பேச மறுத்ததனால் பேதுற் றிராமுற்றும்
நேசத்தால் தூங்கலற்று நேரேயிங் குற்றார்!

மணிமொழி:

விடாது குரலெழுப்பின் வேறென்யான் செய்ய?
அடாத செயற்கிங் கடிபணிவள் நானில்லை!
ஒல்லா துறவென் றுரைத்திடுவுன் நண்பர்க்கே.

வேலன்:

சொல்லா திருப்பேனோ? சூழானென் சொல்லை.
விளக்கினையே நச்சிவிழு விட்டிலென உன்கண்
அளக்கரு ஆசை அவற்கதனால் ஆருரையும்
செல்லா செவியருகும்; செய்யா றறியேன்நான்.
சொல்லா தெதிர்வந்து சோர்வாய்முன் நிற்பானை
வாவென் றழையாது வாயடங்கக் கூடுவதோ?
ஆவயினி யாவும் அறிக உனதிடத்தே!
சற்றைக்குள் இங்கெதிரே சார்ந்திடுவான்; நீயதற்குள்
உற்றவற்றை ஓர்தல் உயர்வு.

மணிமொழி:

(தரவு கொச்சகக் கலிப்பா)

குற்றமுனம் இழைத்ததனால் குறுகிமனம் மறுகிடவும்
பற்றிகந்து தனித்திருந்தேன்; பழிபடர வழிவகுத்தாய்!
மற்றவர்முன் நானெதற்கு மறுத்துரைத்து வருத்திடலும்?
கற்றவன்நீ இவற்றைமுன் கருதாமை பொருந்தாதே!

வேலன்:

ஏதோவோர் எதிர்பார்ப்பில் இழைத்திட்டேன் இத்தவற்றைத்
தீதாமெனத் தெரிந்திருந்தால் தினைத்துணையும் உதவியிரேன்!
நீதானவன் உளத்தாசை நீர்த்திடநேர் செயல்வேண்டும்.
மோதாது முரணாது முடித்திடுநற் பொறுப்புனதாம்!

வள்ளி:

(எண்சீர் ஆசிரிய விருத்தம்)

இங்கடைந்த அப்பொழுதே உன்னைக் காண
எழுவென்றார்; தடுத்தவரை இங்குத் தக்க

தங்ககத்தில் ஓய்வெடுக்கத் தங்கச் செய்தோம்!
தயங்கிட்டார் எக்கணமும் திரும்பல் கூடும்.
உங்களிடை உளவுறவை உணர்ந்த தாலே,
ஒன்றுரைப்பேன், நன்றதுதான்; ஒன்றிச் சேர்க.
கங்குலிலே மின்னலெனக் காண்க வாய்ப்பைக்
கானலிலை, கனவில்லை, உண்மை! கொள்க.

மணிமொழி:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

அவரவர்க் கான வாழ்வை
அவரவர் வாழ்தல் வேண்டும்.
சுவரினில் கிறுக்கல் என்றன்
துயரமை சறுக்கல் வாழ்க்கை!
உவருடை நீரின் சேர்ப்பால்
உயர்புல விளைவும் பாழாம்!
தவறியும் என்னால் அன்னார்
தகைமைக்குத் தாழ்வா? தாளேன்.

எவ்விடம் உள்ளார்? சொல்க;
எதிர்ந்தவர்க் கேற்பச் சொல்வேன்.
வெவ்விடர் விளையுந் தன்மை
விளக்குவன்; உணரின் மேன்மை.
செவ்வியர்; நன்மை தீமை
தெரிந்தவர்; உண்மை தேர்வர்!
வவ்வுநர் இல்லை; யார்க்கும்
வழங்கிடு வள்ளல்! நல்லர்!

# காட்சி . 14

**இடம்** : தங்கு விடுதித் தனி அறை.

**காலம்** : நண்பகல்.

**உறுப்பினர்** : முத்துக்கண்ணன், மணிமொழி.

**சூழல்** : முத்துக்கண்ணனும் மணிமொழியும் எதிரெதிர் அமர்ந்து பேசிக்கொண்டு இருக்கின்றனர்.

முத்துக்கண்ணன்:

(கலி விருத்தம்)

இளையாருளம் எனவேபிறழ் இடையாலெழில் நடையால்,
முளையாமலர்க் கொடியாமென முறியாதசை உடலால்,
களியானுறக் கனியாயினி கவினாளுன துறவால்,
[1]உளையாவுயிர் உடலோடுறை உருவோடிவண் உளனே.

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

எழினலம் எல்லாம் சேர்ந்தோர்
இனியபேர் அழகி நீயே;
பழகிடப் புளிக்காப் [2]பானீ;
பசியறாப் பருகு தேனீ;
[3]கழிமிகு சுவைக்கோர் காட்டு;
கவினிறை தமிழ்ப்பாக் கூட்டு!
வழிவரு வாழ்நாட் கென்றன்
[4]வான்றுணை! மணப்பின் என்ன?

உன்னினும் உருவின் மேலோர்
உண்டுகொல்? கண்டேன் இல்லை.

---

1. உளைதல் - வருந்துதல், அழிதல். 2. பானீ - பால் + நீ. 3. கழிமிகு - மிக மிகுந்த: ஒரு பொருள் பன்மொழி. 4. வான் - அழகு, நன்மை, பெருமை.

உன்னினுண் ணறிவின் மிக்கார்,
உண்டென்ப தையம்; ஆமாம்!
உன்னினி உறவால் என்றன்
உண்ணிலை உற்ற தேற்றம்;
நன்னெறி தொடர நாளும்
நல்லையுன் துணையென் நாட்டம்!

மணிமொழி:

பித்தெனப் பிதற்றல் ஏனாம்?
பேதைமை பேச்சில்; வீணாம்!
எத்தனை பெண்கள் உங்கட்
கிதுவரை தெரியும் வாழ்வில்?
மொத்தமாய் ஐந்து? பத்து?
முழுமையாய்ப் பழக்கம் உண்டா?
ஒத்தையாய் இருந்தாள் தானும்
உறவுறா தகன்றாள் தானே?

நம்மிடைப் பழக்கம் முன்னாள்
நாற்பதும் நிறையா தன்றோ?
எம்முறைப் பழக்கம் நம்முள்?
இழிவுமக் கெனக்கும் சொன்னால்!
விம்முறும் நெஞ்சம்; கண்கள்
வெற்றிடம் நிலைப்ப, காணா!
வம்பினைத் தெரிந்தே மீண்டும்
வாங்கினேன்; பழிதாம்; நீங்கா.

முத்துக்கண்ணன்:

வற்றிரு புலத்தைத் தேடி
மழைமுகில் பொழிவ தில்லை!
உற்றுயிர் மீட்டாய்; உன்னின்
உய்பொருள் உலகில் இல்லை!
பெற்றவர்க் கிணையை அன்பில்;
பெய்புலம் [1]உலப்பில் பண்பில்!
நற்றிறம் அனைத்தும் பெற்ற
நல்லோய்! நீயே எல்லாம்!

1. உலப்பு - அழிவு, குறைவு.

மணிமொழி:

கொம்பணை கொடிநான் இல்லை;
[1]குரக்குண்ட கனியே, கோதே!
வெம்பிய காய்தான்; யாரும்
விரும்பிடா தெறியும் [2]மிச்சில்!
கும்பிடற் கில்லாக் [3]கூளி;
குறுகிய உள்ளக் கூனி!
விம்மியுள் அழுவேன் நம்மால்
விளைந்திடு வரவை எண்ணி!

(கொச்சகக் கலிப்பா)

கடலில் விழுமழைநான்; கானில் எழுநிலவு!
உடலில் உறைபிணிதான்; ஊறளி பாழ்கிணறு!
கடனில் கரைமுதலாம்; காப்பில் கனிமரம்!
திடனில் முடனானே; தேவையா? வேண்டாவே!

கல்லைக் கடவுளெனக் காட்சிக்குக் காட்டிடலாம்;
இல்லை அதனோடில் வாழ்க்கை, எண்ணிடுக.
நல்லையிலை நானும்; நகுதக செய்தவளே!
செல்க, உமக்கென்னால் சின்னோயும் வேண்டாவே!

முத்துக்கண்ணன்:

(கலி விருத்தம்)

ஒன்றாய் வேறாய் உடனாய் உயிராய்
நின்றாய்; நின்னின் நிலையார் நிகராய்?
என்றாய்[4] உன்னின் இணையார்? நினையாய்!
சென்றாய் என்னின் சிலையான் நிலையாய்!

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

அறந்தரு அமைதி உன்றன்
அணிமையே; இனிமை சேர்க்கும்.
பிறந்ததன் பெருமை உன்னைப்
பெண்ணெனப் பெறவே வாய்க்கும்.

1. குரக்கு - குரங்கு: வலித்தல். 2. மிச்சில் - எச்சில். 3. கூளி - பேய், கற்பிலாள். 4. என்றாய் - என் + தாய்.

இறந்தனன் என்ன வாழ்ந்தேன்;
என்னுயிர் மீட்டாய், வாழ்வேன்!
சிறந்தநீ உடனாம் ஆகில்
செயத்தகு யாவும் செய்வேன்.

மணிமொழி:

(வேறு)

[1]பன்னிப் பன்னிப் பலபேசிப்
பயனென்? வேண்டா; விட்டிடுக.
உன்னி உன்னி உலகியலை
உரைப்பேன்; உற்றுக் கேளீரே!
கன்னல் இல்லை, நான்[2]கசடே;
கடிந்தும் ஏற்கீர், கழிமடமே!
இன்னல் என்னால் எந்நாளும்;
எதற்காம்? துயர்தாம் இருநாளும்!

(வேறு)

[3]வேயன தோளார் சேர்க்கை,
விழுமிய வல்ல சற்றும்!
தீயெணம் யாண்டும் இன்றிச்
செய்வன திறனாய்ச் செய்க!
ஆயதாய் தந்தை சொல்லை
அருமறை என்க; கொள்க!
தூயவ, சொல்வ ஆய்க;
[4]தோமில; தொடர்க, வாழ்க!

ஐம்புல நுகர்விற் காக
அமைந்தவோர் கூட்டு மெய்யே!
செம்புலம் இல்லை; சின்ன
சிறையறை; குறைகள் சேர்ந்த!
வெம்பிடை வீழ்வ சில்ல;
விளங்குவ சிறந்து பல்ல!

1. பன்னுதல் - பேசுதல். 2. கசடு - அழுக்கு, அடிமண்டி. 3. வேய் - மூங்கில்.
4. தோம் - குற்றம், துன்பம்.

நம்பிடு உன்னை; நல்ல
    நாடிடு நலமே; செல்க!

மலையன செல்வம் உன்றன்
    மரபினில் நிறைந்து நிற்கச்
சிலையன சிறந்த மாதர்
    சேர்வருன் துணையாய் வேட்டு!
விலைமகள் அனைய என்னால்
    விளைவபின் வீழ்ச்சி தம்மால்;
நிலைமையை ஓர்க; பெற்றோர்
    நேரல மறந்தும் நேரார்!

உருவொடு திருவும் [1]கேழில்
    உயர்குணம் செவ்வி கேண்மை
அருணிறை நங்கை நல்லர்
    [2]அணியமாய் மணத்தற் குள்ளார்!
[3]தெருளுளத் திருப்பின் அந்தத்
    தேமொழி தன்னைத் தள்ளாய்.
இருளடும்[4] என்னால்; இன்பம்
    இயைந்திடும் அவரால் என்றும்!

முத்துக்கண்ணன்:

தனக்குத்தான் உவமை அல்லால்
    தகுபொருள் காட்டற் கில்லா
மனக்கினி மங்கை உன்னின்
    மற்றெவர் மிக்கார்? இல்லை.
இனிக்குநற் கன்னல் தன்னின்
    இனியவோ நாணற் புல்லும்?
பனிக்கடல் பான்மை மிக்காய்,
    பரிவுனக் கிலையேன் சற்றும்?

மணிமொழி:

(கலித்துறை)

இத்தனை இங்குரைத்தும் ஏற்றிடாய்; எண்ணாய்; ஏனோ?
பித்தனோ? பேதைமைமிக் காயோ? பிறப்பில் ஊறோ?

1. கேழ் - ஒப்பு. 2. அணியம் - முன்னேற்பாடு. 3. தெருள் - அறிவின் தெளிவு. 4. அடுதல் - இயைதல், ஏற்றதாதல், வருத்தல்.

செத்துப் பிழைத்ததனால் சீர்மை சிறுத்த தாமோ?
கத்து கடலாய்க் கதறியுமென்? கேளாக் காதோ?

முத்துக்கண்ணன்:

(கொச்சகக் கலிப்பா)

குற்றமென்ன செய்தனெனக் கொள்வையிவண் கோபமிக?
உற்றவுளப் பற்றுதலை உள்ளபடி சொற்றலலால்
சிற்றளவும் செற்றமுறச் செய்தவறென்? செப்பிடுக.
சற்றுமருள் அற்றுமிகச் சாடுவைநீ? எற்றுக்கோ?

உன்னுதவி உற்றதனால் ஊரிலுயி ரோடுறைவேன்!
தன்னலத்தைப் பின்னிற்குத் தள்ளிவைத்த உன்தகைமை
உன்னியுன்னி உண்மகிழ ஓடியுனைத் தேடிவந்தேன்!
இன்னலுனக் கென்னாலா? இப்பொழுதே ஏகிடுவேன்!

உள்ளமுறை காதலினால் ஊணுமுடல் கொள்ளலில்லை;
கள்ளமில்லை எள்ளளவும்; கண்டிடுக உண்மையினை!
எள்ளியெனைச் சீறிடினும் ஏற்றமிலா தேசிடினும்
கள்ளருந்திச் செல்வனெனக் கையற்றுப் போவதுண்டோ?

சொத்துபற்றுச் சொந்தங்கள் சோர்வின்றிச் சூழ்ந்திருந்தும்
மொத்தமுமுன் சேர்க்கைக்கு முன்னிற்கா என்றற்கு!
நித்தமும்நான் உன்னினைப்பால் செத்திடற்கு நேரிடினும்
எத்துணையும் இன்னலில்லை; ஏற்றிடுவேன்; சென்றிடுவேன்.

மணிமொழி:

(பஃறொடை வெண்பா)

நல்ல குடும்பத்துச் செல்ல மகனுன்றன்
இல்ல மரபிற் கியைந்தபெண் நானில்லை;
தந்தைதாய் தேர்ந்தெடுத்த தாவில் தனிமகளே
சிந்தைக்கும் சீராவார்; சேர்ந்தவர் ஏற்போடு
தக்கார்க் குதவுமியல் தாயுள்ளம் மிக்கவராய்
எக்காலும் வாழ்தல் இனிது.

# காட்சி . 15

**இடம்** : வேலனின் வீடு.
**காலம்** : மாலைப் பொழுது.
**உறுப்பினர்** : வள்ளி, மணிமொழி.
**சூழல்** : வள்ளியும் மணிமொழியும் கூடத்தில் அமர்ந்து பேசிக் கொண்டு இருக்கின்றனர்.

மணிமொழி:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

திருமணம் முடிந்தும் ஏனீர்
திரும்பலில் இரண்டு நாளாய்?
இருமுறை வந்து மீண்டேன்;
எனக்குரை யாத தென்னோ?

வள்ளி:

தெரியுநீ கேட்பாய் என்று;
செய்வதென்? முதலி ராக்காம்
உரியன உடனான் செய்தே
உடனிவண் திரும்பிச் சேர்ந்தேன்.

நல்லொரு வாய்ப்பை நீயே
நழுவிட விட்டாய், நன்றா?
இல்லொரு நல்லர் முத்தின்;
இழந்தனை தெரிந்தே சொத்தை!
அல்லவை அறிந்தும் கொள்ள
அணுகினார்; மறுத்தாய் நீயே!

சொல்லரு துயர்தான் சூழ்ந்து
துவட்டிடும்; தளர்ந்து சோர்வேன்!

மணிமொழி:

மீண்டுமீண் டதையே பேச
மிகுவது வருத்தம் ஒன்றே.
ஈண்டெவர்க் கெவரென் றென்றோ
இயைந்ததை மாற்றல் இன்றே!
வேண்டுதல் பிறர்க்கிங் கின்னல்
விளைந்திடல் கூடா தெண்ணல்!
நாண்டரு செயலைக் கொண்டு
நகைபடல் நானோ? ஏனோ?

(வேறு)

சென்று வந்த செய்திகளைத்
தெரிவி தெளிவாய்க் கேட்டிடுவேன்.
நன்று மன்றல் நடந்ததுவா?
நங்கை மிக்க நலத்தவரா?
ஒன்றி அவரோ டுறவாட
உள்ளன் பாசை உடையாரா?
ஒன்றும் இங்குக் கூறாதே
உதவாப் பலவும் உரைப்பாயே!

வள்ளி:

(பஃறொடை வெண்பா)

இல்லாதார் இல்லத் திருமணமா இன்னற்கும்?
எல்லாம் சிறப்பாக யார்க்கும் இனிதாகப்
ஒல்லாரும் ஒன்றி ஒருங்குவக்க ஈர்நாளும்
வல்லார் வழிப்படியே வாய்த்ததங் கின்மணமே!
இல்லையுடன் நீயென் றெழுகுறைதான் அன்னவர்க்கே!
சொல்லிப் புலம்பிட்டார் சூழச் சிலரிருந்தும்.
ஏதோ உரைத்தனையாம்; என்னென் றுணரலையாம்!
தீதேதோ சேர்ந்தது போல்தெரிந்த தென்றிட்டார்.
கூறுக; என்னுரைத்த? கூறின் நலம்பயப்ப
ஊறின்றிக் கொள்வோம் உடன்.

மணிமொழி:

(தரவு கொச்சகக் கலிப்பா)

மனக்குமுறல் வெளிப்பாடாய் மறந்தெதையும் அறைந்தேனோ?
எனக்கெதுவும் நினைவில்லை; இருந்திருப்பின் உயிர்க்குயிராம்
உனக்கன்றோ முதன்முதலில் உரைத்திருப்பேன்; அறிகுவையே!
மெனக்கெட்டு வினவிடுவாய்; மிகமுயன்றும் நினைவிலையே!

வள்ளி:

(கட்டளைக் கலித்துறை)

என்னுயிர்த் தோழி! இருந்துமென்? இன்றுமிங் கென்னிடத்து
முன்னர் நிகழ்ந்த முறையிலுன் கூட்டை மொழிந்ததுண்டா?
பொன்னென மேனி பொலிவோ டுருமிகப் பூசியிருந்
தன்மை அறிவன்; தகுமோ உனக்கும்? தவறிதுவே!

மணிமொழி:

(கலி விருத்தம்)

இல்லையெதும் சொல்லும்படி; ஏனாமுனக் கையம்?
தொல்லையெனைச் சூழுமெனில் சொந்தமென உம்மை
அல்லாலெவர் அண்மையுளர் ஆனவுடன் செய்வார்?
நில்லாதுயர்; நேராவிடர் நீவிரிரு போதே!

வள்ளி:

நன்றுமிக உன்றனுரை; நாணுமுனை நம்பேன்!
சென்றுபல நாட்களவர் சேர்ப்பிலுடல் சேர
ஒன்றியிணை வுற்றுநனி உண்டகளி தேர்வன்;
இன்றுவிளை வில்லையெதும் என்னுமொழி புன்மை!

(நேரிசை வெண்பா)

ஏறிட் டெனைப்பார்க்க; ஏன்தயக்கம்? எல்லாங்கை
மீறிட்டால் மீள்வதுவும் மேவாதே! - ஆறட்டும்,
பின்பார்ப்போம் என்பதற்குப் பிள்ளை இது;கல்லில்!
இன்னே இடர்களைதல் ஏற்பு.

இன்னுஞ் சிலநாளில் யார்க்குந் தெரியவரும்
முன்னந் துடைத்தற்கு முந்திடுவோம் - என்னுரைக்க.

இன்றே மருத்துவர்க் கியாவும் எடுத்துரைத்து
நன்றாம் வழிநாடல் நன்று.

மணிமொழி:

(கலி விருத்தம்)

தவறாமிது தவிர்ப்பாயெனத் தவிப்பாய்மிகத் தவறே!
தவமேசிலர் [1]புரினும்மரு [2]தகைவாய்வரு திருவே!
கவினாயுயிர்க் களியாயுயர் கனியாய்வளர் கருவால்
இவணாரெனை இகழ்வாரென இளையாதுளம் மகிழ்வன்.

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

காதற்கும் கனலாய்த் தீய்க்கும்
கவர்ச்சிக்கும் இடையே யான
பேதத்தை உணரல் அற்ற
பிழையதால் வாழ்வை இற்றேன்.
தீதற்ற காதற் றன்மை
தெரிந்தபட் டறிவு முற்ற!
ஈதற்றான் காதல்; இன்றேல்,
இடும்பைதான்; கண்டேன் இன்றே!

வள்ளி:

கண்டனை காதல் ஆமேல்,
காலிணை தொட்டு வேட்டுத்
தெண்டனிட் டிரந்த முத்தைத்
[3]தெறுமிக விடுத்த தென்னை?
பண்டொரு பழிமேற் கொண்டும்
படித்திலை; படிவாய் மேலும்!
மண்டிடுந் துன்பம் மேன்மேல்;
மகிழ்விரா, இகழ்வே; எண்ணேல்!

மணிமொழி:

எவரெனை இகழின் என்ன?
இடரதால் எனக்கோ? இல்லை.

1. புரினும்மரு - புரினும் + அரு: விரித்தல். 2. தகைவு - பெருமை.
3. தெறு - கோபம், துன்பம், அச்சம்.

தவறெனக் கொள்வார்க் கன்றோ
    தயக்கமும் தளர்வும்? கொள்ளேன்.
நவையறு பாடல் தன்னின்
    நலந்தரு பிள்ளை! பேறே!
சுவையளி அமுதின் நல்ல
    துயர்களை மழலைச் சொல்லே!

வள்ளி:

விதைத்தவன் வேண்டா னானால்,
    விளைச்சலை ஈண்டார் காப்பர்?
புதைத்தனை காதல் தன்னைப்
    புறத்தினில் மகவை வேட்பாய்.
பதைத்திடும் நெஞ்சம், பின்னாள்
    படர்வுறு துயரை எண்ணிச்
சிதைத்திடு கருவை; இன்றேல்,
    செயத்தக செய்யாக் கேடே!

பிள்ளையை ஈனல், துன்பம்;
    பெற்றபின் பேணல், துன்பம்;
பள்ளியில் சேர்த்தல், துன்பம்;
    பார்த்திருந் தேங்கல், துன்பம்;
எள்ளுவர் காணின், துன்பம்;
    ஏதிலி என்பர், துன்பம்;
கொள்ளுவ எல்லாம் துன்பம்;
    குழந்தைக்கும் உன்னால் துன்பம்!

மணிமொழி:

உரைப்பவை உண்மை; ஆயின்
    ஒருப்படேன்; வேண்டும் பிள்ளை.
குரைக்குநாய் என்று வீட்டில்
    குந்திநாம் இருத்தல் உண்டா?
அரைக்குடை அன்ன நீவீர்
    அணையென அமைந்தால் போதும்;
நிரைக்குமென் வாழ்வும் நீண்டு,
    நிழலென உடனீர் நிற்பேல்!

(கலி விருத்தம்)

ஏறு மாறென யாரிங் குரைப்பினும்
சீறிக் காயினும் தீமொழி செப்பினும்
மாறிச் செய்யேன்; மறுதலை கொண்டிடேன்.
பேறில் சீரது பிள்ளை பெறுகையே!

வள்ளி:

(நேரிசை ஆசிரியப்பா)

எதையோ எண்ணி எதையோ எழுதும்
கதைபோ லுள்ளது கழறிடு பொருளே!
எல்லாம் அறிந்தும் இதுதான் என்பாய்;
பொல்லா தெனினும் போற்றாய்; மாற்றாய்.
என்னினிச் செய்ய எண்ணி உள்ளாய்?
ஒன்றிரு திங்களில் உண்ணிலை உன்னுரு
தெற்றெனக் காட்டிடும்; செய்தக செப்பிடு.
வெற்றுவாய் அசையிடு வெளியார்க் கவலாய்
உற்றிடும், நன்றோ? உரைத்திடு.
மற்றுன் பணிக்குள மாண்பும் போமே!

மணிமொழி:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

வேலையை விட்டு நீங்க
  வேண்டிய வினைகள் தம்மைக்
காலையே முடித்து மீண்டேன்;
  கவலையில் தெரிந்தோர் பற்றி.
பாலையில் பயிரைப் போன்றே
  பண்டெனை அறிந்தார் இன்றே!
சாலையில் போவோர் என்னச்
  சார்ந்துளார்; நோதற் கில்லை.

அன்னையென் உடனி ருக்க
  அணியம்பின் கவலை என்ன?
உன்னகம் ஒட்டி இங்கே
  வாடகைக் கோரில் உண்டு;

தன்னலம் இன்றி என்றும்
    தாங்குநர் நீவீர் பக்கம்
இன்றுணை என்றி ருக்க,
    இன்னலென்? இனிய தாமே!

வேண்டுவ தொன்றே உண்டு;
    வேலனும் அறியச் சொல்க.
ஈண்டிவண் நடப்ப யாவும்
    எவர்க்குமே தெரிதல் கூடா.
ஆண்டவர் வாழ்க்கை மேலாய்
    அமைவுற நடத்தல் வேண்டும்.
தாண்டரு [1]மிடிவந் தென்னைத்
    தாக்கினும் அவர்க்குச் சொல்லீர்.

1. மிடி - துன்பம், வறுமை.

# காட்சி . 16

**இடம்** : முத்துக்கண்ணனின் இல்ல மேல் மாடி.
**காலம்** : மாலை முன் பொழுது.
**உறுப்பினர்** : முத்துக்கண்ணன், வேலன்.
**சூழல்** : முத்துக்கண்ணனும் வேலனும் அமர்ந்து பேசிக் கொண்டு இருக்கின்றனர்.

முத்துக்கண்ணன்:

(நேரிசை ஆசிரியப்பா)

எத்தனை திங்கள் மொத்தமாய் இன்றொடு
சென்றன என்றும் தெரியுமா? செப்பிடு.
திருமணம் முடிந்த இருமூத் திங்களாய்
ஒருமுறை யேனும் வருகை செய்திலை!
பேசியில் மட்டுமே பேசிடின் போதுமா?
ஆசில் நட்பிற் கழகா? அறைக.

வேலன்:

நெருக்கம் என்றும் இறுக்கம் அளிக்கும்;
பெருக்கும் அன்பைப் பிரிவே; அறிக.
உடனிருந் தொன்றாய் உவத்தல் நட்பில்;
கடனறிந் துதவக் காலத் தடைதல்.
புத்திள மனைவி, ஒத்துள உறவு;
தித்திப் பிடையில் தேவையோ கைப்பும்?
எணணியே இந்நாள் இங்கு
நண்ணலில்; நண்ப, நடப்பும் நன்றோ?

முத்துக்கண்ணன்:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

பிறந்ததன் பயனாய் வாழ்வில்
பெறற்கொரு பேறாய் நேர்ந்தார்!
சிறந்தவர் இவரின் மிக்கார்
சேர்ந்திடார் எனக்குத் தக்கார்.
திறந்துளம் சொல்வேன், இங்கில்
தெய்வமும் இவரே இல்லால்!
மறந்துமென் மனத்து மாறாய்
மறுத்தொரு மாற்றம் ஆற்றார்.

பெற்றதாய் அன்பில் ஒப்பார்;
இன்சொலி பெயர்க்குத் தப்பார்!
கற்றவர்; கல்விக் கேற்பக்
[1]கரவிலர், கனிந்த நெஞ்சர்!
பற்றிலர்; பண்பு மீறார்;
பழகுதற் கினிய [2]நீரார்!
உற்றவர் எவரென் றாலும்
உதவுவர், மேல்கீழ் பாரார்.

மனைவியாய் இவரைக் கொள்ள
வாய்த்ததிப் பிறவிப் பேறே!
[3]எனையவாய் ஈந்தோர் தம்மை
ஏற்றுவர் [4]ஆயை என்றே.
நினைவெலாம் என்னைப் பற்றி;
நிழலென நிற்பார் சுற்றிப்
புனைவிலை அன்பு நண்ப,
புரிந்தமுன் [5]ஆகூழ் போலும்!

வேலன்:

அன்னையிங் கடைந்த போதே
அனைத்தையும் அறிய வைத்தார்;

1. கரவு - பொய், மறைவு, வஞ்சனை, களவு. 2. நீரர் - தன்மையர், குணத்தினர், அழகினர். 3. எனையவாய் - எனை அவாய் - என்னை விரும்பி: இடைக்குறை. 4. ஆயை - ஆய் + ஐ: அன்னை தந்தை. 5. ஆகூழ் - ஆகு ஊழ்: நல்வினை

இன்னலம் என்னென் னென்றே
    எடுத்தெடுத் தடுக்கிப் போனார்.
அன்னவர் அன்னைக் கன்னை;
    அருமருந் தமுதாம்; சொன்னார்.
மன்னர்க்கும் அரிதாம் ஏற்றம்
    மனைவியால் உற்றாய்; தேற்றம்.

ஏறெனும் [1]பீட்டைப் பேற்றை
    இன்றுணை இசையால் ஏற்றை!
[2]வீறினி வேறும் உண்டோ?
    விழைவெலாம் நிறைவே! உற்றாய்.
[3]சேறிடந் தெரிந்து சேர்க;
    செல்லிடம் சினம்நீ தீர்க.
ஆறிடத் [4]துண்ணீர் என்ன
    அடைந்தவர்க் குன்[5]சீர் [6]மன்ன.

பணிநனி எனினும் [7]போதைப்
    பகிர்ந்துடன் கழிக்க; மாதர்,
அணிமணி தம்மின் கொண்டார்
    அண்மையை, அன்பை வேட்பர்.
பிணைவிறும் அமர்ந்து பேசில்;
    பெண்மையை ஏற்றிப் போற்றில்!
[8]தணிவுறா இல்ல றந்தான்,
    தன்னலம் இடையில் லாகில்!

நடப்பவை நல்ல வேனும்
    [9]நவை[10]மகட் குரையேல் சேரும்.
கொடுப்பனை, புரிந்து கொள்ளும்
    குலமகள் மனையாய் ஏலல்!
நடிப்பது துணையர் முன்னர்
    நல்லர்க்கும் நல்ல தில்லை.
இடிப்பவர் [11]இல்லாள் இல்லேல்,
    இனித்திடு இல்வாழ் வின்றே!

---

1. பீடு - வலிமை, பெருமை. 2. வீறு - வெற்றி, பெருமை, செருக்கு.
3. சேறல் - செல்லுகை, அடைகை. 4. உண்ணீர் - உண் + நீர்; உள் + நீர்.
5. சீர் - செல்வம். 6, மன்னல் - பொருந்தல், நிலைத்தல். 7. போது - பொழுது.
8. தணிவு - குறைகை. 9. நவை - குற்றம், இழிவு. 10. மகள் - மனைவி.
11. இல்லாள் - மனைவி.

முத்துக்கண்ணன்:

வந்ததும் நினைத்தேன் கேட்க;
    மனைவியை விட்டு விட்டு
வந்ததென் தனித்தும் இங்கு?
    வள்ளியும் நலமா? ஏதும்
அந்தமில் மகிழ்விற் கான
    ஆக்கமங் குண்டா? இன்றேல்,
உந்தனைத் தனித்த னுப்ப
    ஒருநாளும் உடன்ப டாரே!

வேலன்:

நலமவள்; புதிதாய்ச் சொல்ல
    நன்றளி பொருட்டான் இல்லை.
இலமெனும் ஏக்கம் இன்னும்
    இயைந்ததில்; இளமை உண்டே!
சிலரதை உடனே கொள்ளப்
    பலரதை முயல்வர் தள்ளப்
புலனிறை வுற்ற போது
    புதல்வரைப் பெறுதல் போதும்.

முத்துக்கண்ணன்:

நிறைவுறும் புலன்கள் என்றா
    நினைக்கிறாய்? தவறு வேலா.
குறைநிறை நம்மால் ஐந்தாம்
    குழிதமை நிரத்தல் ஆமோ?
கறைமிடற் றிறைவன் கூட
    கடந்ததில் காமக் கூட்டைச்
சிறையுயிர் நீங்கும் நாளும்
    சிதைதலில் புலன்கள் ஆட்டம்!

வேலன்:

இருவிரு; எதற்கு நம்முள்
    இயைவிலா வீண்சொல் ஆடல்?
திரும்பிடக் குறித்த நேரம்
    சேரலேல் வள்ளி காய்வாள்!

ஒருபொழு தேனும் என்னை
ஒழிந்திராள்; பற்று நீங்காள்!
இருந்திடு; கழுவிக் கைகால்
திரும்புவன்; உண்டு செல்வேன்.

(வேலன் எழுந்து, சற்று அப்பால் இருந்த நீரமைப்பை நாடுகிறான். அப்போது அவன் தான் முன் அமர்ந்திருந்த இடத்தில் விட்டுச் சென்றிருந்த செல்லிடப் பேசி அழைப்பொலி எழுகிறது. வேலன் திரும்பாமலேயே நடந்தபடி உரக்கப் பேசுகிறான்.)

வேலன்:

(குறள்)

யாரவர்? என்றுணை? ஈரெட்டு நாழிகைக்குள்
சேரல் உறுதியெனச் செப்பு.

( முத்துக்கண்ணன் செல்லிடப் பேசியை எடுத்துப் பேசுகிறான். மறு முனை இருந்து வள்ளி பேசுகிறாள்.)

வள்ளி:

(பஃறொடை வெண்பா)

ஆறு மணிக்குள் அடைவேன் விரைந்தெனக்
கூறி விடியலில் கொண்டீர் செலவினை!
இன்னுங் கிளம்பலில்? இங்கு மருத்துவர்
சொன்னநாள் முன்னெழு சூட்டு வலியால்
துயர்மிகக் கொண்டு துடிப்பாள், துவள்வாள்!
அயலார் உதவ அருகிரு ஈனிலில்
சேர்த்துளேன்; சேர்ந்த அவருடன் சேரநீர்
சேர்ந்திடச் சேரும் சிறப்பு.

# காட்சி . 17

| | |
|---|---|
| **இடம்** | : ஈன்மனைத் தனியறை. |
| **காலம்** | : காலை மணி ஒன்பது. |
| **உறுப்பினர்** | : மணிமொழி, முத்துக்கண்ணன், வேலன், வள்ளி, மணிமொழியின் தாய். |
| **சூழல்** | : மணிமொழி கண்களை மூடியபடி, படுத்திருக்கிறாள். பக்கம் வந்தமர்ந்த முத்துக்கண்ணன் அவள் கையை மெல்லப் பற்றக் கண் விழித்துக் கொண்ட மணிமொழி வியந்து அவனைப் பார்க்கிறாள். |

மணிமொழி:

(நேரிசை ஆசிரியப்பா)

என்ன? நீங்களா? இங்கே எப்படி?
சொன்னதார்? வேலனா? தொல்லையே அவன்றான்!

முத்துக்கண்ணன்:

இல்லை, இல்லை; இல்லவன் சொல்லலும்.
செல்லிடப் பேசியில் சேர்ந்தார் யார்க்கோ
எழுவலி என்பதால் ஈன்மனை சேர்த்ததாய்க்
கெழுதகை வள்ளி கேள்வனைக் கூவி,
[1]வெய்து வருகென வேண்டினள்; கேட்டனன்.
செய்தி தெளிந்துடன் சேர்ந்தனன்; அவ்வே!

மணிமொழி:

வருதலிங் கேனாம்? வழுவிஃ திழுக்கே!
[2]வெருவளி வினையால் விளைந்திடும் வழக்கே!

---

1. வெய்து - விரைந்து. 2. வெருவு - அச்சம்.

(சற்றுத் தள்ளி வியப்போடு அமர்ந்திருந்த தன் தாயை நோக்கி மணிமொழி பேசுகிறாள்.)

மணிமொழி:

அம்மா, இவர்தாம் அவராம்; அறிக.

முத்துக்கண்ணன்:

அம்மா, வணக்கம்; அனைவரும் நலமா?

தாய்:

நலமே, தம்பி! நல்லது வந்ததும்.
இலையேல் இன்னல்! இருக்க; சற்று
வெளியங் கிருப்பன்; விளிப்பின் வருவன்.

(மணிமொழியின் தாய் அங்கிருந்து அகல்கிறார்.)

முத்துக்கண்ணன்:

இரும்பா நீயும்? இஃதுனக் கினிதா?
விரும்பாய் துணையாய்; இருந்தும் விழைந்தென்
கருவைத் தாங்கிடக் கருதாய் தவறாய்!
அருமை; உன்னகம் அரிதினும் அரிது!

மணிமொழி:

வற்றல் மரம்நான்; வளமில் புலம்தான்!
சொற்றிறம் நிரம்பாச் சுவையில் பாட்டு!
வெற்று மனத்தொடு வெந்து வருந்தலின்
பற்றென வாழ்வில் பற்றுதல் வேண்டிப்
பெற்றிடப் பிள்ளையை உற்றனன் விழைந்து!
மற்றிது மற்றிட மடுத்தனிர் போலும்?
நற்றவப் பேறாய், நலமளி தேனாய்
இற்றிடத் துயரம் இயையும் மகவாய்!
அன்ன மகவை, அன்பின் பிழிவை
என்ன இயையினும் இழத்தல் இல்லை!

முத்துக்கண்ணன்:

புரிந்து பேசு; புலம்பல் போதும்.
தெரிந்தே தவற்றைத் திறம்படச் செய்வாய்.

தவற்றைச் செய்வர் தவறி எனினும்
அவற்றைத் தொடரல் அழகா அறிந்தும்?
இடறி விழுந்தால் எவரே எழுந்து
தொடரல் அஞ்சி நடவா திருப்பர்?
நீயோ, என்றோ நிகழ்ந்த இழிவை
ஓயா துரைப்பாய்; உள்ளுள் அழுவாய்!

மணிமொழி:

என்னால் பிறருறு இன்னலை என்னால்
ஏற்றலில்; தவறா? சாற்றுக எண்ணி!

முத்துக்கண்ணன்:

இதையே என்றும் உதைபடு பந்தெனக்
கேட்டுக் கேட்டுக் கிழிந்தவென் செவிகள்!

மணிமொழி:

போதும்; புன்மொழி போதும்.
ஏதிவண் வந்ததும்? இயம்புக எனக்கே.

முத்துக்கண்ணன்:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

என்றுமிங் கிருத்தற் கான
இன்வளி, நீரென் றல்லால்
என்னுயிர் நீயே என்றுன்
இணையடி இரந்து நின்றேன்;
நின்றனன் தன்னை நீக்கிச்
சென்றதும் நீயா? நானா?
குன்றுவ குறித்த நீதான்,
குறையுறல் சரியா? கூறு.

போக்கினை புரையென் றெண்ணிப்
போற்றலென் கருவை என்நீ?
காக்கைதன் கூட்டில் இட்ட
கருங்குயில் முட்டை காக்கும்
போக்கினை ஏற்றாய்; பின்னேர்
புன்மைக்காம் உரமிங் கிட்டாய்.

நோக்கலில் பின்னாள் பிள்ளை
நொந்திடு நிலைமை உள்ளி!

மணிமொழி:

மனத்துயர் எதற்காம்? யாரும்
மதித்திட வளர்ப்பேன், பாரும்!
தினைத்துணை அளவும் தீங்கு,
சேர்ந்திடாத் திறனாய்க் காப்பேன்.
அனைத்துமிங் கன்னை என்ன
அன்பினில் திளைக்கச் செய்வேன்;
நினைத்துநீர் வருந்தற் கொண்ணா
நிலைமையில் வளர்ப்பேன் கண்ணாய்!

முத்துக்கண்ணன்:

தந்தையார் என்று தேறாத்
தறிதலை என்பர் நேராய்;
நொந்தழு குழந்தை நோவை
நூறிடற் கென்ன செய்வாய்?
சந்தையில் கிடைத்த தாகச்
சாற்றுவை? சரியாய்ச் சொல்க;
வெந்துழல் உள்ளம் கொள்ளும்
வேதனைக் களவில்; வெள்ளம்!

மணிமொழி:

(நேரிசை ஆசிரியப்பா)

இப்போ தென்நான் இயம்பல் வேண்டும்?
தப்போ? சரியோ? தவறே எனினும்
இந்த நிலையில் இகழ்தலோ? ஏசலோ?
வந்ததும் எதற்கு? வருத்தி மகிழவா?
மறுத்த துண்மை; வெறுத்தா?
சிறுமை உம்மைச் சேரற் கஞ்சியே!

முத்துக்கண்ணன்:

இதையே சொல்லி என்னின் வாழ்வைப்
புதைத்தாய் இருளில்; போதும் பொறுத்ததும்.

யாரினி எண்ணி நேரிய கூறினும்
வேரில் விடுநீர் விழுமம் சேரினும்
உன்னை ஒதுக்கி உறைதல்
இன்னா தாகும்; ஏலேன் இனியே.

மணிமொழி:

கொதிநீர் காலில் கொட்டக் கூவிக்
குதித்திடல் ஒப்பக் குதிப்பீர்; கொள்ளீர்!
ஒருத்தியும் வீட்டில் உரிமை உள்ளாள்
இருத்தலும் மறந்த தென்னோ? சற்றும்
இடம்பொருள் சூழல் எண்ணா
மடம்நிறை பேச்சால் மகிழ்வா? மலைவே!

முத்துக்கண்ணன்:

யாரால் எல்லாம்? எண்ணுக; உன்னால்!
தீராத் துயரைத் தெரிந்தே புரிந்தாய்.
என்னினி இயையினும் என்னால்
உன்னைக் குழந்தையை ஒழிதல் இலையே!

(அப்போது அறைக் கதவைத் திறந்து கொண்டு, செவிலியர் முன் வர, வேலன் வள்ளி உள்ளே வருகின்றனர். அங்கு முத்துக்கண்ணன் இருப்பதைப் பார்த்து அதிர்ச்சி அடைகின்றனர்)

முத்துக்கண்ணன்:

வா,வா; வேலா! வந்ததில் மகிழ்ச்சி.
காவாய் என்றால் கடிதில் வருபவன்
ஆர அமர அமைகுவை துணையொடு!
யாரிவர்க் கின்றுணை இருவர் நீரலால்?
இரவே வந்துமிப் பொழுதே
வருவாய்; உனக்கிது வழக்கம் இலையே!

வேலன்:

(நிலைமண்டில ஆசிரியப்பா)

இரவு முழுதும் இருந்தம் இங்கே.
எட்டு மணிக்கே விட்டுச் சென்று

கடன்களை முடித்துக் காலை உணவுடன்
உடனிவண் சேர்ந்தோம், உணர்க; மேலும்
மருத்துவ மனைக்குச் செலுத்துதற் காக
வரும்வழி வங்கியில் பணமெடுத் தமைந்தோம்.

(செவிலி தன் சட்டைப் பையிலிருந்து சீட்டொன்றை எடுத்து முத்துக்கண்ணனிடம் நீட்டுகிறார்)

செவிலி:

வந்ததும் உள்ளே மறந்தது சேர்த்திடத்
தந்த தொகைக்குத் தகுமிச் சீட்டும்.

மணிமொழி:

ஏனிவண் கொடுத்தீர்? என்னிடம் இலையா?

முத்துக்கண்ணன்:

நானளித் திடலால் நவையென்? சொல்க.
பணமென் உன்முன்? பழியும் பொறுப்பன்!

(செவிலியை நோக்கிப் பேச்சைத் தொடர்கிறான்.)

கணவன் நான்தான்; கையெழுத் தேதோ,
படிவந் தம்மில் இடுதல் கேட்டீர்;
எடுத்து வருக, இடுவன் உடனே.

மணிமொழி:

அடுத்து நடப்ப தறியாச் செய்கை!
எடுத்தம் கவிழ்த்தம் என்பதா இயல்பு?
நீரிவண் நினைத்தல் நேரிய தில்லை!
ஊரென் உரைக்கும்? ஒருகணம் உன்க!

முத்துக்கண்ணன்:

போதும்; உற்ற புன்மை போதும்!
ஏதுமுன் இசைவை இனிநான் கேளேன்.
இன்றொன் றுரைப்பேன்; ஏற்க மனத்து.
நன்றோ? தீதோ? நகுதற் குரித்தோ?
என்றும் உன்னை, என்னரு மகவைப்
பொன்றற் காயினும் போற்றுவன்; கடனே!

# களம்: 1

## (இந்நாள்)

# காட்சி.1

**இடம்** : அல்லி இல்ல முன்னறை.
**காலம்** : காலை மணி பத்து.
**உறுப்பினர்** : அல்லி, வேலன்.
**சூழல்** : எதிர் எதிர் அமர்ந்து இருவரும் பேசிக் கொண்டிருக்கின்றனர்.

வேலன்:

(நேரிசை ஆசிரியப்பா)

உடனிருந் துதவ உன்றாய் ஒல்லை
உடனலம் உற்றார் உன்னால் முற்றாய்க்
கடனறிந் துதவக் கற்றுளாய்! ஆக,
உடனினி யாமிருந் துதவற் கேதுமில்.
உடன்விரைந் துதவற் குடனுளார் உன்றன்
இடனறி நண்பர், இனியர் நல்லான்!
விடைகொடு, செல்வோம் ஊர்க்கு.
விடிவினி விரையுநீ விழையு மாறே!

அல்லி:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

இனுமினித் தெரிய வேண்டின்,
    என்னிடம் கேட்க என்றே
முனமெனக் குரைத்தீர்; ஆனால்,
    மொழிந்திலர், மௌனங் காப்பீர்!
மனமறி அனைத்தும் தந்தை
    மறைத்திடா தெழுத்திற் சொல்லச்

சினமெனுஞ் சேர்ந்தார்க் கொல்லி
சிதைந்ததென் சிந்தை நீங்கி.

நீங்கிரு எந்தை தூய
நெஞ்சினில் நிலைத்த தாய
தாங்கருந் துயரம் காணத்
தளர்வனான் தனிமான் மான!
ஏங்கிது நாளும் வாடி
இடருழந் திருக்கக் கண்டும்
ஈங்கினித் தனித்தி ருத்தல்,
இயல்வதோ? மகிழ்வன் சொன்னால்!

வேலன்:

இன்னுமென் சொல்லற் குள்ள
இனியருன் பெற்றோர் பற்றி?
முன்னரிங் கியைந்த வற்றை
மொழிந்தனர் தந்தை முற்ற!
அன்னவர் உரைத்த வல்லால்
அறைந்திடற் கிறையும் இல்லை.
அன்னமென் சிறகின் அன்ன
அகமினு மயர்தல் என்ன?

கிடந்தனை; பிறப்புச் சான்றில்
கிள்ளைதன் பிள்ளை என்றே,
கடிந்தனர் பிறரும், கேளார்;
கையெழுத் திட்டார் அன்றே!
இடந்தரல் சட்டத் தில்லை;
எனினுமென்? ஈந்த சின்னாள்
கடந்திடு முன்னுன் தாயைக்
கடனென மணந்தார்; காப்பார்!

யாரெடுத் திடித்தும் ஏற்கார்;
எண்ணிய திண்ணம் என்றார்.
ஊரவர் பழிக்கும் உற்றார்
உணர்ந்திட உறுது யர்க்கும்
பேரிடர் சீர்க்கும் அஞ்சார்;
பின்விளை வெதையும் பேணார்.

நேரெதிர் நின்று நீக்கும்
நெஞ்சுரம் எனக்கும் இல்லை!

அல்லி:

வழுதமைச் சான்றோர் செய்தால்
வழங்குவர் அமைதி என்றே;
பழுதெதும் எண்ணாப் பெற்றோர்
பழியினை ஏற்று நின்றார்!
விழுதெலாம் மரத்தைத் தாங்கும்;
[1]வினையென யானோ ஆனேன்!
தொழுதடி பணிவன், எந்தை
உறையுளென்? சொல்க; செல்வேன்.

வேலன்:

(கொச்சகக் கலிப்பா)

சொல்லக் கூசுவெலாம் சொன்னேன் உனக்கான;
சொல்லென்று மேலுந் துயரளிப்பாய், நன்றாமோ?
சொல்லற் குரிமையிலை இல்ல இருப்பிடத்தைச்
செல்லற் கெமைவிடுக; சேரா உனைச்சிறுமை.

அல்லி:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

உயிரென உற்றார், தன்னால்
உறுபழிக் கஞ்சிப் பின்னாள்
உயரரு வாய்ப்பை, வாழ்வை
உதறிட்ட தாய்நேர் உண்டோ?
[2]செயிரிலர் தாயென் றோராச்
சிறுமையால் சீறி நொந்தேன்!
[3]மயலிலள் இன்று சற்றும்;
மனத்திடை அன்பே பற்றும்!

அன்னையென் றொருவர் அன்றி
அணைவரார் பின்னை ஒன்றி?

1. வினை - தொல்லை, தீவினை. 2. செயிர் - குற்றம். 3. மயல் - மயக்கம், ஐயம்.

என்னைநற் றவம்யான் முன்னாள்
இயற்றினன் கொல்லோ இந்நாள்
அன்பமை தாய்க்கோர் பெண்ணாய்
அடைந்ததும்? அருமை ஆமே!
[1]தன்னையைக் காட்டா தென்னைத்
தனியராய் வளர்த்த தென்னை?

நிறையவே எந்தை பற்றி
நிரல்பட எடுத்து ரைத்தீர்;
முறையுற மணந்த தாயர்
முந்தையர் என்றாய்க் கன்றோ?
உறைபவர் உடனாய் இன்றும்;
உற்றவென் அவரின் வாழ்வில்?
அறைகநீர் அறிந்த யாவும்;
[2]அருமந்த மக்கள் உண்டோ?

வேலன்:

அன்னவர்க் கென்று சொல்ல
அமைந்ததில் பிள்ளை இன்றும்;
தன்முனான் பிள்ளை தன்னைத்
தன்னுடன் கொள்வர் [3]கோலாய்.
நன்மகன் என்ன யார்க்கும்
நல்லவன்; நடத்தை மேலான்!
உன்னரு தந்தைக் கின்றோர்
உறுதுணை; அவனே எல்லாம்!

மன்னவர் மகள்நீ; உன்னின்,
மரபினுக் கொருத்தி நீதான்!
முன்னரே அறிவார் போலும்
முதலும்நீ முடிவும் என்று!
பின்னையுள் சொத்தைப் பேரைப்
பேணுவை ஏற்ப என்றே
உன்னையிங் கேற்ற கல்வி
உற்றிடப் பணித்தார் என்பேன்!

1. தன்னை - தன் + ஐ → தன் கணவன். 2. அருமந்த - அரு மருந்து அன்ன. 3. கோல் - ஊன்று கோல்.

# காட்சி. 2

**இடம்** : முத்துக்கண்ணன் பேரில்லம்

**காலம்** : மாலை.

**உறுப்பினர்** : முத்துக்கண்ணன், இன்சொலி.

**சூழல்** : இறை அறையில் இன்சொலி வழிபாடு நிகழ்த்திக் கொண்டிருக்கக், கணவர் முத்துக்கண்ணன் உள் அறையில் அமர்ந்து கோப்பு ஒன்றை ஆய்ந்தபடி இருக்கிறார்.

இன்சொலி:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

[1]கறைநிறை கண்டா, வாழி;
காலனைக் கடிந்தாய், வாழி;
மறையறை பொருளே, வாழி;
மாதொரு பாகா, வாழி;
பிறையுறை முடியோய், வாழி;
[2]பிறங்குநீர்ச் சடையோய், வாழி;
பறையறை கையோய், வாழி;
பரமனே, வாழி; வாழி!

நுதல்விழி நோக்கோய், வாழி;
நூற்பொருள் ஆனோய், வாழி;
[3]கதகரி உரியோய், வாழி;
கயிலையம் தலைவா, வாழி;

---

1. கறை - நஞ்சு. 2. பிறங்கு - ஒலிக்கும், செறிந்த. 3. கதம் - கோபம்.

[1]புதலர வணியோய், வாழி;
பொருவிடை ஊர்வோய், வாழி;
எதிரவர் இல்லோய், வாழி;
எம்மிறை, வாழி; வாழி!

மான்மறிக் கையோய், வாழி;
மாலயற் கரியோய், வாழி;
மூன்றிலை வேலோய், வாழி;
முப்புரம் எரித்தோய், வாழி;
[2]கான்றெரி வில்லோய் வாழி;
களிநடம் புரிவோய், வாழி;
தோன்றழி வில்லோய், வாழி;
தூயனே, வாழி; வாழி!

(இறை வழிபாட்டை முடித்துக் கற்பூரத் தட்டோடு இன்சொலி தன் கணவர் அமர்ந்திருந்த இடத்திற்கு வருகிறார்.)

இன்சொலி: (புன்முறுவலுடன்)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

எடுத்துக் கொள்க, இறைவன் நீறு.
கடுத்தல் வேண்டா; கற்கண் டீதாம்.

முத்துக்கண்ணன்:

என்னுன் பேதைமை! என்னைநன் கறிந்தும்
எரிதழல் கொண்டிளஞ் சிரிப்புடன் எழுவாய்!

இன்சொலி:

காலை மாலை கடவுளை ஏற்றின்,
மேலை வாழ்வு மேன்மைத் தாகும்;
வருநாள் எல்லா வளமும் இறைவன்
அருளால் அமையும்; அணிக நீறே!

(இன்சொலி திருநீற்றைக் கணவர் தடுக்கத் தடுக்கச் சிரிப்போடு அவர் நெற்றியில் இடுகிறார். )

1. புதல் - புதர், தூறு. 2. கான்றல் - கக்குதல்.

முத்துக்கண்ணன்:

(நேரிசை வெண்பா)

இல்லை இறையென் றெடுத்து மொழிந்துமென்
சொல்லைச் சிறிதுநீ சூழ்ந்ததுண்டோ? - சொல்வகேள்,
கல்லைக் கடவுளெனக் காசைக் கவர்ந்திடுவார்;
நல்லதில்லை நம்பிக்கை; நம்பு.

இன்சொலி:

(இன்னிசைச் சிந்தியல் வெண்பா)

நம்பிக்கை தாம்வாழ்க்கை! நம்பிக்கை தாமுளவேல்
இம்பர் இயலாத தேதாம்? எனமுன்னர்ச்
சொன்ன மறந்ததோ சொல்?

முத்துக்கண்ணன்:

(நிலைமண்டில ஆசிரியப்பா)

கொளுத்தக் கொண்டு கொண்டது விடாத
பெண்டிர் பண்பில் பிழையில்; பீடே!
இயலும் எனக்கெச் செயலும் என்று
முயலல் எதுவோ அதுவே முறைமை.
கல்லினுள் தேரை கருப்பை உயிர்க்கும்
பல்லுண வளிக்கும் பரம்பொருள் வந்துடன்
அளிப்பர் அனைத்தென அடிபணிந் தரற்றி
நாளும் அதுவே கோளெனக் கொண்டு
வெற்றே அமைதல் எற்றே? இயல்போ?
நம்புக உன்னை, நம்புக உழைப்பை;
நம்புக உற்றார் உறவினர் நட்பை.
நம்மால் முடியும்! நம்பிக்கை அதுவே!
அம்பாள் அறிவாள், அவளாய்ந் தளிப்பாள்!
முன்னின் அதுதான் மூடநம் பிக்கை!
எண்ணிக் காணின் எய்துவை தெளிவே.

இன்சொலி:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

இத்தனை காலம் நாமும்
இணைந்துறைந் தின்பந் துய்த்தும்

சொத்தெனச் சொல்லப் பிள்ளைச்
 சுவையினைச் சுமந்தேன் இல்லை.
பத்திமை செய்த லாலே
 பயனெதும் விளையா தேனும்
கொத்திடு துயரம் சற்றுக்
 குறைந்திடும்; அமைதி சேர்க்கும்.

முத்துக்கண்ணன்:

தவறெனச் சொல்வேன்; ஆயின்,
 தடுத்ததில் எண்ணற் குன்னை!
அவரவர்க் கான கொள்கை;
 அதில்பிறர் நுழைதல் புன்மை!
உவர்கடல், அறிந்தும் நீரை
 உண்குவன் என்பாய்; ஆக!
எவரெதைச் சொலினும் ஏற்ற
 ஏற்றிடின் ஏற்றம் தானே.

(முத்துக்கண்ணன் மனைவியின் கையிலிருந்த படையல் தட்டைப் பெற்றுப் பக்கம் வைத்துவிட்டு, அவர் கையைப் பற்றி அமர வைத்து, ஆதரவாய் அணைத்துக் கொள்கிறார்.)

[1]கவலுதல் எதற்குக் கண்ணே?
 கலங்குவன் கலங்கக் கண்டால்!
[2]தவலறு செய்யுள் ஒப்பாய்;
 தமிழ்தரு சுவையில் தப்பாய்!
நவிறொறும் நூன்ன யம்போல்
 நலன்மிக நாளும் ஈவாய்!
எவருனின் அன்பில் மேலார்
 எனக்குயிர்த் துணையாம் நீரார்?

இன்சொலி:

பகலெலாம் பக்கம் சேரீர்;
 படுத்துவீர் இரவில், நீங்கீர்!
அகமிக அருமை; ஆசை
 அணைந்திட அமைந்த ஆறே!

1. கவலுதல் - கவலைப் படல், வருந்துதல். 2. தவல் - குறைவு, குற்றம், கேடு.

நகுமெனை அறிந்த ஊரும்;
நாணிலள் என்றே கூறும்!
தகுமொரு பிள்ளை இன்றித்
தவிப்பனீர் தழுவு வீரே!

விழலிடை நீரைப் பாய்ச்சி
விளைத்திடு பயன்தான் என்ன?
தழலுறை புலத்தில் வித்தும்
தங்குமோ? தழைத்தல் ஆமோ?
அழலெரி உளத்தள் ஆனேன்;
அணைத்திடக் கிளர்த்தல் கொள்வீர்!
வழிவரு குழவி இல்லா
வறுமைக்கு வருந்தீர்; ஏனோ?

முத்துக்கண்ணன்:

(நேரிசை வெண்பா)

இல்லை யொருபிள்ளை; ஏங்குதலான் என்னாகும்?
எல்லா மருத்துவரும் என்னுரைத்தார்? - இல்லாய்நீ!
செல்லாத கோவிலில்லை; சேராக் குளங்களில்லை!
இல்லாமை சில்லோர்க் கியல்பு.

இன்சொலி:

(இன்னிசை வெண்பா)

ஏனுரையீர்? உங்கட் கியைந்த துணையாவார்
யானொருத்தி மட்டன்றே; இன்னொருத்தி இங்குண்டே!
கண்ணன் பெயர்க்கேற்பக் காரிகையர் மேலுளரோ?
பெண்பித்து, வேறென் பிற.

(இன்சொலி பிணக்கங் கொண்டு அவர் அணைப்பினின்று அகல முயல்கிறாள்.)

முத்துக்கண்ணன்:

வேண்டா, விலகற்க; [1]வேண்மனையாள் நீமட்டே!
ஆண்டாண் டெதற்காம் அடுசினம்? ஆகாதே.

1. வேண் - விருப்பம், ஆசை.

தேடி யுனைச்சேர்த்தார்; தேனமுதே, தித்திப்பே!
ஏடி, எனைச்சேர்ந் திறுக்கு.

சாகாமல் மீண்டு தவித்துக் கிடந்தாற்கு
வாகாய் அமைந்தின்ப வாழ்வினையே கூட்டியவள்!
பாகாய் உருகியவள் பாதம் படிந்திரந்தும்
ஆகாள் மனைவியென அன்று.

உன்னிடத்து முன்னம் ஒளிவு சிறிதுமின்றிச்
சொன்னவன் நான்தானே? சூதுண்டா? சொல்லிடுக.
உன்னொடுநான் கூட உயரின்பங் கூடியதும்
அன்னவளால் ஆன அருள்.

இன்சொலி:

உண்மை உணர்ந்திடினும் உள்ளத் தொருநெருடல்;
பெண்மைக் கியல்பாம் பிறவிக் குறைபோலும்?
நாளும் உமைக்கலந்தும் நானடையாப் பேற்றைச்சின்
னாளுள் அவள்கொளலென்? நன்று!

முத்துக்கண்ணன்:

எப்போதும் எல்லார்க்கும் எல்லாம் இயைவதில்லை!
எப்போதும் உன்னோ டிணைந்திருப்பேன்; இல்லவட்(கு)!
அம்பெண் அவள்பெற்றாள்; ஆயினுமென்? அவ்வமுதை
நம்பெண் எனக்கொண்டு [1]நச்சு.

இன்சொலி:

போதும் புரட்டுமொழி; பொய்யெதற்கு மெய்யணைப்பில்?
மாதந் தவறாமல் மாதவளைக் காணற்குச்
செல்வீர் சிலநாட்கள்; சேதி தெரிந்திருந்தும்
ஒல்லாதென் றேனா? உரை.

நம்பெண் எனச்சொல்வீர்; நாளுமிவண் நானலிந்தும்
கொம்பவளை நம்மனைக்குக் கொண்டுவரச் செய்ததென்ன?

1. நச்சு - விரும்பு.

நம்பிக்கை என்பால் நகமுனையும் இல்லையதால்
கம்மென் றிருப்பீர் கரந்து.

முத்துக்கண்ணன்:

(பஃறொடை வெண்பா)

உன்றன் உளமறிவேன்; உண்மை உரைப்பதெனில்,
இன்றும்நம் பெண்ணை எதிரிருந்து பார்த்ததில்லை!
அப்பா எவரென் றறியாப் பெரியளவர்
இப்போ தெனைப்பொறுத் தேற்க இசைவாரா?
தந்தை பெயரன்றித் தானறியார் வேறெதையும்;
விந்தை விளையாதா வேற்றாள்போல் நானெதிர்ந்தால்?
தப்பாய்ப் பிறந்தமெனத் தாழ்வுணர்ச்சி மிக்கவராய்
எப்பாடு பட்டிருப்பார்! எப்படிப்போய் முன்னிற்பேன்?
தாயைப் பிறர்பழிக்கத் தாங்கா தரற்றியவர்
நாயைவிடக் கீழாய் நடத்தாரோ? கூறிடுக.
சின்னாட்கள் செல்லச் சிறந்தவழி சேர்ந்திடலாம்;
உன்னாசை ஒன்றும்; உணர்.

## காட்சி. 3

| | |
|---|---|
| **இடம்** | : அல்லி இல்லம். |
| **காலம்** | : மாலை மணி மூன்று. |
| **உறுப்பினர்** | : அல்லி, அல்லியின் தாய் மணிமொழி. |
| **சூழல்** | : அல்லி வெளியிலிருந்து விரைவாய் வீட்டுள் வருகிறாள். மணிமொழி எதிர் வந்து நிற்கிறாள். |

அல்லி:

(பஃறொடை வெண்பா)

இன்றி யமையா எனக்கானஆவணமொன்
றொன்று முடனென் றுரைத்தர்;நான் காத்திருக்க,
இன்னே வருகென்றாய்; என்பணியை விட்டுவிட்டு,
முன்னே இருப்பேன்; மொழிக நடந்தவற்றைப்
பேசியில் கூறப் பிடிக்கா தளவிற்குக்
கூசிடு செய்தியென்? கூறுகநான் கேட்டிடுவேன்.

(மணிமொழி மெல்லத் தன் கண்களைத் துடைத்துக் கொள்கிறார். அதைக் கண்ட அல்லி, அருகில் வந்து தாயின் கைகளைத் தேற்றுதலாய்ப் பற்றிக் கொள்கிறாள்.)

என்னம்மா? என்ன? எதற்கிங் கழுதிடுவாய்?
உன்னவர்க் கூறேதும் உற்றதுகொல்? சொல்லிடுக.
உற்றார், உறவினர், ஊரில் உளரெவரும்
இற்றார் எனுஞ்செய்தி எட்டியதோ? என்?சொல்க.
காலையில் பாட்டி கலகலப்பாய்ப் பேசினரே!
மாலையுள் என்னடந்த மாற்று?

மணிமொழி:

என்னைக்கங் கேதோ இடர்நலத்தில் உற்றதென்று
சொன்னார்;தான் யாரென்று சொல்லார்; தொலைச்செய்தி
கேட்டவுடன் உச்சி கிறுகிறுத்தும் சாயாமல்
மீட்டவரை வீடாது மேன்மேல் வினவிட்டேன்!
இன்னல் உடற்கென்றார், என்னென்று மேற்கூறார்.
சொன்ன அவர்சொல்லைச் சூழ்ந்துணர் முன்னர்
அறுந்த திணைப்பும் அழைத்துமீண் டேற்கார்!
அறிந்திடற் காறின்றி ஆற்றா தயர்வன்யான்!
ஐம்பதும் ஆகா அகவை; அதற்குளென்
நொய்ம்மை உடற்காம்? நுவல்.

அல்லி:

(சிந்தியல் இன்னிசை வெண்பா)

அப்பாவை நேரே அழைத்திடற்கென்? அங்காரும்
தப்பாகக் கொள்வரெனப் பேசத் தவிர்த்தனையோ?
இப்போதென் செய்க? இசை.

மணிமொழி:

(இன்னிசை வெண்பா)

அழையா திருப்பேனோ? ஆயின் பயனில்.
உழையார் உளரோ? ஒருவழி காணேன்;
உதவிடு வேலனும் ஊரிலிங் கில்லை;
உதவற் கொருவனே உண்டு.

அல்லி:

உற்றார் உறவினர் சுற்றமென மற்றவர்போல்
பெற்றிருந்தால் பின்னம் நமக்கும் பிறந்திருக்கா;
உற்றான் உதவற் கொருவனென்றாய்; யாரவனென்
சொற்றான் இனிதாம்;நீ சொல்.

மணிமொழி:

என்னண்ணன் பிள்ளை இருப்பான் உடனருகே;
உன்னிடத் துண்டெண், உடன்நீ அழைத்திடுக!

அல்லி:

மாமன் மகனா? மணியா? உடனங்கா?
ஆமவர்க்கும் வேலையென் அங்கு?

மணிமொழி:

(நேரிசை வெண்பா)

கற்றும் தொழிலின்றிக் கார்க்கால ஈசலென
வெற்றுக் கலைந்திளைஞர் வெந்திடுவர் - சுற்றித்
திரிந்துளைவார் தம்சூழல் தீயொழுக்கில் சேர்க்கும்!
தெரிந்ததுதான்; வேண்டாவா தீர்வு?

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

வலியிரு இளமைப் போழ்தே
வாழ்வழி அமைதல் ஏலேல்,
மெலிவுறும் உள்ளத் திண்மை;
மேவிடும் கள்ளத் தன்மை.
நலிவுறு முன்னுன் றந்தை
நயந்தவற் பக்கங் கொண்டார்.
[1]கலியலை கடற்குக் காணாக்
[2]காலுயிர்க் கென்ன நீரான்!

உடனழை! தந்தை யோடே
உடன்மணி இருப்பான்; [3]பேரான்.
உடனமை உறவு தேரான்,
உளறிடல் வேண்டா; உந்தை
உடனலங் குறித்திங் கியாரோ
உசாவுதல் ஒப்பக் கேட்க.
இடனறிந் தெண்ணிப் பேச
என்னுனக் கியம்பல் நானும்?

1. கலி - ஒலி. 2. கால் - காற்று. 3. பேரான் - பெயரான்: முதனிலை திரிந்தது.

## காட்சி. 4

**இடம்** : தனியார் மருத்துவ மனைத் தனியறை.
**காலம்** : காலை மணி ஒன்பது.
**உறுப்பினர்** : இன்சொலி, அண்ணன் மகன் அறிவு.
**சூழல்** : முத்துக் கண்ணன் கட்டிலில்; அருகில் இன்சொலி அமர்ந்திருக்க, எதிரே அறிவு நிற்கிறான்.

இன்சொலி:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

இன்றொடு பத்தும் ஐந்தும்
ஏகின; எனினும் என்ன?
ஒன்றுநன் றென்று சொல்ல
ஒருமொழி உரைத்தார் இல்லை!
வன்றிறல் வளியால் வீழ்ந்த
வாழையின் மெலிந்த தோற்றம்!
என்றிவர் நலமுற் றெய்தி
எழுந்திவண் நடப்பார் முற்போல்?

அறிவு:

அஞ்சுதல் எதற்காம் இன்னும்?
அத்தைநீர் வருந்தல் ஒண்ணா!
பஞ்சன நோய்தான் தன்னால்
பறந்திடும் திங்கள் ஒன்றுள்.
மிஞ்சிடின் மூன்று திங்கள்;
மீள்வர்முன் வலிவாய் மாமன்!
விஞ்சிடார் அவரை யாரும்;
வியந்திட வருவார், பாரும்.

இன்சொலி:

அயனரி பறந்த கழ்ந்தும்
அடிமுடி அடைதற் காகான்,
அயலமு மழலைக் காகப்
பாலமு தளித்த அன்னை
நயனனி அருள்வார் என்றே
நாளுநான் ஏற்றி வாழ்ந்தேன்;
பயனெனக் கண்ட தென்னே?
படர்துயர் கொண்ட தொன்றே!

இறையென எதுவு மில்லை;
இயற்கையே இறையே! உள்ளுள்!
இறையள வறிவு மாய்வும்
இருந்திடின் புரியும் யாவும்!
சிறையுள கிள்ளை ஒப்பச்
செப்புவார்; ஏற்றேன் இல்லை?
கறையுறை கண்டத் தெம்மான்
கருதலில் கொண்ட அன்பை!

நடப்பன தடுத்தற் காகா;
நாம்முயன் றென்ன? ஏகா?
சுடச்சுட ஒளிர்பொன் போலத்
துயர்படப் படவுள் ளோங்கும்.
கடப்பது கடினம் பற்றைக்
கவலுதல் வீணே; ஆயின்
தடுப்பதில்; சரிநீ சொல்க!
மருத்துவர் சாற்றல் என்ன?

அறிவு:

இனியவே சொன்னார்; மாமா
இயனிலை மீண்டார் என்றார்.
[1]முனிவளி குருதி நாள
அடைப்பெலாம் முற்றாய் [2]நீற்றாம்;
இனியெதிர் திரும்பா வண்ணம்
இருப்பதுங் கொண்ணல் லூணால்!

1. முனிவு - வருத்தம். 2. நீற்றல் - நீறாதல், பொடியாதல்.

எனினுமெய்ப் பயிற்சி ஏயின்
எய்துநீண் ணலமே என்றார்.

இன்சொலி:

உணவினிற் கட்டுப் பாடா?
உடன்படார்; அருமை ஏற்றல்.
பணியல தேதுங் காணார்;
பயிற்சியா? அரிதே, ஆற்றார்!

அறிவு:

துணிவவர்க் குண்டு; மேலும்
துணையென உள்ளோம் நாமும்.
பிணியினித் தொடரா தன்னார்ப்
பேணுதல் கடனாம்; வேறென்?

புகைகுடி பகையாம்; பற்றாம்
புலாலினைக் குறைத்தல் நற்றாம்.
வகைவகைக் கனிகாய் கொட்டை
வாய்த்திடல் உணவில் மேற்றாம்.

இன்சொலி:

புகைகுடி புலால்மற் றெத்தீப்
புன்மையும் இருந்த தில்லை:
நகைதரும் நல்லார்க் கிந்நோய்
நயந்ததும் நவையே, நன்றோ?

அறிவு:

எங்கெவர்க் கெப்போ தெந்நோய்
எய்துமென் றியம்பல் ஏது?
தங்கியுள் கருவாம் போதே
சார்ந்துடன் வளர்நோய் உண்டே!
நங்குலந் தழைக்கச் சேர்ந்த
நல்லர்நம் மாமா; சோரார்.
பொங்குளைப் புரவி போலப்
புதியராய் வருவார்; ஆமாம்!

சின்னொடி நெஞ்சச் சீர்மை
  சிதையவந் ததிந்தத் தீமை;
அன்னதன் விளைவே பக்க
  முடக்கமும் அசையா ஆறும்.
தன்னிலை மீளத் தானே
  தனித்துமே நடக்கப் பேச
ஒன்றிரண் டாமாம் திங்கள்;
  உரைத்தனர், கலங்கல் வேண்டா.

இன்சொலி:

அத்தனை காலம் ஆமா?
  அதுவரை இங்குத் தாமா?

அறிவு:

இத்தனை காலம் என்றோர்
  இறுதியில்; விரைந்தும் ஆமாம்.
ஒத்திடின் இன்றே மாலை
  உறையிலம் செலலாம்; ஒப்பர்.
நித்தமும் உதவற் கென்றோர்
  செவிலியை நிலையாய்க் கொள்வோம்.

இன்சொலி:

மாலையே செலலாம் என்றாய்,
  மகிழ்ச்சியே; நன்று, செல்வோம்.
வேலைகள் ஏற்ற பல்ல
  வேண்டிய செய்தற் குள்ள!
வேலைக்குள் மணிதான் செய்வான்,
  விடுப்பன்நான் விரைந்து; நீதான்,
மேலைகொள் மருந்து மற்ற
  வேண்டுவ தெரிந்து கொள்க.

அறிவு:

மருத்துவர் ஒவ்வோர் நாளும்
  வருவன்நம் வீட்டிற் கென்பார்!
வருத்தமில் அவர்க்கும்; ஏனா?
  மாமன்றன் வாழ்நாள் நண்பர்!

திருத்தமாய் நடக்கப் பேசத்
　　தேர்ந்தவர் பயிற்சி தம்மைக்
கருத்துடன் அளிப்பர் நாளும்;
　　கவலையென்? மாமா மீள்வார்.

இன்றிரா பணித்தொ டர்பாய்
　　ஏர்க்காடு செல்லற் குள்ளேன்.
நின்றிடேன், இரண்டு நாளுள்
　　நிச்சயம் மீள்வேன்; நேரில்
சென்றிடேல் நெடுநாள் நோக்கம்
　　சேர்ந்திடா திலையேல் செல்லேன்.
நன்றுமை இல்லிற் சேர்த்து
　　நலமெனிற் பின்னர்ச் செல்வேன்.

# காட்சி. 5

**இடம்** : மருத்துவ மனை முன் பகுதி.
**காலம்** : காலை மணி பத்து.
**உறுப்பினர்** : அல்லி, மணிமொழி, மணிமாறன், அறிவு.
**சூழல்** : அல்லி, மணிமொழி அப்பொழுதே அங்கு வந்து சேர, மணிமாறன் அவரோடு பேசிக் கொண்டிருக்கிறான்.

மணிமாறன்:

(பஃறொடை வெண்பா)

நேற்றென் முதலாளி நீர்மை தனையறிந்து,
வேற்றெவர்க்கோ சொல்ல விழைந்தது போற்கேட்டீர்;
இன்றோ இருவரும் இங்கென் எதிரிருப்பீர்!
நன்றாமோ இந்நடத்தை? நானுள் குழம்பிடுவேன்.
என்ன நடக்குதென் றியாரேனுஞ் சொல்லிடுக.
முன்னமிங் கென்றன் முதலாளி உங்கட்கு
நன்கு தெரிந்தவரா? நட்பா? உறவினரா?
என்று முதற்றெரியும்? ஏனெனக்குஞ் சொன்னதில்லை?
கூறுவதில் ஏதேனுங் கூச்சம் கொளற்குண்டா?
தேறுமுளம் நீர்விளம்பத் தேர்ந்து.

அல்லி:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

முட்டாளா மாமா நீயும்?
முன்பினென் எண்ணற் கில்லை!

மணிமொழி:

திட்டாதே அவனை; ஏதும்
தெரியாத சின்ன பிள்ளை!

அல்லி:

திட்டாமல் வேறென் செய்ய?
தேர்ந்தறி திறனேன் இல்லை?
எட்டாதா இவர்க்கும் ஏன்நாம்
இயைந்தமிங் குடனே என்று?

மணிமொழி:

யாருமுன் னறியார் என்றால்
இவன்மட்டும் அறிவ தெங்ஙன்?
பாரவன் முகத்தை; மேலும்
பழித்திடின் தாங்கான், வேண்டா.

அல்லி:

யாரினிங் குமக்கிவ் வேலை
எய்திய தென்றென் றேனும்
தேரிடுந் திறன்கொண் டிருந்தால்
உறவிடைத் தெரிந்தி ருக்கும்.

மணிமாறன்:

(நேரிசை வெண்பா)

அத்தைதன் ஆதரவால் ஆனதிவ் வேலையென்று
நித்தம் நினைப்பு நிலைத்திருக்கும் - இத்தனைநாள்
எப்படி அத்தைக் கியன்றதிஃ தென்றுநான்
எப்பொழுது மெண்ணிய தில்.

அல்லி:

முத்துக் கணாருன் முதலாளி உண்மையிலுன்
அத்தை மணவாளர்; ஆமறிக! - மெத்தப்
படித்தவென் மாமா! பரவுவன்யான், யார்க்கும்
அடுத்துரைத்தல் ஆகா தறி.

(அப்போது உள்ளிருந்து அறிவு அவ்விடம் சேர்கிறான்.)

அறிவு:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

ஏனடா, உன்னை எங்கே
இருவெனச் சொன்னேன்? நீயோ,
நானிவண் வந்து நான்கு
நாழிகள் கழிந்தும் நேராய்!

மணிமாறன்:

ஏனுடன் நம்மோர் நல்லோர்
இருப்பரே; குறையென்? சொல்க.

அறிவு:

ஆனவர் பல்லோர் ஏனும்
ஆவரா அவர்தாம் உன்போல்?

மணிமாறன்:

ஊரிருந் தத்தை பெண்ணும்
வருவதாய் உரைத்தர்; ஆக,
நேரினில் சந்தித் தேற்க
நேர்ந்தது; வேறொன் றில்லை.
நேரிரு இவரென் அத்தை;
நிழலனார் அவரின் பெண்ணார்.

(மணிமொழி, அல்லி இருவர்க்கும் அறிவு வணக்கம் தெரிவிக்க, அவரும் அவற்குத் தெரிவிக்கின்றனர்.)

அறிவு:

ஓரையம் உளத்து, முன்னர்
உங்களைப் பார்த்த தாக!

மணிமொழி:

இம்மியும் வாய்ப்பிங் கில்லை
எங்கும்யாம் சென்ற தில்லை.
தம்பியைப் பற்றிச் சொல்லத்
தவறினை, மணிநீ; சொல்க!

அறிவு:

உம்மரு மருகன் ஒப்ப
உடன்பணி செய்வோன்; ஆமாம்,
மெய்ம்மையே! நீங்கள் ஏற்ற
மேவுக; செல்வேன், நன்றி.

(அறிவு விரைந்து அங்கிருந்து அகல்கின்றான்.)

அல்லி:

உடன்பணி செய்வன் என்பார்;
உனையொரு பொருட்டாய் உன்னார்!
இடனறிந் தேற்பப் பேசும்
இன்னயம் சிறிதும் இல்லார்
மடன்மிக உற்றார் போலும்;
மதித்திடார் பிறரைச் சற்றும்!
கடனென நீயும் தாழ்ந்து
கையற்று நிற்பாய்; கூசும்.

மணிமாறன்:

அறிவையேல் அவர்யார் என்றே
அதிர்ச்சிநீ அடைவாய்; ஆமாம்.
உறவினில் உனக்கு மாமன்!
உண்மைதான்; உன்றன் தந்தை
பிறரிருந் தேற்றி வாழ்த்தப்
பெற்றபே றுடைய தூயர்;
அறனுரு கொண்ட தன்ன
அன்பினர்; உனக்குத் தாயர்!

மாதரார்க் கண்ணன் பிள்ளை;
மரபிலோர் செல்லப் பிள்ளை!
மோதலால் துயரே முற்றும்;
முதலவர்க் கவரே முற்றும்.
ஆதலால் அமைதி இல்லை;
அவரொரு நல்லர், வல்லர்!
காதலால் சொல்லேன்; என்றும்
கரவிலர், நம்பென் சொல்லை.

# காட்சி. 6

**இடம்** : மருத்துவ மனைத் தனியறை.
**காலம்** : காலை மணி பதினொன்று.
**உறுப்பினர்** : இன்சொலி, மணிமொழி.
**சூழல்** : முத்துக்கண்ணன் படுத்திருக்கிறார். கட்டில் அருகில் எதிர் எதிர் இன்சொலி, மணிமொழி இருவரும் நிற்கின்றனர்.

இன்சொலி:

(நிலைமண்டில ஆசிரியப்பா)

முன்பே உரைக்க முடியா நிலைமை!
என்னைப் பொறுக்க; எல்லாம் குழப்பம்.
அப்பா, அம்மா, அண்ணன், தம்பி;
இப்பால் தெரிந்தோர், இன்னும் பல்லோர்!
நாளும் தொடர்ந்து நலத்தை விழைந்து
வருவார், இருப்பார்; திரும்பார் விரைந்து.
இனியெதும் இடரிலை என்ற பின்னரே
வருகை குறைந்தது; வாய்ப்பும் அமைந்தது.
நன்கெனக் கறிந்த நல்லார் வழியே
இன்றோ, நாளையோ எப்படி யேனும்
உங்கட் குரைக்க உன்னினன்; அதற்குள்
இங்கு நீங்களே இயைந்தீர், இனிதே.

மணிமொழி:

(நேரிசை ஆசிரியப்பா)

செய்தி நேற்றே தெரிய நேர்ந்தது.
வெய்துணர் வொடுங்க வேதனை மீற

நேற்றே வரற்கு நினைத்தோம், நேரம்
ஏற்ற தாக இல்லை; அதனால்,
விடியலில் எழுந்து விரைந்து வந்தோம்.
இடியுறப் பற்றி எரிந்த மரமெனப்
படுக்கையில் கிடக்கப் பார்க்க
இடர்ப்படும் நெஞ்சம்; எந்நிலை இப்போ?

இன்சொலி:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

தலைவலி என்றும் என்றும்
தவறியும் உரைத்த தில்லை;
நிலைகுலைந் தலைந்து வீழ
நெஞ்சிடைத் தாங்கிக் கொண்டேன்.
குலையறுந் ததொப்ப உள்ளுள்
கொதித்தெழு துயர்க்கில் எல்லை!
இலையவர் உயிர்க்கெவ் வூறும்!
இயம்பினர்; அமைதி கண்டேன்.

அருகினில் அண்ணன் பிள்ளை
அறிவுடன் இருந்த தாலே
ஒருநொடித் தாழ்ப்பும் இன்றி
மருத்துவர் உதவச் சேர்ந்தார்!
குருதிசெல் நாளம் ஒன்றின்
குறையினால் நேர்ந்த துன்பம்
பரிதியின் பனிபோம் என்ன
பண்டுவம் தீர்த்த தின்னே.

நெஞ்சக அடைப்பு முற்றாய்
நீங்கின; திரும்பற் கில்லை.
மிஞ்சிரு முடக்கு நோய்தான்
வேதனை விளைக்கும்; ஆனால்,
அஞ்சிடற் கில்லை; ஆகும்
இயல்பினை அடையச் சின்னாள்.
மிஞ்சினால் நடக்கப் பேச
மேலிரு திங்கள் ஆமாம்.

மணிமொழி:

(இன்னிசை வெண்பா)

எத்தனை நாட்களாய் இங்குளார்? இன்னுமேல்
எத்தனை நாட்கள் இருந்திடல் வேண்டுமாம்?

இன்சொலி:

ஏகின இன்றோ டிருகிழமை; இங்கிருந்து
போகுவமிம் மாலைப் பொழுது.

மணிமொழி:

நல்லது செல்வதுதான்; நம்மவர் வந்துசெலும்
இல்லத்துச் சூழல் இனிய நனிபயக்கும்;
ஒல்லை உடனலத்தில் ஊட்டம் மிகவூட்டும்!
எல்லாரும் உண்டுதவ; எண்.

இன்சொலி:

(நேரிசை வெண்பா)

எத்தனையோ ஆட்கள் இருக்கின்றர்; என்றாலும்
ஒத்த தறிவாரா உண்மையிலே? - எத்திறத்தும்
ஒத்துடன் பக்கம் உதவியாய் நிற்பருளேல்
[1]நத்தும் உடனலமே நன்று.

தனியளாய் நின்று தவிப்பன்நான்; தாவில்
இனியராம் நீரிவர்க் கின்றும்! - இனியுமால்
பட்ட துயர்போதும்; பாருமவர் முகத்தை!
மொட்டு மலராம் முகிழ்த்து.

(இன்னிசை வெண்பா)

எந்த முகவுணர்வும் இல்லா திருந்தவர்நீர்
வந்தவுடன் கொண்ட மகிழ்வுதனைக் கண்டிடுக.
உந்துவலி உம்மிடத் துண்மை; உடனிருக்க
முந்தும் இயல்புநிலை முன்.

1. நத்துதல் - விரும்புதல்.

பெற்ற ஒருமகளைப் பேசும்பொற் சித்திரத்தை
உற்ற உயிர்தன்னை உன்னின் உயிர்ப்பவரைக்
கொண்டுவந்து முன்னிறுத்தக் கூடும் உடன்மீட்சி!
கண்டிடக் காண்பர் களிப்பு.

(பஃறொடை வெண்பா)

எங்கே அவருள்ளார்? ஏனுடன் சேரலிலை?
இங்கே வரற்கென் இனுந்தயக்கம்? இன்னாதே!
உள்ள இடஞ்சொல்க; உற்றவரை நான்கொணர்வேன்.
கள்ள மிலைபேச்சில்; காணத் தவங்கிடப்பேன்!
பிள்ளை இலாவெனக்கும் பெண்ணார் அவர்தானே?
அள்ளி அணைக்கவிழை ஆசைக் களவில்லை!
கூறும் உடன்செல்வேன்; கொண்ட சினமனைத்தும்
ஆறும் வகைபேசி அன்பிலிவண் அணைந்திடுவேன்.
பெண்ணை அவர்பார்ப்பின் பேச்சென்ன? தானெழுந்து
மண்ணிற் குதிப்பார் மகிழ்ந்து!

மணிமொழி:

(இன்னிசை வெண்பா)

இருப்பார் எதிரறையில்; இல்லைமுன் கோபம்.
விருப்பாய் உடன்வந்தும் வீம்பில் வெளியுள்ளார்.
தந்தையை நன்னிலையில் தான்பார்க்கக் கூடாதால்
நொந்துள்ளார் நெஞ்சு நொடிந்து.

# காட்சி. 7

**இடம்** : மருத்துவ மனைத் தனியறை.
**காலம்** : காலை மணி பதினொன்றரை.
**உறுப்பினர்** : இன்சொலி, அல்லி, மணிமாறன்.
**சூழல்** : தனியறையின் பக்க அறையில் அல்லி, மணிமாறன் அமர்ந்திருக்க, இன்சொலி உள்ளிருந்து வருகிறார். இருவரும் எழுந்து நிற்கின்றனர்.

இன்சொலி:

(தரவு கொச்சகக் கலிப்பா)

விடியல்முன் புறப்பட்டு விரைந்திடையில் நிற்றலின்றி
இடனிங்குச் சேர்ந்துள்ளார்; எனினிவர்க்கும் பசியிருக்கும்!
உடன்மணிநீ தாழ்த்தலின்றி உற்றவகை உணவுதமைக்
கடனறிந்து கொணரின்முன் களிப்புறுவேன்; சென்றிடுக.

மற்றுமொன்று சொல்லிடுவேன் மறந்திடுமுன், அறிந்திடுக.
இற்றைக்கே நாம்மாலை இவணீங்கி இல்செல்வோம்!
மற்றவர்க்கும் தெரிவிக்க! மாலைக்குள் மாடிமற்றுச்
சுற்றனைத்தும் முற்றுமிகத் தூய்மைசெயல் சிறப்பாகும்.

(மணிமாறன் அங்கிருந்து விரைந்து அகல்கிறான்.)

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

ஏனம்மா வெளியே இங்கே
இருப்பாயுள் வருதற் கென்ன?
நானுமிங் குனக்கோர் அன்னை!
நல்லட்டான், மாற்றாள் இல்லை.

தேனெனும் இதழ்தி றந்து
    செஞ்சொலால் அம்மா என்க.
நீநம்பு! பெண்ணாம் பேறே,
    உன்னாற்றான் நிலைக்கும் தெம்பு.

அப்பாவைத் தப்பாய் நீதான்
    அறிந்துளாய் என்ற வர்தான்
எப்போதுஞ் சொல்லிச் சொல்லி
    என்னிடம் [1]இரங்கல் கொள்வார்.
நப்போலச் சுற்றம் தாங்கும்
    நல்லருன் தந்தை! சற்றும்
தப்பேதுஞ் செய்யார்; யாரா?
    தாயருன் மேலார்; வேறார்?

எத்தனை காலம் ஆன
    எம்மகள் உன்னைக் காண?
எத்துணை மகிழ்ச்சி உள்ளில்!
    இயம்பிடற் கேற்ற சொல்லில்!
நித்தமும் நீயே என்ற
    நினைவதே உயிரில் ஒன்ற
[2]அத்தனுள் அறையில்; நேரின்
    அடைநலம் விரைவாம்; காண்பாய்.

தயக்கமென் இனியும்? தண்ணுண்
    தளிர்முகங் காணத் தந்தை
இயக்கமில் கைகால் யாவும்
    இயல்பினை ஏற்ப; முன்னர்
வியக்குறு மாற்றம் உன்றாய்
    அணைந்திட விளைந்த துண்மை;
பயக்குமுன் அண்மை நன்மை!
    பார்ப்பைநீ நேரில், சேரில்!

1. இரங்கல் - அழுகை. 2. அத்தன் - தகப்பன்.

# காட்சி. 8

**இடம்** : மருத்துவர் தனியறை.
**காலம்** : மாலை மணி ஒன்று.
**உறுப்பினர்** : மருத்துவர், அறிவு.
**சூழல்** : மருத்துவரின் தனியறையில் இருவரும் பேசிக் கொண்டிருக்கின்றனர்.

அறிவு:

(நேரிசை வெண்பா)

நேற்றே வரச்சொன்னீர்; நேரத் கியலவில்லை.
வேற்றூர் இருந்ததனால், வேறில்லை! - சாற்றிடுக.
என்னை அழைத்தமையென்? என்மாமன் இன்னலத்தில்
பின்னமெதும் உண்டோ பிற?

மருத்துவர்:

(பஃறொடை வெண்பா)

இங்கு வரும்போதே இன்றும் அவரிடத்துத்
தங்கி யுடனலத்தைத் தானாய்ந்து மீண்டேனுன்
மாமன் உடனிலையின் மாற்றம் மிகப்பெரிது!
ஆமவர் முன்போல ஆவர் அதிவிரைவில்!
பூப்போல் உடனுள்ளார் போற்றி உதவிடுவார்!
இப்போதே மெல்ல எழுந்தமர எத்தனிப்பார்.
ஈரிரண்டு நாட்களுள் இத்துணை ஏற்றமெனில்
தீரும் இடரனைத்தும் திங்கள் இரண்டுள்ளே.
நன்றெவர்க்கும் செய்நண்பர் நாளுமுடன் என்பொழுதைச்
சென்று கழிப்பேன் சிறிது.

அறிவு:

(தரவு கொச்சகக் கலிப்பா)

இருவருமக் கிடையிருக்கும் இன்னட்பை யானறிவேன்!
வெருவில்லேன்; அவர்நலத்தை விழைபலரிங் குடனிருப்பர்.
செருவர்க்கும் சிறப்பன்றிச் சிறிதளவும் சிறுமையெணா
அருளுளத்தர்; அவர்தேறின் அனைவர்க்கும் அமுதாமே.

மருத்துவர்:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

நேற்றுமுன் நாளில் இங்கு
நேர்ந்ததை எதிரில், நேரில்
சாற்றுவம் என்றே உன்னைச்
சார்கென அழைத்தேன் முன்னை.
போற்றுதற் குரித்தா செய்தி?
புரட்டதா? பொய்யா? மெய்யா?
வேற்றவர் உரைத்தி ருப்பின்,
வீணென விட்டி ருப்பேன்.

வந்தெதிர் அமர்ந்த பெண்ணார்
வடிவினில், நடையில், நோக்கில்
வெந்திறல் வேங்கை போல்வார்;
வென்றிடு பேச்சில் போர்வாள்!
தந்தையுன் மாமன் என்றார்;
தானலால் மரபில் என்றார்!
எந்தைக்கிந் நோயின் தாக்கம்
இயைந்ததெவ் வாறாம்? கேட்டார்.

இயற்கையாய் இயைந்த நோயா?
இலைபிறர் இடையூ றாலா?
வியற்றகு வலிமை மிக்கார்
விழுந்ததென் பாயில்? நக்கார்!
செயற்கரு செல்வங் கொள்ளச்
சேர்த்தரா மருந்தைக் கொல்ல?
மயற்கிட மின்றி நோய்க்காம்
வழிவகை உரைக்க! கேட்டார்.

அல்லியென் றுரைத்தார் பேர்தான்;
வழக்குறை அறிஞர் என்றார்.
மெல்லியர்க் கான அச்சம்,
மிகுந்திடு பயிர்ப்பு, நாணம்
இல்லவர் இடத்துச் சற்றும்;
எண்ணிடின், இந்நாள் பெண்தான்!
சொல்லிய உள்ளில் யார்க்குந்
தோன்றிடும் ஐயம் மெல்ல.

அறிவு:

தொடர்பிலா திறுதி ஏதோ
சொல்லுவீர்; தெளிவாய்ச் சொல்க.
இடர்விளை மருந்தை யாரே
ஈந்தனர்? எவ்வா றேனாம்?
உடனவர் துணைவி மற்றங்
குறவினன் நான்றான் இன்றும்!
சுடர்விளக் கணைத்திங் காரே
சூழிருள் அணைவார் ஆறே?

மருத்துவர்:

என்னைநீ அந்தப் பெண்போல்,
ஏதேதோ பிதற்றல் செய்வாய்?
முன்னவர் தந்தை என்று
மொழிந்ததை நினைவு கூர்ந்தேன்.
உன்னரு மாமன் உற்ற
ஊறது மருந்தால் இல்லை;
அன்னவர்க் கமைந்த அந்நோய்,
இயற்கையால்; அயலார் இல்லை.

முத்தினைத் தந்தை என்றார்;
முன்னமென் சொன்ன சொல்லில்?
எத்துணைச் சிற்ற சைவும்
இல்லவர் குரலில், நோக்கில்.
எத்தனை சிந்தித் தாய்ந்தும்
எழுவையம் தடுத்தற் கில்லை.
பித்தென மனத்துச் சூழ்வேன்;
பிழையதே, தவிர்த்தற் காகேன்.

# காட்சி. 9

**இடம்** : முத்துக்கண்ணர் அலுவலகம்.
**காலம்** : மாலை மணி இரண்டு.
**உறுப்பினர்** : அறிவு, மணிமாறன், தனி உதவியாளர் மேகலை.
**சூழல்** : அறிவு அப்போதே தன் அலுவலகத் தனியறையில் வந்தமர்கிறான். மேகலை எதிர் வந்து பேசுகிறார்.

மேகலை:

(குறள் வெண்பா)

ஏதேதோ ஈரிரண்டில் ஈங்கியைந்த எஞ்சலின்றி
ஓதா தொடுங்கா துளம்.

அறிவு:

(பஃறொடை வெண்பா)

எற்றுக்கு வந்தவுடன் ஏதேதோ சாற்றிடலும்?
சற்றுப் பொறுக்க; தலைவலிதான் மிக்கிருக்கும்.
ஏர்க்காட் டிருந்திடை எங்கும் நிறுத்தாது
வேர்க்க விறுவிறுக்க வெய்யில் மிகவருத்தச்
சேர்ந்தேன் விரைந்து; சிறிதும் உணலில்லை!
சோர்ந்தேன் உடலாலும்; சூழல் புரிந்தேற்பச்
சூடாய்க் குடித்தற்கும் தோதாய்ச் சுவைத்தற்கும்
கூடாய் உடனெனக்குக் கொண்டு.

மேகலை:

(இன்னிசைச் சிந்தியல் வெண்பா)

நாடி உமைக்கேட்டு நம்மணி நாளுமிவண்
தேடி வருவார்; தெளிய எதுமுரையார்!
வாடுமுகம் முன்னர் வரும்.

அறிவு:

யார்க்கு மணியுற வென்றானார் நம்மரெனப்
பார்த்தால் வரச்சொல்; பசிமுந்தும், சென்றுவுடன்
ஏற்ற இயைக இனிது.

(அறிவு கோப்புக்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறான். சற்று நேரத்தில் அங்கு மணிமாறன் உள்ளே வருகிறான்.)

அறிவு:

(பஃறொடை வெண்பா)

வருக மணிமாற! வந்தமர்க; என்னை
இருநாட்கு மேலாய் எதுகுறித்துத் தேடிட்டாய்?
சென்றதும் எங்கென்ற செய்தி தெரிந்திருந்தும்
நன்றன்றே நாடி நலிந்ததுவும்! சொல்லிடுக.
மேகலையைக் காணற்கு மேவுவை; அஃதன்றி
ஆகவினி வேறென் அறை.

மணிமாறன்:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

உன்னெதிர் நின்று பேச
உறுத்துமென் உள்ளம்; கூசும்.
என்னைநீ இழிவாய் எண்ணல்
இயல்பதே; யாரும் போற்றார்!
முன்னம்நான் அறிவேன் இல்லை;
மொழிந்திடல் உண்மை; நம்பும்!
இன்னலென் உளத்தைத் தேய்க்கும்
இளிவரல் உயிரைப் போக்கும்.

அறிமுகம் செய்த ஞான்றே
    அறிவனுள் ளுறவு தம்மைக்
குறளினும் உணர்வு குன்றக்
    குறையிரந் ததிர்முன் நிற்பேன்;
சிறியனென் றெண்ணு வாயோ?
    சீச்சீயென் றிகழ்வை யாயோ?
வறியவன் அன்ன நான்தான்
    வருந்துதல் அன்றி வேறென்?

அறிவு:

சொல்வதைச் சுருக்க மாகச்
    சுவைபடத் தெளிவாய்ச் சொல்க.
அல்லியுன் அத்தை பெண்தான்;
    அவரேயென் மாமன் பெண்ணாம்!
இல்லையா? இதைத்தான் நீயும்
    இயம்பிட முயல்வாய் இன்று?
தொல்லையில்; அறிவேன் முன்பே!
    துயரெதற் கமர்க முன்னே.

(மணிமாறன் எதிரே நாற்காலியில் அமர்கிறான்.)

மணிமாறன்:

முன்னரே அறிவன் என்றா
    மொழிந்தனை? மெய்மை தானா?
என்னவர் எவருந் தேறார்;
    எங்ஙன்நீ அறிந்த வாறாம்?

அறிவு:

என்னொரு திங்கள் தோறும்
    எங்கிவர் செல்வார் என்றே
முன்னொரு காலந் தன்னில்
    மாமன்மேல் மூண்ட ஐயம்.

தொடர்ந்திட ஏவல் செய்தேன்;
    தொழிலினின் வல்லார் தாமும்

இடந்தலைப் பட்டுக் கண்ட
　　இருவர்தம் கூட்டைச் சொற்றார்.
நடந்ததை, உறவை, நல்லோர்
　　மகவுள நன்மை சொன்னார்.
படந்தமில் பார்த்த துண்டு;
　　பார்த்ததோ எதிரில் அன்றே.

போதுமிவ் விளக்கம்? எல்லாம்
　　புரிந்தவா? இவற்றின் மிக்க
ஏதுமிங் கியம்பற் குண்டா?
　　இருப்பின்நீ உரைக்க; கேட்பேன்.

மணிமாறன்:

ஓதுதற் குண்டென் றாலும்
　　உதறிடும் வாய்மெய் சொல்லத்
தீதெனத் தெரிந்தும் வாரிச்
　　சேற்றினைத் தெளிப்பார் யாரே!

(அப்போது மேகலை சிற்றுண்டியோடு பணியாள் தொடர உள்ளே வந்து, அவற்றை அறிவு முன்னர் எடுத்து வைக்கிறார். முடிந்ததும் பணியாள் வெளியேறுகிறார்.)

அறிவு:

(பஃறொடை வெண்பா)

ஏதேதோ ஈரிரண்டில் இங்கு நடந்தவற்றை
ஓதா தொடுங்கா துளமென் றுரைத்தனையே!
யாவை நடந்துற்ற? என்துயரம் யார்க்குற்ற?
மேவை சொலற்குநீ, மென்றபடி கேட்டிடுவேன்.

மேகலை:

எங்குத் தொடங்குவ தென்று புரியலில்லை;
எங்கும் பரபரப்புத் திங்கள் முதலிங்கே!
ஐயா அமரிடத்தில் அல்லி எனும்பெயரார்
மெய்யாய் இருந்திங்கு மேலாண்மை செய்கின்றார்!

தன்னந் தனியரிலை, தாளாண்மை உள்ளசிலர்
அன்னர்க் கருந்துணையாய் ஆனர்; அவரோடு
நல்லான் எனுநண்பர் நல்ல வழக்குரைஞர்!
எல்லாம் அவரிவர்க் கிங்கு.

(அறிவு மணிமாறனைப் பார்க்கிறான்.)

மணிமாறன்:

(இன்னிசைச் சிந்தியல் வெண்பா)

ஆமவர் சொல்லனைத்தும் அப்பழுக்கில்; உண்மையுன்
மாமன் செயலுரிமை மாற்றம் அவர்பெயரில்
தந்துளார்; இல்லை தடை?

(அப்போது உள்ளிடத் தொலைப்பேசி மணி ஒலிக்கிறது. மேகலை எடுத்துப் பேசுகிறார்.)

மேகலை:

(குறள் வெண்பா)

என்ன? இருக்கின்றார்; இப்போதா? இன்னேயா?
நன்று, மொழிந்திடுவேன் நான்.

(மேகலை பேசியை வைத்துவிட்டுப் பேசுகிறார்.)

இன்னே வருகென் றிளவரசி யாரேவல்!
மன்னர் மகளொப்ப [1]மதர்ப்பு.

அறிவு:

(பஃறொடை வெண்பா)

உண்மை அதுதானே! உண்டா மதர்ப்பென்று
கண்டறிந்து சொல்வேன்; கருதின், பணியிடத்துத்
தம்மின் சிறியோரைத் தாழ்த்தி இழிதவற்றை
நம்மின் உயர்ந்தோர்க்கு நாமிழைத்தல் நன்றன்றே.
ஒல்லும் வகையெல்லாம் உள்ள உறுத்தலினைச்
செல்லிடத்துங் காத்தல் சிறப்பு.

1. மதர்ப்பு - செழிப்பு, அழகு, மிகுதி.

## காட்சி. 10

**இடம்** : முத்துக் குமரன் இல்ல வாயில் முன்.
வரவேற்பறை

**காலம்** : மாலை மணி ஆறு.

**உறுப்பினர்** : அறிவு, இன்சொலி, மணிமொழி.

**சூழல்** : அறிவு கண்களை மூடியபடி சாய்ந்து
படுத்திருக்கிறான். அப்போது அங்கு
இன்சொலி வருகிறார்.

இன்சொலி:

(பஃறொடை வெண்பா)

எப்போது வந்தாய்நீ? ஏனிங் கமர்ந்திருப்பாய்?
தப்பாது வந்தவுடன் தாவியணை கன்றனையாய்,
இப்போது மட்டுமென் இங்குத் தனித்திருப்பாய்?
இப்பாலுன் மாமன் இருநிலையைக் கண்டாயா?

அறிவு:

வந்ததுமே பார்த்தேன்; மகிழ்ச்சிக் கணையில்லை.
இந்த நிலைநீடில் இன்னுமொரு மாதத்தில்
முற்றும் உடனலத்தை முன்போலப் பெற்றிடுவார்.
சற்றுமெனக் கையமில்லை; சாலும் நினைப்பவையே.

இன்சொலி:

எற்றுக்குப் பின்னர் இருப்பாய் தனியாக?
மற்றெதும் உண்டோ மனத்து?

அறிவு:

(கலி வெண்பா)

நல்லவையா? இல்லை, நகுதற் குரியவையா?
சொல்ல மனங்கூசும்; சொல்லேல் தவறாகும்!
ஈரிரு நாட்களேர்க் காட்டிருந் தின்றுபகல்
சேர வியப்பென்னைச் சேர்ந்த நிகழ்ந்தவற்றால்!
யாரும் எனையெதிர் ஏறெடுத்தும் தாம்பாரார்;
வாரும் எனவொருசொல் வாய்திறந்துங் கூறார்!
நிகழ்ந்த தியாது? நிலைமையிலேன் மாற்றம்?
இகழ்தற் குரிய எதுவுநான் செய்தேனா?
ஒன்றும் புரிதலின்றிச் சென்றென் அலுவலினில்
என்றும்போல் ஒன்றி இருக்க, எனைத்தலைமை
வாவென் றழைத்ததாய் வந்தவொரு செய்தியதால்
தாவி யொருகாளை தாக்கவெதிர் பாய்ந்ததென
மேவ அதிர்ச்சியெனை மெய்மறந்து நின்றிட்டேன்
ஆவ தறியா தடுத்து.

இன்சொலி:

(கொச்சகக் கலிப்பா)

மாமாவோ வீட்டோடு; மாற்றென்றால் நீமட்டே!
ஏமாற்றுப் போல இருக்கிறதே, என்செய்தாய்?
ஆமாம் அவர்யாராம்? முன்னர் அறிவாயா?
நாமேதும் செய்யேல் நலிவு மிகச்சேரும்!

அறிவு:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

ஏதுநாம் செயற்கே தில்லை;
 எல்லாமே மாமா ஏற்பால்!
போதிய உரிமை மாற்றம்
 புரிந்துளர் சட்டத் திற்குள்!
ஆதலால் அனைத்தும் அன்னார்
 ஆளுமைக் கீழ்தாம்; நானும்!
ஏதமில்; மாமா எண்ணம்
 ஈதெனின், இனிய வேறென்?

இன்சொலி:

யாரவர்? எதற்குன் மாமா
    எடுத்ததிம் முடிவை? யாரின்
நேரிலர் அவரோ? உன்னின்
    நெருங்கிய உறவோ? என்னாம்?
சீருடன் இந்நாள் தன்னின்
    செல்லமாய், மரபாய் உன்னை
யாரினும் முதலாய்க் கொண்டார்;
    என்னிவண் மாற்றம் கண்டார்!

அறிவு:

(நேரிசை வெண்பா)

உங்கட் குணர்த்தா தொருமுடிபை மாமாமுன்
எங்கென் றெடுத்துள்ளார்? யானறியேன்! - இங்குநட
எல்லாந் தெரிந்திருந்தும் ஏது மறியார்போல்
சொல்லாடல் நன்றன்றே, சூது!

முன்பின் னறியாதா முற்ற முழுப்பொறுப்பை
என்னின் னிளையோர்க் கிசைந்தியைத்தார்? - உன்னின்விண்
மின்ன லொளிக்கீற்றின் வெண்ணிலவு மேலிலையா?
என்னின் னவர்மேற்றா னீர்ப்பு.

இன்சொலி:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

ஏதிலன் ஏய்ப்ப என்நீ
    ஏதேதோ இயம்பு கின்றாய்?
கோதறு குலந்த ழைக்க
    வந்தநற் குணத்தன் நீதான்!
தீதுனைச் சேர அத்தை
    தெரிந்தொரு செயலைச் செய்யார்!
ஆதலால் நடந்த என்ன?
    அறைகநீ தெரிய யாவும்.

அறிவு:

(வேறு)

அல்லி என்ப தவர்பெயரே!
அறிவீர் அனைத்தும்; அறிவேன்நான்.
சொல்லிக் கேட்கச் சுவைதாமோ?
சொந்தம் அவர்தான்; நவையாமோ?
செல்லங் கொடுத்தே எனைக்காத்த
செய்கை பொய்மை; சரிதானே?
நல்லர் அவர்தாம் மரபிற்கே!
நன்றே, தவறில்; நானேற்பேன்.

(நேரிசை வெண்பா)

பாலும் பழஞ்சோறும் பற்றோடு நாடோறும்
ஏலும் அளவிற் கியைத்தென்னை? - சாலவெனை
ஊட்டி உவந்திடினும் உங்கள் உணர்வொருங்கு
நாட்டமென்றும் பெண்ணிடத்தே! நன்று.

இன்சொலி:

(இன்னிசை வெண்பா)

எல்லாந் தெரிந்தவன்போல் ஏதேதோ பேசுகிறாய்?
பொல்லாப் புனக்கும் பொருந்தாதே! போற்றுவர்யார்?
அண்ணன் மகன்நீ அனைவரினும் மேலெனக்(கு)!
எண்ணின் உணர்தல் எளிது.

என்பெண்ணே என்றாலும் என்னண்ணன் ஈன்றளித்த
உன்னினவர் உன்னின் உயர்வாமோ? ஊரறியும்!
உற்றவென் னையன் உறவின் உடன்பிறந்தார்
பற்றன்றோ என்றும் [1]பரிது.

அறிவு:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

பிள்ளையொன் றில்லை என்ற
பேதைமை ஒன்றத் தன்னைத்
[2]தள்ளையென் றழைக்க என்னைத்
தன்மக னெனவ ளர்த்தீர்!

1. பரிது - பெரிது. 2. தள்ளை - தாய்.

கள்ளமில் வளர்ப்பில், நோக்கில்;
　　கறையிலை கொண்ட வன்பில்!
உள்ளொரு மகளென் றின்றோ
　　உணர்ந்துள உயர்வு கொண்டீர்.

தவறெனச் சொல்லேன், சாலத்
　　தகுவதே; தன்னின் மாற்றார்
பெற்றநன் மகவைப் பெண்ணைப்
　　பேறெனப் பீடாய் ஏற்றீர்!
மற்றவர் தூற்றற் கஞ்சா
　　மனத்தினை மதித்தல் செய்வேன்.
உற்றவர் உமக்கும் பெண்தான்;
　　உவகையே, வருத்தம் இல்லை.

(தரவு கொச்சகக் கலிப்பா)

வருவழிமேல் வருவழியாய் வளர்ந்துவரு வளங்களெல்லாம்
ஒருமகளாய் உருவெடுத்த ஒருவரவர்க் குரித்தாகும்.
இருவரிடை இருவுறவிங் கியல்நெறிக்கே எதிரெனினும்
அருமாமன் மகளவரே; அதிலெவர்க்கும் எதிர்ப்பிலையே!

இன்சொலி:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

இத்துணை நல்லன் நீயா?
　　எண்ணினேன் இல்லை; மெய்யா?
சொத்தளி பதவி ஆண்மைச்
　　சுவைநனிக் கண்ட தாலே
[1]நத்துவை செல்வம் என்றே
　　நம்பினன்; தவறே! உன்னை
ஒத்தொரு உரவோன் தன்னை
　　உறவிடைக் கண்டேன் இல்லை!

அறிவு:

தன்னணன் மக்கள் ஐவர்
　　தம்முளுள் தடுக்கத் தங்காப்

1. நத்துதல் - விரும்புதல்.

பின்னவன் எனப்பி ழையாய்ப்
பிறந்தகீழ்ப் பிசிறாம் என்னை
மன்னவன் எனவ ளர்த்தீர்;
மறப்பனோ கொண்ட அன்பை?
மன்பெறு உயர்வுற் றாலும்
மாமன்றன் அடியன்! மாறேன்.

இன்சொலி:

(கொச்சகக் கலிப்பா)

எல்லா முனக்கென் றிருந்த திருவனைத்து
மில்லாம லிந்நா ளியைந்தது மென்பெண்ணால்!
சொல்லா யெனினுந் துயரகத்தே சூழ்ந்திருக்கும்;
நல்லா ரவராகும்; நம்பு, பகைவேண்டா.

அறிவு:

அத்தையம் பெண்ணெனக் காகாதா ராவாரா?
தத்துகடல் போலத் தடுமாற்றம் தானெதற்கு?
நத்து மவர்நலத்தை நாளு முளநாடி
யொத்த துணையாவே னோர்க வுளமகிழ்வே.

(தரவு கொச்சகக் கலிப்பா)

மாமன்றன் மகளவரே, மரபிற்குத் தனியவரே.
பூமலர்தா முறுப்பெனவே பொருந்திய வெழிற்றோற்றம்
தூமனத்தர் சொலல்வல்லார் துயரகற்றுச் செயற்றிறத்தர்
[1]ஏமமினி யெவர்க்குநிலை யெனக்குமிலை யுளமலைவே.

(அப்போது சிற்றுண்டித் தட்டேந்தி மணிமொழி அங்கு வந்து சேர்கிறார்.)

மணிமொழி:

(குறள் வெண்பா)

தம்பிசிற் றுண்டி தகுமிவ் வேளைக்குத்
தெம்புமிகச் சேரும் தெளிவு.

1. ஏமம் - இன்பம், களிப்பு, வலிமை.

இன்சொலி:

(இன்னிசை வெண்பா)

அக்கா, இவனென்றன் அண்ணன் மகனறிவு!
தக்கான், அவர்க்குத் தகுந்த துணையாவான்;
எக்காலும் யார்க்கும் இனியவே எண்ணிடுவான்.
மிக்கார் இவனினில் மேல்!

மணிமொழி:

(பஃறொடை வெண்பா)

வந்தநா ளன்றே வழியிடைத் தம்பியைச்
சந்தித்துப் பேசச் சமைந்த தமையமும்!
அந்தப் பொழுதே அவரின் குணங்களும்
சிந்தைத் தெளிவும் தெரிந்த; தெளிந்தேன்.
வருமுன் இருவரும் வாய்மொழி கேட்டுள்
உருகுமென் உள்ளம் உவந்து.

அறிவு:

(சிந்தியல் வெண்பா)

மாறன்றன் அத்தையென மாற்றம் உரைபோதே
உண்மனத் தேதோ உறுத்திற் றுரைத்திடுக!
உண்மையிலே என்னோ உறவு?

இன்சொலி:

(நேரிசை ஆசிரியப்பா)

அறிவாய் அனைத்தும்; அறியாய் என்னக்
குறியாய்க் கேட்பாய், குறியாய் நெறியை?
என்னின் எவரின் யாவும்
உன்னின் உணர்ந்தார் உன்னின் உளரோ?

மணிமொழி:

(பஃறொடை வெண்பா)

தம்பி! எதற்கித் தகவில் உரையிடை?
இம்பர் உமைப்போல் எனக்கொரு பிள்ளை
வரமுன் னமையா வருத்தம் எதிரும்

குரலென் செவியிணை கொண்டிடக் கொண்டேன்!
இடரொன் றவர்மெய்க் கியைந்ததைத் தேடி
உடனிலை ஆயினும் உற்றுழிச் சேர்த்த
குரலை மறத்தலுங் கூடுமோ? உம்போல்
ஒருமக [1]வேய்தல் உயர்வு.

அறிவு:

(குறள் வெண்பா)

சொல்வ சுவைதருவ; ஆயினுமென்? சொற்பொருளை
நல்கலில்; நன்றோ? நவில்.

மணிமொழி:

(நேரிசை வெண்பா)

தன்னந் தனியளெனத் [2]தன்னைபிற சுற்றமின்றி
என்னொருத்தி பெண்ணோ டிருக்கின்றாள்? - இன்னும்
[3]இறுவிழி சொற்கேட் டிருந்ததுமுன் மாமன்
உறவொன் றுயிரிருந்த [4]ஊங்கு.

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

திடமுடன் இருந்தார் தானும்
    சிறைபடு குருதிச் சோர்வால்
திடுமென விழுந்தார் என்னும்
    செய்தியைச் சொன்ன தாராம்?
உடனிருந் துற்ற தாற்ற
    உம்மினும் உற்றார் உண்டா?
இடரெலாம் இன்றி யாமிங்
    கிணைந்துளோம்; யாரால்? உம்மால்!

அளவரு சொத்துப் பத்தும்
    ஆளுமைக் கீழே; முற்றும்
உளவவை உமக்கே! மாமன்
    உரைத்ததும் பொய்யோ? மெய்யே!

1. ஏய்தல் - பொருந்தல், அமைதல். 2. தன்னை - தன் + ஐ: ஐ - கணவன், தலைவன். 3. இறுவிழி - இறு + இழி. இறு - இறத்தற்கான. 4. ஊங்கு - சிறப்பு, மிகுதி, மேம்பாடு.

உளநிறை யான்றோ ரேனும்
    உடன்படார் உடனொன் றீய!
இளவனீ இயைந்த யாவும்
    ஈந்தனை; இயல்போ? கூறும்.

அறிவு:

(பஃறொடை வெண்பா)

மாமன் மகளென்றோ, மானார் அழகென்றோ,
ஆமாம்; அழகவர்தான்! ஆக அதற்கென்றோ
இங்கெனக் கென்ற இரும்பெரும் சொத்தையெலாம்
நீங்க நினைத்தேனோ? நிச்சயம் உண்மையில்லை.
நல்லனாம் என்பதாலே நம்மகட் கீந்தனெனச்
சொல்லலாம், உண்மையிலை; சொல்வதென்றால், உம்மகட்டான்
எல்லா வளங்கட்கும் என்றும் உரியவரே!
செல்லா பிறர்க்குஞ் சில.

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

வழிவழி வளர்ந்த செல்வம்
    வரன்முறை மரபின் காற்கே!
இழிவிலை மகளே ஈன்ற
    ஏதிலர் எனினும் சட்ட
வழிமுறை அவரும் காலாய்
    வரித்திடும்; உரிமை ஈயும்.
விழுமிய காதல் வித்து;
    விளைத்ததோர் விலையில் முத்து!

மணிமொழி:

இருட்டுறை பூச்சி என்ன
    இருந்தவெம் மிருவர் வாழ்க்கை
அருட்டிரு நம்பி உம்மால்
    அகலிட நிலவென் றாச்சு!
பொருட்டரு நலத்தின் அன்பைப்
    பொருளெனப் போற்றி நின்றை!
மருட்டவிர் புலத்து மாசில்
    மனத்தினை! வாழ்வோம் உம்மால்.

அறிவு:

(நேரிசை வெண்பா)

உள்ள உறுத்தலொன் றுண்டும் மகளென்னைக்
கள்ள மனத்தனெனக் காண்பலெனை? - விள்ளவரு
மன்னன் மகனென்ன மாமன் எனைவளர்க்க
உன்னுவனோ இன்னுயிர்க்கும் ஊறு?

ஊறு விளைத்தற்காம் ஒவ்வா மருந்தெதையும்
வேறெவரும் சேர்க்க விழைந்தனரோ? - கூறிடுக!
நல்லர் மருத்துவரை நாடியும் பெண்கேட்பார்!
கொல்லுமென் னெஞ்சைக் குறை.

குறைதலிலா அன்பகத்துக் கொண்டார்க்குக் குற்றம்
இறையளவும் எண்ணுவதோ சுற்றம்? - இறையெனவே
என்றுமெம் நெஞ்சம் இருமாமன் இன்னலம்
ஒன்றுவனோ குன்றவெதும் உள்?

மணிமொழி:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

தனியளாய்த் தந்தை சொந்தம்
தகுதுணை சுற்ற மென்ன
எனையலால் எவரும் இன்றி
வளர்ந்ததால் இயைந்த ஐயம்!
அனையையும் நம்பாள்; ஏனா?
அஃதவள் வளர்ந்த சூழல்!
நினையிவை, புரியும்; நெஞ்சம்
நெகிழ்ந்திடும்; நெருடல் நேரா!

இன்சொலி:

தவறுதான்; அவளே சொன்னாள்!
தயக்கமில்; தவற்றை ஏற்பாள்.
எவரையும் வருத்தற் காக
எண்ணிலள்; ஏதோ உந்தல்!
கவருடை மனத்தள் இல்லை;
காதலள் அனைவர் மாட்டும்.

உவரிலா நஞ்செய், நல்லள்!
உனக்கவள் உரியள் உண்ணாள்!

மணிமொழி:

காட்டொரு மின்னல் என்னக்
காத்தனை; மீட்டீர் எம்மை!
வீட்டனை பொருண்மேற் பற்றை;
விழைந்தெமை உறவாய் ஏற்றை!
ஏட்டினில் எழுதற் கேலா
எழிலவள் எந்தம் பெண்தான்
கூட்டெனத் துணையாய்க் கூடின்
குறையிறும்; நிறைவே நீடும்.

அறிவு:

(கொச்சகக் கலிப்பா)

வேண்டா எதிர்பார்ப்பால் வேதனையே; வேண்டாவே!
ஈண்டார்க் கியாரென் றெவருறுதி கூறவலார்?
கூண்டோர் கிளியில்லை கூறிய தான்கூறத்
தீண்டார் கனவினிலும் தீயன்நான் தேமொழிக்கே.

யாரோ அவரில்லை; என்மாமன் பெண்ணுயிரே!
சீரோ டவர்சிறக்கச் சேர்ப்பன் செயலனைத்தும்.
தீரா பழியெனினும் தேவைக் குடனிற்பேன்.
வாரா திவண்வந்த வாணில விம்மனைக்கே.

சட்டம் படித்ததனால் சற்று முரண்டிடுவார்;
குட்டக் குனிவரிலை, கூற்றில் குறியுடையர்!
ஒட்டற் கரியரென உண்ணடத்தை காட்டிடினும்
நட்டற் கினியவரே, நல்லவரே, நம்மவரே.

இன்சொலி:

(தரவு கொச்சகக் கலிப்பா)

ஏதேதோ பயனற்ற எதற்கிங்குப் பகர்ந்திடலும்?
ஓதாதே உணர்ந்தனையோ? உமைமுலைப்பால் உண்டனையோ?
தீதேதோ பயக்குமெனத் தெரிந்தவன்போல் விரித்திடுவாய்;
சூதேதுங் கொளலின்றிச் சொலுமெதிரே உளந்திறந்து.

அறிவு:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

நடப்பன நடந்தே தீர்வ;
நம்பலேல், நகைப்பே சேர்வ.
தொடுத்திடு செய்கைக் கேற்பத்
தொடர்வபின் வினைகள் யாவும்.
அடுத்தவென் னடுக்கும்? ஆரே
அறுதியிட் டறையற் காகும்?
விடுத்தனம் வேட்கை என்றால்
விளைவன [1]பூட்கை யார்க்கும்!

அல்லியிங் கறிவில் அன்பில்
ஆற்றலில் எதிர்ப்பார் இல்லார்.
மெல்லியர் மெய்யால்; சொல்லில்
மேலவர்; யாரும் வெல்லார்.
வல்லவர் நல்லோர் ஆணை
வரித்துளம் இருத்தல் கூடும்.
நல்லதில் நம்முள் வேட்பை
நாம்வலிந் தவர்க்கு ரைத்தல்!

இன்சொலி:

(நேரிசை வெண்பா)

சொல்வ தவறில்லை; சொத்தனைத்தும் சொந்தநமக்
கில்லொருவர் துய்க்க விடனாமே! - நல்லதில்லை.
ஆசையெம் பெண்மீ தமையா வருமையதன்
கூசாமல் காரணத்தைக் கூறு.

அறிவு:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

பெண்வழிச் சேர லான
பெறுதலைப் பேணேன்; பேசு
மண்பொனென் உலகச் செல்வம்
மலைவவை; நிறைவைத் தாரா.

1. பூட்கை - மன வுறுதி, வலிமை.

எண்ணரு அழகு மென்மை
 இளமையின் இயல்பே; உம்பெண்
உண்ணினைந் துருகற் கேற்ற
 உருவெழில் உடையர்; உண்மை!

இளமையு நில்லா; யாக்கை
 எழிலுமின் னினைப்பு நில்லா.
உளவிவை என்று சொல்ல
 உடன்வரு பொருளிங் கில்லை!
களியளி காமக் கூட்டம்
 கருதிடின் கணமே, நீடா.
தெளிவுறப் பற்றொன் றோடத்
 தேய்வ[1]முக் குற்றந் தாமே!

இங்குநான் இருநாள் மட்டும்
 இன்றுணை உங்கட் காவேன்!
தெங்கென இதுநாள் கொண்ட
 செஞ்சோற்றுக் கடனைத் தீர்ப்பேன்.
நுங்கென அன்றி நுங்கள்
 நுகர்வினுக் கெளிய னாவேன்.
நங்கையும் மகளார் நாளும்
 நலமுறத் துணையாய் நிற்பேன்.

இன்சொலி:

கசக்குமோ கரும்புந் தின்னக்
 கடுக்குமோ கனிதான் உண்ண?
[2]நசைக்கொரு காட்டே என்ன
 நம்மகட் கிணையா ருண்டே!
இசைக்குளம் இளகார் ஒப்ப
 இருப்பனிங் கவட்கு வேண்டா.
வசைக்கிட மாகும் நாமும்
 வலிந்திவர்ச் சேர்த்து வைத்தல்!

1. முக்குற்றம் - காமம், வெகுளி, மயக்கம். 2. நசை - ஆசை, அன்பு.

மணிமொழி:

செய்தநல் வினைகள் தம்மைத்
தெரிந்துளள்; அறிவள் உம்மை.
எய்தினி துணைநீர் என்றே
எம்மகள் உணர்வள்; ஏற்பள்.
பெய்தளி மழையின் நல்லாய்,
பேறவள்; எளிதில் கிட்டாள்!
[1]கைதவம் இல்லை சொல்லில்;
களிப்பர்நீர் மணப்பில்! மாற்றில்!

அறிவு:

தனக்கென முயலும் [2]நோன்றாள்
தவிர்த்திட முயல்வ தல்லால்,
எனக்கெனத் தனியோர் எண்ணம்
இருந்ததில்; இன்றும் இல்லை.
[3]நுனிக்கரு உள்ளத் தல்லி
நுங்கட்கும் உவப்பஃ தாயின்,
எனக்குமிங் கேற்பே; என்றும்
இனியன ஆற்றல் ஒன்றும்.

(பஃறொடை வெண்பா)

நல்ல நடக்குமென நம்பிடுவீர்; நன்றுமிக!
ஒல்லுமல் லிக்கு முவகையெனி லொப்பிடுவேன்.
யாருமிது பற்றி இனிமேலும் பேசிடற்க;
சேரும் தெளிவெவர்க்கும் செல்லச் சிலகாலம்.
மாமன் நலம்பெறட்டும் மற்றதன் பின்னல்லி
தாமும் இசைவரெனின் தக்கான் எனவேற்பின்
எண்ணம்போல் யாவும் இனிதே இசைந்தேறும்.
கண்கள் இரண்டெனினும் காண்பொருள் ஒன்றென்னக்
நன்பாய் நயந்தொன்றி நாளும் மகிழ்ந்திருப்போம்
இன்பால் இருவரியாம் ஈந்து.

(முற்றும்)

1. கைதவம் - வஞ்சகம், பொய்மை, துன்பம். 2. நோன்றாள் - வலிய முயற்சி. 3. நுனி - நுனித்தல் - ஆராய்ந்தறிதல், கருதுதல்.

குறிப்புக்கள்: